(246)
2578/ஆதா/85

# தமிழ்நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

## அதிகாரபூர்வமான வெளியீடு
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மார்ச் 18, 1985—தொகுதி 212-எண் 1
Monday 18th March 1985—Volume 212 - No. 1

சட்டமன்ற மேலவைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT,
Fort St. George, Madras - 600 009.

விலை ரூ. 2.75]

பொருளடக்கம்


| | பக்கங்க |
|---|---|
| தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் | i—iVi |
| தமிழ் நாடு சட்ட மன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. .. | Viii |
| தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை றுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப் படி தயாரிக்கப்பட்ட) பட்டியல் .. ... | xi—xii |
| 1 ஒழுங்குப் பிரச்சினை— | |
| வானொலிச் செய்தியில் மேலவை உறுப்பினர்கள் பேசிய பொருள் ஒலி பரப்பப் படாமை குறித்து .. .. .. | 1 |
| 2 ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி | 1—81 |
| 3. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் | 81—82 |

11. THE HON. Dr. H. V. HANDE, Minister for Health, in-charge of Health and Environmental Pollution Control.

12. THE HON. THIRU S. MUTHUSWAMY, Minister for Transport, in charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Acts, Ports and Highways.

13. THE HON. THIRU S. THIRUNAVUKKARASU, Minister for Food, in charge of Food, Price Control and Census.

14. THE HON. THIRU V. V. SWAMINATHAN, Minister for Handlooms and Textiles, in charge of Handlooms and Textiles.

15. THE HON. THIRU R. SOUNDARARAJAN, Minister for Nutritious Meals, in charge of Nutritious Meals.

16. THE HON. THIRU T. VEERASAMY, Minister for Commercial Taxes, in charge of Commercial Taxes.

17. THE HON. THIRU N. NALLUSAMY, Minister for Housing, in charge of Housing and Slum Clearance Boards, Town Planning and Accommodation Control.

18. THE HON. THIRU ANOOR P. G. JAGADEESAN, Minister for Rural Industries, in charge of Rural Industries including Village, Cottage and Small Industries.

19. THE HON. THIRU T. RAMASAMY, Minister for Rehabilitation and Employment, in-charge of Rehabilitation, Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees.

20. THE HON. THIRU A. ARUNACHALAM, Minister for Adi Dravidar Welfare, in-charge of Adi Dravidar Welfare, Hill and Bonded Labour.

21. THE HON. THIRU M. R. GOVENDHAN, Minister for Backward Classes, in charge of Backward Classes and Fisheries.

22. THE HON. THIRUMATHI GOMATHI SRINIVASAN, Minister for Social Welfare in charge of Social Welfare including Women and Children and Children Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration.

23. THE HON. THIRUMATHI VIJAYALAKSHMI PALANISAMY, Minister for Khadi, in charge of Khadi, Bhoodan and Gramdhan.

24. THE HON. THIRU Y. S. M. YUSUF, Minister for Public Works, in charge of Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

25. THE HON. THIRU K. K. S. S. R. RAMACHANDRAN, Minister for Co-operation, in charge of Co-operation.

6. மாண்புமிகு திரு. க. இராசாராம் (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பெருந் தொழில்கள், சுரங்கமும், கனிவளமும், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

7. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நகராட்சி நிர்வாகம், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி மற்றும் கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை.

8. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

கல்வி, ஆட்சி மொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு.

.. 9. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண்-பொறியியல், வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.

10. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (சட்டத் துறை அமைச்சர், கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றிய சட்டம், குழுமங்கள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம்.

11. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் சுற்றுப்புறச் சூழல் தூய்மைக்கேடு தடுப்புத்துறை.

12. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்.

13. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (உணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.



14. மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் (கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

15. மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் (சத்துணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சத்துணவு.

16. மாண்புமிகு திரு. நா. வீராசாமி (வணிகவரித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வணிக வரிகள்.

17. மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி (வீட்டுவசதித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று வாரியங்கள், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

18. மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜகதீசன் (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கிராம, குடிசை மற்றும் சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

19. மாண்புமிகு திரு. டி. இராமசாமி (மறுவாழ்வு மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மறுவாழ்வு, வேலைவாய்ப்பும், பயிற்சியும், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள் நலன்.

20. மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

21. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளம்.

22. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நல அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், இரவலர் இல்லம், அனாதை இல்லம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

23. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கதர், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

24. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொதுப்பணித் துறை, சிறுபாசனம் உள்ளிட்ட நீர்ப்பாசனம் மற்றும் வஃப்.

25. மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கூட்டுறவு.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

மாண்புமிகு மேலவைத் தலைவர்

டாக்டர் ம. பொ. சிவஞானம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்

திரு. ஜி. சுவாமிநாதன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. சி. இராமலிங்கம்
2. திருமதி வி. ஜெயலட்சுமி
3. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா
4. திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்

மேலவைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்

திரு. த. ப. டில்லிதுரை, பி.எஸ்சி., பி.எல்.

துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

சார்புச் செயலாளர்கள்

திரு. ரெ. கு. இராமச்சந்திரன், பி.ஏ., பி.எல்.

திரு. இரா. சந்திரசேகரன், பி.ஏ.

தலைமை நிருபர்

திரு. ச. சுவாமிநாதன், எம்.ஏ.

மேலவைத் தலைவரின் தனிச் செயலாளர்

திரு. பி. கே. சந்திரசேகரன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும் | தொகுதி. |
|---|---|
| 1. அங்கமுத்து, திரு. பா. | நியமனம் |
| 2. அருணாசலம், திரு. க. | நியமனம் |
| 3. ஆனந்தம், திரு. வி. வி. வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 4. இராகவானந்தம், திரு. எல். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 5. இராதா, திரு. எல். ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 6. இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 7. இராஜேந்திரன், திரு. மானாமதுரை, ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 8. கண்ணப்பன், திரு. காடுவெட்டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 9. கணேசன், திரு. ஆர். என்கிற மிசா ஆர். கணேசன் | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி |
| கருணாநிதி, டாக்டர் மு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 11. கலைமணி, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 12. கோலப்பா, திரு. சி. ஆர். | நியமனம் |
| 13. சங்கரலிங்கம், திரு. மு. செ. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள் |
| 14. சனார்த்தனம், டாக்டர் இரா. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் |
| 15. சாதிக் பாட்சா, திரு. என். ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 16. சிவஞானம், டாக்டர் ம. பொ. (மாண்புமிகு மேலவைத் தலைவர்) | நியமனம் |
| 17. சிவராமன், திரு. அ. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 18. சித்தாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 19. சுப்பிரமணியம், திரு. எம். பி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 20. சுவாமிநாதன், திரு. ஜி. (மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்) | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் |

| | |
|---|---|
| 21. தாமஸ், திரு. பா. ரா. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் |
| 22. தாரா செரியன், திருமதி | நியமனம் |
| 23. தால், திரு. ஏ. ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 24. பழனிவேல்ராஜன், திரு. பி. டி. ஆர். | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் |
| 25. பாலாஜி, திரு. நெல்லை. | நியமனம் |
| 26. மதுசூதனன், திரு. இ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 27. மயில்சாமி, திரு. அ. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி |
| 28. மாசிலாமணி, திரு. மு. | நியமனம் |
| 29. மாணிக்கம், திரு. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 30. மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை ஆசிரியர்கள் தொகுதி |
| 31. முத்துலிங்கம், கவிஞர் | நியமனம் |
| 32. முனுசாமி, திரு. பி. | நியமனம் |
| 33. யூசப், திரு. யா. சை. மு. (பொதுப்பணித் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 34. லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. | வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி |
| 35. லீலாவதி, செல்வி ஆ. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்கள் |
| 36. வள்ளிமுத்து, திரு. ஈ. வெ. ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 37. வீரப்பன், திரு. இராம. (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 38. ஜெயச்சந்திரன், திரு. எல். | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் |
| 39. ஜெயலட்சுமி, திருமதி வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 40. ஜேப்பியார், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 41. ஹண்டே, டாக்டர் எச். வி. (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் |
| 42. வெற்றிடம் | மாநிலச் சட்டமன்றப் பேரவை |



| | |
|---|---|
| 43. வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 44. வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 45. வெற்றிடம் | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 46. வெற்றிடம் | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 47. வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 48. வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 49. வெற்றிடம் | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 50. வெற்றிடம் | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 51. வெற்றிடம் | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 52. வெற்றிடம் | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 53. வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 54. வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 55. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 56. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 57. வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 58. வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 59. வெற்றிடம் | தென்னாற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி |

| | | |
|---|---|---|
| 60. வெற்றிடம் | | தென்னாற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 61. வெற்றிடம் | | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 62. வெற்றிடம் | | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 63. வெற்றிடம் | | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

---

திங்கட்கிழமை, 1985 மார்ச்சு 18.

பங்குனி 5, ரக்தாக்ஷி—திருவள்ளுவராண்டு-2016.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ஜி. சுவாமிநாதன்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 1. ஒழுங்குப் பிரச்சினை.

### வானொலிச் செய்தியில் மேலவை உறுப்பினர்கள் பேசிய பொருள் ஒலிபரப்பப் படாமை குறித்து.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த சனிக்கிழமையன்று இம் மாமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் பல உறுப்பினர்கள் கலந்துகொண்டு பேசினார்கள். ஆனால் மாநிலச் செய்தியை வானொலி ஒலிபரப்பும்போது, கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ரா. தாமஸ் அவர்கள் மட்டும் பேசியதாகச் சொல்லப்பட்டது. அன்று அவையில் நாங்கள் 10 அல்லது 12 பேர் பேசியதுபற்றி ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை. எனவே மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், நாங்களெல்லாம் இங்கே பேசவில்லையோ என்று நினைக்கிறார்கள். எனவே மாநிலச் செய்தி ஒலிபரப்பும் வானொலிக்கும் அதைப்போலவே தொலைக்காட்சித் துறையினருக்கும் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் எவ்வாறு எடுத்துச்சொல்ல வேண்டுமோ அவ்வாறு சொல்லி நிலைமையைச் சரி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அதைப்பற்றி விசாரித்து ஆவன செய்யப்படும்.

## 2. ஆளுநர் உரையின்மீது விவாதம்—தொடர்ச்சி.

* டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக ஆளுநர் உரையின்மீது நடைபெறுகிற விவாதத்தில் கலந்துகொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வருந்தத்தக்க செய்தியை தமிழக மின் வாரியத் தலைவர் அவர்கள் மார்ச் 7 ஆம் தேதி நிருபர்களுக்கு வெளியிட்டது ஏடுகளிலே வெளிவருகிறது. மார்ச் 8 ஆம் தேதி ஆளுநர் பெருமான் அவர்கள் அறிக்கையைப் படிக்கிறார்கள். அந்த அறிக்கையில், "தமிழ்நாடு மின் வாரியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அனல் மின் நிலையங்களை முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டதன் பலனாக மின் சக்தி உற்பத்தி பெருமளவு உயர்ந்துள்ளது" என்று கூறப் பட்டுள்ளது. 'மின் சக்தி உற்பத்தி உயர்ந்துள்ளது' என்ற கவர்னர் அவர்களின் உரைக்கும், 'பெருமளவுக்கு நிலைமை மோசமாக இருக்கிறது' என்ற மின் வாரியத் தலைவரவர்களின் பேட்டிக்கும் இருக்கின்ற முரண்பாட்டை உணர்ந்தாலே கவர்னர் அவர்கள் உரையிலே குற்றம் குறை காணலாமா என்று ஆதங்கப்படும் மாண்புமிகு உறுப்பினர்களிடம் இவைகளை எல்லாம் குற்றமாக், குறையாகக் கருதாமல் எப்படி இருக்க முடியுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்திற்கு, தமிழகச் சட்டமன்றப் பேரவையிலே தலைவராக இருந்த திரு. இராசாராம் அவர்கள் இன்றைக்கு தொழிற் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அந்தப் பொறுப்பு ஏற்ற பிறகு இந்த அவையிலே நான் அவர்களை இன்னும் சந்திக்கவில்லை. ஒருவேளை இன்று வந்தாலும் வரக்கூடும். அவர்கள் தொழில் துறையை தமிழகத்தில் எப்படி வளர்ப்பது, அதற்கு மத்திய அரசோடு எப்படி வாதாடு வது என்பது குறித்து சில கருத்துக்களை ஒரு வார இதழுக்குப் பேட்டியாகத் தந்திருக்கிறார்கள். அந்த வார இதழினுடைய ஆசிரியர்

(முற்பகல் 10-20)

தொழில் அமைச்சர் திரு. இராசாராம் அவர்களை கேள்விகள் கேட்கிறார், இவர் பதில் சொல்கிறார். அவற்றை இங்கே, மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு படிக்க விரும்புகிறேன். அவர் "பாரத் ஹெவி எலெக்ட்ரிக்கல்ஸ், ஆவடி டேங்க் பேக்டரி, நெய்வேலி நிலக்கரி சுரங்கம், பெரம்பூர் கோச் பேக்டரி போன்ற திட்டங்களுடன் மத்திய அரசு நிறுத்திக்கொண்டு விட்டது. சுமார் 15 ஆண்டுகளாக மத்திய அரசுத் திட்டங் களை நிறுத்திக்கொண்டு விட்டதே, புதிதாகத் திட்டங்கள் எதுவும் இல்லையே, இதற்கு அரசியல் காரணமாக இருக்குமா?" என்று கேட்கிறார். அதற்கு மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு. இராசாராம் "அரசியல் அல்ல, அணுகுமுறைதான் காரணம்" என்று சொல்லியிருக்கிறாரா? அப்படி என்றால் இதிலே ஏற்கெனவே இருந்தவர்களுடைய அணுகுமுறை சரியில்லை என்பதை தொழில் அமைச்சர் சூசகமாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார். அது வேறு



விவகாரம். மேலும் சொல்கிறார். "இதற்காக என்று மற்ற மாநிலங்களின் சார்பாக தனிச் சிறப்பு அதிகாரிகளை டில்லியில் நியமித்து தங்களுடைய திட்டங்களை விரைவுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள், நாமும் அப்படிச் செய்ய வேண்டும். இதற்காக ஒரு தனி அமைப்பை டில்லியில் நிறுவுவதன் மூலம் அப்படிச் செய்யலாம்" என்று சொல்கிறார். ஏற்கெனவே இம்மாநிலத் தின் பிரதிநிதியாக ஒருவர் பொறுப்பேற்றிருக்கிறார். அவர் அமைச்சருக் குரிய அந்தஸ்துடன் பொறுப்பு வகித்துக் கொண்டிருக்கிறார்.

அப்படி இருக்கும்போது இதற்காக தனியாக இன்னொருவரைப் பொறுப்பாளராக நியமித்து, ஒரு அலுவலகத்தையும் அங்கே அமைத்து, ஏற்கெனவே ஒரு பிரதிநிதி தனியாக இருப்பதுடன்கூட, தேவையில்லாமல் இதற்கும் செலவிட வேண்டுமா?, ஏற்கெனவே அங்கே இருக்கின்ற மாநில அரசு பிரதிநிதி இதை கவனிக்க மாட்டாரா? அதுமட்டுமல்லாமல், ஆளும் கட்சியின் சார்பாக அல்லது ஆளும் கட்சியின் ஆதரவோடு வெற்றி பெற்றிருக் கின்ற காங்கிரஸ் கட்சியின் சார்பாக, அல்லது எதிர்க் கட்சிகளின் சார்பாக தமிழகத்திலேயிருந்து வெற்றி பெற்றுச் சென்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது மக்கள் அவை உறுப்பினர்கள் இத்தகைய திட்டங் களுக்காக தமிழ்நாட்டுக்காக வாதாட மாட்டார்களா? ஏற்கெனவே தமிழகத்தின் சார்பாக அங்கே பிரதிநிதியாக இருக்கின்ற திரு. எட்மண்ட் அவர்கள் இந்தக் காரியங்களை எல்லாம் கவனிக்கவில்லையா? புதிதாக மற்றொரு செலவை நாம் அங்கே உருவாக்க வேண்டுமா? இன்னொரு முக்கியமான விஷயத்தையும் அவருடைய பதிலில் சொல்கிறார். இதுதான் வேடிக்கைக்கும் வேதனைக்கும் உரிய விஷயம். "டில்லியில் இருந்து இப்படி நமக்கு உதவக்கூடிய மத்திய அரசு அதிகாரிகள் தமிழ்நாட்டுக்கு வருகின் றார்கள். அவர்களை நாம் சிறப்பு விருந்தினர்களாக வரவேற்று, உபசரித்து நல்லுறவை வளர்த்துக்கொள்ள வேண்டும்" அதற்கு அந்த ஆசிரியர் கேட்கிறார், "அப்படிச் செலவு செய்ய அரசு அனுமதிக்குமா?" அதாவது டில்லியிலிருந்து வருகிற மத்திய அரசு அதிகாரிகளை சிறப்பு விருந்தினர்களாக வரவேற்று உபசரித்து அனுப்ப வேண்டிய நிலை வருமானால், அதற்கு நிறைய செலவு ஆகுமே, அந்தச் செலவைச் செய்ய அரசு அனுமதிக்குமா என்று கேட்கிறார். அதற்கு மாண்புமிகு தொழில் அமைச்சர், நிச்சயமாக அனுமதிக்கும் என்று சொல்கிறார். அதிகாரிகளை அழைத்துக்கொண்டுபோய் நல்ல ஓட்டலில் விருந்து வைக்கலாம், இப்படிச் செலவு செய்வதெல்லாம், நமக்குக் கிடைக்கக்கூடிய லாபங்களைப் பார்த்தால், ரொம்ப சொற்பமான தொகைதான் என்று சொல்லியிருக்கிறார். இது தொடர்பான கருத்தைச் சொல்வதென்றால், மாண்புமிகு அவை முன்னவர்

[டாக்டர் மு. கருணாநிதி] [1985 மார்ச் 18]

அவர்களுக்குக்கூட தெரியும், படமெடுப்பவர்கள் டிஸ்ட்ரிபியூட்டர்களுக்கு விருந்து வைத்து சில படங்களை அவர்கள் தலையில் கட்டுவது சில பட கம்பெனிகளில் வழக்கம், அதுபோன்ற நிலை மேகலா பிக்சர்சிலும் இல்லை எம்.ஜி.ஆர். பிக்சர்சிலும் இல்லை என்பது அவர்களுக்கும் தெரியும், எனக்கும் தெரியும். ஆகவே, மத்திய அரசு அதிகாரிகளை நல்ல முறையில் உபசரிப்பதன் மூலம் ஆகக்கூடிய செலவு நமக்குக் கிடைக்கிற லாபத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால், மிக சொற்பம் என்று தொழில் அமைச்சர் சொல்கிறார் என்றால், ஏதோ மத்திய அரசு விசுவாமித்திரரைப் போலவும் மாநில அரசுகள் மேனகைகள் போலவும் இருந்துதான் இந்த வரங்களைப் பெற வேண்டுமா? மத்திய அரசுக்கு இதில் கடமை இல்லையா? மத்திய அரசிலிருந்து வருகிற அதிகாரிகளுக்கு இப்படிப்பட்ட விருந்து, கேளிக்கைகள், நல்ல உபசரிப்புகள் கொடுத்தால்தான், அவர்கள் நமது தொழில்களுக்கு அனுமதி விரைந்து வழங்குவார்களா என்பதைத்தான் நான் மிகுந்த ஆதங்கத்தோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்னொரு கருத்தையும் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். எலெக்ட்ரானிக் தொழில்களை (கம்பூட்டர்ஸ்) தமிழ்நாட்டில் அதிகப்படுத்த வேண்டுமென்ற கருத்தை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். எலக்ட்ரானிக் தொழிற்சாலைகளுக்கு நான் எதிரியல்ல, அவைகளை ஒட்டுமொத்தமாக வெறுப்பவனுமல்ல. சில எலெக்ட்ரானிக் தொழில்களின் மூலம் குறைந்த வேலைவாய்ப்புதான் கிடைக்கும். நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில், ஏராளமான மக்கள் இன்றைக்கு வேலைவாய்ப்பு இல்லாமல், வேலையில்லாத் திண்டாட்டத்தின் காரணமாக, அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், இருக்கின்ற புள்ளிவிவரங்களைப் பார்க்கும்போது, இந்தியாவிலேயே வேலைவாய்ப்பு அற்றவர்களின் எண்ணிக்கை என்று பார்க்கும்போது, தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது என்று மத்திய அரசின் புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் எலெக்ட்ரானிக் தொழிற்சாலையை அதிகரிக்க கவனம் செலுத்துவதன்மூலம் குறைந்த ஆட்களைக் கொண்டு நிறைந்த உற்பத்தியைச் செய்ய முடியும், ஆனால் வேலைவாய்ப்புப் பிரச்சினையைத் தீர்த்திட இயலுமா என்பதையும் மனதில் கொண்டு இந்தக் கருத்திலே ஒரு மாறுபாடான நிலையை உருவாக்கி, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கக்கூடிய அளவுக்கு தொழில் திட்டங்களை இந்த அரசு நிறைவேற்ற முன்வருமா என்ற வினாவையும் நான் இங்கே எழுப்ப விரும்புகிறேன்.



1985 மார்ச் 18] [டாக்டர் மு. கருணாநிதி]

(முற்பகல் 10-25)

ஆளுநர் உரையில் உள்ளாட்சித் தேர்தல்கள்பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று நாம் இந்த அவையில் பேசிக்கொண்டிருக்கும்போதே, மற்றொரு அவையில் உள்ளாட்சித் தேர்தல்கள் வருகிற ஆகஸ்ட்-செப்டம்பர் திங்களில் நடைபெறும் என்றும், அதைக் கையெழுத்துப் போட்டு எழுதிக் கொடுக்கக் கூடத் தயாராக இருக்கிறேன் என்றும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். நாங்கள் பாராட்டவே இல்லையென்று யாராவது கேட்பீர்களேயானால், இதைப் பாராட்டாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆனால் உள்ளாட்சித் தேர்தல்கள்பற்றி எந்த அளவுக்கு, எத்தனை முறைகள் அமைச்சர்களால் தேதிகள் அறிவிக்கப்பட்டு மீறப்பட்டிருக்கின்றன என்று பார்த்தாலே தெரியும் என்று நான் நம்புகிறேன். அமைச்சர் திரு. காளிமுத்து அவர்கள், பல நேரங்களில் இந்த அவையிலும் அந்த அவையிலும் பல தேதிகளை இதே உள்ளாட்சித் தேர்தலுக்காக அறிவித்திருந்தார். அப்போது மழைக்காலமாக இருந்தால் என்ன செய்வது என்று ஒரு சமயம் கேட்டபோது, அவருக்கே உரித்தான தமிழில், 'அடாது மழை பெய்தாலும் விடாது உள்ளாட்சித் தேர்தல்கள் நடந்தே தீரும்' என்று அடித்துக் கூறியிருக்கிறார்.

அவருக்குப் பிறகு வந்த அமைச்சர் திரு. குழந்தைவேலு பல முறை தேதிகளை இரு அவைகளிலும் அறிவித்திருக்கிறார். அதற்குப் பிறகு வந்த அமைச்சர் சௌந்தரராஜன், இந்தத் தேதிகளை அறிவித்திருக்கிறார். ஆனால் சமீபத்தில் காலையில் தேதி அறிவித்த அன்று மாலையில் அந்த இலாக்கா அவரிடமிருந்து மாற்றப்பட்டுவிட்டது. இப்போது நான்காவதாக இந்தத் துறைக்கு அமைச்சராக ஒருவர் வந்திருக்கிறார். அவராவது உள்ளாட்சித் தேர்தலை நடத்துவார் என்று நாம் நம்புவோம்.

இன்று காலையில் கூட ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் ஒரு 'ஜோக்' வந்திருந்ததைப் படித்தேன். தூக்கு மேடைக்குச் சென்று நின்றுகொண்டிருக்கும் ஒரு கைதியைப் பார்த்து, சிறை அதிகாரிகள் "உன்னுடைய கடைசி ஆசை என்ன?" என்று கேட்கிறார்கள். அதற்கு அவன், "அடுத்த பஞ்சாயத்துத் தேர்தலில் நான் ஓட்டுப்போட உரிமை வேண்டும்" என்று சொல்கிறான். கைதியின் எண்ணம் "பஞ்சாயத்துத் தேர்தலே நடக்கப் போவதில்லை, எனவே அந்த உறுதிமொழியை நாம் இப்போது வாங்கி

விட்டால், நாம் சாகத் தேவையில்லை' என்பதால் அப்படிக் கேட்கிறானாம். அப்படிப்பட்ட ஒரு நகைச்சுவையை, 'எக்ஸ்பிரஸ்' பத்திரிகை என்று கருதுகிறேன், இன்று வெளியிட்டிருக்கிறது.

ஆகவே, உள்ளாட்சித் தேர்தல்களுக்காக பலமுறை உறுதிமொழி அளிக்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களேகூட 11—7—1982-ல் பத்திரிகைகளுக்குத் தந்த அறிவிப்பு ஒன்றில், "தமிழ்நாட்டில் பஞ்சாயத்துத் தேர்தல்கள் எப்போது வேண்டுமானாலும் நடக்கும், எந்த நிமிஷத்திலும் நடத்துவோம், வெற்றி தோல்வி பற்றி பயந்தவர்கள் நாங்கள் அல்ல" என்று குறிப்பிட்டிருக்கிறார். அதற்குப் பிறகு, "தமிழ்நாட்டில் நகரசபை, பஞ்சாயத்துத் தேர்தல்களை நடத்த அரசு தயாராக இருக்கிறது, யார் கோர்ட்டுக்குப் போனாலும், மக்களிடம் நிலைமையை விளக்கிவிட்டு, பழைய முறையிலேயே தேர்தலை நடத்துவோம்" என்று 7—6—1983-ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார், பின்னர் 3—6—1984-ல் நகரசபை மற்றும் மாநகராட்சித் தேர்தல்களில் வாக்காளர்களுக்கு புகைப்படத்தோடு கூடிய அடையாள அட்டையைத் தருவோம் என்று அவர் அப்போது சொன்னபோது, அது சாத்தியமா என்று நிருபர்கள் கேள்வி கேட்டார்கள். அதற்கு, இதுபற்றி தலைமைச் செயலாளர், மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை செய்தே கொள்கை வெளியிடப்பட்டுள்ளது. என்னுடைய நம்பிக்கை நான்கைந்து மாதங்களில் நிச்சயமாகப் படங்கள் எடுக்கப்பட்டு, ஒட்டப்பட்டு தேர்தல்களை நடத்த முடியும் என்பதுதான்" என்று முதல்வர் குறிப்பிட்டிருக்கிறார். அதற்குப் பிறகு நிருபர்கள் கேட்கிறார்கள், "அப்படியானால் ஏன் நகராட்சி தனி அதிகாரிகளின் பதவிக்காலத்தை நீட்டிக்க சட்டம் கொண்டுவருவது?" என்று. "அதனால்தான் பதவிக் காலம் ஆறு மாதம் நீட்டிப்புக்கு சட்டம் கொண்டு வருகிறோம், ஆறு மாதத்தில் நிச்சயம் நடக்கும்" என்று 1984-ம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பத்திரிகைகளுக்கு உறுதியாகத் தெரிவித்தார்.

சட்டமன்றத்தில் 13—2—1984-ல் இரண்டு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் ஆளுநர் உரை என்று சொல்லப்படுகிற அந்த அறிக்கையில், "சட்டமன்றப் பட்ஜெட் கூட்டத் தொடர் முடிந்ததும், உரிய நேரத்தில் இரண்டு கட்டமாக 19—4—1984 அன்றும் 23—4—1984 அன்றும் ஊராட்சித் தேர்தல்களை நடத்தவும் நகராட்சித் தேர்தல்களை 23—4—1984 அன்று நடத்தவும் அரசு முடிவு செய்துள்ளதென்று சென்ற ஆண்டு அச்சடித்தே கொடுத்திருக்கிறார்கள். இப்போது நமது நிதியமைச்சர் நாவலர் அவர்கள் எழுதிக் கையெழுத்துப் போட்டுக் கொடுக்கிறேன் என்று சொல்கிறார். அச்சடித்துக் கொடுத்ததே



நிறைவேறாதபோது எழுதிக் கொடுப்பதாவது நிறைவேறுமா? என்ற ஐயப்பாடு எங்களுக்கு இருக்கிறது. இருந்தபோதிலும் இந்த ஆண்டு ஆளுநர் உரையில் உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள்பற்றி எதுவுமே குறிப்பிடப்படவில்லை. எதிர்க் கட்சிகள் குறைசொல்வதா என்று

(முற்பகல் 10-30)

கேட்பவர்களுக்கும் சொல்லவிரும்புகிறேன். எதிர்க் கட்சிகள் கருத்துக்களைச் சொன்னால்தான், சில நேரங்களில் நிவாரணம் கிடைக்கிறது என்பதற்கு உதாரணமாகத்தான், அந்த அவையிலும் இந்த அவையிலும் ஆளுநர் உரையிலே ஊராட்சி மன்றத் தேர்தல்களைப்பற்றிக் குறிப்பிடவில்லை என்கின்ற குற்றச்சாட்டுகளை எடுத்து, அவையின் முன்னால் வைத்த காரணத்தாலும், திராவிட கழகத்தின் சார்பில் நாடு தழுவிய போராட்டம், ஒவ்வொரு சிற்றூர், பேரூரிலும் நடத்தப்பட்ட காரணத்தினாலும், ஆளுநர் உரையிலே இல்லாத ஒன்றை நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்கிறபோது, எதிர்க் கட்சியினுடைய பணி எவ்வளவு தேவை என்பதை அரசு உணரும் என்று நான் நம்புகின்றேன். எதற்கெடுத்தாலும் குற்றம் சொல்கிறோம் என்பதற்காக அல்ல, எடுத்துக்காட்ட வேண்டிய குறைபாடுகளை எடுத்துக் காட்ட வேண்டிய கடமையை எதிர்க் கட்சிகள் நிறைவேற்றுகின்றன என்பதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேனேயல்லாமல் வேறல்ல.

நான் பாராட்டக்கூடிய மற்றொரு செய்தியையும் இந்த ஆளுநர் உரையிலே சொல்ல வேண்டும். நம்முடைய மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர்—அவையினுடைய முன்னவர்—அவர்கள் சில நாட்களுக்கு முன்பு மத்திய அரசுக்கு ஒரு தந்திச் செய்தி அனுப்பியதாக செய்தித்தாள்களிலே செய்தி வெளிவந்தது. "இந்தி வேகமாகப் பரப்பப்பட தொலைக்காட்சிகள் இன்றைக்குப் பயன்படுத்தப்படுகின்றன. அதிலே நேஷனல் புரோகிராம் என்கின்ற பெயரால் அதற்காக அதிக நேரம் ஒதுக்கப்பட்டு, இந்தி பரப்பப்படுவதை நாங்கள் ஏற்றுக்கொள்வதற்கில்லை. அந்த நேரத்தைக் குறைக்க வேண்டும்" என்று ஒரு செய்தியை அவர்கள் டில்லிக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதற்காக நான் மகிழ்ச்சியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இன்றைக்கு நிலைமை எப்படி இருக்கிறது என்பதற்கு 15—3—1985 அன்று—மூன்று நாட்களுக்கு முன்பு—டில்லி பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் டாக்டர் கலாநிதி அவர்கள் ஒரு பொது மசோதாவின்மீது—அதாவது நேபாள மொழியை எட்டாவது அட்டவணையிலே இணைத்திட வேண்டுமென்கின்ற தனி நபர் மசோதாவின் மீது—அந்த மன்றத்திலே அதனை ஆதரித்துப் பேசினார்கள். அவ்வாறு

பேசும்போது ஆங்கிலத்திலேயே பேசுகிறார்.

"I express my thanks to the Hon. Deputy Speaker for having permitted me to express my opinion on behalf of the D.M.K. . . . ."

இதைச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள்—அதாவது இந்திப் பகுதியிலேயிருந்து வந்திருக்கக் கூடிய உறுப்பினர்கள்—எழுந்து,

"Sir, to-day it has been decided that everyone should speak either in his regional language or in the National language, that is, Hindi,"

என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது நாம் முடிவு எடுத்தபடி இந்த மன்றத்திலே ஒன்று அவரவர்கள் தாய்மொழியிலே பேச வேண்டும், இல்லாவிட்டால் தேசிய மொழியான இந்தியிலேதான் பேச வேண்டும் என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்போது டாக்டர் கலாநிதி அவர்கள்,

"We cannot accept that. It is an encroachment on my fundamental right. We cannot accept Hindi as a national language. I have every right to speak in any language I like. Being an hon. Member, he should learn it. I have every right to speak in my own language or in English. In fact, Jawaharlal Nehru accepted English as a link language. He should understand that."

என்று கூறியிருக்கிறார்கள். "ஆங்கிலம்தான் நாட்டின் தொடர்பு மொழி—Link Language. —என்று நேரு அவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் நான் ஆங்கிலத்திலே பேசுகிறேன்" என்று சொல்லியிருக்கிறார்கள். பாராளுமன்றத்தில் வேறு மொழிக்காரர்கள் இருக்கின்ற காரணத்தினால், தமிழிலே பேசி, அது அந்த மொழியிலே மொழி பெயர்க்கப்படுகின்ற நேரத்தில் அது எந்த அளவுக்கு சரியாக மொழிபெயர்க்கப் படுகிறது என்பது, நாடாளுமன்ற அனுபவம் உள்ளவர்களுக்குத் தெரியும். அதைப்போல நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். எனவே ஆங்கிலம் தெரிந்தவர்கள், ஆங்கிலத்திலே அந்தக் கருத்துக்களை எடுத்துச்சொல்ல வாய்ப்பு இருக்கிறது. அப்படி இருந்தாலும்கூட, இந்திப் பகுதியிலிருந்து வருகின்ற இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆங்கிலத்திலே பேசுவதைத் தடுக்கிறார்கள், கூச்சல் போடுகிறார்கள் என்கிறபோது, நேருவினுடைய உறுதிமொழி என்ன ஆயிற்று என்கின்ற கேள்வி எழாமல் இல்லை. ஆனால், நல்லவேளையாக அ.இ.அ.தி.மு.க.-விலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட துணை சபாநாயகர் மாண்புமிகு திரு. தம்பிதுரை அவர்கள் "You carry on . . . .", என்று சொல்லி டாக்டர் கலாநிதியைப் பேசுமாறு சொன்னதற்குப் பிறகு, அவர் ஆங்கிலத்திலே பேசியிருக்கின்றார்கள். இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், நேருவினுடைய உறுதிமொழி "இந்தி பேசாத மாநில மக்கள்



(முற்பகல் 10-35)

விரும்புகின்றவரை ஆங்கிலம் தொடர்பு மொழியாக இருக்க வேண்டும்" என்பதுதான். அதைத்தான் கடந்த காலத்திலே 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் திராவிட முன்னேற்றக் கழகமும், இந்திரா காங்கிரசும் தேர்தல் உடன்பாடு கொண்ட அந்த நேரத்தில், சென்னை கடற்கரையில் நடைபெற்ற அண்ணா பிறந்த நாள் விழாவிலே திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பேசுவதற்கு முன்பு பேசிய நான் "தங்களுடைய தந்தையார் தந்த உறுதிமொழியை தாங்கள் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும்; அந்த வாக்குறுதியை நீங்கள் இந்த மாபெரும் கூட்டத்திலே தமிழ் நாட்டு மக்களுக்கு அளிக்க வேண்டும்" என்று வலியுறுத்திக் கேட்டுக் கொண்டேன். அதற்குப் பின்னர் பேசிய திருமதி இந்திரா காந்தி அவர்கள்—அப்போது அவர்கள் பிரதமராக இல்லை—"என் தந்தை நேரு அவர்கள் தந்த வாக்குறுதியை நான் நிச்சயமாகத் தொடர்ந்து கடைப்பிடிப்பேன்; இந்தி பேசாத மாநில மக்கள் விரும்புகின்றவரை ஆங்கிலம் தொடர்பு மொழியாக இருக்கும்; அதிலே நான் உறுதியாக இருக்கிறேன்" என்று குறிப்பிட்டார்கள். நேரு சொன்னார்; உறுதியாக இருந்தார். இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சொன்னார்கள்; கூடுமான வரையில் உறுதியாக இருந்தார்கள். அவர்களுக்குத் தெரியாமலேகூட இந்தியை இந்தியாவிலே ஆதிக்க மொழியாக ஆக்கி மற்ற மொழிக்காரர்களை எல்லாம் இரண்டாம் தரக் குடிமக்களாக ஆக்கிவிட வேண்டுமென்று கருதுகின்ற இந்தி வெறியர்கள் பல முனைகளிலும் இந்தி ஆதிக்கத்தை இந்தியாவிலே, குறிப்பாகத் தமிழகத்திலே நிலை நாட்ட முயற்சிகளை மேற்கொள்கின்றார்கள். எனவே தான் எந்தக் காலத்திலே யார் வந்தாலும்கூட, அசைக்க முடியாத அளவிற்கு, நேருவினுடைய உறுதிமொழி அரசியல் சட்டத்திலே இடம் பெற வேண்டு மென்கின்ற அந்தக் கருத்தை திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தி வருகிறது. அந்தக் கருத்துக்கு மாறுபாடான கருத்து ஆளும் கட்சிக்கு நிச்சயமாக இருக்க முடியாது என்று நான் நம்புகின்றேன். எனவே மாநில அரசின் சார்பாக நேருவினுடைய உறுதிமொழி அரசியல் சட்டத்திலே இடம் பெற வேண்டுமென்று வலியுறுத்துவதற்கு முன்வர வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இன்றையதினம் தமிழ்நாட்டு மக்களை மிகக் கொதிப்படையச் செய்து கொண்டிருக்கின்றது ஸ்ரீலங்கா பிரச்சினை ஆகும். இந்த ஸ்ரீலங்கா பிரச்சினை குறித்தும் நாவலர் அவர்கள் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இந்தப் பிரச்சினைக்கு கிட்டத்தட்ட 2 அல்லது 2½ ஆண்டுக் காலத்திற்கு மேலாக தமிழ்நாட்டிலே பல்வேறு கட்சிகளின்

சார்பிலும், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், ஆளும் கட்சியின் சார்பிலும் எடுக்கப்பட்ட அவரவர்களுக்கு ஏற்ற நடைமுறைகளின் காரணமாக எந்த நல்லதொரு முடிவும் இதுவரையிலே கிடைக்கவில்லை. பேச்சு வார்த்தைகளின் மூலமாக இது தீர்க்கப்படும் என்று ஒரு காலத்திலே நாம் நம்ப வைக்கப்பட்டோம். இந்தப் பிரச்சினை 1958 ஆம் ஆண்டு முதல் ஸ்ரீலங்காவிலே கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கின்ற பிரச்சினை. ஆனால் அதற்கு உச்சகட்டமாக 1983 ஆம் ஆண்டு ஒரு இனப் படுகொலையே நடைபெறத் தொடங்கி இன்னும் ஓராண்டுக் காலத்திலே ஸ்ரீலங்காவிலே தமிழினமே அழிக்கப்பட்டு விடுமென்று அமிர்தலிங்கம் அவர்களே அஞ்சி, கலங்கி, நெஞ்சு நெக்குருக அறிக்கை விடுகின்ற அளவிற்கு அந்த நிலைமை இன்றைக்கு முற்றிப் போயிருக்கின்றது. நான் ஒரு குறிப்பைச் சொல்ல விரும்புகிறேன். 1979 ஆம் ஆண்டு திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பிரதமராக இல்லாத நேரம், எதிர்க் கட்சியிலே இருந்த நேரம். அப்போது ஸ்ரீலங்கா பிரச்சினை குறித்து திரு. வைகுந்தவாசன் என்கின்ற தமிழர்களுக்காகப் போராடிக் கொண்டிருக்கிற பிரமுகர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அந்த திரு. வைகுந்தவாசனுக்கு திருமதி இந்திரா காந்தி அம்மையார் ஒரு பதில் கடிதம் அனுப்பினார்கள். அந்தக் கடிதத்தில்

"Dear Mr. Vaikuntavasan.

I have just received your letter of the 22nd August and I was horrified to see the enclosures. The Janata Party Government is going out of its way to be friendly with the present Government of Sri Lanka.

At the moment all attention is on our election. I will see if it is possible to bring this issue to the notice of the public in some other way.

Yours sincerely.
Indira Gandhi."

என்று ஆகஸ்ட் 27, 1979-ல் திரு. வைகுந்தவாசன் அவர்களுக்கு திருமதி இந்திரா காந்தி அவர்கள் கடிதம் எழுதினார்கள். அப்போது மத்தியிலே அவர்கள் ஜனதா ஆட்சியைக் குறை கூறி, "அவுட் ஆஃப் தி வே சென்று, அதாவது தவறான வழியிலே சென்று, ஸ்ரீலங்காவோடு நட்புறவினை பாராட்ட மத்திய அரசிலே இருக்கின்ற ஜனதா அரசு விரும்புகின்றது. அந்தக் காரணத்தினால் நான் சந்தேகப்படுகிறேன். தமிழகத்தினுடைய அன்பர் போக்கப்படுமா, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று சந்தேகப் படுகிறேன். எப்படி இருந்தாலும் எந்த வகையிலாவது பொது மக்களுடைய



கவனத்திற்கு அதைக் கொண்டு வருகிறேன்" என்று அன்றைக்கு திருமதி இந்திரா காந்தி அவர்கள் சொன்னார்கள். ஆனால் 1983-ல் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் பிரதமராக இருந்த நேரத்தில்தான் ஸ்ரீலங்கா தீவில் இந்தக்

(முற்பகல் 10-40)

கொடுமை நடைபெற்றது. அந்தக் கொடுமை நடைபெற்றபோது இந்திய அரசின் தவறைச் சுட்டிக்காட்டி, திரு. ஜி. கே. ரெட்டி அவர்கள் 'இந்து' பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதினார். அந்தக் கட்டுரையின் ஒரு பகுதியில் அவர் தெரிவிக்கிறார் :

"The Government of India has also not taken the trouble to agitate international opinion over the years about the true character of Tamil problem in Sri Lanka, since most countries seem to imagine that all persons of Indian origin in the island are the descendants of labour taken by the British from the nearby Tamil Nadu to work in the plantations."

இது 21—8—1983-ல் இந்து பத்திரிகையில் திரு. ஜி. கே. ரெட்டி அவர்கள் எழுதிய கட்டுரையில் உள்ளது. அதில் "ஸ்ரீலங்காவில் உள்ள தமிழர்கள் அனைவரும் பிரிட்டிஷாரால் ஸ்ரீலங்காவில் தோட்டத் தொழிலாளர்களாக வேலைக்குக் கொண்டு செல்லப்பட்டவர்களின் சந்ததியினரே, என்ற எண்ணத்தைக் கொண்டுள்ள பல வெளிநாடுகளின் கருத்தை மாற்றி ஸ்ரீலங்கா தமிழர்களின் உண்மையான நிலைமைகளை உலக நாடுகளிடம் தெரிவிக்கும் பணியை இந்திய அரசாங்கம் நிறைவேற்றவில்லை என்ற குற்றச்சாட்டை அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார். அதே நேரத்தில் அதே ஆண்டில் "டைம்ஸ் ஆப் இந்தியா" ஒரு கருத்தைத் தெரிவித்தது :

"While it is understandable that foreigners wanting to confuse the issues and immobilise New Delhi on a matter of the deepest concern to it should talk of interference by this country in Sri Lanka's internal affars, it is shocking that items of us should also fall victim to that kind of interested propaganda campaign. The future of Tamil citizens in Sri Lanka is not just that island's internal problem and cannot be treated as much by this country because its own vital interests are involved."

அதாவது "ஆழமாக அக்கறை செலுத்தப்பட வேண்டிய இந்தப் பிரச்சினையை ஸ்ரீலங்காவின் உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிடுவதாக வெளிநாடுகள் [illegible] டெல்லியைச் செயல்பட விடாமல் தடுப்பதைப் புரிந்துகொள்ள [illegible] என்றாலும், நம்மவர்களில் சிலரும் அதுபோன்ற பிரச்சாரத்திற்கு

இரையாகி இருப்பது ஒரு அதிர்ச்சியை உருவாக்குகிறது. ஸ்ரீலங்காவிலுள்ள தமிழர்களின் எதிர்காலம் அந்தத் தீவின் உள்நாட்டுப் பிரச்சினையல்ல. இந்தியாவின் நலன்களும் அதில் பின்னிப் பிணைந்திருக்கின்றன. எனவே இந்தியா அதை உள்நாட்டுப் பிரச்சினை என்று கருதக்கூடாது" என்று எழுதியிருக்கிறது.

அடுத்து தமிழக அமைச்சர் மாண்புமிகு திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் ஐ.நா. சபையில் பேசும்போது ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார் :

"We confined ourselves only to the extent of flow of refugees from Sri Lanka. We neither criticised the policies of Sri Lanka nor criticised the actions of the Government of Sri Lanka. In fact, even in my intervention I had made it clear that we do not intend to interfere in the interest affairs of Sri Lanka.. India does not support any separatist movement".

அவர் பேசியது, "நாங்கள் அகதிகள் விஷயம்பற்றி மாத்திரம் நிறுத்திக் கொண்டோம். ஸ்ரீலங்கா அரசின் செயலையோ அல்லது ஸ்ரீலங்கா அரசின் கொள்கையையோ விமர்சிக்கவில்லை. ஸ்ரீலங்காவினுடைய உள்நாட்டு விவகாரத்தில் நாங்கள் தலையிடுமாறு சொல்லவில்லை. தலையிட வேண்டுமென்று விரும்பவுமில்லை" என்பதுதான். ஸ்ரீலங்காவிலுள்ள எந்தப் பிரிவினை இயக்கத்தையும் இந்தியா ஆதரிக்கவில்லை என்று அமைச்சர் மாண்புமிகு திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் ஐ.நா.-வில் குறிப்பிட்டார்கள். ஒருவேளை இப்போது அந்த நிலை இல்லை என்பதையும் அவர்களும் அவர்கள் சார்ந்துள்ள இந்த அரசும் உணரும் என்று நான் நம்புகிறேன். அது ஸ்ரீலங்காவின் உள்நாட்டுப் பிரச்சினையாக ஒரு காலத்தில் இருந்திருக்கக்கூடும். ஆனால் ஒரு இனப் படுகொலையே நடைபெற்று, அந்த இனப்படுகொலை தடுக்கப்படாமல் அது தொடர்ந்து நடைபெற்று இன்றைக்கு ஸ்ரீலங்காவில் தமிழ் இனமே பூண்டோடு அற்றுப் போய்விடும் என்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கும் நேரத்தில், அதை உள்நாட்டுப் பிரச்சினை என்று அன்றைக்கு இந்த அரசின் சார்பில் சொல்லப்பட்ட அந்தக் கருத்துகூட இன்றைக்கு மாறியிருக்கும் என்று நம்புகிறேன், மாற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அமெரிக்காவிலிருந்து வெளியாகிற "Christian Science Monitor" என்ற ஏட்டில் ஒரு செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. அதாவது "சிங்கள இராணுவத்தினர் 30 பேர் மன்னார் பகுதியிலுள்ள மக்களை, தமிழ் மக்களைக் கொன்று குவிக்கத் தொடங்கிவிட்டனர். இவர்களது படுகொலைத் தாக்குதல் ஆறு மணி நேரம் தொடர்ந்தது. மன்னார் நகரில்



மத்திய மருத்துவ மனையில் இராணுவத்தினர் வெறிபிடித்துத் தாக்கினார்கள். சாலையில் சென்ற வாகனங்களைத் தடுத்து நிறுத்தி அதில் இருந்தவர்களை வெளியே இழுத்துப் போட்டு அந்த இடத்திலேயே சவு இரக்கமின்றி சுட்டுக் கொன்றார்கள். அருகில் உள்ள அஞ்சலகத்தில் பணி புரிந்து கொண்டிருந்த 15 ஊழியர்களை வரிசையாக நிற்க வைத்து நிர்தாட்சண்யமாகச் சுட்டுப் படுகொலை செய்தார்கள். வயலில் வேலைபார்த்துக் கொண்டிருந்த ஊழியர்களையும் சிங்கள இராணுவத்தினர் விடவில்லை. அவர்களையும் சுட்டுக் கொன்றார்கள். இத்தாக்குதலில் அன்றைக்கு மாத்திரம் சுமார் 145 முதல் 150 பேர் செத்தார்கள். இருபது தமிழ் இளைஞர்கள் காணாமல் போனார்கள். அவர்கள் அருகில் இருக்கும் இராணுவ முகாமுக்கு இழுத்துச் செல்லப்பட்டதாக நேரில் கண்டவர்கள் கூறினார்கள் . . ."
என்று எழுதப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-45)

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

இப்போது இராமேஸ்வரம் பகுதியில் மாத்திரம் கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிற மீன்பிடி தொழில் முடங்கிக் கிடக்கிறது. 1,500-க்கு மேற்பட்ட படகுகள் இன்றைக்குக் கடலில் பயணம் செய்ய முடியாமல், மீனவர்கள் கடலில் செல்ல முடியாமல், அந்தப் படகுகளும் கரையோரங்களில் முடங்கிக் கிடக்கின்றன. நான் முதலிலே குறிப்பிட்டபடி, 200 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி ஈட்டித் தருகிற தொழில் அங்கே நசித்துப் போயிருக்கிறது என்பதை இந்திய அரசும் மறந்துவிடக் கூடாது.

அந்த அகதிகளுடைய வரத்து இப்போது குறைந்துவிட்டது என்று நேற்று தொலைக் காட்சியில் ஒரு செய்தி சொன்னார்கள். அந்த முதல் வாசகத்தைக் கேட்டபோது, எனக்குக்கூட கொஞ்சம் மகிழ்ச்சியாக இருந்தது. "அகதிகளுடைய வரத்துக் குறைந்துவிட்டது. இன்றைக்கு 24 குடும்பங்கள் தான் வந்து இறங்கினார்கள்" என்று சொல்லப்பட்டது. நான் மகிழ்ச்சியோடு அடுத்த வரிகளைக் கவனித்தேன். அப்படி வரத்து குறைவதற்கான காரணம் ஸ்ரீலங்கா அரசு அங்கேயிருந்து வருகிற விசைப்படகுகளைத் தடுத்து நிறுத்தி விட்டது என்பதுதான். அங்கே அடிபட்டு, உதைபட்டு, கற்பழிக்கப்பட்டு, மானபங்கப்படுத்தப்பட்டு திக்கு திசை மாறி எங்கேயாவது செல்லலாம் என்று தமிழகத்திற்கு ஓடி வர விரும்புகிற சூழ்நிலையில்கூட அந்தப் படகுகள் அவர்களுக்குக் கிடைக்காதபடி தடுத்துவிட்ட காரணத்தால்தான் நேற்றைய தினம் அகதிகள் வரத்து குறைந்திருக்கிறது. எனவே அவர்கள் இங்கு வந்து தங்களுடைய உயிரைக் காப்பாற்றிக்கொள்ள முடியாமல் வேதனைக்கு ஆளாகியிருக்கிறார்கள். அந்த வேதனைகள் பத்திரிகையில் வெளிவருகின்றன. இந்த

மேலான மன்றத்திலும் அந்தக் கருத்துக்கள் என் சார்பிலும், கழகத்தின் சார்பிலும் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதற்காக சிலவற்றை—நம்முடைய உணர்ச்சிகளைத் தூண்டுவதாக இருந்தாலும், உள்ளத்தை அழ வைக்கக் கூடியதாக இருந்தாலும் அவைகளை—எடுத்துக்கூறுவது தமிழன் என்ற முறையில் எனது கடமை என்று சொல்லுகிறேன்.

அகதி முகாமில் உள்ள விஜயகுமார், பத்மநாபன் என்ற இருவர் சொன்ன செய்திகள் : "யாழ்ப்பாணத்திலிருந்து பத்து மைல் தூரத்தில் இராணுவ முகாம் உள்ளது. இராணுவத்தினர் விடுதலைப் புலிகளைத் தேடுகிறோம் என்று கூறிக்கொண்டு வீடுகளில் புகுந்து இளம் பெண்களையும், வாலிபர்களையும் அழைத்துச் செல்கிறார்கள். அங்கே கொண்டு போய் பெண்களை நிர்வாணமாக்கி கற்பழிக்கிறார்கள். ஆண்களை, தலைமுடியை பிடித்து இழுத்து, மீசையை முறுக்கி விட்டு தடியால் அடித்தும் துன்புறுத்தினார்கள். இரண்டு கைகளையும் உயரே மரத்திலே கட்டி வைத்து 'விடுதலைப் புலிகள் எங்கே ?' என்று கேட்பார்கள். பிறகு அவர்கள் சொன்னாலும் சொல்லா விட்டாலும் சுட்டுத் தள்ளுவார்கள். ஹெலிகாப்டர் மூலம் ரோந்து சுற்றி வரும்போது விஷ மருந்துகளையும், ஆசிட் திராவகத்தையும் தமிழர்கள் வாழும் பகுதியில் வீசி காயங்களை ஏற்படுத்துவார்கள்."

சேகர் என்ற அகதி சொல்கிறார் : "பள்ளிக்கூடம் சென்றுவிட்டு திரும்பும் மாணவர்களை நிறுத்தி வைத்துச் சுடுகிறார்கள். 'இவன்தான் வருங்கால விடுதலைப் புலி. இதோடு தொலை போ' என்று சொல்லி காலால் மிதித்துக் கொல்லுகிறார்கள். வீடுகளில் புகுந்து பெற்றோர்கள், சகோதரிகள் கண் முன்னால் இளம் பெண்களை கற்பழித்துக் கொடுமை செய்கிறார்கள். யாழ்ப்பாணம் குருநகர் இராணுவ முகாமில் 300 தமிழ்ப் பெண்களைக் கைதிகளாக வைத்துள்ளார்கள். அவர்களுடைய மானம் என்னவாயிற்று என்றே தெரியவில்லை. தமிழ் பெண்களை இராணுவத்தினர் கற்பழிக்கும்போது, 'இப்போது உன் வயிற்றில் ஈழப் புலி பிறக்காது. சிங்களச் சிங்கம்தான் பிறக்கும்' என்று கிண்டல் செய்கிறார்கள்."

பேசாலையிலிருந்து இந்தியாவிற்கு தப்பி வந்துவிட்ட ஹெலென் குரூஸ் என்ற பெண்மணி சொல்லும்போது, "இலங்கை தமிழ் பெண்கள் உயிருக்கு மாத்திரம் அஞ்சி தமிழகத்திற்கு வரவில்லை ; உயிரினும் மேலான மானத்தைக் காக்க இங்கே புகலிடம் தேடி வருகிறார்கள் " என்று குறிப்பிடுகிறார்கள்.

1983 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் " தமிழ் ஈழத்தை ஆதரிக்க வேண்டும் என்ற கருத்தையும், தமிழ் ஈழம் தனியாக தமிழர்களுக்காகத் தர இந்திய அரசு எல்லா உதவிகளையும் செய்ய வேண்டும், ஸ்ரீலங்காவில் ஓர்





இனம் அழிந்து கொண்டிருப்பதைத் தடுத்திட, மனிதாபிமானத்தோடு பங்களா தேஷில் எடுத்த நடவடிக்கையைப்போல், பாலஸ்தீன விடுதலைக் கிளர்ச்சிக்கு தருகிற ஆதரவைப் போல் ஸ்ரீலங்கா தமிழர் விடுதலைக் கிளர்ச்சிக்கும் இந்திய அரசு ஆதரவு தர வேண்டும், தேவைப்பட்டால் இராணுவத்தை அனுப்ப வேண்டும்" என்று எடுத்துச் சொன்ன கருத்து இன்றைக்கு ஆளும் கட்சியிலே உள்ள அத்தனை பேராலும் ஏற்றுக்கொள்ளப் படுகிறதோ இல்லையோ, ஒரு சில உறுப்பினர்களால் எதிரொலிக்கப்படுகிறது என்பதைக் காண்கிறேன். அதைப்போலவே காங்கிரஸ் கட்சியிலுள்ள உணர்ச்சி கொண்ட, துடிப்புள்ள சிலர் இராணுவத்தை அனுப்பித்தான் தீர வேண்டும் என்று சொல்லுவதையும் என்னால் காண முடிகிறது. அது மட்டுமல்ல, நடுநிலையாக இருந்து, அமைதியாக 'கன்சர்வேட்டிவ் தாட்ஸ்' என்பதைப் போல கருத்துக்களைச் சொல்லக்கூடிய ஏடுகளில்கூட, அதாவது கல்கி 10—3—1985 இதழில் "இலங்கையில் நடப்பது தூக்கத்தை விரட்டுகிறது, உணவை வெறுக்கச் செய்கிறது. ஜெயவர்த்தனே ஆட்சியால் விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பது மட்டுமல்ல, இலங்கை அரசால் இலங்கை இராணுவத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. விடுதலைப் புலிகளை வளைத்துப் பிடிக்க திராணியற்ற இராணுவம் அப்பாவி தமிழர்களைப் பழி வாங்குகிறது. நள்ளிரவில் தமிழர்கள் பகுதிகளில் புகுந்து கற்பழிக்கிறது. கொல்லுகிறது, கொள்ளை அடிக்கிறது. அகதிகளாக தமிழகத் திற்கு தப்பி ஓடிவரச் செய்கிறது. இதையெல்லாம், வீடு வாசல், சொத்துக்கள்

(முற்பகல் 10.50)

எல்லாம் இழந்து அங்கேயிருந்து வருகிற பல்லாயிரக்கணக்கான அகதிகள் கண்ணீர் கதைகள் வடிக்கின்றார்கள். அயல்நாட்டுப் பத்திரிகைகளும் சான்று தருகின்றன. ஆனால் நமக்கு என்னவோ ஈழத்து அரசை விடவும், மத்திய அரசின் மீதுதான் அதிகக் கோபம் வருகிறது. ஈழத் தமிழர்கள் துயர் துடைக்க இன்றுவரை நமது மத்திய அரசு என்ன வன்மையான நடவடிக்கையை எடுத்துள்ளது என்று பார்த்தால், உதட்டைப் பிதுக்க வேண்டியதாக இருக்கிறது. ஸ்ரீலங்கா மீது படையெடுக்கச் சாத்தியம் இல்லை என்று திரும்பத் திரும்பக் கூறி வருவதால், ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு மேலும் துணிச்சலைத் தந்து மேலும் அராஜகத்திற்கு வழி வகுத்ததைவிட அதிகமாக மத்திய அரசு என்ன செய்துவிட்டது ? படையெடுக்க விரும்பவில்லை ஆனாலும் அந்த நிர்ப்பந்தத் திற்கு எம்மை ஆளாக்காதீர் என்று கூறினாலாவது கொஞ்சத்திற்குக் கொஞ்சம் சிங்களவர்களுக்கு பயமாக இருக்கும். அதுதான் போகட்டும், வேறு என்ன செய்தது புது டெல்லி. . ." இப்படி கல்கி பேசுகிறது. 'உலக அபிப்பிராயத்தை உருவாக்கியதா ? ஐ.நா. சபையிலே பிரச்சினையைப்பற்றி வன்மையாகப்

பேசப்பட்டதா ? ஒரு அமைதிப் படை ஐ.நா. சபை சார்பில் அனுப்புமாறு கோரிக்கை பிறந்ததா ? ஒரு மண்ணும் இல்லை. ஏதோ ஜி.பி. போனார், வந்தார் ; அமிர்தலிங்கம் சென்றார், திரும்பினார், முடிந்தது கதை என்று இருக்கிறது. இந்த ஏனோ தானோ மனப்பான்மை மாறி, பிரச்சினை தீர ராஜீவ் காந்தி அவர்கள் ஒரு கடுமையான பிரயாசையை அவசரமாக மேற்கொள்ள வேண்டும். முனைவாரா ? ஏங்குகிறான், தமிழன் ' என்று ' கல்கி ' இதழ் மார்ச் 10 ஆம் தேதி, ஒரு தலையங்கம் தீட்டியிருக்கிறது.

அதே மார்ச் 10 ஆம் தேதி ஆனந்தவிகடனில் வந்திருக்கிறது. "நாளுக்கு நாள் பாரதமாதாவின் பாதத்தின் அடியில் புரையோடிக் கொண்டிருக்கும் இந்தப் புண் எப்போது எந்த சிகிச்சையால் ஆறும் என்பது எல்லோராலும் கேட்கப்படும் ஒரு கேள்வி ஆகிவிட்டது. நாள்பட்டு புரையோடிவிட்ட புண்ணுக்கு அறுவைச் சிகிச்சைதானே வைத்தியம். அது எப்போது என்றுதான் எதிர்பார்த்தபடி இருக்கிறார்கள் " என்று கட்டுரையாளர் இந்தக் கருத்தை கூறியிருக்கிறார்.

எனவே ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினைபற்றி நான் இவ்வாறு கருத்து கூறுகிற நோக்கில் இந்த அவையில் தலைவர் அவர்களுக்கு ஒரு வேதனையான செய்தியையும் நான் சொல்லாமல் இருக்க முடியாது.

நம்முடைய தமிழகத்தின் சார்பில் மத்தியிலே உதவி அமைச்சராக பொறுப்பேற்றிருப்பவர்கள் நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு திருமதி மரகதம் சந்திரசேகர் அம்மையார் அவர்கள். அவர்களை ஆனந்தவிகடன் நிருபர் பேட்டி கண்டு, ஸ்ரீலங்கா தமிழர்கள்பற்றி சில கேள்விகளைக் கேட்கிறார். அவர் ' ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினைபற்றி ' என்றுதான் ஆரம்பிக்கிறார். அதற்கு மத்திய உதவி அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகர் அவர்கள் சொல்கின்றார். கொஞ்சம் கோபத்தோடு பதில் சொல்கிறார். ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினைபற்றி என்று ஆரம்பித்தபோது, அம்மையார் அவர்கள், " தயவுசெய்து இந்தப் பிரச்சினையை ஒரு இந்தியப் பிரச்சினையாகக் கருதுங்கள். தமிழர் பிரச்சினை என்று சொல்லி அதன்மூலம் ஒரு பிராந்திய உணர்வு ஏற்படும்." என்று ஆணித்தரமாகப் பேசினார். " நான் ஒரு இந்தியன் என்று சொல்லத்தான் விரும்புகிறேன். தமிழ் மொழி, தாய்மொழி பக்தி என்று நிச்சயம் இருக்க வேண்டும். ஆனால் அதுவே ஒரு வெறியாக ஆகிவிடக்கூடாது. தமிழ், தமிழ் என்று கூறி எவ்வளவு நாசம் செய்துவிட்டார்கள் தமிழ்நாட்டை " என்று கூறியிருக்கிறார். மேலவைத் தலைவர் அவர்களே, உங்கள் முன்பாக இந்த வார்த்தைகளை நான் உச்சரிக்கும் போது, உங்களுடைய உணர்வுகள் எவ்வாறு இருக்கும் என்பதை என்னால்





புரிந்துகொள்ள முடிகிறது. தமிழ், தமிழ் என்று கூறி நம் தமிழ்நாட்டை நாசம் செய்துவிட்டார்கள் என்கின்ற ஆதங்கத்தோடு, அங்கலாய்ப்போடு மத்தியிலே அமைச்சராக இருக்கின்ற திருமதி மரகதம் சந்திரசேகர் அம்மையார் அவர்கள் ' இது தமிழர் பிரச்சினை என்று சொல்லாதீர்கள். இது ' இந்தியர் பிரச்சினை ' என்று சொல்கின்றார்கள். நான் கேட்கிறேன் ஸ்ரீலங்காவிலே இந்தியர் ஏது ? ஸ்ரீலங்காவிலே சிங்களவர், தமிழர் இந்த இரண்டு இனங்கள் தானே இருக்கின்றன.

திரு. எம். பி. சுப்பிரமணியம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மத்தியிலே அமைச்சராக இருக்கக்கூடிய திருமதி மரகதம் சந்திரசேகர் அவர்கள் சொன்ன கருத்தைப்பற்றி இங்கே கூறுகிறபோது, எந்தச் சூழ்நிலையில் அவர்கள் பதில் சொன்னார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இரண்டாவதாக, அவர் சொன்ன கருத்தைப் படித்தபோது, ஸ்ரீலங்காவில் உள்ள தமிழர்களுக்கு விரோதமானதாக அவர் எதுவும் சொல்லவில்லை. மூன்றாவதாக, சொல்லவேண்டுமானால், தமிழர் பிரச்சினை என்று சொல்வதைவிட இந்தியப் பிரச்சினை என்று சொல்வால், அதனால் பலன் கூடும் என்பதற்காகச் சொன்னாரே தவிர, தமிழர்கள் நலன்களுக்கு விரோதமாகச் சொன்னார் என்று வாதாட முடியாது.

டாக்டர் மு. கருணாநிதி : தமிழர் பிரச்சினை என்பது பிராந்திய உணர்வு என்று அவர் குறிப்பிட்டிருப்பதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. தலைவர் அவர்களும் அங்கே இல்லாமல், வேறு இடத்திலேயிருந்து பதில் அளித்தால், அவர்களும் ' தமிழர்கள் உணர்வுகளை பிராந்திய உணர்வுகள் ' என்று சொல்வதை, நிச்சயமாக ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆனால் அவர்கள் நடுநிலைமையில் இருந்து தீர்ப்பு அளிக்கவேண்டியவர்களாக இருக்கின்றார்கள். நான் அவரை சங்கடத்தில் ஆழ்த்த விரும்பவில்லை. ஆனால் " தமிழ், தமிழ் என்று கூறி நாட்டை நாசம் செய்துவிட்டார்கள் " என்று குறிப்பிடுவது உள்ளபடியே ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தல்ல. ஆனால் ' ஆனந்தவிகடன் ' பத்திரிகையிலே அது வந்துள்ளது. எதையும் மாற்றிச் சொல்லவில்லை. இதே

(முற்பகல் 10-55)

ர். அதை இந்தியப் பிரச்சினை என்று சொல்வது மிக நலம் என்று சொல்கிறார்கள். நம்முடைய எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கள். அதை ஏற்றுக்கொள்கிறேன். நான் ஒரு கூட்டத்தில்கூடச் [illegible]ர். ' அதை இந்தியப் பிரச்சினை என்று அம்மையார் அவர்களே ஏற்றுக்கொள்ளும்போது, என்னுடைய வாதம் இன்னும் பலமாகிறது. தமிழர்களுடைய பிரச்சினை என்ற காரணத்தாலே தலையிட முடியாது, அது உள்

[டாக்டர் மு. கருணாநிதி] [1985 மார்ச் 18

நாட்டுப் பிரச்சினை என்று சொல்லுகிறார்கள். அது இந்தியப் பிரச்சினை ஆகிவிடுகிறது. ஆக தமிழர் பிரச்சினை என்றால் அது எவ்வளவு மட்டம். அது இந்தியப் பிரச்சினை என்றானால்தான் அதிக வலு. சரி. எங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்காக, எங்கள் தமிழினத்தை வாழ வைப்பதற்காக, எங்கள் தமிழச்சிகளின் மானத்தை, கற்பை ஸ்ரீலங்காவில் பாதுகாப்பதற்காக இதை ஒத்துக்கொள்கிறேன். அது இந்தியப் பிரச்சினை என்ற உணர்வின் மூலமாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? இந்திய பட்ஜெட்டிலே 8,000 கோடி ரூபாய் இந்தியப் பாதுகாப்புக்காக நிதி ஒதுக்கப்படுகிறது. எட்டாயிரம் கோடி ரூபாய் இந்திய பாதுகாப்புக்காக நிதி ஒதுக்கியதை நான் மறுக்கவில்லை. ஏனென்றால் உலகத்திலே உள்ள எல்லா நாடுகளும் இன்றைக்கு அகிம்சையிலேதான் தங்களுடைய நாட்டை நடத்துவது என்ற முடிவை எடுத்துவிடவில்லை. எந்த நேரத்திலும் பேரபாயத்தை எதிர்பார்க்கும் ஒரு நாடு, இந்தியா போன்ற ஒரு பெரிய நாடு 8,000 கோடி ரூபாய் பாதுகாப்பு நிதியாக ஒதுக்குவதில் தவறில்லை. ஆனால் 8,000 கோடி ரூபாயை பாதுகாப்பு நிதியாக ஒதுக்கும் ஒரு நாட்டிற்குப் பக்கத்திலே உள்ள ஒரு சுண்டைக்காய் நாடு, ஸ்ரீலங்கா தீவைப் பார்த்து ஒன்றும் கேட்கவில்லை. அங்கே நம்முடைய தமிழர்கள் தினம் தினம் கொல்லப்படுகிறார்கள், அழிக்கப்படுகிறார்கள். அந்த இனமே அழிந்துவிடும். இங்கே அடுத்த கூட்டம், அடுத்த ஆண்டு நடக்கும் போது நாம் எல்லோரும் சேர்ந்து ஸ்ரீலங்கா தமிழர்களுக்காக ஒரு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டிய நிலைமையில் போய் முடியும். அங்கே தமிழர்களே இருக்க மாட்டார்கள். இங்கே வந்தவர்கள் போக மிச்சம் உள்ளவர்கள் அங்கே செத்தவர்களாக இருப்பார்கள். அங்கே தமிழர்களின் கல்லறைகளுக்கு இடமே இருக்காது. அங்கே தமிழன் எங்கே வீழ்ந்தானோ, எங்கே செத்தானோ, எங்கே சாம்பல் ஆனானோ என்ற அளவுக்குத்தான் ஸ்ரீலங்கா தமிழர்களுடைய கதி இருக்கும். எனவேதான், இந்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, ஸ்ரீலங்கா தமிழர்களைக் காப்பாற்றத் தவறினால், நாம் அனைவரும் சேர்ந்து இந்தப் பிரச்சினையில் ஒருமித்த கருத்தை எடுத்திட வேண்டும். அப்படிப்பட்ட ஒருமித்த கருத்தை எடுக்கும் போது, சர்வ கட்சிக் கூட்டங்கள்தான் அதற்கு முத்தாய்ப்பு வைக்கக் கூடியவைகள் என்று சொன்னால், நான் அந்தக் கூட்டங்களிலே எடுக்கப்படும் கருத்துக்களை ஏற்றுக்கொள்வேன். அதே நேரத்தில் அவரவர் வழி நின்று, அவரவர் உணர்வுக்கேற்ப போராட்டங்களை நடத்தி, ஸ்ரீலங்கா தமிழர்களை வாழ வைக்க நடவடிக்கை எடுப்போம். ஏற்கெனவே பல கட்சிகள் அதற்கு முன்மாதிரியாக இருக்கின்றன. அந்த முறையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு போராட்டத் திட்டத்தை வகுத்துக் கொண்டிருக்கிறது என்று எடுத்துக் கூறி, நான் இங்கே எடுத்துச் சொன்ன ஸ்ரீலங்கா தமிழர்கள் பிரச்சினை,



1985 மார்ச் 18] [திரு. எம். பி. சுப்பிரமணியம்]

இந்தியப் பிரச்சினை போன்ற பிரச்சினைகளிலே ஆளுங் கட்சிக்கு எந்த விதமான மாறுபாடான கருத்து இருக்காது என்கின்ற காரணத்தால், இந்த ஆளுநர் அவர்கள் உரையிலே இடம் பெற்றிருந்த அந்தக் கருத்துக்கள் மீது என்னுடைய வார்த்தைகளைப் பதிய வைத்து, கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல வாய்ப்பு அளித்தமைக்கு தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நீண்ட நாட்களுக்குப் பிறகு டாக்டர் கலைஞர் அவர்களின் பேச்சைக் கேட்டதிலே மகிழ்ச்சி அடைகிறேன். அடுத்து, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். 1966-லே இருந்து 1984 வரை இந்திய அரசியலிலே எல்லாப் பகுதிகளிலும் தனது முத்திரையைப் பதித்த, அவர் ஆட்சியில் இருந்தாலும், இல்லையென்றாலும் அவரையே மையமாக வைத்துப் பேசுமளவுக்கு இருந்த முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் 1984 அக்டோபர் 31 ஆம் தேதி படுகொலை செய்யப்பட்டதை நாம் நன்றாக அறிவோம். அப்படி அவர் படுகொலை செய்யப்பட்டபோது, இந்த நாட்டின் நிர்வாகம் என்னவாகுமென்று பல பேர் அச்சப்பட்டதுண்டு. அதைப்போலவேதான் அமெரிக்காவில் உள்ள உளவு ஸ்தாபனம் ஒன்று, அன்னை இந்திரா காந்தி அவர்கள் உயிரோடு இருந்த காலத்தில், இந்திரா காந்திக்கு திடீரென்று மரணம் ஏற்பட்டால், இந்திய அரசியல் நிலைமை என்னவாகுமென்று ஆராய்ச்சி செய்த நிலைமை ஏற்பட்டதென்றால், அவர்கள் உண்மையை அறிய விரும்பினார்களா அல்லது திருமதி இந்திரா காந்தி அவர்கள் மரணம் இப்படி திடீரென்று ஏற்பட வேண்டுமென்று எண்ணினார்களா என்று எண்ண வேண்டிய நிலைமை இருக்கிறது. அவர் படுகொலை செய்யப்பட்டபோது, அமைதியான முறையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அது அரசியல் கட்சிகளும், பொதுமக்களும் பெருமைப்படத்தக்கதென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தியா சுதந்திரம் பெற்று

(முற்பகல் 11.00)

38 ஆண்டுகள் ஆன பிறகும்கூட அமைதியான முறையில் ஆட்சி மாற்றத்தை மக்களால் நடத்திக் காட்ட முடியும் என்பதைப் பார்க்கும்போது நமக்கெல்லாம் பெருமையாக இருக்கிறது. அதற்குரிய பெருமை எல்லாம் இந்த நாட்டு மக்களையே சாரும். பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இறந்த சில மாதங்களுக்குள்ளேயே பொதுத் தேர்தலை நடத்தினோம். அதனுடைய

முடிவு எப்படி இருந்தபோதிலும், பொதுத் தேர்தலை மிக அமைதியாக நடத்திக் காட்டி, உலகத்திலுள்ள அனைத்து நாடுகளின் பாராட்டுதலையும் பெற்றோம். இந்தியாவிலே இருக்கின்ற வாக்காளர்கள் 39 கோடி பேர்களில் 69 சதவிகிதத்தினருக்குமேல் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் இவ்வளவு பேர்கள் இருந்தபோதிலும், ஜனநாயக முறையை எவ்வளவு நல்லமுறையில் கையாண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து எல்லோரும் பாராட்டுகிறார்கள். அணிசேரா நாடுகளின் கூட்டம் நடைபெற்றது நமக்கெல்லாம் தெரியும். நூறு அணிசேரா நாடுகளில் 63 நாடுகள் இதுவரை தேர்தலே நடத்தவில்லை. ஆனால் நாமோ 1952 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை எட்டு பொதுத் தேர்தல்களை நடத்திக் காட்டியிருக்கிறோம். பொதுத் தேர்தல் முடிந்த பிறகு, இம்மாதம் 5 ஆம் தேதி 11 மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல்கள் நடைபெற்றன. அப்போது இந்நாட்டின் பிரதமராக இருக்கக்கூடிய திரு. இராஜீவ் காந்தி அவர்கள் பிரச்சாரம் செய்யும்போது, ஒரு கருத்தை வெளியிட்டார்கள். மத்திய அரசு ஆட்சிப் பொறுப்பில் காங்கிரஸ் கட்சி இருக்கிறது. அதுபோல் மாநிலங்களிலும் மாநில அரசுகள் காங்கிரஸ் அரசுகளாக இருந்தால், நல்ல திட்டங்களை நிறைவேற்ற உதவியாக இருக்கும் என்ற கருத்தை அவர் வெளியிட்டார். அப்படி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னதற்காக பல இடங்களில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இங்கேகூட எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. ஏதோ அரசியல் சட்டத்திலுள்ள ஒன்றுக்கு விரோதமான ஒன்றை அவர் சொல்லிவிட்டது போல இங்கே பேசப்பட்டது. அதோடுகூட ஏன் ஆளும் கட்சி அதைக் கண்டிக்கவில்லை என்ற கருத்தும் சொல்லப்பட்டது. திரு. இராஜீவ் காந்தி அவர்கள் இந்த நாட்டின் பிரதமராக மட்டுமல்லாமல், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராகவும் இருக்கிறார். காங்கிரஸ் கட்சிக்கு என்று தனித்த லட்சியங்கள், கொள்கைகள், திட்டங்கள் எல்லாம் இருக்கின்றன. அந்தக் கொள்கைகளையும், திட்டங்களையும், லட்சியங்களையும் முன் வைத்துத்தான் இதுவரை மக்களுடைய ஆதரவைத் திரட்டுகிறோம். அதுபோல்தான் இந்தத் தேர்தலின்போதும் மக்களுடைய ஆதரவைத் திரட்டியிருக்கிறோம். இப்படி மக்கள் பெருவாரியாக ஆதரவு அளித்து மத்தியத்தில் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்துள்ள நிலையில், மாநிலங்களிலும் தங்களுடைய திட்டங்களைச் சொல்லி காங்கிரஸ் கட்சியே ஆட்சிக்கு வர வேண்டுமென்று மக்களைப் பார்த்து ஆதரவை நல்குவதில் என்ன தவறு இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. காங்கிரஸ் கட்சியானது ஆந்திராவில் தெலுங்கு தேச கட்சிக்கும், கர்நாடகாவில் ஜனதா கட்சிக்கும் ஆதரவு தர வேண்டுமென்று மக்களைப் பார்த்துக் கேட்க வேண்டுமென்று சொல்கிறார்களா? ஒரே கட்சி ஆட்சிபீடத்தில் இருக்க வேண்டுமென்று மக்களைப் பார்த்து ஆதரவு கேட்பதில் என்ன தவறு இருக்கிறது





என்பதை என்னால் புரிந்துகொள்ள இயலவில்லை. அப்படி கேட்கக் கூடாது என்று சட்டத்தில் இருக்கிறது என்றால், கண்டிக்கலாம். ஆனால் அப்படி இல்லாத நிலையில், ஏன் அதை ஆட்சேபிக்கிறார்கள் என்று நான் அறிய விரும்புகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடல் நலம் சரியில்லாமல் அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோதும் சரி, அமெரிக்காவில் சிகிச்சை பெற்றபோதும் சரி, தமிழ் நாட்டிலே பல லட்சக்கணக்கான மக்கள் கட்சிக்கு அப்பாற்பட்டு பிரார்த்தனை செய்தார்கள். அவர்கள் மீண்டும் பூரண நலம் பெற வேண்டுமென்று விரும்பினார்கள். அதுபோல அவர்கள் பூரண நலம் பெற்று வந்துவிட்டார்கள் என்பது குறித்து எல்லோருக்கும் மகிழ்ச்சிதான். அவர்கள் இன்னும் பூரணமாக சுகம் அடைய வேண்டுமென்ற விருப்பமும், நம்பிக்கையும், ஆர்வமும் எங்களுக்கு எல்லாம் இருக்கிறது. ஆனால் ஒன்றை இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். தமிழக முதல்வர் அவர்கள் நல்வாழ்வு பெற வேண்டும், உடல் நலம் நல்ல முறையில் பெற வேண்டும் என்பதற்காக ஏறக்குறைய 22 நபர்கள் தங்களுடைய உயிரை மாய்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஒருவர் தன் உயிரை மாய்த்துக் கொண்டால், இன்னொரு உயிர் பிழைக்க முடியும், இன்னொரு உயிர் வாழ முடியும் என்று எண்ணி, தங்கள் உயிரை மாய்த்துக்கொண்டதாக பத்திரிகையில் வந்த செய்தியைப் பார்த்தேன், அத்தகையவர்களுக்குப் பாராட்டுகளும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. ஒருவருடைய உயிரை மாய்த்து இன்னொரு உயிரை வாழ வைக்க முடியும் என்கிற நிலை இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. தமிழ்நாட்டிலே நூறு ஆண்டுகளுக்கு மேலாக பகுத்தறிவு இயக்கம் பரவி வந்துள்ள நிலையில், பெரியார் பிறந்த இந்நாட்டில் பகுத்தறிவு இயக்கத்தைப் பரப்பியுள்ள நிலையில், இப்படி ஒருவர் உயிரைக் காப்பாற்ற 22 பேர் தங்களுடைய உயிரை மாய்க்கின்ற நிலையும், அதற்கு நேர்முகமாகவோ மறைமுகமாகவோ வரவேற்பு அளிக்கக் கூடிய நிலையும் இப்போது மட்டும் நடப்பதல்ல, இதற்கு முன்பும் நடைபெற்றிருக்கிறது. இது தமிழக மக்கள் பெருமைப்படக் கூடிய ஒரு காரியமல்ல. இனிமேல் தமிழகத்தில் இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறக் கூடாது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-05)

அடுத்ததாக, இப்போதுள்ள வளர்ந்துள்ள சூழ்நிலையில் அரசாங்கத்தின் பொறுப்புக்கள் அதிகமாகிவிட்ட காரணத்தால், அதற்கு அதிகாரங்களும், நிதி வசதிகளும் பெரிதும் தேவைப்படுகின்றன. 1937-ல் அப்போதிருந்த சென்னை மாகாணத்திற்கு ரூ. 17 கோடிதான் மொத்த வரவு இருந்ததாகக் குறிப்புகள்

[திரு. எம். பி. சுப்பிரமணியம்] [1985 மார்ச் 18

அடுத்தபடியாக, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், நம் மாநிலம் விவசாயத்தை மிகவும் நம்பி இருக்கக்கூடிய மாநிலமாகத்தான் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆகவே நில உச்சவரம்பை முதன்மையாகக் கொண்டு மற்ற பொருளாதாரத் திட்டங்கள் ஏற்படும் என்ற அளவில் நில உச்சவரம்புச் சட்டம் 1960 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. அதைக் கொண்டுவந்தபோது, முதலில் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று உச்சவரம்பு வைத்துக்கொள்ளப்பட்டால் 25.5 இலட்சம் ஏக்கர் நிலங்கள் உபரியாகக் கிடைக்கும் எனவும் அந்த நிலம் உழுகின்ற விவசாயத் தொழிலாளிகளுக்குப் பகிர்ந்து கொடுக்கப்படும் என்றும் புள்ளிவிவரம் கொடுக்கப்பட்டது. 1960-ல் 30 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்ற அளவிலே உச்சவரம்புச் சட்டம் வந்தது. பின் இந்த உச்சவரம்பை 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று நிர்ணயித்து சட்டம் திருத்தப்பட்டது. ஆனாலும் இப்போது உண்மையான நிலை என்னவென்று சொன்னால், 1 லட்சத்து 37 ஆயிரம் ஏக்கராதான் உபரி நிலமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டதாக புள்ளிவிவரம் கொடுக்கப்படுகிறது என்று சொன்னால், என்ன பொருள் ? நில உச்சவரம்புச் சட்டம் சரியாக அமுல் படுத்தப்படவில்லை என்பதுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதை உணர்ந்து, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம பினாமி நிலங்களைக் கையகப்படுத்தும் நோக்கத்தோடு நில உச்சவரம்புச் சட்டத்தில் சில திருத்தங்கள் கொண்டு வந்தது. திருத்தம் கொண்டுவரப்பட்ட காலத்திலேயே நான் அது சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடத்திலே சொன்னேன். கொண்டுவரப்படும் சட்டத் திருத்தம் அரசியல் சாசனத்திற்கு முரணாக இருக்குமானால், சட்டம் செல்லுபடியாகாது என்று மத்திய அரசும், குடியாட்சித் தலைவரும் மேற்படி சட்டத்தைத் தள்ளுபடி செய்துவிடக்கூடும் என்று சொன்னேன். எனவே அரசியல் சாசனத்திற்கு முரணாகாமல் சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று சொன்னேன். பின் என்னவாயிற்று? அவர்கள் அனுப்பிய சட்டத் திருத்தம், அரசியல் சாசனத்திற்கு முரணாக இருக்கிறது என்ற காரணத்தைக் காட்டி, அதைத் திருப்பி அனுப்பி விட்டார்கள். இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகியும்கூட மீண்டும் என் அப்படி ஒரு சட்டம் கொண்டுவரப்படவில்லை என்று கேட்க விரும்புகிறேன். அப்படி ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டால், காங்கிரஸ் கட்சி தன் முழு ஆதரவைக் கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நில உச்சவரம்புச் சட்டம் அமலாக்கப்பட்டுள்ள இந்த நேரத்திலும் ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்ல விரும்புகிறேன். நிலவுடைமையாளர்களில் அதிக நிலம் வைத்துள்ள 10 சதவீதத்தைச் சேர்ந்தவர்கள் 78 சதவீதம் சொத்துக்



1985 மார்ச் 18]

களுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள். 78 சதவீதம் என்று சொன்னால் நிலம், டிராக்டர் போன்ற நிலத்துடன் சம்பந்தமான சொத்துக்களை வைத்திருப்பவர்கள். இவர்களில் 10 சதவீதம் பேர் 78 சதவீதம் சொத்துக்களுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள். இந்த 10 சதவீதம் பேரிலே மேலே இருக்கின்ற ஒரு சதவீதம் பேர் 38 சதவீதம் சொத்துக்களுக்கு உடமை உரியவர்களாக இருக்கிறார்கள். கீழே 95 சதவீதம் பேர் ஒரு சதவீதம்கூட நிலமற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்த நிலைமை மாறினாலொழிய, நிலச் சீர்திருத்தங்கள் தக்க பயனைச் சரியாகத் தராது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நிலச் சீர்திருத்தத்தைப்பற்றிச் சொன்னார்கள். என்ன நிலச் சீர்திருத்தம் கொண்டு வர வேண்டும்? நில உச்சவரம்பைக் குறைக்க வேண்டும் என்று சொல்கிறார்களா ? எதைக் கொண்டு வரவேண்டுமென்று சொல்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, நிலச் சீர்திருத்தம் என்றால், உச்சவரம்பு ஒன்று, நிலக் குத்தகைதாரர்களை நிலச் சொந்தக்காரர்களாக ஆக்குவது இரண்டு. மூன்றாவது, பெரிய நிலச் சொந்தக்காரர்களின் நிலங்களை உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்பதன் அடிப்படையில் சொந்தமாக்குவது என்று குறிப்பிட விரும்புகிறேன். நில உச்சவரம்புச் சட்டம் வந்துவிட்ட பிறகும்கூட, இன்னும் ஒருசிலர் கையில்தான் நாட்டின் பெருவாரியான நிலம் குவிந்துகிடக்கிறது. அதை மாற்ற போதிய திட்டம் கொண்டுவர வேண்டும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, 1961-லிருந்து 1981 வரையிலும் உள்ள நிலைமை என்னவென்று சொன்னால், நாட்டிலுள்ள தொழிலாளி வர்க்கத்திலே 61 சதவீதத்தைச் சார்ந்தவர்கள் கிராமப்புறத்திலே இருக்கின்ற விவசாயத் தொழிலாளிகள். கிராமப்புறத் தொழிலாளர்கள் என்று சொல்கின்றபோது, கொஞ்சம்கூட நிலம் இல்லாதவர்களும் உண்டு. ஒரு ஏக்கர், இரு ஏக்கர் வைத்துக்கொண்டு கூலி வேலை செய்துதான் பிழைக்க வேண்டுமென்ற நிலையில் உள்ளவர்களும் உண்டு. இவர்களிருவரும் மொத்தத் தொழிலாளி வர்க்கத்தில் 61 சதவீதம் பேராவார்கள். 1961-லே 30 சதவீதமாக இருந்தவர்கள் 1981-லே 52 சதவீதமாக

(முற்பகல் 11-15)

உயர்ந்துவிட்டார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கிராமப்புறத்திலே உள்ள தொழிலாளர்கள் என்று சொல்லும்போது, நிலமே இல்லாதவர்களும் உண்டு. அவர்களை எண்ணிக்கையில் சொல்ல வேண்டு

மானால், 22 லட்சம் பேர்களாக இருந்தவர்கள் 59 லட்சம் பேர்களாக உயர்ந்திருக்கிறார்கள் என்று சொன்னால் வறுமை அதிகமாக ஆகிவிட்டது என்பதைத்தான் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். நில உடமையாளர்களாக இருந்தவர்களும் கூலி ஆட்களாக, தொழிலாளியாக மாறியிருக்கிறார்கள் என்பதைத்தான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, கோவில்களுக்குச் சொந்தமான நிலங்கள் கோவில்களுக்கு உரியதாக இருக்க வேண்டுமென்று பல சந்தர்ப்பங்களிலே இந்த மன்றத்திலேயும், வெளியிலேயும் கூறப்பட்டிருக்கிறது. நான் சொல்லுவது என்னவென்றால், கோவில் நிலங்கள் கோவில்களுக்குச் சொந்தமாக இருப்பதைவிட அந்த நிலங்களின் மூலமாகக் கிடைக்கின்ற பணத்தை பாங்கிலே போட்டு கோவிலுக்குச் செலுத்துவது என்பதுதான் இதைவிட லாபகாரமானதாகவும், உறுதியானதாகவும், சுலபமானதாகவும் இருக்கும். நமக்கு நன்றாகத் தெரியும், நிலத்தை உழுபவர்கள் காலா காலத்திலே குத்தகையை சரியாகக் கொடுப்பதில்லை. அதற்காக தடை மசோதாக்களைப் போடுவதைவிட, அந்த நிலங்களை உரியவர்களுக்குச் சொந்தமாக ஆக்கிவிட வேண்டும். அவர்கள் தவணை முறையில் பணத்தைக் கொடுப்பதற்கு அரசாங்கம் துணையாக இருக்க வேண்டும். இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களிலே நிலத்தை விற்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் வாங்குவதற்கு ஆள் இல்லை. அங்கே ஒரு பாங்கைத் துவக்கி, சுலபமான தவணைகளில் பணத்தைத் திருப்பிக் கொடுக்கிற அளவுக்கு பணம் கடனாகக் கொடுக்க உதவுவார்களேயானால், பல சாதாரண குத்தகை விவசாயிகள் நிலங்களை விலைக்கு வாங்குவதற்குத் தயாராக இருக்க முடியும். அதைப்போலவே நிலத்தை விற்பதற்கும் நிலச் சொந்தக்காரர்கள் தயாராக இருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்கது என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆறு ஐந்தாண்டுத் திட்டங்களை நாம் போட்டிருக்கிறோம். இருப்பினும் இன்னும் வறுமைக் கோட்டிற்குக் கீழே ஏறக்குறைய 51 சதவீத மக்கள் தமிழ்நாட்டிலே இருப்பதாக அரசாங்கத்தினுடைய புள்ளிவிவரங்கள் கூறுகின்றன என்பதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். 1960-61 ஆம் வருஷத்தின் விலைவாசிப்படி 15 ரூபாய் மாதம் ஒன்றுக்கு ஒரு நபருக்கு வருமானம் என்றால், அவன் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பதாகக் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி கிராமப்புறத்திலே 51 சதவீதம் மக்கள் 1960-61 ஆம் வருஷத்தின் விலைவாசிப்படி, ஒரு நாளைக்கு 50 பைசா வருமானம் பெற்றுக்கொண்டு வறுமைக் கோட்டிற்குக் கீழே 51 சதவீதம் மக்கள் இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.



அதைப்போலவே நகரத்திலே 1973-74 ஆம் வருஷத்தின் விலைவாசிப்படி மாதம் ஒன்றுக்கு 55 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் உள்ளவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள் என்று சொல்லிவிட்டார்கள். 1973-74-லே கிராமத்திலேயும், நகரத்திலேயும் மொத்தமாகச் சேர்ந்து இரண்டு கோடி பேர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருந்ததாக சொல்லப்படுகிறது என்று சொன்னால் 1985-லே அதனுடைய எண்ணிக்கை உயர்ந்திருக்கும் என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை. அப்படி வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்கு திட்டங்களின் பலன் சரியாகக் கிடைக்கவில்லை என்பதற்காகத்தான் மத்திய அரசும், மாநில அரசும் பல்வேறு திட்டங்களை உருவாக்கி அதை அமல்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி. போன்ற பல்வேறு திட்டங்களைத் தீட்டி கிராமப்புறத்திலே உள்ளவர்களுக்குப் பலன் கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்தில் அவைகள் செய்யப்பட்டன. அதாவது வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களை வறுமைக் கோட்டிற்கு மேலே உயர்த்துவதற்காக அது துணை செய்ய வேண்டுமென்ற அளவிலே சொன்னார்கள். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதற்காக பெரிய நிதி வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன என்பதும் நமக்கு நன்றாகத் தெரியும். ஏறக்குறைய 4,500 கோடி ரூபாய் வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 10,500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டங்கள் சரியாக அமலாக்கப்படுகின்றனவா, இந்தத் திட்டங்களின் நோக்கம் நிறைவேற்றப்படுகிறதா என்பதை ஒவ்வொரு அரசாங்கமும், குறிப்பாக மாநில அரசாங்கம் அவைகளை நிறைவேற்றுகின்ற பொறுப்பிலே இருக்கின்ற காரணத்தாலே கவனிக்க வேண்டியது அவசியம் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், 1984-85 ஆம் ஆண்டில் 30.22 கோடி ரூபாய் ஐ.ஆர்.டி.பி. திட்டத்திற்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. 1983-84 ஆம் ஆண்டில் என்.ஆர்.ஈ.பி. திட்டத்திற்காக ரூ. 36 கோடியும், அது 1984-85-ல் 41 கோடி ரூபாயும், ஆர்.எல்.ஈ.ஜி.பி. திட்டத்தின் கீழே 44.50 கோடி ரூபாயும் செலவழித்திருக்கிறார்கள். இந்தச் செலவினங்கள்

(முற்பகல் 11-20)

இன்றைக்கும் தொடர்ந்து நடைபெறுகின்றன. ஆனால் அந்தத் திட்டங்கள் மூலமாக, கிராமப்புறங்களில் ஏழைகளாக இருக்கிற மக்களை அடையாளம் கண்டு கொண்டு அதற்கான பட்டியல் தயாரிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கத் தகவல் சொல்லுகிறது. ஆனால் அந்தப் பட்டியல் எங்கே இருக்கிறது, யாரிடம் அது கிடைக்கும் என்று என்னால் புரிந்துகொள்ள [illegible]

இம்மாதிரி மத்திய அரசினால் மானியமாகக் கொடுக்கப்படும் பணத்தை உரிய வகையில் செலவழிக்காமல் அதிகாரிகளே பல நேரங்களில் பங்கு போட்டுக்கொண்டுவிடுகின்றனர் என்று இந்தியத் திட்டக் கமிஷனின் அறிக்கையே கூறுகிறது. தமிழ் நாட்டில் கடந்த ஏழு ஆண்டுகளாக இந்தப் பணிகள் செய்யப்பட்டும்கூட, இதுவரை ஒரு "எவால்யுவேஷன் ரிப்போர்ட்" கூட இங்கே தயாரிக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட ஒரு ரிப்போர்ட் மிகவும் அவசியமானது. இந்தத் திட்டம் இன்னமும் தமிழகத்திற்கு உகந்ததுதானா, அதன் நோக்கம் நிறைவேறியிருக்கிறதா, இல்லை, அதன் செயல்பாடு மாற்றியமைக்கப்பட வேண்டுமா என்று பார்த்து, அப்படி மாற்றியமைப்பது அவசியம் என்றால், அதைச் செய்வதற்கு மாநில அரசுக்கு உரிமை உண்டு என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, 1960-61, 1970-71 மற்றும் 1978-79 ஆகிய மூன்று ஆண்டுகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தால், தமிழ்நாட்டின் சராசரி வருமானம் அதாவது தனிநபர் வருமானம் குறைந்து கொண்டே வந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தற்போது தனிநபர் வருமானத்தைக் கணக்கிட ஸ்டேட் டொமஸ்டிக் புராடெக்ட் என்ற முறையைக் கையாளுகிறார்கள். அதாவது விவசாயம், தொழில், சர்விசஸ் போன்றவற்றின் மூலமாகத் தமிழ்நாட்டில் உற்பத்தியாவதைக் கணக்கில் கொண்டு, சராசரி தனி நபர் வருமானம் என்ன என்று பார்க்கும்போது, 1960-61 ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே தமிழ் மாநிலம் நான்காவது இடத்தில் இருந்தது. அதுமட்டுமல்ல, இந்தியாவின் சராசரியைவிட 7.8 சதவீதம் அதிகமாக இருந்தது. ஆனால் 1970-71-ல் அது ஒன்பதாவது இடத்திற்குத் தாழ்ந்து போய்விட்டது. அதுமட்டுமல்ல. இந்தியாவின் சராசரியைவிட 8.2 சதவீதம் குறைவாகப் போய்விட்டது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அடுத்து, 1978-79 ஆம் ஆண்டில் பார்த்தால், அது ஏழாவது இடத்திற்குப் போய்விட்டது மட்டுமல்லாமல், இந்திய சராசரியைவிட 12.1 சதவீதம் குறைவாகப் போய்விட்டது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, வளர்ச்சியடைந்திருக்கிற பஞ்சாப் மாநிலத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால், நம் மாநிலத்தின் வருவாய் 53.4 சதவீதம் அளவுக்குத்தான் இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டில் குடும்ப நலத் திட்டத்தை மிகவும் நல்ல முறையில் செயல்படுத்தியதன் காரணமாக தமிழகத்திற்குரிய தொகை மத்திய அரசிடமிருந்து கிடைக்காமல் போய்விட்டது. அப்படிப்பட்ட வருத்தம் இருக்கிறது என்றார்கள். 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு இதைச் செய்ய வேண்டும் என்றும் ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது.





தமிழகத்தைப் பொறுத்தவரையில், மிகவும் பெருமைக்குரிய வகையில் குடும்ப நலத் திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது என்றாலும், உண்மையில் எண்ணிப் பார்த்தால், இது மகிழ்ச்சியடையத் தக்க வகையில் இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் பிறப்பு விகிதம் 1,000-க்கு 28 ஆகும். அதைப்போல இறப்பு விகிதம் 1,000-க்கு 12 ஆக இருக்கிறது. இறப்பவர்களின் எண்ணிக்கையைக் குறைத்துவிட்டுப் பார்த்தால், ஆயிரத்திற்குப் 16 பேர்தான் மிஞ்சுகிறார்கள். ஆனால் கேரளத்தைப் பார்க்கிறபோது, அங்கே பிறப்பு விகிதம் ஆயிரத்திற்கு 26 ஆகவும், அதே நேரத்தில் இறப்பு விகிதம் ஆயிரத்திற்கு 7 ஆகவும் இருக்கிறது. தமிழ்நாட்டில் குடும்ப நலத் திட்டம் செம்மையாகச் செயல்படுத்தப்படுகிற காரணத்தால், மக்கள் தொகை அதிகரிப்பு குறைவாக இருக்கிறது என்றாலும், இறக்கக் கூடியவர்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கிற காரணத்தால், மக்கள் தொகை குறைவாக இருக்கிறதே தவிர குடும்ப நலத் திட்டத்தின் காரணமாக மட்டும் அல்ல என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : இந்தியாவிலேயே குழந்தைகளின் இறப்பு விகிதம் கேரளத்தில்தான் மிகவும் குறைவாக இருக்கிறது. மேற்கு வங்கம் போன்ற மற்ற பல்வேறு மாநிலங்களில் அது அதிகமாக இருக்கிறது. தமிழகத்தின் பிறப்பு விகிதமும் குறைந்திருக்கிறது, இறப்பு விகிதமும் குறைந்திருக்கிறது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். பி. சுப்பிரமணியம் : கேரள மாநிலத்தோடு தமிழகத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தமிழகத்தில் சராசரி தனி நபர் வருமானம் மிகவும் குறைவாகவே இருக்கிறது. அங்கே படித்தவர்களும் அதிகம், லைஃப் எக்ஸ்பெக்டன்சி எனப்படும் மனித வாழ்நாளும் அதிகம். சுகாதாரமான முறையில் அவர்கள் வாழ்வதும், முற்போக்கான நாடுகளைப் போன்ற சூழ்நிலை அங்கே இருப்பதும்தான் அதற்குக் காரணம்.

* திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கிராஸ் டொமஸ்டிக் புராடக்ட் என்று எடுக்கும்போது மாநிலத்தின் உற்பத்தியையும் சர்வீஸ்களையும் எடுத்துக் கொண்டு அதை மக்கள் தொகையால் வகுக்கிறார்கள். அந்த அடிப்படையில் பார்க்கும்போது, கேரளத்தில் வரும் மிகப் பெரிய வருவாய்த் தொகை வெளியே இருந்து வருவதாகும். எனவே தமிழ்நாட்டின் வருவாயை கணக்கில் கொண்டு பார்த்தால், கேரள மாநிலத்திற்கு வெளியே இருந்து மிக அதிகமான வருவாய் வருவதன் காரணமாக அங்கே பெர் கேப்பிட்டா இன்கம் அதிகமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-25)

திரு. எம். பி. சுப்பிரமணியம் : இந்த டிரெண்டை உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாட்டில் மக்கள் தொகை வளர்ச்சி குறைவு என்று சொல்லுவதற்குக் காரணம், குடும்ப நலத் திட்டங்கள் மூலமாக நாம் எடுத்த நடவடிக்கைகள் என்று பெருமை கொள்ளுவதைவிட இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அதற்குச் சரியான விளக்கத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே தமிழ்நாட்டிலே உணவு உற்பத்தியை எடுத்துக் கொண்டால், தனி நபர் சராசரி 145 கிலோகிராம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தியாவில் இது மிகவும் குறைவு என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். அதைப்போலவே மனிதன் சாப்பிடக்கூடிய சராசரி உணவின் அளவும் தமிழ்நாட்டில்தான் மிகவும் குறைவு என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். சில நாட்களுக்கு முன்பு பத்திரிகையில் ஒரு செய்தியைப் பார்த்தேன். நமது உணவுத் துறை அதிகமாக உற்பத்தி செய்துவிட்டதால், உணவு விளையக்கூடிய நிலங்களில் ஒரு பகுதியை பணப் பயிர் பயிரிட ஒதுக்க வேண்டும் என்ற கருத்து அரசாங்கத் தரப்பிலே சொல்லப்பட்டது என்பதையும் பார்த்தேன். தமிழக மக்கள் வயிரார உணவு உட்கொள்ள வேண்டுமென்றால், இப்போது உணவு உற்பத்தியைவிட இரண்டு மடங்கு உணவு தமிழ்நாட்டிற்குத் தேவைப்படுகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் துவக்கத்திலே நாம் இருக்கிறோம். திட்டமிட்ட பொருளாதாரம் என்று சொல்லுகிறபோது, மாநிலத்திலுள்ள திட்டக் குழு மாநில, மாவட்ட, பஞ்சாயத்து அளவிலே திட்டங்களை உருவாக்கினால்தான், திட்டங்களைச் செம்மையாக நடைமுறைப்படுத்துவதற்கு உதவியாக இருக்கும் என்ற கருத்து 1964 ஆம் ஆண்டில் வலியுறுத்தப்பட்டு, மாநிலத்தில் திட்டக் குழுக்கள் ஏற்பாடு செய்வதற்கு ஆகக்கூடிய செலவினங்களில் மூன்றில் இரண்டு பங்கை மத்திய திட்டக் குழு ஏற்றுக் கொள்ளுமென்று அறிவித்தார்கள். அதைப்போலவே மாவட்ட அளவிலே திட்டத்தைத் தயாரிக்க, அதை அமுல் செய்ய இயந்திரம் உருவாக்கப்படலாம் என்றும், அதற்குச் செலவாகக்கூடிய தொகையில் பாதி செலவினத்தை மத்திய திட்டக் குழு ஏற்றுக்கொள்வதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் மாநிலத் திட்டக் குழு இருப்பதாகப் பார்க்கிறேன். எந்தத் திட்டங்களை அவர்கள் பரிசீலித்தார்கள் ? என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் அவர்கள் ? அந்தத் திட்டக் குழுவிற்கு இந்த மாநில அரசு உரிய அதிகாரத்தையும், அந்தஸ்தையும்



கொடுத்திருக்கிறதா ?, ஏனென்றால், அமைச்சரவையிலே இடம் கொடுக்க முடியாதவர்களுக்கு அங்குள்ள பதவியைக் கொடுக்கத்தான் திட்டக் குழு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்குரிய முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. ஆகவே நிபுணர்களையும், விவரங்கள் அறிந்தவர்களையும், அதிகாரப் பற்றற்றவர்களையும் அங்கே நியமித்து மாநில அளவிலே திட்டங்களைத் தயாரித்து அதன்மூலம் மத்திய திட்டக் குழுவிடம் விவாதிப்பதுதான் பொருத்தமாக இருக்கும். அரசாங்க அதிகாரிகளை வைத்துக்கொண்டு அவர்கள் தயாரிக்கும் திட்டங்களுக்காக வாதிடுவது மாநிலத்திற்குப் பொருத்தமாக இருக்காது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

திட்டங்களை நிறைவேற்றுவதற்கு, கிராமங்களிலும், நகரங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லாததால், அவைகள் சரியாகச் செயல்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏற்கெனவே இந்த அவையிலும் சரி, வெளியேயும் சரி, பல சந்தர்ப்பங்களில் ஊராட்சித் தேர்தலையும் நகராட்சித் தேர்தலையும் நடத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது. எனக்கு முன் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் கூறியது போல, பல முறை இது குறித்து பல முறை வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டாலும், இன்னும் நிறைவேற்றப்படவில்லை. ஏற்கெனவே இருந்த சட்டத்திற்கு ஒரு திருத்தச் சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறோம். அந்தச் சட்டத்தின்படி பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. பிறகு அதையொட்டி உயர் நீதிமன்றங்களில் வழக்கு இருப்பதால், மேலும் தேர்தலை நடத்த முடியாது என்றால், பழைய சட்டத்தின்படி தேர்தலை நடத்தலாம் என்ற வாக்குறுதியை இந்த அரசாங்கம் கொடுத்திருக்கிறது. சட்டமன்றப் பேரவையிலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூறியதுபோல் இந்த ஆண்டு இறுதிக்குள் தேர்தலை நடத்தியே தீர வேண்டும். ஊராட்சித் தேர்தல் நடக்கவில்லையென்றால், நம்முடைய திட்டங்கள் நல்ல முறையிலே அமுலாக்க வகை இருக்காது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, காவல் துறையைப் பொறுத்தவரையில், ஒரு சங்கடத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். ஏற்கெனவே காவல் துறைக்கும், மாணவர்களுக்கும் தகராறு, காவல் துறையினருக்கும் ஓட்டுநர்களுக்கும் இடையே தகராறு, காவல் துறையினருக்கும் வழக்கறிஞர்களுக்கும் இடையே தகராறு என்று தமிழ்நாடு முழுவதும் நடக்கின்றன. இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் கோர்ட்டுக்குப் போகாமல் போராடக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். அதற்காக பரிகாரம் காண குழு அமைக்கப்பட்டிருந்தாலும், போலீஸ் நிர்வாகம்

சமுதாயத்திலுள்ள பல்வேறு பகுதியினருடன் மோதுவது என்பது தமிழகத்திற்குப் பெருமை சேர்ப்பதாக இல்லை. இனி அதுமாதிரி நிகழக் கூடாது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். கல்வி இலாகாவிலே இருப்பது

(முற்பகல் 11-30)

குறித்து ஒரு சில குறிப்புகளை நான் கூற விரும்புகிறேன். ஏற்கனவே பல கல்லூரிகளுக்கு அட்டானமி கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பது நமக்கு நன்றாகத் தெரியும். அதனுடைய விளைவுகள்பற்றி முழுமையாக நாம் தெரிந்து கொள்வதற்கு முன்பே உயர்நிலைப் பள்ளிகளுக்கு அட்டானமி கொடுக்க வேண்டும் என்பதைப்பற்றி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னதாக பத்திரிகையிலே பார்த்தேன். அட்டானமஸ் நிலை கல்லூரி களுக்குக் கொடுத்ததாலே என்ன இடையூறுகள், சங்கடங்கள் ஏற்பட்டிருக் கின்றன என்று பார்க்க வேண்டும். கல்லூரிகளிலே என்ன பாடங்கள் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று பாடத் திட்டங்கள் வகுப்பது, கேள்வித் தாள்களை தயாரிப்பது, தேர்வு எழுதிய பின்னர் விடைத்தாள்களைத் திருத்துவது, மார்க் போடுவது எல்லாம் அவர்களே செய்வது என்ற அளவில் அங்கு பலவிதமான ஊழல்கள் இருப்பதாக சம்பந்தப்பட்ட கல்லூரி ஆசிரியர்கள் என்னிடத்திலே வந்து சொல்கின்றார்கள். ஆகவே உயர்நிலைப் பள்ளி களுக்கு அந்த அட்டானமஸ் நிலைமையை விஸ்தரிக்கவேண்டுமா என்பதைப் பற்றி யோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அட்டானமி கொடுப்பது, அவர்கள் ஆதிக்கத்தில் வைப்பது அப்படிப்பட்ட ஊழல்கள் ஏற்படுவதற்கு துணை இருப்பதாக ஆகிவிடும். ஆகவே உண்மையில் அது கல்வியின் சிறப்புக்கு உகந்ததாக இல்லை என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பல பள்ளிகளிலே தமிழ் போதனா மொழியைக் கொண்டு வரவேண்டு மென்று கல்விக் கொள்கையாக அவர்கள் வெளிப்படுத்திக் கொண்டிருக் கிறார்கள். ஆனால் இப்போது எம்.ஏ. போன்ற படிப்புகளிலே ஆங்கிலத்திலே சொல்லிக்கொடுக்கப்பட்டாலும், சம்பந்தப்பட்ட மாணவர்கள் தமிழிலே பரிட்சை எழுத விரும்பினால், அவர்களுக்கு அந்த உரிமையை அளிக்கலாம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்: எனக்குத் தெரிந்த பல மாணவர்கள் எம்.ஏ. (சோசியாலஜி), எம்.ஏ. (எகனாமிக்ஸ்), எம்.ஏ. (இஸ்டரி) போன்ற படிப்பு படித்த மாணவர்கள் ஆங்கில போதனா மொழியிலே பயின்று இருந்தாலும், தமிழிலே நல்ல முறையிலே எழுதுவதற்கு அவர்கள் தகுதி வாய்ந்தவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் தமிழிலே எழுதுவதற்கு உரிமை கொடுக்க வேண்டும் என்று கேட்டால், அவர்களுக்கு அனுமதிக்கலாம். அதிலே தவறு ஒன்றும் நிகழாது என்றும் அதையும் கவனிக்க வேண்டும்



என்றும் கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக அரசாங்க இலாக்காக்கள் வேலை செய்வது குறித்தும் நிர்வாகம் பற்றியும் இப்போது இந்த மாமன்றத்திலே உறுப்பினர்கள் தொடர்பு கொள்வதற்கும், அவர்கள் விவரங்களைத் தெரிந்து கொள்வதற்கும், புரிந்துகொள்வதற்கும், நாடாளுமன்றத்திலே உள்ளதுபோல செலக்ட் கமிட்டி என்ற கமிட்டிகளை எல்லா அமைச்சகத்திற்கும் அமைக்க வேண்டும் என்று வேண்டுகோளை விடுக்கிறேன். ஏனென்று சொன்னால் இந்த மாமன்றத்திலே பல விஷயங்களை விவாதிப்பதற்கு போதிய நேரமோ அல்லது அவகாசமோ அல்லது எடுத்துச்சொல்லவோ வாய்ப்பு இல்லாமல் போய் விடுகிறது. நாடாளுமன்றத்திலே முக்கியமான அமைச்சகத்திற்கு செலக்ட் கமிட்டி அமைக்கப்பட்டிருப்பது போல, ஒரு குறிப்பிட்ட அமைச்சகத்திற் காவது செலக்ட் கமிட்டி அமைப்பதன் மூலமாக சட்டமன்ற விவரங்களைத் தெரிந்து கொள்ளவும் அரசாங்கத்திற்கும் ஒரு துணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினைபற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினையாக இல்லை என்பதை காங்கிரஸ் கட்சி ஒப்புக்கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஸ்ரீலங்காவிலே உள்ள தமிழர்கள் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினையில்லை என்று சொல்வதற்குக் காரணம், அவர்கள் மொழியினாலேயும் பண்பாட்டினாலேயும் நம்மவர்கள் என்பதோடு மட்டு மல்லாமல், மனித உரிமைகள் மறுக்கப்படுகின்ற வகையிலே அங்கே காரியங்கள் செய்யப்படுகின்றன என்பதுதான். மூன்றாவதாக, அங்கே நடக்கின்ற செயல்களின் காரணமாக தமிழ்நாட்டிற்கு ஏற்கெனவே 60,000 பேர்கள் அகதிகளாக வந்திருக்கின்றார்கள். ஆகவும் இந்தியா கவலைப்பட வேண்டிய பிரச்சினை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே எடுத்த நடவடிக்கைகள் போதிய பலன் அளிக்கவில்லை என்று சொல்லப்படுகின்றது. இதுவரையிலே எடுத்த நடவடிக்கைகள் காரணமாக ஓரளவுக்குக் கொடுமைகள் குறைந்திருக்கின்றன. அதற்குக் காரணம் மாநில அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள்தான் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். பேச்சு வார்த்தைகளின் மூலமாக பிரச்சினை முடியவில்லை என்று சொன்னால், வேறு வழியிலே நல்ல மார்க்கத்தைக் கையாண்டு அந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் காணப்பட வேண்டும்.

எனக்கு 1983-லே ஸ்ரீலங்காவிலே நடந்த சம்பவங்கள், மனித உரிமையை மீறியதாக இருக்கின்றன என்பது உண்மையிலே நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பாதுகாப்புக் குழுவிலே, பல நாடுகள் சம்பந்தப்பட்ட குழுவிலே, எடுக்கப்

கூறப்பட்டிருக்கிறது. ஆகவே தமிழ்நாட்டிலே உள்ள அனைத்துக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் இந்தப் பிரச்சினையில் உணர்வு பூர்வமாக எந்த வகையிலாவது தீர்வு காண வேண்டும் என்று விரும்புகிறார்கள். பேச்சுவார்த்தைகள்மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதுதான் அனைவருடைய விருப்பம். அதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆனால் அவைகளுக்குப் ஒரு கால கெடு இருக்கிறது. அதற்கு மேலும் போக முடியாது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். இன்று அகதிகளாக வந்திருக்கக்கூடியவர்கள் பல மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். பல மாவட்டங்களுக்கு அனுப்புவதால் உள்ள கெடுதல் என்ன என்பதைக் கூறிக்கொள்கிறேன். தமிழ்நாடு முழுவதும் ஸ்ரீலங்கா அகதிகளுடைய பிரச்சினை வருகிறது. அதனால் தமிழ்நாட்டினுடைய மக்கள் உணர்ச்சி வயப்படுவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கின்றது. அந்த ஆபத்து இருக்கும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாடு முழுவதும் அகதிகளாக இருக்கின்ற காரணத்தினாலே, அந்த உணர்வு ஏற்படும். ஆனால் அவர்கள் ஸ்ரீலங்காவிற்கு ஒரு கால கட்டத்திலே திரும்பிச் செல்லக்கூடியவர்கள்தான். அவர்கள் தமிழ்நாட்டில் நிரந்தரமாக இல்லாமல், ஸ்ரீலங்காவிற்குத் திரும்புவார்கள். அவர்கள் இங்கேயே நிரந்தரமாக இருக்கும் ரிப்பேட்ரியேட்ஸ் அல்ல என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-35)

ஆக வருடம் இரண்டானாலும், ஒரே இடத்தில் அவர்களை வைத்து, அவர்களுக்குப் போதிய உணவு, மற்றைய வசதிகளைக் கொடுக்க தமிழ்நாடு அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் தயாராக இருக்கின்றன. மத்திய அரசு இதற்காக 9 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. 100 கோடி ரூபாய் செலவானாலும், மத்திய அரசு அதைக் கொடுக்கத் தயாராக இருக்கிறதென்பதை நான் அறிவேன். எனவே அவர்களைப் பல மாவட்டங்களுக்கு அனுப்பி, மாவட்ட நிர்வாகங்கள் அதனாலே சீர் குலைவதாலே, இராமநாதபுரம் மாவட்டத்திலேயே அவர்களை வைத்து, அவர்களுக்குப் போதிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே, அகதிகளுக்கு உதவ நிதி வசூலிக்கும்படி பத்திரிகையில் பார்த்தேன். அந்த நிதி என்னவாயிற்று எப்படிச் செலவழிக்கப்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா தமிழர்களுக்கு உதவி நிதி சேர்க்க வேண்டுமென்று பத்திரிகைகளில் அறிக்கை விட்டிருப்பது நியாயமல்ல. அதனால் தவறுகள் ஏற்படுமென்று குறிப்பிட விரும்புகிறேன். ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினையில் இந்த மாமன்றத்தில் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் அந்தப் பிரச்சினைக்கு உடனடிப் பரிகாரம் எந்தவிதத்திலும் கிடைக்க வேண்டுமென்ற உணர்வுகளை மத்திய அரசுக்கு எடுத்துச்





சொல்ல இந்த மாமன்றத்தில் தீர்மானம் போட வேண்டுமென்றாலும், சர்வ கட்சித் தலைவர்களின் தூதுக் குழு டெல்லிக்குச் சென்று பிரதம அமைச்சரவர்களைக் காண வேண்டுமென்றாலும், அதற்கு காங்கிரஸ் கட்சி ஆதரவாக இருக்குமென்று எடுத்துக்கூறி, என்னுடைய பேச்சை முடிக்கிறேன்.

*மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, தமிழக ஆளுநர் அவர்கள் எட்டாவது பொதுத் தேர்தல் முடிவுற்றதற்குப் பிறகு, இரண்டு அவைகளுடைய உறுப்பினர்கள் மத்தியில் ஆற்றிய உரையின்மீது கடந்த நான்கு நாட்களாக இந்த மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். ஆளுகிற கட்சியின் சார்பிலிருந்தும், எதிர்க் கட்சிகளின் சார்பிலிருந்தும் இதுவரை 24 பேர்கள் பேசியிருக்கிறார்கள். நான் 5-வது உறுப்பினராக ஆளுநர் உரையை வரவேற்கின்ற அந்தப் பொறுப்பிலே பெருமைப்படுகிறேன். கடந்த 4 நாட்களாக நடைபெற்ற விவாதங்களிலே எல்லா உறுப்பினர்களும், குறிப்பாக எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஆளுநர் அவர்கள் உரையிலே குறிப்பிடத்தக்க கொள்கைகள் எடுத்துக் காட்டப்படவில்லை என்பதைப் பொதுவாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். சில உறுப்பினர்கள், குறிப்பாக ஆசிரியர் பிரதிநிதிகளாக வீற்றிருக்கிறவர்கள், அவர்கள் எப்போதுமே விவாதித்துக்கொண்டிருக்கிற, தொடர்புபடுத்திக் கொண்டிருக்கிற பிரச்சினைகளான, கல்வித் துறை தொடர்பான பிரச்சினைகளை இங்கே அதிக அளவில் எடுத்து வைத்திருக்கிறார்கள். தொடர்ந்து நிதி நிலை அறிக்கையும், அதன் மீது விவாதமும், அதற்குப் பிறகு ஒவ்வொரு துறையின் சார்பில் கொள்கை விளக்கக் குறிப்பு வைத்து, அதன்மீது விவாதமும் நடைபெற இருக்கிற காரணத்தாலே, அவைகளுக்கான விரிவான விளக்கங்களும், பதில்களும் அரசின் தரப்பிலிருந்து கிடைக்கக்கூடுமென்ற காரணத்தாலே, ஒட்டுமொத்தமாக எதிர்க் கட்சி உறுப்பினர்கள், எதிர்க் கட்சிகளுடைய தலைவர்கள், குறிப்பாக காங்கிரஸ் கட்சித் தலைவரும், திராவிட முன்னேற்ற கழகத்தினுடைய தலைவரும், மற்ற கட்சித் தலைவர்களும் எடுத்து வைத்திருக்கிற கருத்துக்களை ஒட்டி, பொதுக் கருத்துக்களுக்கு விளக்கம் அளிக்கின்ற வகையிலே அரசின் சார்பில் பதில் அமையுமானால், அது பலனுள்ளதாக இருக்குமென்று கருதி, அந்த முறையிலே நான் என்னுடைய பதிலை அளிக்க விரும்புகிறேன்.

(முற்பகல் 11-40)

அதற்கு முன்பாக 8 வது பொதுத் தேர்தல் முடிவுற்று, இந்த நாட்டின் மக்கள் மிகப் பெருவாரியான வாக்குகளை அளித்து, அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆளுகிற பொறுப்புக்கு 3 வது முறையாகத்

தேர்ந்தெடுத்து, அதனுடைய தன்னிகரற்ற தலைவர், தமிழகத்தின் தலைநாயகன் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை 3 வது முறையாக இந்த மாநிலத்தினுடைய முதலமைச்சராக பொறுப்பேற்பதற்கு தேர்ந்தெடுத்து, இந்த ஆட்சியை அவர் அமைத்திருப்பதற்காக தமிழகத்தினுடைய வாக்காளர் பெருமக்களுக்கு நான் தமிழக அரசின் சார்பிலும், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் சார்பிலும், ஆளுகிற கட்சியான அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே எங்களோடு தோழமைக் கட்சியாக துணை நின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி, காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி, அகில இந்திய பார்வர்ட் பிளாக் போன்ற தோழமைக் கட்சிகளுக்கும் அந்தத் தொண்டர்களுக்கும் எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். மூன்றாவது முறையாக நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற சூழ்நிலை எப்படி அமைந்திருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே பேசிய எல்லா உறுப்பினர்களும், எல்லாத் தலைவர்களும் கோடிட்டுக் காட்டினார்கள். 5 அல்லது 6 மாதங்களுக்கு முன்பு நம்முடைய முதல்வர் அவர்கள் உடல் நலம் சீர்கெட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதற்குப் பிறகும் அவர்களுடைய உடல் நல சூழ்நிலையால் அமெரிக்க மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பிறகும், அவர்கள் மீண்டும் நலம் பெற்று இந்த நாட்டை ஆளுகிற பொறுப்புக்கு இந்த நாட்டு மக்களாலே ஆணையிடப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இந்த நாட்டை ஆளுகிற உரிமை வழங்கப்பெற்றிருக்கிறது என்கிற கருத்திலே அவர்கள் உடல் நலம் பெற்றிருப்பதற்கு எல்லா உறுப்பினர்களும் தங்களுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார்கள். நான் அவர்கள் அனைவருக்கும், அவர்களுடைய நல்ல உள்ளங்களுக்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பிலும், அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், இந்த அரசின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் இந்த நேரத்திலே நாம் எல்லாம் மறந்து விடக் கூடிய ஒன்று என்றாலும், நினைவுபடுத்தக் கூடாது என்று இருந்தாலும், இதற்குப் பின்னாலே நடைபெற்று முடிந்த தேர்தலில் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், புரட்சித் தலைவரும் வெற்றி பெற்றதற்கு என்ன காரணம் என்பது பேசப்படுகிற ஒரு பொருளாக, இந்த அவையிலே ஆக்கப்பட்ட காரணத்தால், அனுதாப அலைகளின் காரணமாக மீண்டும் ஆளுகிற பொறுப்புக்கு அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்



கழகம் வந்திருக்கிறது என்று பல்வேறு எதிர்க் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் எடுத்துச்சொன்னதை நான் அடிப்படையாக வைத்து, ஒன்றிரண்டு தொடர்பான கருத்துக்களை நான் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

அனுதாப அலையின் காரணமாக, நாட்டு மக்கள் மூன்றாவது முறையாக நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவரை முதல்வராக தேர்ந்தெடுத்தார்கள் என்றால் 1980 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வாக்களித்திருக்கிறார்கள், 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வாக்களித்திருக்கிறார்கள், அதற்கும் என்ன காரணம் என்பதை அவர்கள் தனியாக உட்கார்ந்து ஆராய்வார்கள் என்று கருதுகிறேன். எங்களைப் பொறுத்தவரையில், ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையிலே தெரிவித்திருப்பதைப் போன்று இந்த ஆட்சி, இதற்கு முன்பு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி 7 ஆண்டுகளுக்கு மேலாக நிறைவேற்றி வருகிற திட்டங்களை ஏற்றுக்கொண்டு மீண்டும் அப்படிப்பட்ட நல்ல புதிய திட்டங்களை நிறைவேற்ற வேண்டும், ஏழையெளிய மக்கள் இந்தத் தலைவரைத்தான் நம்பிக் கொண்டிருக்கிறார்கள் என்ற அடிப்படையில்தான் வாக்களித்திருக்கிறார்கள் என்ற ஒரு உறுதியான உணர்வைத் தான் நாங்கள் இந்த முடிவில் பார்க்கிறோம். அனுதாப அலை, அனுதாப அலை என்றால், "தாயே, பிச்சை போடுங்கள்" என்று பிச்சைக்காரன் கேட்பதைப் போல, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பிச்சைப் பாத்திரத்தை ஏந்தி, தமிழ் நாட்டு மக்களை அணுகவில்லை. 'நீங்கள் புரட்சித் தலைவரின் படத்தைப் போட்டு வாக்குகளைக் கேட்கவில்லையா?' என்று எதிர்க் கட்சி வரிசையிலே இருப்பவர்கள் சொல்வார்களேயானால், அந்த முறையை இந்தத் தேர்தலில் தொடங்கி வைத்தவர்களே எதிர்க் கட்சியினர்தான், அதிலும் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-45)

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலுக்காக அரசியல் கட்சிகள் தங்களுடைய கொள்கை விளக்கங்களை, திட்டங்களை, ஆட்சிக்கு வந்தால் என்னென்ன திட்டங்களை நிறைவேற்றுவோம் என்று தங்கள் கட்சியின் சார்பில் தேர்தல் அறிக்கையாக வைத்த நேரத்தில், தி.மு.க. தான் உடல்நலம் சீர்பட்டு, மீண்டும் நம்மிடையே புரட்சித் தலைவராக வரவேண்டுமே, முழுநலம் பெற்று முதல்வராக வரவேண்டுமே, என்று இந்த நாட்டு மக்கள் கண்ணீரைச் சிந்தி, தூய உள்ளத்தோடு, வேதனை தேங்கிய உணர்வுகளோடு, இங்கே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல, தங்களுடைய இன்னுயிரையே பலி கொடுத்ததற்கும், தெரிந்தோ தெரியாமலோ உணர்ச்சி வசப்பட்ட இளைஞர்கள் 20 பேர் உயிர்களைப் பலி கொடுத்ததற்குப் பிறகும்,

அவர்கள் எப்படியாவது நலம் பெற்று வரவேண்டுமென்று கோடானுகோ
மக்கள் எதிர்பார்த்து வாழ்த்திக்கொண்டு, அவர்களுக்காக பிரார்த்தனை நட
திக்கொண்டிருந்த நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் தங்களது தேர்
அறிக்கையில் உடல் நலமற்று மருத்துவமனையில், அமெரிக்காவில் சிகி
பெற்று வருகிற மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களு
முறையான சிகிச்சை அளிக்கப்பட்டதா என்று கவலைப்பட்டது. அப்
சிகிச்சையளிக்கப்பட்டதாகத் தெரியவில்லை என்ற ஐயத்தையும் அது வெ
யிட்டது. முறையான சிகிச்சை அளிக்கப்படாமல், ஆபத்து வந்துவிடுமே
என்றும் அஞ்சியது. ஆகவே, கவலையின் காரணமாக, ஐயப்பாட்டின்
விளைவாக, அச்சத்தின் எதிரொலியாக அவர்கள் ஒரு முடிவை அறிவி
தார்கள். "நாங்கள் ஆட்சிக்கு வந்தால், மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர்.
அவர்களுக்கு இதுவரை அளித்து வருகிற, அளித்து வந்த சிகிச்சைகள், முறை
யாக அளிக்கப்பட்டனவா என்பதை ஆராய்ந்து கண்டறிய ஒரு விசாரணைக்
கமிஷனை வைப்போம்" என்றார்கள். விசாரணைக் கமிஷன் எப்போது
வரும்? முதல்வர் அவர்கள் உடல்நலம் சேராமல் அப்படியே கெட்டு
போயிருந்தால் வரும். ஆனால் முதல்வர் அவர்கள் என்றைக்குமே எங்களை
ஏமாற்றுகிறதோடு மட்டுமல்லாமல், அவருடைய எதிரிகளையோ—தம்
எதிரியாக யாராவது எண்ணுவார்களேயானால், அந்த எதிரிகளை—ஏமா
ற்றுவதில் மிகுந்த வல்லமை பெற்றவர்கள். அப்படிப்பட்ட சிரமத்தை திராவிட
முன்னேற்றக் கழகத்திற்கு வைக்க வேண்டாமென்று எண்ணி, "எந்த
விசாரணைக் கமிஷனும் வைத்து எனக்காக ஆய்வு நடத்த வேண்டாமென்று
சொல்லாமல் சொல்கிற வகையில், சென்ற மாதம் 4 ஆம் தேதி காலையில்
கதிரவன் எழுகின்றபோது, கதிரவன் ஒளி சிறந்ததா, புரட்சித் தலைவரின்
ஒளி சிறந்ததா என்று போட்டி போடுகிற வகையில் சென்னை விமான நிலையத்
திற்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த அந்த மேடையில் பத்து இலட்சத்திற்கு
மேற்பட்ட தமிழக மக்கள் பார்க்கிற வகையில், ஜோதியாக வந்து நின்றார்கள்.
அப்படி அவர்கள் விசாரணைக் கமிஷன் வைக்கவேண்டிய அவசியத்தையே
இல்லாமல் ஆக்கி விட்டதற்குப் பிறகு, இன்னொரு கருத்தையும் அந்த
தேர்தல் அறிக்கையில் சொல்லியிருந்தார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால்
அரசுச் செலவிலேயே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு
நல்ல, சிறந்த வைத்திய வசதிகளைச் செய்வோம் என்று சொன்னார்கள்
சாதாரணமாக நல்ல

(முற்பகல் 11-50)

உணர்வின் அடிப்படையிலே சொல்லப்பட்ட கருத்துதான் இது. இல்லை என்
சொல்லவில்லை. வீட்டிலே பெரியவர்கள், அன்புக்குரியவர்கள், பெற்
வர்கள் நலிவுற்றுக் கிடக்கிற நேரத்தில், அதற்கு உரியவர்கள், சகோதரர்க



பிள்ளைகள், உற்றார் உறவினர், "அவர்களுக்காக ஆகிற செலவை நான்
பார்த்துக்கொள்கிறேன், அவர்களுக்கு மிகச் சிறந்த வைத்தியத்தை நான்
அளிக்கிறேன், அவர்களை அநாதையாக விட்டு விடமாட்டேன்" என்று
சொல்வதைப்போல, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்ன இருந்
தாலும், புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே முதல்வராக இருக்கக்கூடாது
என்பதிலே அவர்கள் மிகுந்த அக்கறை செலுத்தினாலும், இந்த நாட்டில்
நலமாக இருக்க வேண்டும், வாழ வேண்டும் என்ற பாச உணர்வோடு, பழைய
தொடர்பை எண்ணி, நாற்பதாண்டு காலத் தொடர்பை எண்ணி இன்றைக்குத்
திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற ஒரு கட்சியை ஆட்சிப் பொறுப்பிலே
ஏற்றுவதற்கு இந்த நாட்டினுடைய ஈடு இணையற்ற தலைவர் பேரறிஞர்
அண்ணா அவர்களுடைய எல்லையற்ற திறமைக்கு உறுதுணையாக இருந்தவர்
மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்,
அவர் இந்த நாட்டிலே இருந்துவிட்டுப் போகட்டும் என்கிற பாச உணர்வோடு,
"அந்த மருத்துவச் செலவை ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னார்கள்.
அனுதாப அலை அனுதாபத்தை பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தலாம் என்கிற
எண்ணம், திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தினுடைய தேர்தல் களத்
தில் தோற்றுவித்தது என்பதை நான், மாண்புமிகு தலைவர் அவர்களே,
உங்கள் வாயிலாக இந்த மன்றத்திற்கும், நாட்டிற்கும், தெரிவிக்கக் கடமைப்
பட்டிருக்கிறேன். ஆனால் நாட்டு மக்கள் வேறுவிதமாக எண்ணினார்கள்.
மாண்புமிகு புரட்சித் தலைவருக்கு அவர் வளர்த்து கட்டிக் காப்பாற்றிய,
அண்ணா உருவாக்கிய திராவிட முன்னேற்றக் கழகம், இன்றைக்கு அது
திராவிட முன்னேற்றக் கழகமாக இருக்கிறதா இல்லையா என்பதுகூட
பிரச்சினை இல்லை, அவர்களாலே உருவாக்கப்பட்ட தலைவர்கள் இருக்
கிறார்கள், அவர்கள் அன்புள்ளத்தோடு உதவி செய்ய வருகிறார்கள். ஆனால்
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு கட்சிக்குச் சொந்தக்காரர் அல்ல,
இந்த நாட்டிற்குச் சொந்தக்காரர், தமிழகத்திற்குச் சொந்தக்காரர், அவர்
எங்கள் வீட்டுப் பிள்ளை என்பதை, கோடானுகோடித் தாய்மார்களும்,
உழைக்கின்ற மக்களும், "புரட்சித் தலைவர் அவர்களுடைய நலத்தை நாங்கள்
பாதுகாக்கிறோம். அவர் நலம் பெற்று வருவார், மீண்டும் முதல்வராக வருவார்.
இன்றும் அவர்தான் முதல்வர், என்றும் அவர்தான் முதல்வர்" என்கிற ஒரு
மிகச் சிறந்த வரலாற்று உண்மையை இந்தத் தேர்தலின் மூலம் நிரூபித்துக்
காட்டினார்கள். ஆகவே, அனுதாப அலை என்பதை அதற்குப் பிறகுதான்
நாங்கள் சந்திக்க வேண்டிய அவசியம் எங்களுக்கு வந்தது. ஐயோ, உடல்
நலம் கெட்ட அவருக்கு கை, கால்கள் விளங்காமல் போய்விட்டது, அவர்
எழுந்து நடமாடவே முடியாது, சிந்திக்கின்ற திறனையே இழந்துவிட்டார்
என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே, அவர் சிந்திக்கின்ற திறனை இழந்
திருக்கிறாரா இல்லையா என்பதல்ல பிரச்சினை, அவர் சிந்திக்கிற திறனைப்

பெறுவார், மீண்டும் பெறுவார், முழுமையாகப் பெறுவார், இடைக் காலத்திலே சில நாட்களுக்கு வேண்டுமானால் இல்லாமல் இருக்கலாம்; அவருடைய வலது கை, வலது கால் சரியாக விளங்குகிறதா என்பது இன்றைக்குப் பிரச்சினை அல்ல; அவர் நடப்பார், சிங்க ஏறுபோல நடப்பார், அவருடைய கொடுத்து கொடுத்துச் சிவந்த கரம் அடங்கிவிடாது, அணைந்து விடாது; அவருடைய உணர்வும் உள்ளமும் இந்த நாட்டு மக்களுக்கு என்றைக்கும் வாழ்வளித்துக்கொண்டிருக்கும். ஆகவே அவர்கள் மீண்டும் வருவார்கள் என்பதிலே நம்பிக்கை கொண்டிருந்த நாங்கள் நிச்சயமான நம்பிக்கை கொண்டிருந்த நாங்கள்—அந்தச் சந்தேகத்தை விளக்குகின்ற வகையிலே தான் பிரச்சாரத்தை மாற்றியமைத்துக்கொண்டோம். ஆகவே பிச்சை கேட்கிற நிலையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை எங்களுடைய தலைவன் விட்டுவைக்கவில்லை என்பதையும், பிச்சை கேட்டுத்தான் வாழ்வளிப்போம் என்ற நிலைமையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை நாட்டுமக்களும் இல்லை என்பதையும் இந்த நேரத்திலே நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-55)

அடுத்தபடியாக, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் அவைகளுக்குச் சுருக்கமாகப் பதில் அளித்துவிட்டு திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியினுடைய தலைவர் நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் சில உணர்வுகளை எழுப்பியிருக்கிறார்கள், அதற்குப் பதில் அளிப்பது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். மத்திய மாநில உறவுகளைக் குறித்து சர்க்காரியா கமிஷனை மத்திய அரசு அமைத்திருக்கிறது. ஒவ்வொரு மாநிலமும் தங்களுடைய கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று மத்திய அரசு கேட்டிருக்கிறது. அதிலே அக்கறை கொண்டிருக்கின்ற நம்முடைய தமிழக அரசு, மாண்புமிகு முன்னாள் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. ராமபிரசாத் ராவ் அவர்களை கமிஷனாகப் போட்டு, அவர்கள் கருத்துக்களைத் திரட்டி மத்திய அரசுக்கு, குறிப்பாக சர்க்காரியா கமிஷனுக்கு மாநில அரசினுடைய கருத்துக்களை எப்படித் தெரிவிக்க வேண்டும், எந்த வகையிலே அமைய வேண்டும் என்பது குறித்து அரசுக்கு தன்னுடைய கருத்துக்களை அறிக்கையாக அனுப்பியிருக்கிறார்கள். அந்த அறிக்கையை அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள், தலைவர்களுடைய பரிசீலனைக்கும் அந்தக் கருத்துக்கள் வைக்கப்படும். அதில் உங்களுடைய மேலான கருத்துக்கள் பெறப்படும். இவைகளையும் தாண்டி ஒரு அனைத்துக் கட்சியைச் சார்ந்த



தலைவர்கள் மட்டத்திலே ஒரு கூட்டம் வேண்டுமானாலும் கூட்டி, அந்தக் கருத்துக்கள் பரிசீலிக்கப்படும் என்பதை நான் அரசின் சார்பிலே இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

நகராட்சிகளுக்கு அதிக அதிகாரம் தரவேண்டும், பஞ்சாயத்துக்களுக்கு அதிக அதிகாரம் தரவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் மத்தியிலே, ஆளுகிற கட்சியிலே மிக முக்கியமான தமிழ் மாநிலத்தினுடைய தலைவர். இந்த மாநிலத்தையும் நீண்ட காலம் அவர்கள் ஆண்டு இருக்கிறார்கள். இன்றைக்கும் எதிர்க் கட்சிகள் மாநிலங்களிலே இருக்கக் கூடாது, ஆளக் கூடாது என்கிற கருத்தை மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. இராஜீவ் காந்தி அவர்கள் தெரிவித்தபோது, அது ஒரு பிரதம அமைச்சருடைய கருத்தல்ல; அகில இந்திய காங்கிரஸ் தலைவருடைய கருத்து என்றுகூட இங்கே வாதாடினார்கள். அது ஒரு கட்சித் தலைவரின் கருத்து. தன்னுடைய கட்சி நாடு முழுவதும் ஆட்சி நடத்த வேண்டுமென்று விரும்புவது தவறல்ல. ஆனால் மாநிலங்களில் ஒவ்வொரு கட்சியும் அந்த மாநிலங்கள் ஆட்சியை ஏற்றுக் கொண்டிருக்குமானால், அந்த மண்ணுக்கு ஏற்ற வகையிலே பயிர் செய்யப்படுகிற உணர்வோடு, அந்த வளத்தைத் தெரிந்து மக்கள் தேர்ந்தெடுக்கிற அரசு ஒவ்வொரு மாநிலத்திலேயும் இருந்தாக வேண்டும். அப்படி இருந்தால் தான், மத்திய அரசு பலம் உள்ளதாக, வலிவு உள்ளதாக அமையும் என்கிற மாண்புமிகு பேரறிஞர் அண்ணா அவர்கள் கருத்தில், அண்ணாவின் இதயக் கனியாம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு அவர் தலைமை ஏற்று வழி நடத்திச் செல்கின்ற கழகம், இன்றைக்கும், என்றைக்கும் அதிலே உறுதியாக இருக்கும். (கை தட்டல்). ஆனால் அப்படி இந்தியா முழுவதும் ஆள வேண்டுமென்று விரும்புகிற ஒரு கட்சி, நம்முடைய மாநிலத்திலே தலைவர்களிலே முன் வரிசையிலே இருக்கின்ற மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கட்சியினர் ஒரு 20 ஆண்டுக் காலம் இந்த மாநிலத்தை ஆட்சி செய்திருக்கிறார்கள். (குறுக்கீடு) அந்தக் காலத்திலே அதை நினைவு படுத்துவது அவ்வளவு ருசியாக இருக்காது. (குறுக்கீடு) வளர்ந்து விட்டதற்குப் பிறகு, ஒரு பெண்மகளாக இருப்பவள், இன்னொருவருக்கு மனைவியாக மாறி விட்டதற்குப் பிறகு, அவள் இன்னாருடைய மனைவி என்று சொல்வோமே தவிர, இன்னாருடைய மகள் என்று சொல்லிக் கொண்டிருந்தால் . . . . . . . . . .

திரு. எம். பி. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, அது தப்பில்லை.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: அது தப்பில்லை; அதை அடிக்கடி நினைவுபடுத்திக் கொண்டிருந்தால், இந்த புகுந்த வீட்டிலே போய் பிறந்த வீட்டுப் பெருமையைப் பேசிக் கொண்டிருக்கின்ற குற்றம் நேர்ந்துவிடும், நான்

அதனாலே, வளர்ச்சி என்று சொன்னால், திராவிட இயக்கத்திலே இருந்து காங்கிரசுக்குச் செல்வதுதான் வளர்ச்சி என்று சொன்னால், அதை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொள்ளவில்லை. (கைதட்டல்) ஆகவே நான் அந்த விவாதத்திற்குள்ளே நுழைய விரும்பவில்லை. இருபது ஆண்டுக் காலம் காங்கிரஸ் கட்சி இந்த மாநிலத்தை ஆண்டிருக்கிறது. அந்தக் காலத்திலே காங்கிரஸ் அரசு நகராட்சிக்கோ, ஊராட்சி மன்றங்களுக்கோ கொடுத்த அதிகாரத்தை இந்த ஆட்சி வந்து எடுத்து விட்டது என்று சொல்ல முடியுமா?

(நண்பகல் 12-00)

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, கடந்த காலத்திலிருந்த அதிகாரத்தைப் பறித்துவிட்டதாக நான் சொல்லவில்லை. புதிதாக அதிகாரங்கள் கொடுப்பது நல்லதல்லவா? அதை ஏன் பரிசீலிக்கக் கூடாது என்றுதான் கேட்டேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** நல்லது என்பது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு மட்டும் ஏற்பட்ட ஒருவழிப் பாதையாக அமைந்து விடக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தியா முழுவதையும் ஆளுகிற கட்சிக்குச் சொந்தக்காரர். பல மாநிலங்களில் அவர் சார்ந்திருக்கிற கட்சி ஆளுகிற கட்சியாக இருக்கிறது. ஆகவே ஒரு கொள்கையை, ஒரு முடிவை அகில இந்திய அளவில், மத்திய அரசு அளவில் எடுத்து வழிகாட்ட முன்வரலாம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். கல்வியை கன்கரன்ட் லிஸ்ட்டில் எடுத்துக் கொண்டு கல்விக்கு வழிகாட்டுகிறோம் என்று சொல்லும் போது, ஊராட்சிகளுக்கு, நகராட்சிகளுக்கு, மாநகராட்சிகளுக்கு இப்படிப் பட்ட அதிகாரங்களையெல்லாம் அதிகமாக அளிக்கலாம் என்று ஏன் ஒரு கொள்கை முடிவை எடுக்கக் கூடாது என்றுதான் உரிமையோடு கேட்கிறேன். குற்றமாகச் சொல்லவில்லை. ஆனால் அதிகமான அதிகாரங்களைப் பரவலாக்க வேண்டும் என்பதிலும், ஊராட்சிகளும் நகராட்சிகளும் இன்னும் அதிகமான பொறுப்பேற்று செயல்படத் தக்க வகையில் சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதிலும், கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டும் என்பதிலும் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மாறுபாடான கருத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிலச் சீர்திருத்தத்தைப்பற்றி மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, "நில உச்சவரம்புச் சட்டம் கொண்டு வந்தீர்கள்—அல்லது கொண்டு வந்தோம்—அல்லது கொண்டுவந்தார்கள்—ஆனால் அதனுடைய பலன், பனையைக் கெல்லி எலியைப் பிடித்த கதையாகத்தானே இருக்கிறது" என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அதில் இருக்கிற ஓட்டை-





உடைசல்களை, சந்து பொந்துகளைப் பயன்படுத்தி எப்படி நிலச்சுவான்தார்கள் பதுங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடித்து ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுக்கும் வகையில் நீண்ட காலத்திற்கு முன்னரே இந்த அரசு சட்டத்தின் துணை கொண்டு நிலச்சுவான்தார்கள் பதுக்கி வைத்திருக்கிற நிலங்களை எடுத்தாலன்றி இந்த நிலச் சீர்திருத்தச் சட்டம் முழுமையாக நிறைவு பெறாது என்ற கருத்தில்தான், தமிழகத்தின் இரண்டு அவைகளிலும் எல்லோருடைய ஒப்புதலையும் பெற்று சட்டம் ஒன்றினை நிறைவேற்றி அனுப்பியது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரே கூட குறிப்பிட்டார். "நான் அப்போதே சொன்னேன். இது அரசியல் சட்டத்திற்கு விரோதமாக இருந்தால், அதை எப்படி ஏற்றுக் கொள்வது என்று கேட்டார்கள். ஆனால் நிலச் சீர்திருத்தச் சட்டம் நீங்கள் விரும்புகிறபடி அல்லது நாங்கள் விரும்புகிறபடி நடைபெற வேண்டுமானால், அரசியல் சட்டம் குறுக்கே நிற்கிறது என்ற காரணத்தைக் காட்டிக் கொண்டிருக்க முடியாது. இப்படிப் பல சீர்திருத்தங்கள் அரசியல் சட்டத்தில் ஏற்படுத்தியிருக்கிற சந்து பொந்துகளில் நுழைந்துவிடும். எனவேதான் மாநில அரசு முறையான வகையில் ஒரு சட்டத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பியது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களிடம் நான் ஒன்றை அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். "நீங்கள் இந்த அவையில் எடுத்துச் சொல்லுகிற கருத்துக்களை, நாடாளுமன்றத்தில் தாங்கள் இல்லை என்றாலும், தங்களுடைய கட்சி உறுப்பினர்களை எடுத்துப் பேசச் சொல்லுங்கள். அது நாடாளுமன்றத்தில் நடக்கட்டும். தாங்கள் தனியாக இந்தியப் பிரதமரைச் சந்திக்கிறபோது அல்லது காங்கிரஸ் கட்சியின் தலைமைக் கூட்டங்களில் கலந்து கொள்கிறபோது, இப்படிப்பட்ட ஒரு சீர்திருத்தமான சட்டம் தமிழகத்திலிருந்து நிறைவேற்றியனுப்பப்பட்ட சட்டம் திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கு அரசியல் சட்டம் குறுக்கே நிற்குமானால், நாம் எத்தனையோ முறை அரசியல் சட்டத்தினைத் திருத்திக் கொண்டிருக்கிறோமே. அப்படி இந்த முறையும் திருத்தியாவது இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று தெரிவிக்க வேண்டும்" என்று அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். காரணம் அது திருப்பியனுப்பப்பட்டதற்கு அடிப்படை, அரசியல் சட்டம் இடமளிக்கவில்லை என்பதுதான். ஆகவே அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு ஆட்சி நடத்தும் ஒரு அரசு, ஒரு சட்டமன்றம் எப்படி ஒரு சட்டத்தை நிறைவேற்ற முடியும்? அந்தச் சட்டத்தை அதற்குள்தான் நிறைவேற்ற வேண்டுமென்றால், இந்த நிலத் திமிங்கலங்களை நாம் வெளியே கொண்டுவர முடியாது. ஆகவே எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய நல்லெண்ணத்தை எங்களாலே புரிந்து கொள்ள முடியவில்லை. ஒருவேளை காங்கிரஸ் கட்சியில் இருக்கிற யாராவது இதைத் தடுப்பார்கள் என்று எண்ணினால்—யாராவது எண்ணினாலும்

நாங்கள் எண்ணவில்லை—நீங்கள் அவர்களுக்கு இந்தக் கொள்கையை எடுத்துச் சொல்லி, திருத்துகிற முயற்சியில் ஈடுபட வேண்டும். அல்வாறு இருப்பார்கள் என்று நான் எண்ணவில்லை. ஏனென்றால் இந்தியப் பிரதமர் அவர்கள்—கொடுமையான கொலைக்கு உள்ளாக்கப்பட்டவர், இந்த நாட்டை ஒற்றுமையாகவும், நாடு சிதறுண்டு போகாமலும் பார்த்து மிகச் சிறந்த வளர்ச்சியை நோக்கி நடத்திக்கொண்டிருந்த திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் உருவாக்கிய 20 அம்சத் திட்டமானாலும் சரி, இன்றைக்கிருக்கிற இளைய பிரதமர் அவர்கள் அமுல்நடத்துகிற திட்டமானாலும் சரி, அதற்கு விரோதமானவர்கள் நாங்கள் என்று யாரும் எங்களை ஒதுக்கிவிட முடியாது.

(பிற்பகல் 12-05)

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அரசியல் சட்டத்திலே இடம் இல்லையென்று மத்திய அரசு அறிவித்துவிட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அது அரசியல் சட்டத்திலே இடம் பெறக்கூடிய அளவிற்கு அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று இந்த இரு அவைகளிலும் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினால் நலமாக இருக்குமல்லவா ? அந்த முயற்சியில் இந்த அரசு ஈடுபடுமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** திருப்பியனுப்பப்பட்ட அந்தச் சட்டத்தை நம்முடைய சட்டத் துறை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. வேறு வகைகளிலே அவர்கள் நுழைகிற சந்துபொந்துகளில் நாமும் நுழைய முடியுமா என்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். எல்லோருக்கும் அந்த சந்துபொந்துகள் இருக்கின்றன. அப்படி முடியவில்லையென்றால், நம் ஏழை மக்களுக்காக, ஏழை விவசாயிகளுக்காக அந்தச் சட்டத்தை எப்படி நிறைவேற்ற வேண்டும் என்பதை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே ஆலய நிலங்களைப் பற்றிய ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஆலயங்களுக்கு நிலம் வேண்டுமா, வேண்டாமா என்பது பிரச்சினை அல்ல. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நம்முடைய முன்னோர்கள், ஆலயங்கள் எழுப்பி அதற்கென்று சில சொத்துக்களை, நிலபுலன்களாக வைத்துவிட்டு, வீடுகளாக வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அவைகள் எல்லாம் அறக் கட்டளைகள். எதிர்காலச் சந்ததியினரை நம்பி, ஆலயங்கள் பெயரால் தர்மங்கள் செய்வதற்காக விட்டுவிட்டுச் சென்றிருக்கிறார்கள். 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்று பெரியவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் ஏற்றுக்கொண்ட கொள்கையைப் போல மக்கள் மகேசன் பெயரில்



மக்களுக்குத் தொண்டாற்றுவதற்காகத்தான் அறக்கட்டளைகளும், தர்மஸ்தாபனங்களும் உருவாக்கப்பட்டன. அப்படி உருவாக்கப்பட்ட அறக்கட்டளைகளையும் தர்மஸ்தாபனங்களையும் பொறுத்தவரையில், சட்டத்தின்படியும் நடக்கிறோம், மரபின்படியும் நடக்கிறோம். சட்டம் எழுதப்பட்டது ; மரபு ஒத்துக்கொள்ளப்பட்டது. அதைப் போலவேதான் இந்த நாட்டு எதிர்காலச் சந்ததியினர் நல்லவர்களாக, அறம் உள்ளவர்களாக நிறைவேற்றுவார்கள் என்று நம்பி, நம்முடைய முன்னோர்கள் அற நிலையங்களையும், அறக்கட்டளைகளையும், தர்மஸ்தாபனங்களையும் உருவாக்கிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். இன்றைக்குக் கால மாற்றத்தினால் பல கருத்துக்கள் உருவாகியிருக்கின்றன. பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை ஆலயங்கள் வைத்துக்கொண்டு, அந்த ஆலயங்கள் சார்பிலே குத்தகைக்கு விட்டு குத்தகையைக் கொடுக்க முடியாமல உண்மையிலேயே திண்டாடுகிற விவசாயிகள் இருக்கிறார்கள். விவசாயிகள் பெயராலே பினாமியாக வைத்துக்கொண்டிருப்பவர்கள், விளைந்தாலும் கொடுக்க மறுப்பவர்களும் இருக்கிறார்கள். ஒரு பக்கத்திலே வெள்ளம் வந்தது, அதற்கு வஜா என்று அரசு சொன்னால், எங்களுக்கும் வெள்ளம் வந்தது, எங்களுக்கும் வஜா செய்யுங்கள் என்று சொல்லுகிறவர்களும் இருக்கிறார்கள். ஒரு பகுதியிலே மழை பெய்யவில்லை, வறட்சி வந்துவிட்டது, அதற்காக வஜா செய்கிறோம் என்றால், எங்களுக்கும் மழை பெய்யவில்லை, வஜா செய்ய வேண்டும் என்று கொடுக்காமல் இருப்பவர்களும் இருக்கிறார்கள். இவைகளுக்கெல்லாம் மேலாக 'ஏன் கொடுக்கிறாய்?' என்று கேட்கிற நம்மைப் போன்ற அரசியல்வாதிகள் இருக்கிறார்கள். 'நீ ஏன் ஆலயத்திற்குக் கொடுக்க வேண்டும்? எங்களுடைய கட்சிக்கு மூட்டை மூட்டையாகக் கொடுக்க வேண்டும்' என்று சொல்லுகிற அரசியல் கட்சிகள் இருக்கின்றன. இவர்கள் எல்லாம் சேர்ந்து இன்றைக்கு நாட்டிலே உள்ள மக்களை, ஒரு நம்பிக்கைக்குரிய மக்களாக ஆக்க வேண்டுமென்று சொல்லுகிற நம்மை எல்லாம் நம்பிக்கையை உடைத்தெறிகிற மக்களாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு வார்த்தையைச் சொன்னால், அந்த வார்த்தையின்படி நடப்பேன் என்று சொல்லுவது மனிதனுக்குள்ள மிகப் பெரிய சிறப்பு. ஆனால் ஒரு வார்த்தையைச் சொன்னால் அதன்படி நடக்கமாட்டேன் என்று ஒரு இலக்கணம், ஒரு வார்த்தையைச் சொன்னால் அதன்படி நடக்கக்கூடாது என்று சொல்லுவதற்கு ஒரு இயக்கம் என்று இன்றைக்குத் தொடங்கிவிட்டோம். அதனாலே இன்றைக்கு, கால மாற்றத்தின் விளைவாக, ஆலய நிலங்களிலிருந்து முறையாக அதன் ஆலயங்கள் வருவாயைப் பெற முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றன. இதனால் சுமார் 35 கோடி ரூபாய் நியாயமான குத்தகை பாக்கியாக—முன்னால் 40 சதவீதம், இப்போது 25 சதவீதம், அதுகூட கொடுக்கப்பட முடியாமல் நிலுவையாக—இருக்கிறது. இதிலே உண்மையிலேயே விளைச்சல் இல்லாமல் கஷ்டப்படுகிற விவசாயிகளை விட்டு

[திரு. இராம. வீரப்பன்] [1985 மார்ச் 18

விட்டாலும், பல பேர் பெயரால் பினாமியாக 15 ஏக்கர், 20 ஏக்கர் என்று வைத்திருக்கிறவர்கள் நிறைய இருக்கிறார்கள். இங்கேயும் நிலச் சீர்திருத்தம் வருகிறது. ஆலய நிலங்களை ஐந்து ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேல் வைத்திருக்கக் கூடாது என்று சொன்னாலும், அங்கேயிருக்கிற கர்ணம், கணக்கப் பிள்ளை ஆகியவர்களிடம் சொல்லி, இந்த வருடம் கருப்பையா, அடுத்த வருடம் முனுசாமி, அடுத்த வருடம் பொன்னுசாமி என்று பெயரை மாற்றிக்கொண்டு, குத்தகைப் பெயரைப் போட்டுக் கொண்டு, நாற்பது ஏக்கர், முப்பது ஏக்கர் என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையிலிருந்து ஆலயங்கள் காப்பாற்றப்பட வேண்டும், ஆலயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களின் மூலமாக மக்களுக்குப் பயன்படுகிற காரியங்களைச் செய்ய வேண்டும் என்று நாம் எடுத்துக்கொள்கிற முயற்சியில் இந்த நிலங்கள் மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கின்றன. இதைப்பற்றி முன்னாள் முதல்வர்

(பிற்பகல் 12-10)

அவர்கள், பெரியவர் மாண்புமிகு திரு. பக்தவத்சலம் அவர்களேகூட அடிக்கடி சொல்கின்றார்கள். அது என்னவென்றால் அரசாங்கமே எடுத்துக்கொண்டு அவர்களுக்கு நஷ்டஈட்டை ஏன் கொடுத்துவிடக்கூடாது என்பதுதான். நான் அவர்கள் ஒரு நிகழ்ச்சியில் இருந்தபோது ஒருமுறை கேட்டேன். "நீங்கள் இருந்தபோதே செய்துவிட்டுப் போயிருந்தால் எங்களுக்கு இவ்வளவு கஷ்டம் வந்திருக்காதே. நீங்கள் தானே அறநிலையத் துறை அமைச்சராக இருந்தீர்கள் முதல்வராகவும் இருந்தீர்கள். நீங்கள் செய்தால் எல்லா ஆஸ்திகவாதிகளும் ஒத்துக்கொண்டிருப்பார்கள். நாங்கள் செய்தால் இவர்கள் நாத்திகர்கள், இவர்கள் ஆண்டவன்மீது நம்பிக்கை அற்றவர்கள் என்பார்கள். உரலுக்கு ஒரு பக்கம் இடி, மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி என்பார்களே அதுபோல, எங்களுடைய பங்காளிகள் திராவிட இயக்கத்தினைச் சேர்ந்தவர்கள், நாங்கள் அண்ணா அவர்கள் பாதையிலே இருந்து, பெரியார் அவர்கள் பாதையிலே இருந்து வழி தவறிப் போய்க்கொண்டிருக்கிறோம் என்கிறார்கள். ஆனால் ஆத்திகர்கள் இல்லை இல்லை, இவர்கள் அந்தப் பாதையிலேதான் போய்க் கொண்டிருக்கின்றார்கள். ஏதோ அவர்கள் ஒன்றாக இல்லாமல் இருக்கின்றார்களே தவிர, அடிப்படைக் கருத்திலே அப்படியேதான் இருக்கின்றார்கள் என்று எங்கள்மீது ஐயப்படுகின்றார்கள், சந்தேகப் படுகின்றார்கள். ஆகவே நீங்களாகவே செய்திருந்தால் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இப்போது வந்திருக்காது" என்று நான் அவர்களிடத்திலே சொன்னேன். பின்னால் ஒரு ஒன்பது ஆண்டு காலம், அதாவது அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலே இரண்டு ஆண்டு காலம், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் காலத்தில் ஏழு ஆண்டு காலம் இருந்தபோது



1985 மார்ச் 18] [திரு. இராம. வீரப்பன்]

செய்திருந்தாலும், இந்தப் பிரச்சினை வந்திருக்காது. எல்லாப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கென்றே இறைவனே, இயற்கையே அனுப்பிய புரட்சித் தலைவர் அவர்கள் காலத்திலே இதெல்லாம் தீர்க்கப்பட வேண்டும் என்று மக்கள் எண்ணுகின்றார்கள்போல் இருக்கிறது. எல்லோரும் இது புரட்சித் தலைவர் அவர்கள் காலத்திலே தீர்க்கப்பட வேண்டும் என்று எண்ணுகிறார்கள். நான் ஒரு கருத்தை இப்போது சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதற்கு என்று ஒரு உயர் மட்டக் குழுவே அமைத்து, ஒரு நீண்ட நெடிய விவாதத்தை நடத்தினேன். ஒரு கருத்தை அரசாங்கத்திற்கு, அறநிலையத் துறை அமைச்சர் என்ற பொறுப்பிலே சொன்னேன். ஒரு நீண்டகால குத்தகைக்கு நிலங்களை அரசாங்கமே எடுத்துக் கொள்ளட்டும். ஏனென்றால் ஆலய நிலங்களை விற்கக் கூடாது என்று மாபெரும் எதிர்ப்பு இயக்கம் எழுந்திருக்கிறது. ஆலயங்கள் பெயரிலேயே நிலங்கள் இருக்கட்டும். நிலங்களை நாங்கள் தனியார்களிடத்திலே குத்தகைக்குக் கொடுத்து, அவர்களிடத்திலே வசூல் செய்வதற்கு எங்களிடத்திலே நிர்வாக இயந்திரம் இல்லை, ஆள் பலம் இல்லை. அரசு போடுகின்ற சில நிவாரணச் சட்டங்களாலே ஆலய நிலங்கள் பாதிக்கப்படுகின்றன. அதனாலே அரசு நீண்ட காலம் குத்தகைதாரராக இருக்கட்டும். எங்களிடத்திலே இப்போது நான்கு அல்லது ஐந்து லட்சம் ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அவைகளை உங்களுக்குக் குத்தகையாக விடுகிறோம். எங்களுக்கு ஆண்டுதோறும், அந்த 25 சதவிகிதத்திலே எங்களுக்கு என்ன வருமோ அல்லது அரசு என்ன விலை நிர்ணயிக்கிறதோ அதன்படி ஆலயங்களுக்குத் தேவையான ஒரு குறிப்பிட்ட அளவுக்கு நெல்லையும் பாக்கியைப் பணமாகவும் தருகிற பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசு எடுத்துக்கொண்டவுடன், அங்கே பயிரிடுகின்ற அல்லது பாடுபடுகின்ற விவசாயிகளுக்கு 1½ ஏக்கர் அல்லது 2 ஏக்கர் என்று திருப்பிக் கொடுங்கள். உழைக்கின்றவர்களுக்குத் திருப்பிக் கொடுங்கள். நீங்கள் கிரயமாகக் கொடுப்பதாக இருந்தால், அதற்கு எங்களுடைய அனுமதியைப் பெற்றுக் கொள்ளுங்கள். அதை நீண்டகாலத் தவணையாக உருவாக்குவதாக இருந்தால், அரசு பொறுப்பு ஏற்றுக்கொள்ளட்டும். அந்தக் கருத்தை அறநிலையத் துறையின் சார்பிலேகூட மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே தெரிவித்து அது அரசின் பரிசீலனையிலே இருக்கிறது. ஆகவே இதை எப்படியாவது . . .

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அறநிலையத் துறை பற்றிச் சொல்கின்றார்கள். சுற்றி வளைத்துப்போய் அரசாங்கம் குத்தகை எடுத்து, அந்தக் குத்தகைப் பணம் வராமல் இருப்பதைவிட, எப்படி கட்டிடங்களுக்கு பில்டிங்ஸ் அண்டு லீஸ் கண்ட்ரோல் ஆக்ட் அப்ளை ஆகாது என்று ஒரு சட்டத்தைக் கொண்டு

வந்து சுப்ரீம் கோர்ட்டுவரை சென்று அது செல்லும் என்று கொண்டு வந்திருக்கிறார்களோ அது போன்று ஒரு விதிவிலக்குச் சட்டம், குத்தகை பாதுகாப்புச் சட்டம், உச்சவரம்புச் சட்டம், என்று பாதுகாப்பு சட்டம் கொண்டு வந்து விதிவிலக்கு கேட்க நடவடிக்கை எடுத்தால், அரசாங்கம் அதிலே குத்தகைதாரராகப் படுகின்ற கஷ்டத்தைவிட அது சிறப்பாக அமையாதா ? அரசாங்கம் சொல்வது இந்து அறநிலையத் துறைக்கு மாத்திரமா ? அல்லது நம்முடைய நண்பர் மாண்புமிகு திரு. யூசுப் அவர்கள் பொறுப்பு வகிக்கின்ற இஸ்லாமிய அறநிலையத் துறை ஆலயங்களுக்கும் பொருந்துமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய துணைத் தலைவர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் ஒரு கருத்தைச் சொல்வார் என்று எதிர்பார்க்கவில்லை. ஆனால் அந்தத் தரப்பிலேயிருந்து ஒரு கருத்து வர வேண்டுமென்று நான் எதிர்பார்த்தேன். அவர்களே சொன்னதற்காக நன்றி. இந்த ஆலய நிலங்களுக்கு இந்தக் குத்தகை வாரதாரர் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை தமிழ்நாட்டிலே பொதுமக்களாலே மிகப் பெரிய அளவில் எழுப்பப்பட்டு வருகிறது. ஆலயங்களை நம்பி வழிபடுகின்ற 99 சதவிகிதம் மக்கள் இதைத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள் . . .

(பிற்பகல் 12-15)

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நான் ஏற்றுக்கொள்வதாகச் சொல்லவில்லை. சுற்றி வளைத்து ஏன் போகிறோமென்ற விவாதத்தைத்தான் கேட்கிறேன். குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளித்து எடுத்துக்கொள்வதை ஏற்றுக்கொள்வதாகச் சொல்லவில்லை. இதனால் உண்மையான சாகுபடிதாரர்களுக்கு பாதகமான நிலைமை ஏற்படும். எனவே அதைப்பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய துணைத் தலைவர் என்னை நட்டாற்றிலே விட்டுவிட்டார். இருந்தாலும் அவருடைய உதவி எப்போதும் இருக்கும் என்ற நம்பிக்கையோடு சொல்கிறேன். (குறுக்கீடு) நல்ல காரியங்களுக்கு இருக்கும். 'இருக்காது' என்று மொத்தமாகச் சொல்லிவிட்டால், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் எதற்குமே ' இருக்காது ' என்று பதிலைச் சொல்லிவிடுவார் என்று வந்துவிடக் கூடாது. ஆகவே அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், விதிவிலக்கு கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை 99 சதவிகித மக்களிடத்திலிருந்து வந்து கொண்டிருக்கிறது. ஆகவே இது மக்கள் பிரச்சினைதான். இதை எப்படித்





தீர்ப்பது என்பதைத்தான் அரசாங்கமும், அறநிலையத் துறையும் கவனமாகப் பரிசீலிக்கிறது. அறநிலையத் துறையினுடைய சார்பிலே, ஏன் இதை அரசாங்கமே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தெரிவிக்கிறோமென்றால், இதை யாருக்கும் விற்றுவிடக்கூடாது, உரிமையாக்கி விடக்கூடாது என்பது இந்த நாட்டிலே மிகப் பெரும்பாலோருடைய கருத்து என்பதால் தான். அதற்கு மாறுபட்டு அரசு முடிவுகளை எடுக்கக்கூடாது. அப்படி முடிவெடுத்தால், தனியார் ஆயிரம் பேர்கள் குத்தகைதாரர்களாக இருப்பதை விட, ஒருவர் மொத்த குத்தகைதாரராக இருந்தால், அறநிலையத் துறைக்கு வேலை குறையும் என்பதுதான் அந்தத் திட்டத்தினுடைய அடிப்படை. அது பரிசீலனையில்தான் இருக்கிறது. அந்த உயர் மட்டக் குழு அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அதை வேறு காரணங்களுக்காக சட்டத் துறையும் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. விரைவிலே நம்முடைய முதல்வரவர்கள் அதற்கான விதிவிலக்கு தரக்கூடும், முடியும், அது நியாயம்தான். அரசு நிலங்களுக்கு, அரசு இடங்களுக்கு விதிவிலக்கு தருவது என்று சட்டம் இருக்கிறது. அரசு நிலங்களுக்கு விதிவிலக்கு இருக்கிறபோது, அரசு பொறுப்பேற்றிருக்கிற ஒரு அறக்கட்டளைக்கும் தருவதுதான் தார்மீகமானது, சட்டப்படி நியாயமானது என்றுகூட ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் இது தீவிரமாக விவாதிக்கப்பட வேண்டும். இந்தப் பிரச்சினையினுடைய எல்லாக் கோணங்களும் பரிசீலிக்கப்பட வேண்டுமென்ற வகையில், அவைகள் பரிசீலிக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம்பற்றித் தெரிவித்தார்கள். மக்கள் தொகை குறையவில்லை, இறப்பு விகிதம் அதிகமாகி இருக்கிறது என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் ஒப்பிடுவது கேரள மாநிலத்தோடு. அவர், மக்கள் தொகை இறப்பு, பிறப்பு விகிதத்தைப் பார்க்கும்போது, மக்கள் தொகை எண்ணிக்கையையும் பார்க்க வேண்டும். ஐந்து கோடி மக்கள் வாழ்கின்ற மாநிலத்தில், அந்தச் சூழ்நிலையில் எத்தனை சதவிகிதம் இறப்பு இருந்தது, இப்போது எவ்வளவு சதவிகிதம் குறைந்தது என்பதைப் பார்க்க வேண்டும். மக்கள் தொகை குறைவாக இருக்கிற கேரள மாநிலத்தோடு; இயற்கைச் சூழல் அதிகமாக இருக்கிற, சுகாதார வசதி இயற்கையாகவே அமைந்திருக்கிற ஒரு மாநிலத்தில், மிக விரைவிலே அவனாக சாவைத் தேடிப் போனாலொழிய சாவு அவனிடத்தில் நெருங்காத அந்த அருமையான மலைப் பகுதி மக்கள் உள்ள மலை சார்ந்த சூழ்நிலையில் குறைந்த மக்கள் தொகை உள்ள மாநிலத்தோடு நமது மாநிலத்தை ஒப்பிட்டு, அந்த சதவிகிதக் கணக்கைப் போட்டு குழப்பக்கூடாது. மத்திய அரசே சான்று தந்திருக்கிறது. பிறப்பு விகிதத்தைக் குறைத்திருக்கிறோம் இறப்பு விகிதத்தையும் குறைத்திருக்கிறோம் அதிலே தயவுசெய்து

'ராங் ஆர்க்யுமென்ட்'-க்குப் போனால், உங்களையும் அறியாமல் இந்த மாநிலத்திற்குச் செய்யலாமென்று எண்ணுகிற உதவிகளைச் செய்ய முடியாமல் போய்விடும். இந்த அடிப்படையை வைத்துத்தான் எட்டாம் நிதிக் கமிஷன் பரிந்துரையே தவறு என்று சொல்லுகிறோம். ஒரு புறத்திலே தனி நபர் வருமானம் உயர்ந்துவிட்டது என்று சொல்லிக் குறைக்கிறார்கள். இன்னொரு புறத்திலே மிகச் சிறந்த முறையில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்றிய அந்தக் குற்றத்திற்காகக் குறைக்கிறார்கள். இப்படி நல்ல காரியங்கள் செய்தால், நிதி தர மாட்டோம், தண்டனைதான் தருவோம் என்று சொல்வது நியாயமல்ல என்று எடுத்து வாதாடும் நேரத்தில், நீங்கள் குறுக்கே வேறு ஒரு புள்ளிவிவரத்தை வைத்துக்கொண்டு, தவறான உணர்வை உருவாக்கக்கூடாது என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறை—வழக்கறிஞர்களிடையே ஏற்பட்டுள்ள பூசல் யாரும் விரும்பாதது. அப்படி ஏற்படக்கூடாது. காவல்துறை—வழக்கறிஞர்களிடையே மாத்திரமல்ல, பொதுமக்களுக்கும் காவல் துறைக்குமிடையிலே என்று எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்காகத்தான் ஓய்வுபெற்ற நீதிபதி திரு. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப் பட்டிருக்கிறது. விரைவிலே அந்தப் பிரச்சினை தீர்க்கப்படும்.

பள்ளிகளுக்குத் தன்னாட்சி உரிமைபற்றிக் கூறினார்கள். அப்படி தன்னாட்சி பெற்ற கல்லூரிகள் மிகச் சிறந்த முறையில் வளர்ந்திருக்கின்றன. அந்த அடிப்படையிலேதான் கல்வி அமைச்சரவர்கள் அந்தக் கருத்தைத் தெரிவித்திருப்பார் என்று கருதுகிறேன். இருந்தாலும், இங்கே வர இருக்கின்ற கல்வித் துறை கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம் நடக்கும்போது இதுபற்றி விரிவாக மாண்புமிகு உறுப்பினர்கள் விவாதிக்கலாமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

கன்சல்டேட்டிவ் குழு போட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசின் பாராளுமன்றம், அமைச்சரவை மிகப் பெரிய அமைச்சரவை. இங்கேயே சில அமைச்சர்களுக்கு கன்சல்டேட்டிவ் குழு என்கிற பெயர் இல்லாமல் வேறு பெயரில் குறிப்பாக மின்சாரத் துறைக்குக்கூட இருக்கிறது என்று நினைக்கிறேன். இருந்தாலும் அது எந்த அளவிற்குப் பலனளிக்கும் என்பதையும் பார்க்க வேண்டும். இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களை ஒரு குழுவாக வைத்து நடைமுறைப்படுத்தவில்லை என்கிற காரணத்தால் அதுகுறித்தும் பரிசீலிக்கப்படும். தேவையானால், இதனால் பலன் இருக்குமேயானால், ஏற்றுக்கொள்வதில் தவறில்லை.



மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கலைஞர் அவர்கள் உரையாற்றிய நேரத்தில் மிகச் சிறந்த முறையிலே அவர்களுடைய உரை அமைந்திருந்தது. நீண்ட காலத்திற்குப் பிறகு இந்த அவையிலே அவர்களுடைய உரையைக் கேட்டதற்காக மாண்புமிகு தலைவர் அவர்களும் அவர்களைப் பாராட்டினார்கள். அப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு இங்கே எங்களுக்கெல்லாம் கிட்டாமல் போய்விடுமோ என்று எண்ணிக் கொண்டிருந்த நேரத்தில், அவர்கள் இந்த அவையிலே அமர்ந்து தன்னுடைய கருத்துக்களை, தனக்கே உரிய பாணியில், இலக்கிய நயத்தோடு எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் உரையைத் தொடங்கியபோது எனக்கு ஒரு சந்தேகம் வந்தது. நாம் தமிழக அரசின் மேலவையிலேதான் உட்கார்ந்திருக்கிறோமா அல்லது இந்திய நாடாளுமன்றத்தில் இருக்கிறோமா என்ற சந்தேகம்தான் அது. டாக்டர் கலைஞர் அவர்கள் தனக்கே உரிய ராஜ தந்திரத்தோடு, இந்திய அரசின் நிதி நிலை அறிக்கையை விவாதிப்பதற்கு எடுத்துக்கொண்டால், இந்த மேலவையிலே உறுப்பினராக இருக்கின்றவர்கள் யாராவது, குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களைப் போன்றவர்கள், ஆளுநர் உரைக்கு சம்பந்தம் இல்லாத ஓர் உரையை மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் உரையாற்றிக் கொண்டிருக்கிறார்கள், என்கிற முறையில் நியாயத்திற்கு உட்படாமல் வரம்பு மீறிப் போனால் உடனடியாக எழுந்து அதைத் தடுக்கக் கூடிய உணர்வு கொண்டவர்கள், அந்த உணர்வோடு எதாவது கேட்டுவிடப் போகிறார்களோ என்று எண்ணினேன். காரணம் அவர்கள் பேசி முடிக்கும் வரை நான் அவர்களுடைய உரையைக் கேட்டு ரசிக்க விரும்பினேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** டாக்டர் கலைஞர் அவர்கள் உரையைத் தொடங்க ஆரம்பித்த உடனேயே, அது எப்படிப் போய் முடியும் என்ற ஊகம் எனக்கு இருக்கிற காரணத்தால், நான் எழவில்லை. ஆனால் அப்படி ஊகம் பண்ணத் தெரியாதவர்கள் எற்கெனவே கேட்டதாக வரலாறு இருக்கிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** எதிர்க் கட்சி வரிசையில் உள்ளவர்கள் ஊகம் இல்லாதவர்கள் என்று உறுப்பினர் குறிப்பிடுவது பொருத்தமில்லை.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** டாக்டர் கலைஞர் அவர்கள் என்ன பேசப் போகிறார் என்பதையும், என்ன எழுதப் போகிறார் என்பதையும் அதுபோல் எழுதுவதற்கு முன்னால் அல்லது பேசுவதற்கு முன்னால் எப்படி எப்படி விவாதிப்பார் என்பதையும் நான் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறேன். ஆனால் அந்த வாய்ப்பு மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களுக்கு இருந்தது, எங்களுக்கு அத்தகைய வாய்ப்பு ஏற்படவில்லை. இருந்தாலும் அவர்கள் பேசத் தொடங்கியபோது போட்ட பீடிகை எங்களுக்குப் புரிந்து விட்டது. அவர்களுடைய உரையை சுவையாகக்

கேட்டு ரசிக்கலாம் என்ற உணர்வில் இருந்தோம். அவர்கள் எடுத்துக் கொண்ட ஆதாரம், ஆளுநர் உரையில் இந்தியப் பிரதமர் அவர்களுடைய ஆட்சியை ஆளுநர் அவர்கள் இந்த அரசின் சார்பில் ஆதரிப்பதற்கு ஒரு வரி இருக்கிறது, அல்லது ஒரு கருத்து இருக்கிறது, ஆகவே மத்திய அரசினுடைய திட்டங்களை ஆதரிக்கிற அல்லது முற்போக்குத் திட்டங்களை ஆதரிக்கிற ஒரு அரசின் சார்பில் ஆளுநர் ஆற்றியிருக்கிற உரையின்மீது, அல்லது வைத்திருக்கிற அறிக்கையின்மீது கருத்துக்களைச் சொல்கிறேன்" என்று மிகுந்த நுண்மாண் நுழைபுலம் என்று சொல்லுவார்களே அதுபோல் இந்த ஒரு வரியை ஆளுநர் உரையின்மீது நுழைந்து தேடிக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அவர்கள் பேசியபோது, எனக்கே ஒரு சந்தேகம் வந்தது. அப்படி இந்திய அரசினுடைய கொள்கைகளை நாம் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிக்கிறோம் என்ற வகையில் ஏதாவது வந்திருக்க முடியுமா என்று நான் திரும்பத் திரும்பப் பார்த்தேன். ஆங்கில உரையையும் படித்துப் பார்த்தேன். தமிழாக்கம் செய்யப்பட்ட உரையையும் படித்துப் பார்த்தேன். அவர்கள் 3-வது பத்தியில் 1985 ஆம் வருஷம் எப்படிப்பட்ட வருஷம் என்று சொல்லி வருகிறபோது,

"It has seen the peaceful transition of power of the Centre after the demise of Thirumathi Indira Gandhi who bestrode the national scene like a colossus. Thiru Rajiv Gandhi has taken over as the Prime Minister of this great nation at a time when the Seventh Five-Year Plan is being formulated. The nation is poised for an era of faster progress and we fully endorse the emphasis of the Government of India in improving productivity and cleansing the administrative structure."

(பிற்பகல் 12-25)

இதுதான் ஆங்கிலத்திலே இருக்கிற வாசகம். அதைத் தமிழிலே மொழி பெயர்த்திருக்கிற நேரத்தில், தவறாக மொழி பெயர்க்கப்பட்டிருக்குமோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டது. நான் ஒன்றும் ஆங்கிலத்தில் அறிஞர் அல்ல. இங்கே உள்ள பெரியவர்களோடு பழகித் தெரிந்து கொண்டதுதான். அப்படிப் பிழையிருந்தால் அதைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஆங்கிலத்தில் பிழை ஏற்பட்டால் கேட்கவேண்டிய ஆங்கிலேயர்கள் இங்கே இல்லை. நாம் தமிழர்கள்தான். ஆகவே அதில் தவறில்லை.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** அந்தத் தமிழாக்கத்தில் சொல்கிறார்கள். "இந்த நாட்டின் மாபெரும் சக்தியாக, பெரும் தலைவியாக விளங்கிய திருமதி இந்திரா காந்தி அம்மையாரின் மறைவுக்குப் பின்னர் மத்தியில் அமைதியாக ஆட்சி மாற்றம் கண்டது இந்த ஆண்டுதான். (1985) ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் வகுக்கப்பட்டு வருகிற இந்த நேரத்தில் இந்தப் பெரிய நாட்டின் பிரதமர் பொறுப்பை, திரு. ராஜீவ் காந்தி அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார். விரைந்து முன்னேறும் கால கட்டத்தை நோக்கி இந்த நாடு நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. நாட்டின் உற்பத்தியைப் பெருக்கவும், நிர்வாகத்தைத் தூய்மைப்படுத்தவும் மத்திய அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கு நாம் நம்முடைய மன நிறைவான ஆதரவைத் தெரிவித்துக்கொள்கிறோம்."



இதுதான் தமிழாக்கம் செய்திருக்கிற உரை. அதிலே எந்த இடத்திலும் திரு. ராஜீவ் காந்தியுடைய முற்போக்குத் திட்டங்கள் அல்லது அந்த மத்திய அரசுடைய முற்போக்குத் திட்டங்கள் என்று குறிப்பிடப்படவில்லை. அது மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்குத் தெரியாமல் இருந்தது என்று எண்ணமாட்டேன். எங்கே நுழைந்து பார்க்கப் போகிறார்கள் என்ற ஆதங்கத்தோடு இந்திய அரசினுடைய வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றி—மத்திய நாடாளுமன்றத்திலேகூட விவாதம் தொடங்கியிருக்கிறார்களோ என்னவோ, எனக்கு அந்த நிகழ்ச்சி நிரல் தெரியாது—இங்கே சட்டமன்ற மேலவையில் அவர்களுடைய கருத்தைப் பதிவு செய்து, நாட்டு மக்களுக்கு பத்திரிகைமூலம் அறிவிக்கப்பட வேண்டுமென்று மிகச் சிறந்த ராஜதந்திர முறையில் மத்திய அரசின் வரவு செலவுத் திட்டத்தை விமர்சித்திருக்கிறார்கள். நான் அதற்குள்ளே நுழைய விரும்பவில்லை.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் ஏதாவது காரசாரமாகப் பதில் அளிப்பார் என்று கருதினேன். அவருக்கு அதைப்பற்றியே நினைவு இல்லை. எதிர்க் கட்சித் தலைவராக இருக்கிறோமே, ஆளுகிற கட்சியைப்பற்றி ஏதாவது சொல்லவேண்டாமா என்று கவலை கொண்டிருப்பதாக நான் கருதுகிறேன்.

ஆகவே மிகுந்த சாமர்த்தியத்தோடு, ராஜதந்திரத்தோடு இந்த அவையில் இந்திய நாட்டு வரவு செலவுத் திட்டம்பற்றி, தன்னுடைய கருத்தைச் சொல்லி யிருக்கிறார்கள். நான்கூட காலையில் பத்திரிகையில் எதிர்க் கட்சித் தலைவர்கள் இந்த வரவு செலவுத் திட்டம்பற்றிச் சொல்லியிருக்கிற கருத்துக் களையெல்லாம் பார்த்தேன். டாக்டர் கலைஞர் அவர்களின் கருத்துக்கள் வரவில்லை. சீட்டாட்டத்தில் துருப்புச்சீட்டை வைத்து விளையாடும்போது, எதிர் தரப்பில் '9' ஐ இறக்கும்போது, 'ஜாக்கியை' இறக்குவார்களே, அது போல் சாமர்த்தியமாக தன்னுடைய கருத்தை . . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** எங்களுக்குத் தெரியாத சமாசாரத்தை எல்லாம் சபையில் சொல்கிறார்களே! (சிரிப்பு)

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : அவர்கள் மிகுந்த ஆக்ரோஷமாக அந்தக் கருத்தை சட்டமன்ற மேலவையில் சொன்னால், செல்லவேண்டிய இடத்திற்குச் செல்லும் என்ற உணர்வோடு சொன்னார்கள். காரணம், இந்தப் பேச்சு நாளை பத்திரிகைகளில், மிகப் பெரிய அளவில் செய்தியாக வரும், எல்லாப் பத்திரிகைகளிலும் , என்று சொல்லாவிட்டாலும், 'முரசொலி' பத்திரிகையில் மிகப் பெரிய அளவில் செய்தியாக வரும், காரணம் இதை அவர்களிடமிருந்து தாங்கள் கற்றுக்கொண்டவர்கள். அறிஞர் அண்ணா அவர்களிடமிருந்து கற்றுக் கொண்டிருக்கிறோம், டாக்டர் கலைஞர் அவர்களிடத்திலும் கற்றுக்கொண்டிருக்கிறோம், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களிடத்திலும் கற்றுக்கொண்டிருக்கிறோம். அவைகளில் எதையெதை நாங்கள் கற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதில்தான் வித்தியாசமே தவிர, கற்றுக்கொண்டதில் பேதமில்லை.

அதற்குப் பிறகு, மின்சார வாரியத் தலைவர் விடுத்த அறிக்கை ஒன்றை இங்கே சுட்டிக்காட்டி, " ஆளுநர் உரையில் மின்சார உற்பத்திபற்றி நம்பிக்கையோடு கருத்துத் தெரிவித்திருக்கிறீர்கள், ஆனால் அதற்கு முன்தினம் மின்சார வாரியத் தலைவர் மின்சார நிலைமைபற்றி அபாய அறிவிப்பு செய்திருக்கிறார் " என்று குறிப்பிட்டார்கள். ஆளுநர் அறிக்கையில் இந்த அரசின் திட்டத்தைப்பற்றி, எந்த அளவுக்கு மின்சாரத் திட்டங்களை உருவாக்குகின்ற நிலை இருக்கிறது என்பது பற்றியும், திட்டங்களின் நிலைமைகள் பற்றியும் ஆளுநர் சொல்கிறார் அரசின் கருத்தாக. ஆனால் மின்சார நெருக்கடி என்பதும், பற்றாக்குறை என்பதும் அவ்வப்போது ஏற்படுகிற காரியங்களால் வருவது. மிகப் பெரிய அணு மின்சார இயந்திரமாக

(பிற்பகல் 12-30)

இருந்தாலும், மின் உற்பத்தி இயந்திரமாக இருந்தாலும், அதனாலே ஆயிரக் கணக்கான மெகாவாட் மின்சாரம் தயார் பண்ண முடியும் என்றாலும், அந்த மின்சார இயந்திரம் கெட்டுப்போய்விட்டால், தடைப்பட்டுவிட்டால், மின்சாரம் கிடைக்காது. அதைப்போல நீர் மின் நிலையங்களிலே, அது தொடர்பான அணைக்கட்டுகளிலே மழை இல்லாத காரணத்தால் நீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டால், நீர் மின் சக்தி நமக்குக் கிடைக்காமல் போய் விடுகிறது. அதைத் தான் அந்த மின்சார வாரியத் தலைவர் சுட்டிக் காட்டியிருப்பார் என்று நான் கருதுகிறேன். காரணம் அவர் என்ன சொன்னார் என்பதுபற்றி முழுவிவரமும் என்னிடத்தில் இல்லை. அவர் எந்த நோக்கத்தில் சொல்லியிருப்பார் என்பதையும் எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் பற்றாக்குறை இருக்கிறது, இப்போதும் இருக்கிறது. அரசாங்கம் கவனிக்காமல் விட்டு





மாட்டார், தெரிவிக்கவும் முடியாது. ஒருவேளை எதிர்க் கட்சிகள் வேண்டுமானால் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கலாமே தவிர, அவர் சொல்லியிருக்க மாட்டார். " South—West Monsoon " என்று அழைக்கப் படுகின்ற தென்மேற்குப் பருவ மழையும், ஒரு குறிப்பிட்ட பகுதியிலே வடகிழக்குப் பருவ மழையும் பொய்த்துவிட்ட காரணத்தாலே, நீர்மின் நிலையங்கள் தொடர்பான அணைக் கட்டுகளிலே நீர் குறைந்துவிட்ட காரணத்தாலே, மின்சாரம் குறைந்துவிட்டது. அதைப்போல கல்பாக்கம் அணு மின் நிலையத்திலே சில இயந்திரக் கோளாறு காரணமாக மின்நிலையம் சில காலம் மூடப்பட்டது. அதைப்போல எண்ணூர் மின்நிலையத்திலும் இயந்திரக் கோளாறு காரணமாகத் தடங்கல்கள். இப்படி மனிதனால் தவிர்க்க முடியாத இயற்கை உற்பாதங்களினாலேயும், செயற்கை உற்பாதங்களினாலேயும் மின் சக்தி குறைவு ஏற்பட்டிருக்கிறது என்பதை அல்லது ஏற்படக்கூடும் என்பதை எதிர்பார்த்துத்தான் மின் வாரியத் தலைவர் தெரிவித்திருக்கிறார். நான் அதற்குள் அதிகம் செல்ல விரும்பவில்லை. நாம் நம்முடைய மின் உற்பத்திக்காக, நம்முடைய திட்டச் செலவிலே மூன்றிலே ஒரு பங்கை ஒதுக்கியிருக்கிறோம் என்பதையும், அதற்கு அதிகமாகவே செலவழித்துக்கொண்டிருக்கிறோம் என்பதையும் இங்கே தெரிவித்திருக்கிறோம். நாளை இந்த அவையிலே மின் நிதிநிலை அறிக்கையின்மீது விவாதம் நடைபெறவிருக்கிற காரணத்தினாலே, நாளை மிகத் தெளிவாக உங்களுடைய கருத்துக்களைச் சொல்லலாம், தெளிவாக அரசினுடைய கருத்துக்களையும் பெறலாம் என்கிற காரணத்தினாலே, இரண்டிற்கும் முரண்பாடில்லை என்பதை மட்டும் நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு தொழில்துறைபற்றி. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கலைஞர் அவர்கள் தொழிலைப்பற்றிப் பேசுவார்கள் என்று எதிர்பார்த்தேன். எப்போதுமே நான் முன்னாலே சொன்னதைப்போல, எதிரி என்ன நினைக்கிறானோ அந்த இடத்திலே உள்ளே போகாமல், வேறு இடத்தில் உள்ளே நுழைவது டாக்டர் கலைஞர் அவர்களுடைய தந்திரம். ஆனால் என்ன செய்வது? அதிர்ஷ்டவசமாக நாங்கள் பெற்றிருக்கிற தலைவர், எங்களுடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், டாக்டர் கலைஞர் எங்கே நுழைவார் என்பதைத் தெரிந்து, அதற்கு முன்னாலேயே அந்த இடத்தில் முன்னே நுழைந்து எதிரே நிற்கிறார். ஆகவே, அவர்கள் சில குறிப்புகளை என்னிடத்திலே தந்துதான் பேசச் சொன்னார்கள். டாக்டர் கலைஞர் அவர்களும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் எந்த எந்தக் கருத்துக்களை எடுத்து வைப்பார்கள் என்பதை அறிந்து, அதற்கேற்றாற்போல எங்களுக்குக் குறிப்புகளையும் தந்து, அதற்கு விளக்கங்களையும் தந்து நாங்கள் எப்படிச்

துறையிலே, அவர்கள் தேர்தல் அறிக்கையிலேகூட, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே மூன்றாவது இடத்திலே இருந்த தமிழகம் இப்போது பதின்மூன்றாவது இடத்திற்குப் போய்விட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். எது இந்தப் புள்ளிவிவரம்? எந்த அடிப்படையில் இந்த அறிக்கை? என்ன . .

டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மத்திய அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. ஆர். வெங்கட்ராமன் கொடுத்த புள்ளி விவரம்தான். பல கூட்டங்களிலே அவர் பேசியதைத்தான் நாங்கள் சொல்கிறோம்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மத்திய அமைச்சர் முன்பு 1980 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலே எங்கேயாவது பேசியிருக்கக்கூடும். அவர்கள் அமைச்சராக இருந்து அப்படிப் பேசியிருக்க மாட்டார்கள். ஒரு அரசியல் தலைவராக இருந்து தேர்தல் நேரத்திலே எதை வேண்டுமானாலும் சொல்வது இன்றைக்கு அரசியல்வாதிகளுக்குத் தரப்பட்டிருக்கிற உரிமை, பெற்றிருக்கிற உரிமை என்கிற காரணத்தினாலேகூட, அவர் அப்படிச் சொல்லியிருப்பார்கள். என்னிடத்திலே புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. "ஃபைனான்ஸ் எக்ஸ்பிரஸ்" என்று சொல்லப்படுகிற பத்திரிக்கை. அதிலே பொருளாதார நிபுணர்கள் தந்திருக்கின்ற விவரங்கள், கட்டுரைகள், நம்முடைய அரசு குறித்து ஆய்வு நடத்தி, "நம்முடைய தமிழகம் மூன்றாவது இடத்திலே இருக்கிறது" என்று சொல்லியிருக்கிறது. நான் அதிக நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. இங்கே நம்முடைய மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு மிகுந்த விருப்பம் உள்ள தொழில் துறை அமைச்சர் அவர்களே பின்னாலே இங்கே அந்த விவாதத்திலே பதில் அளிக்க இருக்கிறார்கள். தொழில் துறை கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம் நடைபெறவிருக்கிறது. அப்போது விரிவாகச் சொல்ல முடியும். ஆனால் இந்த அவையிலே மாத்திரம் அல்ல, அரசியல் கட்சி

(பிற்பகல் 12-35)

களிடம் மாத்திரம் அல்ல, சில பத்திரிகைகள்கூட வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று எழுதிக் கொண்டிருக்கிறார்கள். தமிழகம் தொழில் துறையிலே பின்தங்கிவிட்டது என்று எழுதிக்கொண்டிருக்கிறார்கள். இதை எந்தச் சான்றை வைத்துச் சொல்கிறார்கள்? இந்தியாவிலே உற்பத்தியாகிற சிமெண்ட்டிலே எந்த அளவுக்கு உற்பத்தி செய்கிறோம்? மின்னணு தொழிற்சாலைகளிலே எந்த அளவுக்கு உற்பத்தி செய்கிறோம்? உரங்களிலே எந்த அளவுக்கு உற்பத்தி செய்கிறோம்? இப்படி இந்தியாவிலே 3-வது இடத்தில் தான் எல்லாத் துறைகளிலுமே இருக்கின்றோம். சிறு தொழில், பெரும் தொழில் என்பதைப்பற்றி நான் அழுத்தந்திருத்தமாகப் புள்ளி விவரங்களோடு



தெரிவிக்க விரும்புகிறேன். தயவுசெய்து தொழில் துறை கொள்கை குறிப்பின்மீது விவாதம் நடக்கின்றபோது, தமிழகம் 10-வது இடத்திலே 12-வது இடத்திலே, 13-வது இடத்திலே இருக்கிறது என்று சொல்கிறவர்கள் இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களாக இருந்தாலும் சரி அல்லது வெளியிலே எதையாவது எழுதி இந்த அரசைத் தாக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கின்ற சில பத்திரிகையாளர்களாக இருந்தாலும் சரி, அவர்களாவது தயாரித்து, குறிப்புக்களைக் கொடுக்கட்டும், இந்த அவையிலே விவாதம் நடக்கட்டும், நாங்கள் உறுதியாக ஏற்றுக்கொள்கிறோம். தமிழகம் 3-வது இடத்திலேதான் இருக்கிறது. இதிலே எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒன்றைச் சொல்கிறேன். இங்கே ஆளுநர் உரையில் நாம் மத்திய அரசிடத்திலே என்ன என்ன தொழிற்சாலைகள் கேட்டிருக்கிறோம், மத்திய அரசு என்னென்ன தொழிற்சாலைகளை உருவாக்கி இருக்கிறது என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அதைவிட சென்ற ஆண்டு ஆளுநர் உரையை இன்றைக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். நம்முடைய நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, காங்கிரசு கட்சியினுடைய ஆட்சியிலேயும் சரி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேயும் சரி, 200 கோடி ரூபாய்க்கு மேலே முதல் போட்டு ஒரு அரசினுடைய பொதுத் துறையாக ஒரு தொழிற்சாலை தொடங்கியதாக ஒரு சான்று உண்டா? இன்றைக்கு புரட்சித் தலைவர் ஆட்சியில்—தனியார் துறையிலே அல்ல, ஜாயின்ட் செக்டார் அல்ல, அல்லது சென்ட்ரல் செக்டார் அல்ல—ஸ்டேட் செக்டாரில், பப்ளிக் செக்டாரில் புகளூர் காகிதத் தொழிற்சாலை என்று ஒரு தொழிற்சாலை 200 கோடி ரூபாய் முதல் போட்டுத் தொடங்கியிருக்கிறோமே, அப்படி இதற்கு முன்னாலே நடந்தது உண்டா என்பதை நான் அன்போடு, தலைவர் அவர்களே, இந்த அவையிலே வைக்க விரும்புகிறேன். டாக்டர் கலைஞர் அவர்கள் அதைத் தொடாமல் இங்கே தொழில் துறை அமைச்சராக புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற மாண்புமிகு திரு. இராசாராம் அவர்கள் தெரிவித்த ஒரு சில கருத்துக்களை, பத்திரிகைகளிலே வந்த பேட்டியைப்பற்றி இங்கே சொன்னார்கள். அவர்கள் சொல்லி முடித்த உடனே மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களே இங்கே வந்து விட்டார்கள். அவர்கள் அன்றைக்கு வந்தபோது மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் இங்கே இல்லை. இப்போது இவர்கள் பேசுகிற நேரத்தில் அவர்கள் இங்கே இல்லை. ஆகவே தொழில் துறை விவாதம் நடைபெறுகிறபோது மாண்புமிகு கலைஞர் அவர்களும் இருக்க வேண்டும்; அவர்கள் பதில் சொல்வதையும் அவர் கேட்க வேண்டும். காரணம் நீண்ட காலமாக நட்போடு இருக்கிறவர்கள். நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள், நண்பர்கள் எப்போதும் வளருவதை, வாழ்வதை

என்றைக்கும் வரவேற்கிற நல்ல மனம் படைத்தவர்கள். அவர்கள் தலைமையிலே அவர்கள் அமைச்சராக இருந்தார்கள்; மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலேயும் அமைச்சரவையில் இருக்கிறார்கள் என்பதையும் மிகச் சிறந்த உள்ளத்தோடு வாழ்த்திக் கொண்டிருப்பார்கள் என்கிற காரணத்தினாலே உரிமையோடு சொல்கிறேன், அவர்கள் ஒரு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், மத்தியிலே, டில்லியிலே ஒரு அதிகாரியை நியமிக்க வேண்டுமென்று சுட்டிக்காட்டி, சொன்ன கருத்தை "அங்கே அமைச்சர் அந்தஸ்திலே ஒருவர் இருக்கிறார்; அதை விடவும் என் ஒரு அதிகாரி?" என்று கேட்டார்கள். நான் சில உணர்வுகளை அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அவர்களுக்குத் தெரியாது என்றல்ல. எதிர்க் கட்சி யிலே இருக்கிற காரணத்தால், அதையெல்லாம் விட்டுவிட்டுப் பேசுவார்கள். கொஞ்சம் நினைவுபடுத்துவதற்குச் சொல்கிறேன். தலைவர் அவர்களே, டில்லி யைப் பொறுத்தவரை, மத்திய அரசு பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் என்று சொல்லப்படுகிற அவர்களுடைய அரசுத் துறை நிறுவனங்களாக இந்தியா முழுவதும் பல நிறுவனங்களை நடத்திக் கொண்டிருக்கிறது. ஆனாலும் அந்த நிறுவனங்கள் தொடர்பாக உரிமம் பெறுவதற்கோ, அனுமதி பெறுவதற்கோ, ஏற்றுமதி, இறக்குமதி அனுமதி பெறுவதற்கோ எல்லாப் பொது நிறுவனங் களும் டில்லியிலே தன்னுடைய அலுவலகத்தை வைத்துக்கொண்டிருக்கிறது. அதைப்போலவே ஒவ்வொரு மாநில அரசும் ஒரு மிகப் பெரிய நிர்வாக இயந்திரத்தை அங்கே வைத்துக் கொண்டிருக்கிறது. இங்கேதான் நாம் மத்தியிலே குவிந்து கிடக்கிற அதிகாரத்தைப்பற்றிச் சொல்லியாக வேண்டும். அவர்கள் நிறைய அதிகாரத்தைக் குவித்து வைத்துக்கொண்டிருக்கி காரணத்தினாலே, அது ஒரு பெரிய சமுத்திரமாக இருந்து கொண்டிருக்கிறது அது ஒரு மாநில அரசினுடைய வேண்டுகோள். மாநில அரசினாலே பரிந்துரைக்கப்படுகிற தொழில் துறை நிறுவனங்களினுடைய வேண்டுகோள் அது அங்கே போகிறபோது, ஆயிரக்கணக்கான மனுக்களிலே ஒரு மனுவாக மாறிவிடுகிறது. இங்கே நமக்கு அது முக்கியமான மனு; முக்கியமான திட்டம் ஆனால் மத்திய அரசுக்குச் செல்கிறபோது, அது ஆயிரக்கணக்கான

(பிற்பகல் 12-40)

மனுக்களிலே ஒன்று. ஆகவே, கொஞ்சம் அழுகிற பிள்ளைதான் பால் குடிக்கும் என்ற முறையை மத்திய அரசு வைத்துக் கொண்டிருக்கிறது எங்கேயும் இருக்கிற இயற்கைதான் அது. பசி எடுக்கிறது என்பதை குழந்தை அழுது சொல்ல வேண்டிய தாயும் இருக்கிறார்கள். குழந்தைக்கு பசி எடுக்கும் நேரம் வந்துவிட்டதே என்று தெரிந்து பால் கொடுக்கக் கூடிய தாயும் இருக்கிறார்கள். குழந்தைக்கு எந்த நேரத்தில் பசி எடுக்கும் என்று





தெரிந்து பால் ஊட்டுகிற தாயாக நம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை வைத்துக் கொண்டால், மத்திய அரசோ, அவர்களுக்கு இருக்கிற வேலைத் தொல்லையினால், வேலை நெருக்கடியினால், குழந்தை அழுதால் தான் கவனிக்கிற சூழ்நிலையில் இருக்கிற தாயாக இருக்கிறது. ஆனால் உண்மையில் பால் தருகிற தாயாராகத்தான் மத்திய அரசை எண்ணிக் கொண்டிருக்கிறோம், அப்படித்தான் நம்பிக் கொண்டிருக்கிறோம். அதில் எந்த மாறுபாடும் இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் நம்முடைய விண்ணப்பங்கள் அங்கே போகிறபோது கீழ் மட்டத்திலிருந்துதான் போக வேண்டியிருக்கிறது. இங்கே ஒரு அமைச்சர் அதை அனுப்பினாலும், அங்கே இருக்கிற ஒரு துரதிருஷ்டமான நிலைமை அதுதான். இங்கிருந்து ஒரு அமைச்சர் பரிந்துரை செய்து அனுப்பினாலும் அல்லது மாநில அரசே பரிந்துரை செய்து அனுப்பினாலும், அங்கே எந்த இடத்திலிருந்து புராசசிங் தொடங்குகிறது என்றால். செக்ஷனிலிருந்துதான் தொடங்குகிறது. அங்கே இருக்கிற ஒரு செக்ஷன் சூப்பரெண்டுதான் மாநில அரசின் பரிந்துரையைப் பார்க்கிறார். ஒரு அமைச்சர் அனுப்பினாலும், முதலமைச்சர் அவர்களே அனுப்பினாலும் அல்லது ஒரு மாநில அரசே அனுப்பினாலும், உடனே அங்கே இருக்கிற அமைச்சர் மட்டத்தில் பார்க்க வேண்டும் அல்லது செயலாளர் மட்டத்திலாவது பார்க்க வேண்டும். காரணம் இங்கே இருக்கிற தலைமைச் செயலாளர் அந்தஸ்தில்தான் மத்திய அரசின் செயலாளர்கள் இருக்கிறார்கள். ஆகவே, ஒரு தலைமைச் செயலாளர் மூலம் அல்லது ஒரு மாநில அரசின் அமைச்சர் மூலம் அல்லது சில குறிப்பிட்ட முக்கியமான பிரச்சினைகளில் முதலமைச்சர் அவர்களின் மூலம் அனுப்பப்படுகிற மனுக்களும் விண்ணப்பங் களும் மத்திய அரசின் செயலாளர்கள் மட்டத்தில் பார்க்கப்படுவதில்லை. அவர்கள் பிரிப்பார்கள். அவர்களுடைய "நோட்டுடன்" கீழே அனுப்பிவிடு வார்கள். எனவே அது செக்ஷனுக்குப் போய் அங்கே கிடக்கும். அது நம் முடைய தலைவிதி என்று சொல்ல மாட்டேன், இந்த நாட்டினுடைய அமைப்பு விதி, ஆட்சி முறை. ஆகவே அதைக் கீழேயிருந்து தள்ளி, மேலே கொண்டு வந்து சேர்க்க வேண்டும். அதற்கு ஒருவர் அமைச்சர் அந்தஸ்தில் இருந்து பிரயோசனமில்லை. ஒரு லையாசன் ஆபீசர் என்கிற வகையில் ஒரு தொடர்பு அதிகாரியாக அங்கே ஒருவர் இருந்தால்தான், அந்தக் காரியத்தை அங்கே போய்ச் செய்ய முடியும். அங்கே தற்போது ஒரு கமிஷனர் இருக் கிறார். இங்கேயுள்ள தலைமைச் செயலாளர் அந்தஸ்தில் உள்ள ஒருவர் தான் அங்கே இருக்கிறார். அவரே கூட அங்கே போய் ஒரு செகரட்டரி மட்டத்தில்தான் பார்க்க முடியும். டிபார்ட்மென்ட்டல் செகரட்டரியைத் தான் பார்க்க முடியும். அதற்குக் கீழே போய் செக்ஷன் ஹெட்களையெல் லாம் பார்க்க முடியாது. எனவே அங்கே இருக்கிற ஒரு அதிகாரி அங்கே இருக்கிற அத்தனை இடங்களுக்கும் சென்று அத்தனை அமைச்சகங்களுக்கும்

போய் வர முடியாது. சாதாரண ஒரு லையசன் அதிகாரி என்ற அளவில் ஒருவர் இருந்தால்தான், செக்ஷன்களுக்குள் போய் வர முடியும். எனவே தான் மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்கள் நல்லெண்ணத்தோடு அப்படிப்பட்ட முறையை உருவாக்க வேண்டும் என்றார். இந்த முறை இல்லாததால் தான் மாநிலத்திலுள்ள அரசினால் பரிந்துரை செய்யப்படும் விண்ணப்பங்கள் ஆண்டுக் கணக்கில் அங்கே போய் தேங்கிக் கிடக்கின்றன. ஆனால் தனியார்களால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாதக் கணக்கில், இன்னும் சொல்லப் போனால் நாட்கணக்கில் கூட, வந்துவிடுகின்றன. அது அவர்களுடைய சாமர்த்தியம். அப்போது நாமே அரசைக் குறை சொல்லுகிறோம். தனியார் போய் உடனே வாங்கி வந்து விடுகிறார்கள். "இந்த அரசு கையாலாகாத அரசு, அதனால்தான் இப்படிக் காலதாமதமாகிறது" என்று அரசைப் பார்த்துச் சொல்லுகிறோம். அது இந்த அரசுக்கு மாத்திரம் அல்ல. யார் யார் எப்போது எப்போது பொறுப்பில் இருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் இந்தப் பெயர்தான் வரும். ஆகவேதான் அந்தக் குறையைத் தீர்ப்போம் என்று சொன்னோம். இப்போது அதற்காகத்தான் மத்திய அமைச்சகங்களோடு நீண்டகாலம் பழக்கமும் தொடர்பும் வைத்துக்கொண்டிருந்த காரணத்தால், எங்கே குறை இருக்கிறது என்று கண்டறிந்து, அதற்காக ஒரு லையசன் ஆபீசர் போடப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

டாக்டர் மு. கருணாநிதி : குழந்தை அழுதால்தான் தாய் பால் கொடுப்பாள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இங்கே குழந்தை அழுவதே இல்லையே. எனவே தாய்க்குச் சொல்ல ஒருவர் டெல்லியில் இருக்க வேண்டுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : குழந்தை அழுகிற நேரத்தில் தாய் வேறு வேலையில் ஈடுபட்டிருக்கிறாள். எனவே அம்மா, பாலுக்காகக் குழந்தை அழுகிறது என்று சொல்வதில் தவறு இல்லை. காரணம் மத்திய அரசுக்கு எத்தனையோ குழந்தைகள். எத்தனையோ வேலைகள். நாமே சொல்லுகிறோமே. ஸ்ரீலங்கா மீது படையெடு என்று நாமே சொல்லுகிறோமே. அது எவ்வளவு பெரிய பிரச்சினை. ஸ்ரீலங்காவின்மீது படையெடுக்கிற பிரச்சினையைப்பற்றிச் சிந்திக்கிறபோது, நாம் அனுப்புகிற விண்ணப்பங்கள் எங்கேயோதான் நிற்கும். எனவே அந்த உணர்வில்தான் நான் அதைக் குறிப்பிடுகிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் கையை உயர்த்தினார்)

மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே முன் வரிசையில் அமர்ந்திருக்கிறவர்கள் எழுந்து சில கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள். நாங்களும் அதற்குப் பதில் தெரிவிக்கிறோம். இப்படி எல்லோரும் எழுந்து கேட்க



ஆரம்பித்துவிட்டால், அதற்கு முடிவே இருக்காது. இப்போதே நான் அதிகமான நேரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறேன். காரணம் டாக்டர் கலைஞர் அவர்களுக்குத் தெளிவாக, விவரமாக—எங்களுடைய ஆற்றலைப்பற்றி அவருக்குத் தெரிந்திருந்தாலும், நான்கு பேர் மத்தியில் சொல்ல வேண்டும் என்பதற்காக—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் எவ்வளவு திறமையோடு ஈடுபட்டிருக்கிறார் என்று சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஆகவே எல்லா உறுப்பினர்களும் இடையே குறுக்கிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-45)

இங்கே வருகிறவர்களுக்கு நல்ல ஓட்டல்களில் விருந்து வைக்க வேண்டுமென்று அவர் சொன்னது 'கேஷுவல் டாக்'. அதற்கு மிகப் பெரிய ஆழமான பொருள் இருப்பதாக டாக்டர் கலைஞர் அவர்கள் எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்று கருதுகிறேன். இருந்தாலும் 'சிறு துரும்பும் பல் குத்த உதவும்', 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்பதைப் போல அந்தப் புல்லை எடுத்துக் கொண்டு வாதிட்டிருக்கிறார்கள். சில நேரங்களில் போராட இயலாதவர்களுக்கு புல் போன்ற ஆயுதம்தான் பலன் அளிக்கும். மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு. இராசாராம் அவர்கள் கேஷுவலாக பேசிக் கொண்டிருந்தபோது கூறியவை அவை. நம்முடைய மனுவைப் பரிசீலிக்க அங்கேயிருந்து ஒரு 'டீம்'-ஐ அனுப்புகிறார்கள். அந்த அதிகாரிகள் எல்லாம் உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்கள். இன்னும் சொல்லப் போனால், இங்கேயுள்ள மாநில அமைச்சர்களுக்குக்கூட அந்த அந்தஸ்து கிடையாது. மத்தியிலே உள்ள அதிகாரிகளுக்கு உள்ள மரியாதை இங்கே ஆட்சியில் உள்ள அமைச்சர்களுக்குக்கூட கிடையாது. அங்கேயிருந்து வருகிறவர்களைச் சந்தித்து, விருந்து கொடுப்பது என்பது உலகம் முழுவதும் ஏற்றுக்கொண்ட முறை. நம்முடைய நாட்டிலும் 'விருந்தோம்பல்' என்பது தமிழனுக்கே உரிய சிறந்த பண்பாடு.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அந்த விருந்து கைமாறு கருதாமல் அளிக்கப்படுகிற விருந்து. அமைச்சர் திரு. இராசாராம் அவர்கள் சொல்லி பத்திரிகையில் வந்திருப்பதை 'கேஷுவல் டாக்' என்று சொல்லுகிறார். 'கேஷுவல் டாக்' என்றால் பத்திரிகை அச்சுக்கு வந்திருக்கக் கூடாது. மத்திய சர்க்கார் அதிகாரிகளுக்கு விருந்து கொடுத்துத் தொழிலைப் பெற வேண்டுமென்றால், அந்த விருந்துக்கு 'இலஞ்சம்' என்ற பொருள் வந்துவிடும். அதுமாதிரி இல்லாமல் அவரை உற்சாகப்படுத்தி நல்ல ஓட்டலில் தங்க வைத்தால்தான் வேண்டியதைச் செய்வார்கள் என்ற நிலை ஏற்படுவது

அந்த அதிகாரிகளை கௌரவப்படுத்துவதாக அமையாது. இப்படி ஏதாவது செய்தால்தான் நிறைவேற்றுவார்கள் என்ற சூழ்நிலை உருவாகக் கூடாது. பத்திரிகை ஆசிரியரும், அமைச்சரும் உட்கார்ந்து பேசி டேப் ரிக்கார்டில் பதிவாக்கி அதை பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார்கள். இதை 'கேஷுவல் டாக்' என்று சொல்லுவது அரசுக்கு நல்லதல்ல. திரு. இராசாராம் அவர்களைக் காப்பாற்ற அமைச்சர் அவர்கள் 'கேஷுவல் டாக்' என்று சொல்லி தவறான வழியில் செல்ல வேண்டாம்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தொழில் துறை அமைச்சர் திரு. இராசாராம் அவர்களைக் காப்பாற்றுகிற அளவிற்கு நான் ஆற்றல்பெற்றவன் அல்ல என்பது டாக்டர் கலைஞர் அவர்களுக்குத் தெரியும். ஒரு பத்திரிகையாளர் பேட்டி எடுக்க வருகிறார் என்றால். பல கேள்விகளைக் கேட்கிறார்கள், பிரச்சினைகளைச் சொல்லுகிறார்கள். புதிதாகத் தொழில் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார் என்பதால், 'நீண்ட காலமாக தமிழக அரசு தொழில் துறையில் முன்னேற்றம் காட்டவில்லை என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள், நீங்கள் முயற்சி எடுக்கவில்லையா ?' என்று பத்திரிகையாளர் கேட்டபோது, அப்படிப்பட்ட சூழ்நிலையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்கிற ஒரு பிரச்சினையைக் குறித்து மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்கள் சாதாரண ஒரு சூழ்நிலையில் கருத்தாகத் தெரிவித்திருக்கிறார் என்பதால் 'கேஷுவல் டாக்' என்கிறேன். பதிவு செய்ததையெல்லாம் பத்திரிகையில் போடலாம் என்றில்லை. இதையெல்லாம் 'ஆப் தி ரிக்கார்ட்' என்று சொல்லி விட்டுச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஒரு வாரப் பத்திரிகை, மாதப் பத்திரிகை சார்பிலே கேட்கிறபோது, வழக்கமாக உரையாடுகிற முறையால் களின்படி தெரிவித்திருக்கிறார்கள். இந்த விவாதத்திற்குப் பிறகுதான் இந்தக் கருத்திற்கே புதிய உருவகம் கொடுக்கப்படலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதிலே அந்த அடிப்படைப் பொருள் இல்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்குப் பின்னணி என்ன என்பதையும் சொல்லுகிறேன். நீண்ட காலமாக மத்திய அரசை எதிர்க்கிற ஆட்சி, 1967 ஆம் ஆண்டிலேயிருந்து, இங்கே இருக்கிறது. ஆகவே மத்திய அரசிலிருந்து வருகிறவர்களை மதிப்பதில்லை, அவர்களைச் சரியாகக் கவனிப்பதில்லை, அவர்களுக்குச் சரியாக மரியாதை காட்டுவதில்லை, அவர்களாகவே வருகிறார்கள், அவர்களாகவே போகிறார்கள் என்கிற குற்றச்சாட்டு இருந்து கொண்டு வருவதை நாம் மறந்துவிடக் கூடாது, மறைத்து விடக் கூடாது. அது சரியா, தவறா என்பது வேறு விஷயம். அது நடக்கிறதா, இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால் காங்கிரஸ் கட்சி ஆட்சி நடத்துகிற மாநிலங்களுக்கு அவர்கள் செல்லுகிறபோது, அவர்களுக்குத் தரப்படுகிற மரியாதைகள், வரவேற்புகள் . . . . .



**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நமது தொழில் துறை அமைச்சர் அவர்கள் பத்திரிகைக்குக் கொடுத்த பேட்டிக்கு விளக்கம் தருகிற வகையில் நம்முடைய அவை முன்னவர் அவர்கள் கூறுவது மத்திய அரசாங்கத்திற்கும், மாநில அரசாங்கத்திற்கும் பெருமை சேர்ப்பதாக இல்லை என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு அடிப்படையான, ஆழமான கருத்தை இங்கே பதிவு செய்துவிட்டார்கள். ஆகவே அதற்கான காரணங்களை விளக்க வேண்டிய அவசியம் அரசுக்கு

(பிற்பகல் 12-50)

வந்துவிட்டது. அதனாலேதான் இந்த விளக்கத்திற்கே வருகிறேன். ஆகவே தான் முன்னாலேயே சொல்லிவிட்டேன். காரணம் அதை அவர்கள் எண்ணுகின்றார்கள். அது சரியா, தவறா என்பதுகூட அல்ல. அது உண்மையா என்பது கூட அல்ல. ஆனால் அவர்கள் அப்படி எண்ணுகின்றார்கள். அதை வெளிப்படுத்துகின்ற உணர்விலே, வருகின்றவர்களைக் கவனிக்க வேண்டும், மரியாதையைச் செய்ய வேண்டும். நல்ல வசதியான ஓட்டல்கள் வேண்டும். அவைகளிலே அவர்களைத் தங்க வைக்க வேண்டும் என்பதுதான் நம் கருத்து.

**திரு. பா. ரா. தாமன் :** மாண்புமிகு அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்கள் இங்கே இருக்கின்றார்களே. அவர்களாகவே விளக்கம் சொல்லி விட்டால், இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்தமாதிரியாக இருக்குமல்லவா என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தொழில் துறைபற்றி வரும்போது வைத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** ஆகவே அந்த உணர்விலே சொல்லப்பட்ட கருத்தே தவிர, அவர்கள் தனக்கே உரிய இலக்கியச் சான்றுகளுடன், இலக்கிய நயத்தோடு மத்திய அரசு விஸ்வாமித்திரராகவும் மாநில அரசு மேனகையாகவும் இருக்கவேண்டுமென்ற கருத்துக்கு இவ்வளவு கற்பனை தொடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. அவர்கள் சொல்வது இலக்கியச் சுவையுள்ள ஒரு கருத்தாக இருக்கலாம். அதன் உள்ளே நுழைந்தால் அது ஒரு மோசமான உணர்வாக இருக்கும். அவர்களுக்கு நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய அரசு விஸ்வாமித்திரராகவும், மாநில அரசு மேனகையாகவும் இருக்க வேண்டும் என்பதில்லை. உபசரிக்கின்றவர்களை மேனகையாக எண்ணுகின்ற உணர்வு யாருக்கும் வந்துவிடக்கூடாது. அது தமிழ் நாட்டிலே இருக்கக்கூடாது என்பதையும், அந்த உணர்வோடு இந்த அரசோ, தொழில்துறை அமைச்சரோ இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் தேர்தலைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். நீண்ட காலமாகச் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். அதைப்பற்றி இன்றுகூட ஒரு பத்திரிகையிலே பெரிய கதையெல்லாம் எழுதியிருக்கிறார்கள். அந்தக் கதைகளையெல்லாம் அந்த தினசரிப் பத்திரிகை மிகவும் சிரமப்பட்டு எழுதிக் கொண்டிருக்கிறது. அதைக்கூட பெயரைச் சொல்லாமல், சாமர்த்தியமாக 'எக்ஸ்பிரஸ் பத்திரிகையாக இருக்கலாம்' என்று அவர்கள் சொல்லி எங்கே 'எக்ஸ்பிரஸ் பத்திரிகை' எழுதியது என்று சொன்னால் ஒருவேளை எக்ஸ்பிரசுக்கும் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் உறவு இருப்பதாக நாங்கள் சொல்லி விடுவோம் என்று எண்ணியோ என்னவோ 'அது எக்ஸ்பிரஸ் ஆக இருக்கலாம்' என்று கோடிட்டுக் காட்டிவிட்டுச் சொன்னார்கள். உள்ளாட்சித் தேர்தல் எந்தக் காரணத்தினாலேயோ எப்படியோ தள்ளிப் போடப்பட்டு வருகிறது. அதை மறுப்பதற்கு இல்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்ற ஆண்டு நடைபெற்ற கூட்டத் தொடரிலே மிகத் தெளிவாகச் சொன்னார்கள். ஆளுநர் உரையிலேயும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இந்த அரசு மூன்று, நான்கு பொதுத் தேர்தல்களைச் சந்தித்த அரசு என்பதை மறந்துவிடக் கூடாது. ஆகவே தேர்தலைச் சந்திப்பதற்கு பயப்படுகிற அரசு என்று நீங்கள் சொல்லவில்லை. ஆனால் அதைச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். எந்தச் சூழ்நிலைகளிலே தேர்தல் தள்ளிப் போடப்பட்டு வருகிறது என்று பார்க்க வேண்டும். புயல் வருகிறது. வறட்சி வருகிறது. திடீரென்று 2½ ஆண்டிலே ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. அதற்குப் பிறகு நான்கு ஆண்டுகள் ஆள்கின்றதற்கு வருகிறோம். ஆக இப்படிப்பட்ட சூழ்நிலைகள் வருகின்றன. 18 வயது நிரம்பியவர்களுக்கும் வோட்டுரிமை கொடுப்பதற்கு சட்டம் கொண்டு வரப்படுகிறது. அதற்குப் பிறகு பெண்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இட ஒதுக்கீடு செய்வதற்கு சட்டம் கொண்டு வரப்படுகிறது. ஆகவே இரண்டு முறை மதுரை மாநகராட்சியினுடைய தேர்தலை நடத்திய அரசுதான் இந்த அரசு. ஆக அதை நடத்துவதிலே சந்தேகம் இல்லை. எந்த ஐயப்பாடும் இல்லை. எந்த பயமும் இல்லை. ஆகவே நிதி அமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையிலே சொல்லியதுபோல், செப்டம்பர் மாதத்திற்குள் உள்ளாட்சித் தேர்தல் நடைபெறும் என்பதை நான் மீண்டும் இந்த அவையில் அரசின் சார்பில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தி மொழிபற்றி ஒரு குறிப்பைச் சொன்னார்கள். நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆங்கிலத்திலே நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கின்ற நேரத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இந்தி





பேசுகின்ற பகுதியிலிருந்து வந்தவர், "இங்கே ஆங்கிலத்திலே பேசக்கூடாது. தேசிய மொழியாகிய இந்தி அல்லது தாய்மொழியிலேதான் பேசவேண்டும்" என்று சொன்னதாகக் குறிப்பிட்டார். அன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நாடாளுமன்ற மக்களவைத் துணைத் தலைவராக இருக்கின்ற மாண்புமிகு திரு. தம்பித்துரை அவர்கள் 'நீங்கள் தொடரலாம்' என்று சொன்ன ஒரு வார்த்தையிலிருந்து அந்தக் கருத்து அலட்சியப்படுத்தப்பட்டதாகச் சொன்னார். ஆனால் அந்தக் கருத்து அலட்சியப்படுத்தப்பட்டாலும், ஆங்கிலத்திலே பேசலாம். இப்போது அந்தக் கருத்தை அவர்கள் தாண்டலாமா என்பதுதான் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுடைய கருத்து. இந்தியைப் பொறுத்தவரையிலே, இந்தித் திணிப்பு என்கின்றபோது, அந்த முயற்சியை எந்த ஆட்சி எடுத்தாலும், அதை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய கழகமும், அவர்கள் தலைமையிலே இயங்குகின்ற இந்த அரசும், இந்தித் திணிப்பைக் கடுமையாக எதிர்க்கும். அது எந்த உருவிலே வந்தாலும் எதிர்க்கும். அதை ஒரு மொழியாக எண்ணி அதைப் படிக்க விரும்பினால், அது வேறு விஷயம்.

(பிற்பகல் 12-55)

ஆனால் ஒரு மாநில மக்களுடைய தலையிலே சுமத்துகிற அந்த முயற்சியைக் கடுமையாக எதிர்க்கும் என்பதை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் சார்பிலே, இந்த அரசின் சார்பிலே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே, தலைவரவர்களே, உங்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக, ஸ்ரீலங்கா பிரச்சினை. அந்த ஸ்ரீலங்கா பிரச்சினைபற்றி அவர்களுக்கே உரிய உணர்ச்சியோடு, உத்வேகத்தோடு, சிறந்த தமிழ் உணர்வோடு பேசினார்கள். அதற்கு முன்னாலே நம்முடைய கவிஞர் அவர்கள், ஆளுங் கட்சி உறுப்பினர் திரு. முத்துலிங்கம் அவர்கள் இங்கே ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள பாட நூலில் ஒரு கவிதையை, இன்குலாப் என்கிறவர் எழுதியிருக்கிறார். இது உண்மையான பெயரா, புனை பெயரா என்பது தெரியவில்லை. எழுத்தாளர்கள் பெண்களாக இருந்தால், தங்கள் பெயரை ஆண் பெயராக மாற்றிக்கொள்கிறார்கள். ஆண்கள் தங்கள் பெயரை பெண் பெயராக மாற்றிக்கொள்கிறார்கள். எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவில்லை.

ஓர் மாண்புமிகு உறுப்பினர் : 'இன்குலாப்' என்றால் புரட்சி.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** அவர் ஆடவர் என்பது புரிகிறது. அவர் ஒரு கவிதை எழுதி, அதை சென்னைப் பல்கலைக் கழகம் ஏற்றுக் கொண்டு, அது பாடப் புத்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது என்று கவிஞர் முத்துலிங்கம் அவர்கள், தமிழ் கவிஞர், அவருக்கே உள்ள உணர்ச்சி கொப்புளிக்க ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதிலே இராஜராஜன் பற்றி இழிவாகக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அவரே பேசி, இங்கே பதிவாகியிருக்கிறதென்று கருதுகிறேன். அந்தக் கேழ்த்தரமான பாடலை மீண்டும் படிக்க விரும்பவில்லை. அவைத் தலைவரவர்களே, அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், இராஜராஜன்போல் உலகத்திலே ஒரு புகழ் மிக்க வீரனை தயவுசெய்து உலக வரலாற்றிலேயிருந்து காட்டுங்கள் . . .

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, கவிஞர் எழுதியது சரியா, தவறா என்பதைவிட, இதை அனுமதிக்கக் காரணம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** அனுமதித்தவர்களுக்கும் சேர்ந்து இராஜராஜன்பற்றிச் சொல்ல வேண்டியிருக்கிறது. அதற்காகச் சொல்கிறேன். இராஜராஜ சோழன் இந்திய நாட்டிலேயே கடல் கடந்து நாடுகளை வென்றவன். மிகச் சிறந்த சீலன், இந்த நாட்டிலே வருவாய்த் துறையை உருவாக்கியவன், ஆற்றல் மிக்கவன், தர்மத்திற்குத் தலைவணங்கியவன், உலகத்திலே உள்ள ஆங்கில இலக்கியங்களிலும், சரித்திரங்களிலும் புகழப்படும் வீரர்களைவிட நம்முடைய இராஜராஜ சோழன் தலைசிறந்தவன். இராஜராஜ சோழன் முடிசூட்டிய ஆயிரமாவது ஆண்டைக் கொண்டாடிய ஆண்டிலே, மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் தலைமையிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகிற ஆட்சிக் காலத்திலே, சென்னைப் பல்கலைக் கழகம் இப்படிப்பட்டதொரு பாடலை பாடப் புத்தகத்திலே சேர்த்திருப்பது கண்டிக்கத்தக்கது, வருந்தத்தக்கது. யார் அதற்குக் காரணமாக இருந்தார்கள் என்பது கண்டுபிடிக்கப்பட வேண்டும். மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் கவனத்திற்கு இந்தக் கருத்தை மாண்புமிகு முதல்வரவர்கள் சார்பில், அரசின் சார்பில் தெரிவிப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உடனடியாக அந்தப் பாடப் புத்தகத்திலேயிருந்து அந்தப் பகுதி நீக்கப்பட வேண்டும்.

**கவிஞர் முத்துலிங்கம் :** தலைவரவர்களே, அந்தப் பாடலில் இராஜராஜ சோழன்பற்றி மட்டும் எழுதவில்லை. பாரத மாதாவைப்பற்றியும் தரக்குறைவாக எழுதியிருக்கிறார்கள். பாரத மாதாவோடு விட்டுவிடவில்லை. மறைந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் பற்றியும், கலைஞர் அவர்கள் பற்றியும் தவறான கருத்து தொனிக்கும் வகையில் இணைத்து எழுதியிருக்கிறார்கள். அதையும் நீக்க வேண்டும்.





**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு தலைவரவர்களே, இறுதியாக ஸ்ரீலங்கா பிரச்சினைக்குப் போகுமுன்பு மாண்புமிகு முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி முறையைப்பற்றிச் சுருக்கமாக ஒன்றிரண்டைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த ஆட்சி க்ஷேம நலத் திட்டங்கள், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள், மக்களுக்கு நலம் பயக்கும் திட்டங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது, வளர்ச்சியில் கவனம் செலுத்தவில்லை என்பதைத் தெரிந்தோ, தெரியாமலோ திட்டமிட்டு, குறையாகக் கூறிக்கொண்டு வருகிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்

(பிற்பகல் 1-00)

கொள்ள விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வழியில் நடைபெறுகின்ற ஆட்சி மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த உடனேயே நிறைவேற்ற வேண்டுமென்று விரும்பிய திட்டம் ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்கும் திட்டம். அவர்கள் விரும்பியபடி, அத்திட்டம் நிறைவேற்றப்பட்டதா இல்லையா என்பதல்ல பிரச்சினை. ஆனால் அவர்கள் நிறைவேற்ற வேண்டுமென்று விரும்பியதுபோல், 1967 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற சில மாதங்களுக்குள்ளேயே சென்னையிலும், கோவையிலும் சுமார் 2½ கோடி ரூபாய் செலவிலே அந்தத் திட்டத்தை மக்களுக்காக அறிமுகப்படுத்தினார்கள். மூன்று ஆண்டு முடிந்ததற்குப் பிறகு, இறந்து பிறந்த குழந்தையாக அத்திட்டம் கைவிடப்பட்டது. ஆனால் இந்த அரசு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய லட்சியங்களை அப்படியே பின்பற்றுகிறது, அவர்களுடைய உணர்வை அப்படியே நிறைவேற்றி வருகிறது என்பதற்காக ஒன்றிரண்டு சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் லட்சக்கணக்கான ஏழையெளிய மக்களுக்கு, நடுத்தர மக்களுக்குக் குறைந்த விலையில், நிர்ணயிக்கப்பட்ட விலையில் அரிசி வழங்கப்படுகிறது. இதனால் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு 75 அல்லது 80 கோடி ரூபாய் செலவு ஏற்படுகிறது. இதை யாரும் மறந்துவிடக் கூடாது. இப்படி இந்த அரசு குறைந்த விலையில் அரிசி வழங்குவதற்காக கடந்த ஏழு ஆண்டுக் காலமாக 80 கோடி ரூபாய் வரை ஆண்டுதோறும் செலவழித்துக்கொண்டிருக்கிற காரணத்தால்தான், பொதுச் சந்தையில் அரிசியின் விலை ஏறவில்லை. அந்த வகையில் அரிசியின் பொதுச் சந்தை விலை ஏறாமல் பாதுகாத்துக்கொண்டு வருகிறோம். இதற்குக் காரணமாக இருப்பது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு. கொள்கை . . . . . . .

அதுபோல் சத்துணவுத் திட்டம்பற்றி இங்கே எல்லா உறுப்பினர்களும், கட்சிகளின் தலைவர்களும் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். டாக்டர் கலைஞர் அவர்கள் தேர்தல் அறிக்கையிலே "இதை இன்னும் சீர்திருத்தமாக நடத்துவேன்" என்று அறிவித்திருந்தார். அவர்கள் எப்படி சீர்திருத்தி நடத்த இருந்தார்கள் என்பதை இங்கே சொல்லாவிட்டாலும்கூட, தனியாகச் சொல்வார்களேயானால், அதன்படி எங்களால் சீர்திருத்த முடியும். இன்றைக்கு 65 லட்சம் மக்களுக்கு சுமார் 200 கோடி ரூபாய் வரை செலவு செய்து சத்துணவு வழங்கப்படுகிறது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் சத்துணவில் தமிழகம்தான் கடைசியில் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதனால்தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் குழந்தையிலிருந்து வழங்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் சத்துணவுத் திட்டத்தை உருவாக்கினார்கள். இதை தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இன்றைக்கு தமிழகத்தை குஜராத் பின்பற்றுகிறது. மத்திய அரசுகூட இத்திட்டத்தின் அவசியத்தைப் புரிந்துகொண்டிருக்கிறது. ஆனால் இதை எப்படி மற்ற மாநிலங்களுக்கு எடுத்துச்சொல்வது, அப்படிச் சொன்னால் நிதி கேட்பார்களே என்று யோசித்துக்கொண்டிருக்கிறது. உடற்கூறு நிபுணர்கள், விஞ்ஞான நிபுணர்கள் எல்லாம் இன்றைக்கு இத்திட்டத்தை வரவேற்றிருக்கிறார்கள். பத்து ஆண்டுகளுக்குப் பிறகு இத்திட்டத்தின் பலனை இந்த நாட்டு மக்களும், ஏன் இந்த உலகமும் தெரிந்துகொள்ள இருக்கிறது. மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை எப்படி இந்த அரசு திட்டமிட்டுச் செய்கிறது என்பதோடுகூட, வளர்ச்சித் திட்டங்களை இந்த அரசு எப்படி நிறைவேற்றி வருகிறது என்பதைத் தொழில் துறை பற்றிப் பேசியபோது சொல்வேன்.

விவசாயத்தை எடுத்துக்கொண்டால், 65 லட்சம் டன்களாக நம்முடைய விளைச்சலை உயர்த்தியிருக்கிறோம். நாட்டிலே வறட்சி ஏற்பட்டு நம்முடைய உற்பத்தி 28 லட்சம் டன்னுக்குக் கீழ் குறைந்தபோதும் அரிசியின் விலையை ரூபாய் 1.75 என்றுதான் நிர்ணயித்திருந்தோம். இந்த அரசு இரண்டு ரெயில் தண்டவாளங்களைப்போல மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களையும், வளர்ச்சித் திட்டங்களையும் இணைத்துச் செயல்படுத்தி வருகிறது. அதற்குக் காரணமாக இருப்பது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு என்பதை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும். அதனால்தான் நாம் நான்காவது இடத்தில் இருந்தோமா அல்லது ஐந்தாவது இடத்தில் இருந்தோமா என்பதைப்பற்றி விவாதிக்க விரும்பவில்லை. ஆனால் மூன்றாவது இடத்திற்கு இந்தத் தொழில் வளர்ச்சியில், நம்முடைய மாநிலத்தை, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.





அடுத்து, ஸ்ரீலங்கா பிரச்சினை குறித்து மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் சொன்ன கருத்துக்கள் முழுவதையும் நான் அப்படியே ஏற்றுக் கொள்கிறேன் அல்லது அரசு ஏற்றுக்கொள்கிறது என்று பொருளல்ல. ஆனால் அவர்களுக்கு உள்ள அந்த உணர்வை இந்த அரசு புரிந்துகொண்டிருக்கிறது. அந்த உணர்வை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அதைச் செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். நான் சொன்னால் பழைய கதையைக் கிளறுகிறேன் என்று டாக்டர் கலைஞர் அவர்கள் வருத்தப்படக் கூடாது. முன்னாலே இருந்த மத்திய அரசு, ஆசியாவின் ஜோதி என்று அழைக்கப்பட்ட பண்டித நேரு அவர்கள், உலகத்திற்கு பஞ்சசீலம் என்று ஐந்து கொள்கைகளைத் தந்த இந்தியப் பிரதமர் அவர்கள்கூட ஸ்ரீலங்கா பிரச்சினை எழுப்பப்பட்டபோது, அது ஸ்ரீலங்காவினுடைய உள்நாட்டுப் பிரச்சினை என்ற கருத்தைத்தான் தெரிவித்து வந்தார்கள். அதற்குப் பிறகு அநியாயமாகக் கொலை செய்யப்பட்ட இந்த நாட்டினுடைய பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களும்கூட ஒரு குறிப்பிட்ட காலம் வரை அப்படிப்பட்ட ஒரு கருத்தைத்தான் சொல்லிக் கொண்டு வந்தார்கள். அதனுடைய விளைவுதான் இங்கே இருந்த மாநில

(பிற்பகல் 1-05)

அரசுகள், அது மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும், யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டபோதும், பத்திரிகையாளர்கள் கேட்ட நேரத்தில், அது ஸ்ரீலங்காவின் உள்நாட்டுப் பிரச்சினை என்று சொன்னதாகும். அந்தக் கருத்து சரியா, தவறா என்ற விவாதத்திற்குள் நான் நுழையவில்லை. அந்தப் பிரச்சினை எப்படி வளர்ந்து வந்தது என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தப் பிரச்சினை எல்லோருடைய கவனத்தையும் எப்போது கவர்ந்தது, எப்போது இது தமிழ்நாட்டு மக்களுடைய பிரச்சினை மட்டுமல்ல, இந்தியப் பிரச்சினை யானது என்பதையும், நீங்கள் எல்லாம் நியாய உணர்வோடு எண்ணிப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, 1982 ஆம் ஆண்டுதான் இது இந்திய நாட்டுப் பிரச்சினையாக மாறியது. மாண்புமிகு மத்திய அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகர் அம்மையார் அவர்கள் இந்தப் பிரச்சினை தமிழ்நாட்டுப் பிரச்சினை அல்ல, இந்திய மக்களின் பிரச்சினை என்று சொன்னார்கள். இந்தியாவில் வாழும் மக்கள் எப்படி இந்தியக் குடிமக்கள் என்று கருதப் படுகிறார்களோ, அப்படி ஸ்ரீலங்கா மக்கள் ஸ்ரீலங்கா குடிமக்கள் என்று கருதப் படுகிறார்கள். ஆனால் ஸ்ரீலங்காவில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களில் இந்திய வம்சாவழியினர் என்ற பிரிவினரும் இருக்கிறார்கள். அவர்கள் மிகப் பெரிய

தொகையில் வாழ்கிறார்கள். ஆகவே இந்தியா இந்தப் பிரச்சினையைக் கவனிக்கிறபோது, இரண்டு கண்களைக் கவனிக்கவேண்டியது போல கவனிக்கிறது. ஸ்ரீலங்காவில் இருக்கிற தமிழர்களைப்பற்றிச் சொல்கிறபோது, அவர்கள் தங்களுக்குத் தேவையான கண்களைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் விடுதலை உணர்வு என்பது உலகத்திலே வரவேற்கக்கூடிய ஒன்று. அடிமைப்படுத்தப்பட்டுக் கிடக்கிற ஒரு நாட்டிலிருந்து விடுதலை பெற்றிடுவது ஒன்று. ஒரு நாட்டுக்குள்ளே . ஆட்சி உரிமை பெற்று சுதந்திரம் பெற்ற நாட்டுக்குள்ளே இருப்பவர்கள் ஆட்சி உரிமை பெற்று ஒரு இன அடிப்படையின் காரணமாக ஆட்சி வர்க்கம் அவர்களுக்கு துரோகம் விளைவிக்கிறது, நன்மை செய்ய விரும்பவில்லை, "அதனால் பிரிந்து செல்ல விரும்புகிறோம்" என்று சொல்வது அந்த நாட்டு மக்களுடைய உரிமை. ஆனால் அப்படிக் கேட்கிறவர் களையெல்லாம் கொன்று குவிப்பது, உலகத்தில் உள்ள அத்தனை பேரும் கடுமையாகக் கண்டிக்க வேண்டிய ஒன்று. அது தமிழர்களுக்கு நிகழ்ந்தாலும் சரி, அல்லது உலக மக்களில் யாருக்கு நிகழ்ந்தாலும் சரி, அது நிச்சயமாகக் கண்டிக்கப்பட வேண்டியதுதான் என்பதில் யாருக்கும் எந்த ஐயமும் இல்லை.

அதனால்தான் இந்தப் பிரச்சினையை ஐக்கிய நாடுகள் மன்றத்தில் எழுப்ப வேண்டுமென்று நாங்கள் சொல்கிறோம். அந்த அடிப்படையில் இந்தப் பிரச்சினையை மக்களுடைய மன்றத்திற்குக் கொண்டு வந்தவர்கள், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் என்பதை அருள்கூர்ந்து மறந்துவிடக் கூடாது. அப்படிக் கொண்டு வந்த காரணத்தால்தான் இங்கே இருக்கிற அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கூட்டி வைத்துப்பேசி அன்றைக்கிருந்த பிரதமர் அவர்களிடம் இந்தக் கருத்தை எடுத்துச் சொல்லி, அவர்களையும் நம்முடைய கருத்துக்கு ஒத்துவரச் செய்தோம்.

ஒரு மாநில அரசே ஹர்த்தால் நடத்தியது இதற்கு முன்பு இருந்ததா? அந்த மாநில அரசு ஏற்பாடு செய்த ஹர்த்தாலில் மத்திய அரசும் கலந்து கொண்ட வரலாறு இந்தியாவிலேயே இதற்கு முன் இருந்ததா? அதற்குப் பிறகு இந்த ஹர்த்தால் எங்களுக்குப் போதாது, எங்களுடைய கட்சி தனியாக ரயில் நிறுத்தப் போராட்டத்தை நடத்தும் என்று சொன்ன நேரத்தில் ரயில்களை நிறுத்திவிடுங்கள் என்று மத்திய அரசுக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னதை, அன்றைக்கிருந்த பிரதமர் அவர்கள் கேட்டார்களே, அது எந்த உணர்வின் பாற்பட்டது என்று கருதுகிறீர்கள்? அப்படி நடைபெற்றதாக ஒரு சான்று சொல்ல முடியுமா? வரலாறு இருக்கிறதா? எந்த மாநிலத்தில் அப்படி இருக்கிறது? ஆகவே இன்றைக்கு ஸ்ரீலங்காவில் தமிழர்கள் துரத்தியடிக்கப்படுகிறார்கள், அவர்களை நாம் இருகரம் நீட்டி அகதிகளாக ஏற்றுக் கொள்கிறோம்.



இன்றைக்கு வரலாறு எதை வேண்டுமானாலும் சொல்லலாம். இங்கேயிருந்துதான் போனார்கள். பிடித்தார்கள் என்றெல்லாம் அதைச் சொல்வது, அவர்கள் நன்மைக்கு உகந்ததல்ல. ஆனால் இன்றைக்கு தமிழர்கள் விரட்டியடிக்கப்படுகிறார்கள், துன்புறுத்தப்படுகிறார்கள், கொல்லப் படுகிறார்கள். அவ்வளவு பெரிய படுகொலைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். ஆனால் தமிழ்நாடு கொஞ்சம்கூட மனம் கோணாமல், முகம் கோணாமல், மத்திய அரசு தருகிறதா இல்லையா என்றுகூடப் பார்க்காமல், தன்னுடைய நிதியிலிருந்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது. மத்திய அரசும் நாங்களும் எவ்வளவு வேண்டுமானாலும் தருகிறோம் என்று சொல்கிறார்கள், அங்கேயிருந்து வருகிற மக்கள் தலைவர்களை, திரு. அமிர்தலிங்கம் போன்றவர்களை, நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவராய் இருந்தவர்களை, "நீங்கள் இங்கே வந்தால் விருந்தாளியாக வாருங்கள், ஏற்றுக் கொள்கிறோம்" என்று ஏற்றுக்கொண்டது, இதற்கு முன்பு இருந்ததா? நான் குட்டிமணியைப் பிடித்துக் கொடுத்த வரலாற்றை இதோடு இணைக்க விரும்பவில்லை. அதன் அடிப்படை என்ன என்று அதற்குள்ளே நுழைய விரும்பவில்லை.

டாக்டர் மு. கருணாநிதி : திரு. அமிர்தலிங்கத்தை தமிழகம் விருந்தினராக அழைத்தது, முன்பு இருந்ததா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை அப்போது ஏற்படவில்லை. அப்போது அங்கொன்றும் இங்கொன்றுமாக ஸ்ரீலங்காவில் சில சம்பவங்கள் நடந்தன. பெரிய அளவில் எதுவும் நடக்கவில்லை. அந்தக் காரணத்தால்தான், அண்ணா கூட அதனை பெரும் அதை உள்நாட்டுப் பிரச்சினை என்று சொன்னார்கள். நான்கூட இங்கே பேசும்போது சொன்னேன், ஐக்கிய நாடுகள் அவைக்குச் சென்ற நம்முடைய அமைச்சர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் அங்கே பேசும்போது, அது அந்த நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினை என்று சொன்னார், அது அந்த நேரத்திற்குக்கூட உள்நாட்டுப் பிரச்சினையாக இருந்திருக்கலாம். ஆனால் இரண்டு ஆண்டுக் காலத்தில் அது உள்நாட்டுப் பிரச்சினை என்ற எல்லையைக் கடந்து விட்டது என்றுதான் நான் பிருந்த எச்சரிக்கையோடு குறிப்பிட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-10)

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : அன்றைக்கு அத்தகைய சூழ்நிலை வரவில்லை. ஆகவே விருந்தினர்களாக ஏற்றுக்கொள்ளவில்லை என்று மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் சொல்வதை வாதத்திற்காக ஒத்துக் கொள்கிறேன். ஆனால் இன்றைக்குக்கூட வருகின்றவர்களை நம்முடைய விருந்தினர்களாக ஏற்று, "அவர்கள் எவ்வளவு காலம் வேண்டுமானாலும்

இங்கே தங்கலாம், அதற்கு அரசு இல்லங்களை ஒதுக்கித் தருகிறோம், அங்கே கொல்லப்பட்ட வீரர்களின் துணைவியார்கள், பிள்ளைகள் இங்கே வந்தால், நாம் அவர்களுக்கு வாழ்வளிப்போம்" என்று சொல்கிற ஓர் அரசை நாம் இன்றைக்குப் பெற்றிருக்கிறோம், முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவரைப் பெற்றிருக்கிறோம். ஆகவே அப்படிப்பட்ட உணர்வோடு நாம் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும். மத்திய அரசு, இந்தப் பிரச்சினைமீது அகில இந்திய அளவிலே, உலக அளவிலே உள்ள அணுகுமுறையைப் பின்பற்றக்கூடும். ஆனால் தமிழர்களின்மீதான கொடுமை வளர்ந்து கொண்டு வருகிறது. இரண்டாவது உலக யுத்தத்திலே இட்லருக்குப் பிறகு, முசோலினிக்குப் பிறகு இப்படிப்பட்ட ஒரு கொடுமை எங்கோ நடைபெறுவதாகச் சொல்கிறார்கள். நமக்குத் தெரிவதில்லை. ஆனால் நம்முடைய இரத்தத்தின் இரத்தமாக விளங்குகிற தமிழ் மக்களை தமிழ் பேசுகிறார்கள் என்ற காரணத்தினாலே கொன்று குவிக்கிறார்கள். இதை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. ஆகவே அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் நாம் இந்த விவாதத்தை விரித்து பிரச்சினையாக மாற்றக்கூடாது. அதுதான் புரட்சித் தலைவர் அவர்களுடைய கருத்து. நாம் இதிலே எப்படி ஒரு ஒருமித்த கருத்துக்கு வரப்போகிறோம்? அதிலே நம் கட்சிகள் அனைத்தும் எந்த முடிவுக்கு வரப்போகிறது? அப்படி வர நாங்கள் தயார் என்று டாக்டர் கலைஞர் அவர்கள் சொல்கின்றபோது, ஒரு கமாவை போட்டு விட்டு, "ஆனால்" என்று ஆரம்பித்தார்கள். அறிஞர் அண்ணா அவர்கள்தான் சொல்வார்கள், இந்த "ஆனால்" என்பதான ஒரு வார்த்தை. இந்த "ஆனால்" ஐப் போட்டுவிட்டு "நீங்கள் ஒருமித்த கருத்தை எடுத்ததற்குப் பிறகும், எங்களுடைய கட்சிக்கு ஒரு முடிவு இருக்குமேயானால், நான் அந்த முடிவை நிறைவேற்றுவதற்கு நீங்கள் குறுக்கே நிற்கக்கூடாது" என்று சொன்னார்கள். அதுதான் கூடாது என்று நான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சார்பிலேயும், அரசின் சார்பிலேயும், தமிழ்நாட்டு மக்களின் சார்பிலேயும், ஏன் இன்றைக்கு செத்துக் கொண்டிருக்கின்ற, மடிந்து கொண்டிருக்கின்ற, துன்பப்பட்டுக்கொண்டிருக்கின்ற அந்தத் தமிழ் மக்களின் சார்பிலேயும், கற்பழிக்கப்படுகிற தாய்மார்களின் சார்பிலேயும், தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பிரச்சினையிலே ஒரு ஒருமித்த கருத்தை நாம் எடுத்தாக வேண்டும். நாம் எப்படி ஒன்றுபட்டாக வேண்டும் என்பதற்கு அறிஞர் அண்ணா அவர்கள் வழிகாட்டி விட்டுச் சென்றிருக்கிறார்கள். மாறுபட்ட கருத்து கொண்டவர்களை ஓர் அணியில் திரட்டுவதுதான் அறிஞர் அண்ணா கண்ட ஒரு மகத்தான சாதனை, உதாரணம் தேவிகுளம், பீர்மேடு பிரச்சினை அப்படிப்பட்ட ஒரு மிகப் பெரிய முயற்சிதான். 1967-லே அவர்கள் கண்ட அந்தக் கூட்டணி அப்படிப்பட்ட ஒரு முயற்சிதான். சுதந்திராக் கட்சியையும், திராவிட முன்னேற்றக் கழகத்தையும் ஓரே அணியில் இணைக்க முடிந்தது



மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியையும், திராவிட முன்னேற்றக் கழகத்தையும் ஓரே அணியில் இணைக்க முடிந்தது. ஆகவே நான் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களை, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன். அழிந்து கொண்டிருக்கிற, செத்துக் கொண்டிருக்கிற ஈழத் தமிழ் மக்களின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன். ஈழத் தமிழர் பிரச்சினையில் ஒருமித்த கருத்தை நாம் கொண்டாக வேண்டும். நாம் ஒருமித்த கருத்தை எடுத்தால்தான், அதன்மேல் மத்திய அரசை வலியுறுத்த முடியும். மத்திய அரசின் கரங்களை வலுப்படுத்த முடியும். தயவுசெய்து எந்தக் கட்சியும் ஒரு அரசியல் கட்சியினுடைய வளர்ச்சிக்காகவோ அல்லது அரசியல் கட்சியினுடைய நடைமுறைக்காகவோ, இந்தக் கொலையை, சாவை, மரணத்தைப் பயன்படுத்திவிடக் கூடாது என்பதை நான் அரசின் சார்பிலேயும், மக்களின் சார்பிலேயும், முதல்வர் அவர்களின் சார்பிலேயும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஒரு ஒருமித்த முடிவை எடுப்போம். அனைத்துக் கட்சிகளுடைய தலைவர்களையும் கூட்டி அவர்கள் அனைவரின் கருத்துக்களையும் கேட்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைச் சட்டமன்றப் பேரவையிலே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதை இங்கே நான் தெரிவிக்கிறேன். இதிலே ஒரு ஒருமித்த கருத்தை, ஒன்றுபட்ட கருத்தை, ஈழத்திலே செத்துக்கொண்டிருக்கிற மக்களுக்காக நாம் எடுத்தாக வேண்டும். ஒன்றுபட்ட கருத்தை எடுத்து, செயல்பட்டாக வேண்டும். தயவுசெய்து ஒரு அரசியல் கட்சியினுடைய நடவடிக்கையாக இதை எந்தக் கட்சியும் மாற்றிவிட வேண்டாம் என்பது என்னுடைய பணிவான வேண்டுகோள். நம்முடைய முடிவை ஓரே நாளாக மத்திய அரசுக்குத் தெரிவிப்பதற்கு அதுதான் சிறந்த வழி என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, ஸ்ரீலங்கா தமிழர்களுடைய பிரச்சினைக்குப் பரிகாரம் கண்டாக வேண்டும் என்றால், அது எல்லாக் கட்சியினரின் ஒருமித்த கருத்திலேதான் இருக்கிறது. அது மத்தியிலே ஆளுகிற காங்கிரஸ் கட்சியானாலும் சரி, உலகப் பிரச்சினையிலே தலையிடக் கூடாது என்று சொல்லுகிற கம்யூனிஸ்ட் கட்சியானாலும் சரி, எல்லாக் கட்சியினரும் ஈழத் தமிழர்களை ஸ்ரீலங்கா தமிழர்களைப் பாதுகாக்க வேண்டுமென்பதிலே ஒத்த கருத்திலேதான் இருக்கிறோம். பாதுகாக்கிற நோக்கிலே அங்கே

(பிற்பகல் 1-15)

வாழ்ந்து கொண்டிருக்கிற இந்தியத் தமிழர்களையும் பாதுகாக்க வேண்டும் என்பதுதான் அவர்களுடைய வேண்டுகோள் ஆகவும் இருக்கிறது. இரண்டையும் பரிசீலித்து, அழிந்து கொண்டிருக்கிற தமிழ் சமுதாயத்தைக் காப்பாற்றுவதற்கு ஒரு மிகச் சிறந்த தலைவரை, தமிழகத்துக்கு மூன்றாவது

1985 மார்ச் 18

(பிற்பகல் 1-17)

3. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

124. 1983-84 ஆம் ஆண்டிற்கான கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் பத்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (A) ஆம் பிரிவின்கீழ், அவைமுன் வைக்கப்படுகிறது.]

124. 1983-84 ஆம் ஆண்டிற்கான கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (A) ஆம் பிரிவின்கீழ், அவைமுன் வைக்கப்படுகிறது.]

126. 1983-84 ஆம் ஆண்டிற்கான சேரன் போக்குவரத்துக் கழகத்தின் பதிமூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 ( ) ஆம் பிரிவின்கீழ், அவைமுன் வைக்கப்படுகிறது.]

127. அரசு நிறுவனம் அல்லது தற்போதுள்ள நிறுவனம் பாக்கித் தொகையை பெறுவதற்குரிய நாளை 25—12—1985 என்று வரையறுப்பது குறித்து, தொழில் துறையின் 2—7—1984 ஆம் நாளிட்ட 761 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1984 ஆம் ஆண்டு மதுரை சர்க்கரை ஆலைச் சட்டத்தின் (நிறுவனப் பொறுப்பை எடுத்துக்கொள்ளுதல்-மாற்றுதல் குறித்து) (தமிழ்நாடு சட்டம் 18/1984) 33(4) ஆம் பிரிவின் கீழ், அவைமுன் வைக்கப்படுகிறது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

இல்லை.

தமிழ்நாடு ... 16 ... 1985 ... 600 009
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# அதிகாரபூர்வமான வெளியீடு
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, மார்ச் 19, 1985—தொகுதி 212-எண் 2
Tuesday 19th March 1985—Volume 212 - No. 2

சட்டமன்ற மேலவைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. George, Madras-600 009.

விலை ரூ. 2.75]

16-4-1985

பொருளடக்கம்

பக்கங்கள்


1 அறிவிப்பு—

மேலவைக் கூட்டம் ஆரம்பமாகும் நேரம் குறித்து .. .. .. .. ..

2 கவன ஈர்ப்பு—

(1) தஞ்சை மாவட்டம் தரங்கம்பாடி வட்டத் தலைநகரிலும், பொறையாறு பகுதியிலும் உள்ள தொடக்க, நடுநிலை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்கப்படாதது குறித்து .. .. .. .. 83—86

(2) 1-4-1984 முதல் ஓய்வு பெறும் ஊழியர்களுக்கு ரூ. 5000/- வழங்கும் திட்டத்தை தனியார் ஊராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத ஊழியர்களுக்கு நீட்டிக்கப்படாதது குறித்து .. .. 86—89

3 தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1983–84 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை, 1982-83 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை மற்றும் 1984–85 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை, 1983-84 ஆம் ஆண்டுக்கான துணைநிதி நிலை அறிக்கைகள் ஆகியவற்றின்மீது விவாதம் தொடர்ச்சி .. .. — .. 90—152

4 அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. 152—154


D

D-2 C 113-- 1 V211,32'N85

N85.212.1-3

143941

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை

செவ்வாய்க்கிழமை, 1985 மார்ச் 19.

பங்குனி 6, ரக்தாக்ஷி, திருவள்ளுவராண்டு 2016.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 1. அறிவிப்பு.

### மேலவைக் கூட்டம் ஆரம்பமாகும் நேரம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களே, தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் கூட்டம் 20—3—1985 அன்று மாலை 4 மணிக்கு பதிலாக காலை 10-00 மணிக்குக் கூடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 2. கவன ஈர்ப்பு.

(1) தஞ்சை மாவட்டம், தரங்கம்பாடி வட்டத் தலைநகரிலும் பொறையாறு பகுதியிலும் உள்ள தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்கப்படாதது குறித்து.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பின்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன் :

"தஞ்சை மாவட்டத்தில், தரங்கம்பாடி வட்டத் தலைநகரிலும் பொறையாறு பகுதியிலும் உள்ள கல்லூரி ஆசிரியர்கள் வீட்டுவாடகைப்படி பெறும் நிலையில், அதே பகுதிகளில் பணிபுரியும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப் படி வழங்கப்படாதது குறித்து".

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது குறித்த விவர அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

---

@ 155 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தாலுக்கா
தலைமையிடங்களில் பணி புரியும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும்
தனியார் மற்றும் உள்ளாட்சித் துறையில் பணி புரிபவர்கள் அனைவருக்கும்
வீட்டு வாடகைப் படி தரலாம் என்ற உத்தரவு இருக்கிறது. தரங்கம்பாடி
11—1—1982 முதற்கொண்டு தாலுக்கா தலைமையிடமாக மாற்றப்பட்டிருக்
கிறது. அவ்வாறு அது தலைமையிடமாக மாற்றப்பட்டு இன்றைக்கு 3 ஆண்டு
கள் 2 மாதம் மற்றும் 8 நாட்கள் ஆகின்றன. எனவே 3 ஆண்டுகளுக்கு
மேலாகியும்கூட அங்கே பணிபுரியும் ஊழியர்களுக்கு, ஆசிரியர்கட்கு வீட்டு
வாடகைப்படி வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்படாததற்கு என்ன
காரணம்? ஆனால் அங்கே இருக்கிற கல்லூரிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்
கள் மட்டும் வீட்டு வாடகைப் படி பெற்று வருகிறார்கள்? இதற்கு மட்டும்
கல்லூரிக் கல்வித்துறை எவ்வாறு ஆணையிட்டது? பள்ளி ஆசிரியர்
களுக்கும் அதே அடிப்படையில் வீட்டு வாடகைப்படி வழங்குவதற்கு கல்வித்
துறை செயலாளர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார் என்றும் பள்ளிக் கல்வித்
துறை இயக்குநருக்கு இதுகுறித்து அரசாணை அனுப்பப்பட்டிருக்கிறது
என்றும் விவர அறிக்கையில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே
கல்லூரி ஆசிரியர்களுக்கு மட்டும் அங்கே வீட்டு வாடகைப் படி வழங்கும்
போது, பள்ளி ஆசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் வழங்கப்படாத மெத்தனப்
போக்கு எதனால் ஏற்படுகிறது? அவர்களுக்கெல்லாம் எப்போது முதல்
வீட்டு வாடகைப் படி கிடைக்கும் என்பதை உறுதியாகவும் இறுதியாகவும்
மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத்
தலைவர் அவர்களே, தரங்கம்பாடி வட்டத் தலைநகராக மாற்றப்பட்ட பிறகு,
உரிய வீட்டு வாடகைப் படி எல்லோருக்கும் முறைப்படி வழங்கப்படுதல்
வேண்டும். பலருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அது பல துறைகளின்
மூலமாக வழங்கப்பட வேண்டும். ஆசிரியர்களைப் பொறுத்தவரையில்,
கல்வித் துறை மூலமாக அது வழங்கப்பட வேண்டும். தரங்கம்பாடி வட்டத்
தலைநகராக ஆன பிறகு ஆசிரியர்களுக்கும் மற்ற பணியாளர்களுக்கும் உரிய
வீட்டு வாடகைப் படி வழங்கும்படி பள்ளிக் கல்வி இயக்குநருக்கு ஆணைகள்
பிறப்பிக்கப்பட்டுள்ளன. கல்வித் துறைச் செயலாளர் இது குறித்து ஏற்கெ
னவே நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார். அதோடு இந்தப் பிரச்





சினை இந்த அவையில் எழுப்பப் பட்டுவிட்டதால், கல்வித் துறை விரைவில் நடவடிக்கை எடுக்கும். விரைவில் அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம். அவ்வாறு ஆணைகள் பிறப்பிக்கப்படும் சூழ்நிலையில் ஊழியர்களுக்கு எந்த நாளிலிருந்து, முறைப்படி கிடைக்க வேண்டுமோ அந்த நாளிலிருந்தே முறைப்படி கிடைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, அங்கே பணியாற்றும் ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் எந்த நாளிலிருந்து வீட்டு வாடகைப் படி கிடைக்க வேண்டுமோ அந்த நாளிலிருந்து கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்த வகையில் 'ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட்' கொடுத்து அந்தத் தேதியிலிருந்து கொடுக்க உறுதி அளித்த மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு இன்னொரு பிரச்சினையும் இருக்கிறது. அங்கே தற்போது ரூரல் அலவன்ஸ் என்று ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கொடுக்கப் படுகிறது. அதற்குப் பதிலாக அவர்களுக்கு இனி வீட்டு வாடகைப்படி தரலாம் என்று விவரக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. சென்னை போன்ற நகரப் பகுதிகளில் நகர ஈட்டுப் படி ஊழியர்களுக்கு வழங்கப்படு கிறது. ஆனால் கிராமப் பகுதிகளில் பணியாற்றுபவர்களைப் பொறுத்த வரையில், கிராம ஈட்டுப்படியை எடுத்துவிட்டு வீட்டு வாடகைப்படி கொடுக்க லாம் என்பது எப்படி நியாயமாகும்? கிராமப்புறங்களில் விலைவாசி குறைந்திருக்கிறதா? அங்கேயும் மிக அதிகமாகத்தானே இருக்கிறது. எனவே சென்னை போன்ற நகர்ப்புறங்களில் நகர ஈட்டுப் படியுடன் வீட்டு வாடகைப் படியும் வழங்கப்படுவதுபோல், அங்கே இருப்பவர்களுக்கு கிராம ஈட்டுப் படியுடன் வீட்டு வாடகைப் படியும் வழங்கப்பட வேண்டும். இது குறித்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதோடு அவருடைய கருத்து என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தாலுக்கா தலைமையிடங்களில் பணி புரியும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் தனியார் மற்றும் உள்ளாட்சித் துறையில் பணி புரிபவர்கள் அனைவருக்கும் வீட்டு வாடகைப் படி தரலாம் என்ற உத்தரவு இருக்கிறது. 11—1—1982 முதற்கொண்டு தாலுக்கா தலைமையிடமாக தரங்கம்பாடி இறது. அவ்வாறு அது தலைமையிடமாக மாற்றப்பட்டு இன்றைக்கு 3 ஆண்டு கள் 2 மாதம் மற்றும் 8 நாட்கள் ஆகின்றன. எனவே 3 ஆண்டுகளுக்கு மேலாகியும்கூட அங்கே பணிபுரியும் ஊழியர்களுக்கு, ஆசிரியர்கட்கு வீட்டு வாடகைப்படி வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்படாததற்கு என்ன காரணம்? ஆனால் அங்கே இருக்கிற கல்லூரிகளில் பணியாற்றுகிற ஆசிரியர் கள் மட்டும் வீட்டு வாடகைப் படி பெற்று வருகிறார்கள்? இதற்கு மட்டும் கல்லூரிக் கல்வித்துறை எவ்வாறு ஆணையிட்டது? பள்ளி ஆசிரியர் களுக்கும் அதே அடிப்படையில் வீட்டு வாடகைப்படி வழங்குவதற்கு கல்வித் துறை செயலாளர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார் என்றும் பள்ளிக் கல்வித் துறை இயக்குநருக்கு இதுகுறித்து அசாணை அனுப்பப்பட்டிருக்கிறது என்றும் விவர அறிக்கையில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே கல்லூரி ஆசிரியர்களுக்கு மட்டும் அங்கே வீட்டு வாடகைப் படி வழங்கும் போது, பள்ளி ஆசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் வழங்கப்படாத மெத்தனப் போக்கு எதனால் ஏற்படுகிறது? அவர்களுக்கெல்லாம் எப்போது முதல் வீட்டு வாடகைப் படி கிடைக்கும் என்பதை உறுதியாகவும் இறுதியாகவும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தரங்கம்பாடி வட்டத் தலைநகராக மாற்றப்பட்ட பிறகு, உரிய வீட்டு வாடகைப் படி எல்லோருக்கும் முறைப்படி வழங்கப்படுதல் வேண்டும். பலருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அது பல துறைகளின் மூலமாக வழங்கப்பட வேண்டும். ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், கல்வித் துறை மூலமாக அது வழங்கப்பட வேண்டும். தரங்கம்பாடி வட்டத் தலைநகராக ஆன பிறகு ஆசிரியர்களுக்கும் மற்ற பணியாளர்களுக்கும் உரிய வீட்டு வாடகைப் படி வழங்கும்படி பள்ளிக் கல்வி இயக்குநருக்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. கல்வித் துறைச் செயலாளர் இது குறித்து ஏற்கெ னவே நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார். அதோடு இந்தப் பிரச்



சினை இந்த அவையில் எழுப்பப் பட்டுவிட்டதால், கல்வித் துறை விரைவில் நடவடிக்கை எடுக்கும். விரைவில் அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம். அவ்வாறு ஆணைகள் பிறப்பிக்கப்படும் சூழ்நிலையில் ஊழியர்களுக்கு எந்த நாளிலிருந்து, முறைப்படி கிடைக்க வேண்டுமோ அந்த நாளிலிருந்தே முறைப்படி கிடைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, அங்கே பணியாற்றும் ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் எந்த நாளிலிருந்து வீட்டு வாடகைப் படி கிடைக்க வேண்டுமோ அந்த நாளிலிருந்து கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்த வகையில் 'ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட்' கொடுத்து அந்தத் தேதியிலிருந்து கொடுக்க உறுதி அளித்த மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு இன்னொரு பிரச்சினையும் இருக்கிறது. அங்கே தற்போது ரூரல் அலவன்ஸ் என்று ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கொடுக்கப் படுகிறது. அதற்குப் பதிலாக அவர்களுக்கு இனி வீட்டு வாடகைப்படி தரலாம் என்று விவரக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. சென்னை போன்ற நகரப் பகுதிகளில் நகர ஈட்டுப் படி ஊழியர்களுக்கு வழங்கப்படு கிறது. ஆனால் கிராமப் பகுதிகளில் பணியாற்றுபவர்களைப் பொறுத்த வரையில், கிராம ஈட்டுப்படியை எடுத்துவிட்டு வீட்டு வாடகைப்படி கொடுக்க லாம் என்பது எப்படி நியாயமாகும்? கிராமப்புறங்களில் விலைவாசி குறைந்திருக்கிறதா? அங்கேயும் மிக அதிகமாகத்தானே இருக்கிறது. எனவே சென்னை போன்ற நகர்ப்புறங்களில் நகர ஈட்டுப் படியுடன் வீட்டு வாடகைப் படியும் வழங்கப்படுவதுபோல், அங்கே இருப்பவர்களுக்கு கிராம ஈட்டுப் படியுடன் வீட்டு வாடகைப் படியும் வழங்கப்பட வேண்டும். இது குறித்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதோடு அவருடைய கருத்து என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-05)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கிராமங்கள் என்ற தகுதி நிலையில் இருக்கும்போது, ஒரு வகையான ஏற்பாடு செய்யப்படுகிறது. ஆனால் தாலுக்கா தலைநகரம், மாவட்டத் தலைநகரம் என்று வருகிறபோது, வேறு தகுதியின் அடிப்படையில் நிலைமைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆக்வே தாலுக்கா தலைமயிடமாக ஆக்கப்பட்டதன் காரணமாக, கிராமம் என்ற நிலை போகிறது. ஆகவே அதற்குப் பதிலாக கிரேட் 2, கிரேட் 3 என்று வைக்கப்பட்டிருக்கிறது. கிரேட் 3-க்கு அந்த வகையிலே படிகள் எவ்வளவு வழங்கப்படுகிறதோ அவ்வளவு வழங்கப்படுகிறது. கிரேட் 1, கிரேட் 2, கிரேட் 3 ஆகியவற்றுக்கு எந்த அளவிலே வழங்கப்படுகிறது என்ற முழு விளக்கம் என்னிடத்திலே தற்போது இல்லாததால், அதைப் பற்றித் தெரிவிக்க முடியவில்லை. கிரேட் 3-க்கு என்ன உரிமை உண்டோ அது கொடுக்கப்படுகிறது. அது வட்டத் தலைமையிடமாக மாறிவிட்டதால், இப்போது அதற்குரிய படி கொடுக்கப்படுகிறது. ஊக்கப் படி, வாடகைப் படி கொடுக்கப்படுகிறது. நகர ஈட்டுப் படி போன்றவைகள் கிரேட் 3-க்கு இருக்கின்றனவா இல்லையா என்பதை இப்போது என்னால் சொல்வதற்கில்லை. அந்த நிலைமைகள் இருந்தால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

**(2) 1—4—1984 முதல் ஓய்வுபெறும் ஊழியர்களுக்கு ரூ. 5,000 வழங்கும் திட்டத்தை, தனியார் ஊராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத ஊழியர்களுக்கு நீட்டிக்கப்படாதது குறித்து.**

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"1—4—1984 முதல் ஓய்வுபெறும் ஊழியர்களுக்கு ரூ. 5,000 வழங்கும் திட்டத்தை, தனியார் ஊராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத ஊழியர்களுக்கு நீட்டிக்கப்படாதது குறித்து".



**மாண்புமிகு திரு. க. முத்துசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ இன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே, சென்னை மாநகராட்சியில் இந்தத் திட்டம் 1—8—1984-லிருந்து விரிவாக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தத் திட்டம் 1—4—1984-ல் அமுல்படுத்தப்பட்டிருக்க வேண்டும். கொள்கை அளவிலே ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதிலே பெருத்த முரண்பாடு இருக்கிறது. அரசுத் துறையில் பணியாற்றுபவர்களுக்கு ஒரு விதமாகவும், நகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றுபவர்களுக்கு மற்றொரு விதமாகவும் அமுல்படுத்தப்படுகிறது. மேலும் ஊராட்சிப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும், நகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும், அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் விஸ்தரிக்கப்படாமல் இருக்கிறது. அதைப்பற்றி ஆய்வு செய்யப்படுகிறது என்றால், அந்த 'ஆய்வு' என்பது எவ்வளவு காலம் எடுக்கும்? அந்த ஆய்வு முடிந்த பிறகு 1—4—1984-லிருந்து அமல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. முத்துசாமி:** இப்போது சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், உத்தரவிடப்பட்டிருக்கிறது. மற்ற இடங்களைப் பொறுத்தவரையில், ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். நகராட்சிகளைப் பொறுத்தவரையில், அரசு கொள்கை அளவிலே ஏற்றுக்கொண்டிருக்கிறது. எப்படி கணக்கை வைப்பது என்பதுபற்றி மாநிலக் கணக்காய்வாளர் ஆய்வு செய்து கொண்டிருப்பதால், காலதாமதம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஏற்கெனவே தேதி குறிப்பிட்டு, இந்தத் தேதியிலிருந்து அமுலாக்கப்படும் என்று அரசு அறிவித்திருந்தால் அந்தத் தேதியிலிருந்து வழங்க அரசு ஏற்பாடு செய்யும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கல்வியமைச்சர் அவர்கள் பதில் சொல்லுவார்கள் என்று எதிர்பார்த்தேன். மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் எப்போது கல்வியமைச்சராக மாறினார்கள் என்பது தெரியவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அதிலே தவறில்லை. அந்தப் பொருளில் போக்குவரத்துத் துறைக்கும் தொடர்பு இருக்கிறது என்று நினைக்கிறேன். அப்படி இல்லையென்றாலும் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது.

---

@ 156 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1985 மார்ச் 19

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** இங்கே தரப்பட்டிருக்கிற அறிக்கையில், தனியார் மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு விடுப்புக் கால பயணச் சலுகைகள், ஓய்வு பெற்றால் ஐந்தாயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் ஆகியவைகளையெல்லாம் கணக்காய்வாளர் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே சென்ற கூட்டத் தொடரில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் சொல்லப்பட்ட பதில்தான் இது. சென்ற கூட்டத் தொடரில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை நான் கேட்டபோது, ஊராட்சிமன்றப் பள்ளிகளுக்கான ஆணைகள் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்றும் தனியார் பள்ளிகளில் யார் அந்தப் பணத்தை வைத்துக்கொள்வது, எப்படி கட்டுவது என்பது போன்றவற்றைக் குறித்து கணக்காய்வாளரிடம் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லி 8 மாதங்கள் ஆகிறது. எட்டு மாதங்களுக்குப் பிறகும் அதே போல் 'ஆய்வில்' இருக்கிறது என்று சொன்னால் எப்படி? அரசு மிகவும் மெத்தனமாக இருக்கிறது. கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்தால், நல்ல பதில் கிடைக்கும் என்றுதான் கொடுக்கிறோம். ஆனால் சென்ற ஆண்டு கொடுத்த அதே பதிலையே இப்போதும் கொடுப்பது என்றால், கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமே இல்லாமல் போகிறது. கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுப்பதில் அர்த்தமே இல்லாமல் போகிறது. கொஞ்சமாவது முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று தெரிவித்தால், பரவாயில்லை. சென்ற ஆண்டு தெரிவித்த அதே பதிலையே சொல்லிக்கொண்டிருக்கிறீர்களே?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது விளக்கம்தான் கேட்க வேண்டும். விவாதம் கூடாது.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்கு சட்டமன்றப் பேரவைக் கூட்டத்திலே ஒரு நிகழ்ச்சி இருப்பதால், என்னிடத்திலே இந்தப் பொறுப்பைக் கொடுத்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல, அரசாங்கம் மெத்தனமாக இருந்திருக்க வேண்டும் என்று விரும்பியதால், மேல் நடவடிக்கை எடுக்காமல் கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளாமலே இருந்திருக்கலாம். அரசாங்கம் இதிலே அக்கறை காட்டுகிறது. 'செய்வன திருந்தச் செய்' என்ற அக்கறையைக் காட்டுவதில் தான் காலதாமதம் ஏற்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் மறுக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.



1985 மார்ச் 19] (திரு. க. மீனாட்சிசுந்தரம்)

(முற்பகல் 10-10)

எனவே தொடர்ந்து 8 மாத காலமாக இதைப்பற்றித் தீவிரமாக அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கின்றது என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் அந்த பதிலைச் சொல்லியிருக்கின்றார்கள். அந்த பதில் அவர் சொல்லியிருப்பதிலிருந்து அது பரிசீலனையில் இருக்கின்றது என்பதை உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். அதற்கான விரைவான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தச் சலுகைகள் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும்போது, 1—4—1984-லிருந்தே அது அமுலாக்கப்பட்டது. நிர்வாகக் காரணங்களால், கொள்கை முடிவுகள் காரணமாக தனியார் பள்ளிகள், நகராட்சிப் பள்ளிகள் ஆகியவற்றில் அமுல்படுத்த காலதாமதம் ஏற்படுகிறது. நிர்வாகக் காரணங்களால் ஏற்படுகின்ற காலதாமதத்திற்கு ஆசிரியர்கள் பலியாகக் கூடாது. ஆகவே 1—4—1984-லிருந்தே அந்தச் சலுகைகளை அளிக்க உறுதிமொழியை அரசு அளிக்க வேண்டும். அது மட்டுமல்ல, சலுகைகள் அரசு ஊழியர்களுக்கு அளிக்கும்போது, தனியார் பள்ளி, ஊராட்சிப் பள்ளி மற்றும் நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கும், அலுவலர்களுக்கும் அது பொருந்தும் என்ற அளவில் அமைச்சரவையிலே ஒரு கொள்கையை நிரந்தரமான முடிவாக ஏற்படுத்திவிட்டால், இப்படிப்பட்ட பிரச்சினைகள் வராது என்பதையும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அப்படிப்பட்ட முடிவினை எடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அரசைப் பொறுத்தவரையில், தனியார் நிறுவனம் போல அல்ல. எதைச் செய்வதாக இருந்தாலும், அரசில் நன்றாக ஆய்வு செய்துதான் தீரவேண்டும். அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்றது. எனவே இந்த ஆய்வு எவ்வளவு காலம் ஆகும் என்பதைப்பற்றி இப்போது சொல்ல முடியாது. ஆனால் அரசு அதை அமல் நடத்துகின்றபோது, நிச்சயமாக தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**** 3. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1983-84 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை, 1982-83 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை மற்றும் 1984-85 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை, 1983-84 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கைகள் ஆகியவற்றின் மீது விவாதம்—தொடர்ச்சி.**

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 மாத காலத்திற்குப் பிறகு ஏற்பட்ட நிலைமை குறித்து ஒரு சிறிய அறிக்கையை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பியுள்ளோம். நான் மேலவையிலே உரையாற்றியதாக எடுத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுடைய கருத்துக்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU G. SWAMINATHAN: Hon. Chairman, Sir, please permit me to speak a few words in English, as I think I will be able to present my thoughts more coherently in English while speaking on the Electricity Board Budget.

The last discussion on the Electricity Board......

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** எலெக்ட்ரிசிடிக்கும் தமிழுக்கும் சம்பந்தம் கிடையாதா அல்லது அது சுற்றி அடிக்குமா?

*** திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு இந்த அவையிலே மின்வாரிய அறிக்கை விவாதிக்கப்பட்ட போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் அந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசிக்கொண்டிருந்தபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடல்நலக்குறைவு பற்றி நம் அவைக்குச் செய்தி வந்து, அதன் காரணமாக விவாதத்தைத் தொடர்ந்து நடத்தி பேச முடியாமல் நாம் ஒத்தி வைத்தோம். மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் சொன்னது போல, 5 மாத இடைவெளிக்குப் பிறகு இன்றையதினம் இந்த மின் வாரிய அறிக்கையின்மீது தொடர்ந்து பேசுகிறோம். இந்த மின் வாரிய அறிக்கையின்மீது, என்னுடைய மனதிலே எழுந்துள்ள கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம் என்று கருதுகிறேன். மின் வாரியத்தை நாம் உயரி நிலையை

** 13—10—1984 ஆம் நாளன்று சட்டமன்ற மேலவையில் அளிக்கப் பட்டது.

*157-169 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.





யிலே நடத்த வேண்டும், அதாவது பிராபிட்டபிளாக நடத்தவேண்டும் என்ற உணர்ச்சி நம் எல்லோருக்கும் இருப்பது இயற்கையான ஒன்றாகும். இந்தச் சமயத்திலே வாரியம், இழப்புக்கு ஆளாகியிருக்கிறது. 1975-76-ல் இப்போது உறுப்பினராக இருக்கக்கூடிய திரு. சாதிக் பாட்சா அவர்கள் மின்துறை அமைச்சராக இருந்தார்கள். 1975-76-ல் பேசும்போதுகூட, இரண்டு உறுப்பினர்கள், திரு. எ. ஆர். தாமோதரன் அவர்களும், திரு. சித்ரா நாராயணசாமி அவர்களும் மின் வாரிய அறிக்கைமீது தொடர்ந்து பேசக் கூடியவர்களாக அன்று இருந்தார்கள். அதைப்பற்றிப் பேசுவதிலே மிகுந்த அக்கறை காட்டினார்கள். அவர்கள் 1975-76-லும் கடந்த பல ஆண்டுகளாகவும் தமிழ்நாடு மின்சார வாரியம் பெருத்த இழப்புக்கு ஆளாகியிருக்கிறது என்று சொன்ன கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-15)

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** திரு. சாதிக் பாட்சா அவர்கள் மின் துறை அமைச்சராக இருந்தது நினைவில்லை. திரு. ஒ. பி. இராமன் அவர்கள் மின் துறை அமைச்சராக இருந்தார்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** 1975 அக்டோபர் 29 ஆம் தேதிதான் திராவிட முன்னேற்றக் கழக அரசு கடைசி நிதி நிலை அறிக்கையை இங்கே சமர்ப்பித்தது. அப்போது மின்துறை அமைச்சராக இருந்தவர் திரு. சாதிக் பாட்சா அவர்கள். அவர்தான் அந்த மின் வாரிய நிதிநிலை அறிக்கையை அவையில் வைத்து, அதன்மீது விவாதம் நடத்தினார்கள். அந்தக் குறிப்பேட்டை வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் எடுத்துப் பார்க்கலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் அப்போது உறுப்பினராக இந்த அவையில் இல்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு உறுப்பினரவர்கள் 'இல்லை' என்று சொல்லுகிறார்கள். திரு. ஒ. பி. இராமன் ஆரம்ப காலத்தில் மின் துறை அமைச்சராக இருந்தார்கள். திரு. சாதிக் பாட்சா அவர்கள் கடைசி மின் துறை அமைச்சராக இருந்தார்கள். அப்போதே, மின் வாரியம் பல ஆண்டுகளாக இழப்புக்கு ஆளாகியிருந்த நிலைமையை அந்த இரண்டு நண்பர்களும்

முடிகிறது. இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். நமக்கு இழப்பு ஏற்படும்போது மின் கட்டணத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்கிறோம். அப்படிச் சொல்லும்போது ஒரு கேள்வி எழுகிறது. மின் வாரியம் நல்ல முறையில் இயங்குகிறதா என்ற கேள்வி பலராலும் எழுப்பப்படுகிறது. நாம் அதிகப்படியாக மின் கட்டணத்தைப் பெற வேண்டுமென்று, கேட்கும்போது வாரியமும் அதனுடைய செலவுகளைக் குறைத்துக்கொண்டு வருகிறதா என்ற கேள்வி எழுகிறது. மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்களுக்கு ஒரு கருத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

"To find out the cost effectiveness of the State Electricity Board it is advisable to have cost consultants".

என்ற அளவிலே ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஹைதராபாத் ஸ்டாப் காலேஜ், டாட்டா கன்சல்டன்சி போன்று கன்சல்டன்சி ஒன்று நியமித்து இன்னும் செலவுகளை எவ்வளவு குறைக்க முடியும் என்று நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இன்னொன்றையும் அகில இந்திய அளவில் 2 பெரிய கம்பெனிகளை உருவாக்கியிருக்கிறார்கள். ஒன்று நேஷனல் ஹைடல் கார்ப்பரேஷன் லிமிடெட் என்பது. மற்றொன்று நேஷனல் தெர்மல் கார்ப்பரேஷன் லிமிடெட் என்பது அதற்குக் காரணம் வாரியமாக இருக்கும்போது, அதனுடைய மூலதனம் அல்லது கேப்பிடலைசேஷன் தனியாக இல்லை என்கிற நிலைமையைப் பார்க்கும்போது, 'வே அன்ட் மீன்ஸ் அட்வான்ஸ்' என்கிற வகையில் அரசு பொது மக்களிடமிருந்து வாங்குகிற பணத்தை வாரியத்தின் மூலதனமாக ஆக்குகிறது. ஆனால் கம்பெனியானால் தனி மூலதனத்தோடு அது நல்ல முறையில் இயங்கலாம் என்ற அடிப்படையில், அப்படி கம்பெனியாக இந்திய அளவில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு வாரியங்களும் கம்பெனிகளாக உருவாகி 5 ஆண்டுகளுக்கு உள்ளாகவே அவை நல்ல முறையில் இயங்கி வருவதாக மத்திய அரசில் இருக்கிற எனர்ஜி மினிஸ்ட்ரியில் இருப்பவர்களாலேகூட பாராட்டிப் பேசப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் சொல்கிற யோசனையையும் ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கேயும் ஸ்டேட் பவர் ஜெனரேஷன் கார்ப்பரேஷன் லிமிடெட் என்ற அளவில் மின் வாரியத்திற்கு பதிலாக அமைக்கலாமா என்று பார்க்க வேண்டும். அதுபோல் 'ஸ்டேட் பவர் டிஸ்ட்ரிபியூஷன் கார்ப்பரேஷன் லிமிடெட்' என்ற அளவில் ஏற்படுத்த வேண்டும். இப்படி மின் வாரி-



யத்திற்கு பதிலாக 4 கம்பெனிகளை லிமிடெட் கம்பெனி என்ற முறையில் அமைத்து, அதன்மூலம் மின்சாரத்தை நல்ல முறையில் விநியோகம் செய்ய முடியுமா என்பது குறித்து எண்ணிப் பார்க்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மின் வாரியத்திற்கும் நான் சொல்கின்ற கருத்து உடன்பாடான கருத்தாக இருந்தால், எண்ணிப் பார்க்க வேண்டும்.

'மின்வெட்டு' இருக்கிறது என்றும் அதனால் 'பிளக்சுவேஷன்' இருக்கிறது என்றும் மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் அவர்கள் இங்கே சொன்னார்கள். மின்வெட்டைப் பொறுத்தவரையில், கோடைக் காலங்களில் மின்சாரத்தை தேவையான அளவு உற்பத்தி செய்ய முடியாத நிலையில் 'பவர் கட்' வருகிறது. 60 சதவிகிதம், 50 சதவிகிதம், 40 சதவிகிதம் என்கிற அளவுகளில் கூட மின்வெட்டு வந்து விடுகிறது. இப்படி 50, 60 சதவிகித பவர் கட்டை திடீரென்று கோடைக் - காலங்களில் கொண்டு வருவதற்குப் பதிலாக, ஆண்டு பூராவும் 10, 15 சதவிகிதம் என்கிற அளவுக்கு குறைத்துக் கொண்டு வரலாம் என்று முடிவெடுத்தால், பிரச்சினை இல்லாமல் இருக்கலாம். ஆகவே இதுகுறித்தும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். விநியோகத்தைப் பொறுத்தவரையில், நாம் அதிகமாக மின் இணைப்பைக் கொடுத்துக் கொண்டே போனால், நாம் மின் இணைப்பு கொடுக்கும் அளவுக்கு மின் உற்பத்தியை அதிகரித்துக்கொண்டு போக முடியுமா என்ற கேள்வி எழுகிறது. இனிமேல் இணைப்புகளைக் கொடுப்பது அல்லது கொடுக்காமல் இருப்பது எப்படி என்பதுபற்றியும் ஒரு முடிவு எடுக்க வேண்டும். இதை நான் சொல்வதற்குக் காரணம் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், நாம் அதிக அளவு மின் இணைப்புக் கொடுத்து வருகிறோம். 12½ லட்சம் பம்ப்செட்டுகளுக்கு நாம் மின் இணைப்பு கொடுப்பதாக இருக்கிறோம். இதுவரை 9½ லட்சம் இணைப்புகள் கொடுத்திருக்கிறோம். இன்னும் 2½ லட்சம் பம்ப்செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் இன்னும் ஆயிரக்கணக்கான பம்ப்செட்டுகளுக்கு இணைப்பு கொடுக்க வேண்டிய நிலை கிட்டத்தட்ட நான்கு, ஐந்து ஆண்டுகளாக இருக்கிறது. ஓர் ஆண்டிற்கு 20 ஆயிரம், 25 ஆயிரம் பம்ப்செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க முடியாத நிலை இருக்கும்போது, 3½ லட்சம் பம்ப்செட்டுகளுக்கும் மின் இணைப்பு கொடுப்பதென்றால், அதற்கு கோடிக்கணக்கில் பணம் தேவைப்படும். இந்த

2½ லட்சம் பம்ப்செட்டுகளுக்கும் மின் இணைப்பு கொடுக்க இன்னும் நான்கு, ஐந்து ஆண்டுகள் ஆகும் என்று பார்க்கும்போது, ஏற்கெனவே கேட்டிருப்பவர் [illegible] கொடுக்க முடியாத நிலையில் இன்னும் அதிகமாக விநியோகத்தை அதிகரித்துக் கொண்டு போவது தேவைதானா என்பதுபற்றியும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன.

(முற்பகல் 10-25)

அதேபோல, மின்சாரத்தின் ஏற்ற இறக்கத்தைப் பொறுத்தவரையில், சில குறைபாடுகள் இருக்கின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். முன்பு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தனியார் லைசென்ஸீஸ் என்பவர்கள இருந்தார்கள். அதை இப்போது எடுத்துவிட்டார்கள். நான் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்தவன். தஞ்சாவூர் நகராட்சியில் உள்ள விநியோக நிர்வாகம், மாநில மின்சார வாரியத்தைப்போல நன்றாக இல்லை என்று சொல்லிக்கொள்கிறேன். காரணம், உபரி மின்சார விநியோகம்மூலம் வருகிற போது, அதை அப்போதே நகராட்சிகளுக்கு என்று செலவு செய்து விடுகிறார்கள். வேண்டிய அளவுக்கு மின் சக்தி கொடுக்க இயலாத நிலை ஏற்படுகிறபோது, பொருளாதாரப் பற்றாக்குறை ஏற்படுகிறது. அதன் காரணமாக, நஷ்டத்தை ஈடுசெய்ய மின்சார வாரியம் எவ்வளவு கட்டணம் வசூலிக்க வேண்டும் என்று சொல்கிறதோ அதைவிட நகராட்சி அதிகக் கட்டணம் வசூலிக்கிறது. அதைப்போல தமிழ் நாட்டில் 8 முனிசிபாலிட்டிகள் அதிகக் கட்டணம் வாங்குவதாகத் தெரிகிறது.

இதுகுறித்து, சென்ற ஆண்டு நான் இந்த அவையில் ஒரு கவன ஈர்ப்புத தீர்மானம் கொண்டுவந்தேன். அப்போது நகராட்சி நிர்வாகம் மாண்புமிகு திரு. குழந்தைவேலு அவர்கள் பொறுப்பில் இருந்தது. "மின்சார வாரியம் இவ்வளவுதான் வசூலிக்கவேண்டும் என்று நிர்ணயித்திருந்தும், நகராட்சிகள அதிகக் கட்டணம் வசூலிக்கிறார்களே, இது சரியானதுதானா ?" என்று அப்போது கேட்டிருந்தேன். 'எலெக்ட்ரிசிடி ஆக்ட்'-படி தனியார் எலெக்ட்ரிசிடி சப்ளை கார்ப்பரேஷன் ஓரளவுதான் லாபம் பெறலாம், அப்படி அதிக லாபம் பெறவேண்டுமென்று சொன்னால், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு எழுதி அனுமதி பெற வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது இருக்கக்கூடிய நகராட்சிகள் என்ன கட்டணம் வேண்டுமானாலும் வைத்துக்



கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். இதனால், தஞ்சை, கரூர் போன்ற பகுதிகளில், சிறு தொழில்கள் அதிகமாக இருக்கும். இதுபோன்ற பகுதிகளில், அவையும் வீடுகளும் கூட அதிகமான மின் கட்டணம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. எனவே அந்நகராட்சிகளிலுள்ள விநியோகத்தை மின்சார வாரியமே எடுத்துக் கொள்ள முடியுமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முடிவாக, ஒரு கருத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். நமது மின்சார வாரியத்திற்கு ஏற்படும் இழப்பை சரிசெய்து, அதை ஒரு லாபகரமான அமைப்பாக ஆக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வரக்கூடிய ஐந்தாண்டு காலத்திற்கு என்ன பாலிசி, திட்டங்கள் வைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நிதிநிலை அறிக்கையின்போது அமைச்சர் தெரிவிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் என்ன செய்தோம், இனி வரும் ஐந்தாண்டுக் காலத்தில் என்ன செய்யப் போகிறோம் என்ற வெள்ளை அறிக்கை ஒன்றை இங்கே சமர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, இது அங்குள்ள உறுப்பினர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமையும் என்பதையும் தெரிவித்து, எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அறிக்கை மீது மூன்று கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். சில நடவடிக்கைகள் எடுத்து, மின்சாரப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு சில திட்டங்கள் உடனடியாக நிறைவேற்றப்பட்டால், நிவாரணம் கிடைக்கும் என்று இந்த அறிக்கை கூறுகிறது. அதுமட்டுமல்லாமல், 20 திட்டங்கள் பரிசீலனையில் இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. ஆனால் மொத்தத்தில் வரக்கூடிய காலத்தில் மின்சாரத் தேவை என்பது அதிகரித்து வருகிறது என்பதுதான் உண்மை. அதற்கும், உண்மையான உற்பத்திக்கும் இடைவெளி அதிகமாகத் தொடருகிறது. ஏற்கெனவே இதற்கு முந்தைய ஆண்டு சமர்ப்பித்த அறிக்கையில் புதிய வாய்ப்புகள் அல்லது புதிய திட்டங்களை நாம் பரிசீலிக்க வேண்டுமென்ற முறையில், மாற்று முறை (alternative source of energy) அதாவது கடல் நீரிலிருந்து கிடைக்கக்கூடிய வெப்பத்தைப் பயன்படுத்தி, நாம் என்ன செய்யலாம் என்பதை வெளிநாட்டு உதவியோடு, குறிப்பாக திருச்செந்தூர், குலசேகரப்பட்டினம் பகுதிகளில் சில பரிசோதனை செய்யப்

போவதாகச் சொல்லப்பட்டது. எனவேதான் நாம் கேட்பதை மத்திய அரசின் மூலம் விரைந்து பெற்றாக வேண்டும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. நிலக்கரி வெகுதூர இடங்களிலிருந்து வரவேண்டியிருப்பதால், அணு மின் நிலையங்கள் வழியாக நிவாரணம் அமையும் என்றும் சொல்லப்படுகிறது. இன்றைக்குள்ள நிலைமையில் மத்திய அரசிடம் அனுமதி வாங்க ஆண்டு பலவாகிறது. அப்படியே திட்டங்களுக்கு அனுமதி பெற்றாலும், திட்டக் கமிஷன் நிதி ஒதுக்கீட்டை அளிப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே மாற்றுத் திட்டம் என்கிற முறையில் ஏதாவது ஏற்பாடு செய்ய (alternative source) வேண்டும். உலகம் முழுவதும் மின்சார நெருக்கடி ஏற்படுகின்ற நேரத்தில், தமிழ் நாட்டுக்கு இன்னும் அதிக நெருக்கடி ஏற்படப் போகிறது.

(முற்பகல் 10-30)

தமிழ் நாட்டில் சூரிய ஒளியைப் பயன்படுத்துவது குறித்து அரசு ஏற்கனவே குறிப்பிட்டிருந்தாலும், இந்த அறிக்கையில் அப்படிப்பட்ட பிரச்சினை குறித்து விரிவாக ஒன்றும் இல்லை. தமிழ் நாட்டில் அப்படிப்பட்ட வாய்ப்புகள் இருக்கின்றன. தமிழ் நாட்டில் இந்தத் துறையில் ஆராய்ச்சி செய்பவர்கள் சில நிபுணர்கள் குறிப்பாக சிறிய அளவிலே வீட்டு உபயோகத்திற்கு என்ன செய்யலாம் என்றுதான் ஆராய்ந்திருக்கிறார்கள். பெரிய அளவுக்கு ஆராய்ச்சி மேற்கொள்வதற்கு நிபுணர்கள் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். இவர்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மாற்றுவழி என்ன என்பதற்கு, எரிபொருளை அதிகப்படுத்துவதற்கு மாற்று வழி என்ன என்று ஆராய வேண்டும். குறிப்பாக சூரிய ஒளியைப் பயன்படுத்தி என்ன செய்ய முடியும் என்பதை விரிவாக ஆராய்ச்சி செய்ய வேண்டும். இது நீண்ட காலத்திற்குப் பயன்தரும். இதில் நம் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு சென்ற செப்டம்பரிலிருந்து சில சலுகைகள் தரப்பட்டதில், நடைமுறையில் சில குறைபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. என்னவென்று சொன்னால், 5½ குதிரை சக்தி மோட்டார் பம்ப்செட் வைத்திருக்கக்கூடிய விவசாயிகளுக்கு, கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவற்றிற்கெல்லாம் ஒரே சீரான மின் கட்டணம் வசூலிக்கிறார்கள். வருடம் பூராவும் ரூ. 182, ரூ. 186 என்று வசூலிக்கிறார்கள். மேட்டுப்பாங்கான பகுதியிலே விவசாயம் செய்பவர்களுக்கு இது அதிகமாக இருக்கிறது. இவ்வாறு



பொதுவான அணுகுமுறை சரிதான் என்றாலுங்கூட, நடைமுறையில் நிறைவேற்றும்போது மேட்டுப்பாங்கான பகுதிகளில் விவசாயம் செய்பவர்களுக்கு கட்டணம் அதிகமாக இருக்கிறது. முன்பு மீட்டர் இருந்த காலத்திலே உபயோகிக்கிற மின்சார அளவைப் பார்த்துக் கட்டணம் வசூல் செய்தார்கள். ஆனால் இப்போது எல்லா இடத்திற்கும் குதிரை சக்தி அடிப்படையிலே மீட்டர் சிஸ்டம் வேண்டுமென்று வலியுறுத்தவில்லை. ஏற்கெனவே அறிவித்த போது சரிதான். ஆனால் நடைமுறையில் மேட்டுப்பாங்கான பகுதியிலே விவசாயம் செய்கிறவர்கள் கட்ட வேண்டிய கட்டணம், அவர்கள் முன்பு கட்டிய தொகையைவிட நான்கு மடங்கு அதிகமாக இருக்கிறது. குறிப்பிட்ட சில இடங்களில் நேரடியாகப் பார்த்துவிட்டு, விசாரித்துவிட்டு இதைச் சொல்கிறேன். மேட்டுப்பாங்கான இந்த இடங்களில் தண்ணீர் அதிகம் இருக்காது. இறைவை கொஞ்ச நாழிதான் பயன்படுத்த முடியும். எனவே அவர்கள் ஏற்கெனவே உபயோகித்து வந்த கட்டணத்தைவிட நான்கு மடங்கு அதிகமாக குதிரை சக்தி அடிப்படையில் கட்டுகிறார்கள். குறிப்பாக தர்மபுரி, பெரியார் மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் சில இடங்கள் அப்படி இருக்கின்றன. எனவேதான் அப்படிப்பட்ட குறிப்பிட்ட பகுதிகளில் பொது அணுகுமுறை மூலம் விவசாயிகளிடம் மின்சாரக் கட்டணம் வசூலிப்பது விவசாயிகளுக்குச் சுமையாக இருக்கிறது. அவர்களுக்கு இந்த சிஸ்டம் சுமையாக இருக்கக்கூடாது, அந்தக் கொள்கை விவசாய உற்பத்தி பெருக வேண்டுமென்ற அணுகுமுறையிலிருந்து வருகிற காரணத்தாலே, நடைமுறையில் இருக்கின்ற சிக்கல்களைக் குறிப்பிடுகிறேன். எனவே அதுபோன்ற மேட்டுப்பாங்கான பகுதிகளில் விவசாயம் செய்பவர்களிடமிருந்து, கடந்த மூன்று ஆண்டுகளில் மீட்டர் இருந்த காலத்தில் என்ன பயன்படுத்தி இருக்கிறார்களோ, அதன் அடிப்படையிலே மூன்று ஆண்டு கால சராசரியை வைத்து, தீர்மானித்து மின்கட்டணம் வசூல் செய்தால், அது அவர்களுக்கு நிவாரணமாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போதிருக்கும் கொள்கை அவர்களைப் பொறுத்தவரை, மிகக் கடுமையாக இருக்கும். அறிவித்த பொதுக் கொள்கைக்கு முரணாகப் போய்விடும். எனவே மேட்டுப்பாங்கான பகுதிகளில் உள்ளவர்களிடம் மூன்று ஆண்டுகளில் மீட்டர் இருந்த காலத்தில் அவர்கள் கட்டிய தொகையின் சராசரியை நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவதாக, பொதுஜனத் தொடர்பு பற்றி இந்த அறிக்கையிலே அவர்கள் எங்கு எங்கு இருப்பார்கள், அவர்கள் எப்படி எப்படி பெறுவார்கள் என்று இருக்கிறது. அதுபற்றி அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. படிப்பதற்கு உண்மையிலே நன்றாக இருக்கிறது. ஆனால் காரியத்திலே நடப்பிலே வேறாக இருக்கிறது, முரணாக இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதில் சிறு அபிவிருத்தி காண முயலுவது பலன்தரும் என்று கூறி அமைகிறேன்.

* திரு. அ. ப. சிவராமன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அறிஞர் பெருமக்களும், ஆன்றவிந்த பெரியோர்களும் இடம்பெற்ற இந்த அவையில் எங்களைப் போன்ற மிகச் சாதாரண சாமானியர்களும் இடம் பெறவும், அனுபவம் பெறவும் வைத்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் திருவடி மலர்களுக்கு என் நன்றி கலந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதம்

(முற்பகல் 10-35)

நடைபெற்றுக் கொண்டிருந்தபோதுதான், எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் உடல் நலமின்றி மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு அவர்கள் வெளிநாட்டுக்கும் அனுப்பப்பட்டார்கள். அவருடைய உடல் நலத்தை மனதிலே, கருத்திலே கொண்டு, அதை ஏற்றுக் கொள்ளக்கூட மனம் இல்லாத தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளிலே வாழ்கிற மக்கள் தங்களுடைய உயிரைக் கூட அதற்குப் பணயமாகவும் தந்திருக்கிறார்கள். அதைப் போலவே தமிழகத்திலுள்ள பல்வேறு பகுதிகளிலுள்ள மக்கள் புரட்சித் தலைவர் உடல் நலம்பெற கால்நடைப் பயணம் ஏற்றும், உடலை வருத்தியும், அந்த இதய தெய்வம் உடல் நலம்பெற வேண்டுமென்பதற்காக எல்லா மத ஆலயங்களிலும் பிரார்த்தனை நடத்தினார்கள். அந்தப் பிரார்த்தனையின் பயனாக தமிழகத்தினுடைய தானைத் தலைவர், புரட்சித் தலைவர் அவர்கள் உடல் நலம் பெற்றுத் திரும்பியிருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்த அவையின் மூலமாகவும், மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் மூலமாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போலவே, நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழ் நாட்டிலேயிருந்து செல்கிறபோது அவர்கள் தமிழகத்தின் முதல்வராகச் சென்றார்கள். அப்படியே அவர்கள் தமிழகத்தின் முதல்வராகவே திரும்பி வரவேண்டுமென்ற கருத்தைக் கொண்டு தமிழக மக்கள்



பெருவாரியாக வாக்களித்து அவர்களை இந்த அவைக்கு முதல்வராகவே திரும்பவும் வரவழைத்த இந்த மாநில மக்களுக்கும் என் இதயம் கனிந்த நன்றியை இந்த மன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாநில அரசும், அமைச்சர் அவர்களும் நம்முடைய நிலை, நிலை, உள்ள இடர்பாடுகள், தவிர்க்கப்படத்தக்க தீர்வுகள் ஆகியவற்றை இந்த அறிக்கையின் மூலமாக தீர்க்கமாகவும், தெளிவுபடவும் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இத் துறையில் இருக்கிற ஆழ்ந்த அறிவை, அவர்களுக்குரிய அனுபவங்களை இந்த மாமன்றத்தில் அவர்களுடைய அறிக்கையில் தீர்க்கதரிசனமாகக் காண முடிகிறது. மின் உற்பத்தியைப் பொறுத்தமட்டில், இது மாநில அரசைச் சார்ந்ததோடு மட்டுமல்லாமல், மத்திய அரசையும் சார்ந்திருக்கிறது. காரணம் நாம் திட்டங்களைத் தீட்டினால், அந்தத் திட்டங்களுக்கு ஒப்புதலானாலும் சரி, நிதி ஆதாரங்களானாலும் சரி, மற்றும் நிலக்கரி போன்ற அத்தியாவசியத் தேவைகளானாலும் சரி, நாம் மத்திய அரசை நம்பியிருக்க வேண்டியவர்களாக இருக்கிறோம், எனவே அந்தவகையிலே மத்திய அரசு நம்மோடு ஒத்த கருத்தோடு காரியம் ஆற்றுவதானால்தான் நாம் மின் உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பது இந்த அறிக்கையிலே பல்வேறு இடங்களிலே காணப்படுகிற ஒரு உண்மை. நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில்லாமல், இந்தியா ஒரு விவசாய நாடு. 75 சதவீத மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 75 சதவீத மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றாலும் கூட அந்த விவசாயத்தை இங்கே ஒரு தொழிலாக நம் நாட்டில் அங்கீகரிக்கப்படாத ஒரு துர்பாக்கிய நிலை நிலவிக் கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. காரணம் ஒரு தொழில் என்று சொன்னால், உற்பத்திச் செலவு லாபம் விற்பனை விலை என்பதுதான் ஒரு தொழிலினுடைய 'பார்முலா'. ஆனால் இந்த நிலைமை விவசாய விளைபொருள்களுக்கு இருக்கிறதா என்று சொன்னால், கண்டிப்பாக இல்லை. விவசாயத்திலே உற்பத்தி செய்யப்படுகிற பொருட்களுடைய தன்மை, மார்க்கெட்டிலே அப்போது வர்த்தக மகசூல் அதிகமாக இருக்கிறது என்பதைப் பொறுத்து விலைகள் ஏறவும், இறங்கவும் செய்கிறது. மத்திய அரசாங்கம் (Lab to Land) லாப் டு லாண்டு என்ற ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். ஆராய்ச்சி நிலையத்திலிருந்து நிலம்

வரை இருக்கிற அந்தத் திட்டம், ஆராய்ச்சி நிலையத்திலேயே புதிய புதிய கண்டுபிடிப்புகளைக் கண்டுபிடிப்பது, விதைகளானாலும் சரி அல்லது பூச்சி மருந்துகளானாலும் சரி, இன்னபிற மருந்துகளானாலும் சரி, புதிய கண்டுபிடிப்புகளானாலும் சரி அவற்றை விளைநிலம் வரை கொண்டுவந்து அவற்றின் மூலமாக விவசாயத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். நான் இந்த நேரத்திலே இந்த மன்றத்திலே சொல்லிக் கொள்வது எல்லாம், 'லாப் டு லாண்டு' என்ற நிலைமை மாறி, 'லாப் டு லாண்டு' என்பது மட்டுமல்லாமல், அவர்களை 'லாண்டு டு மார்க்கெட்' என்ற நிலைமைக்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மாநிலத்திலே விவசாயத்தைப்பற்றி நான் பேசுவது எதற்கென்றால், விவசாயமும், மின் துறையும் இன்று பின்னிப் பிணைந்து கிடக்கிற நிலை. எனவேதான் 'லாப் டு லாண்டு' என்பது மட்டும் போதாது. 'லாப் டு மார்க்கெட்' என்ற நிலை வரவேண்டும். உற்பத்தி செய்யப்படுகிற விளை பொருள்கள் மார்க்கெட்டில் சரியான விலைக்கு விற்கப்படும் என்ற நிலை விவசாயிகளுக்கு வந்தாக வேண்டும் என்பதனால்தான், நான் இந்த நேரத்திலே இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். கரும்பை வெட்டி ஆலைக்கு அனுப்புகிற விவசாயிக்கு அதன் விலை அவர்கள் நிர்ணயிக்கிற வரை தெரியவில்லை என்ற நிலைமை இருக்கிறது. நான் சான்றாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்ற ஆண்டு மரவள்ளிக் கிழங்கு 85 கிலோ இருக்கிற ஒரு மூட்டை 70 ரூபாய்க்கு விற்றது. எனவே விவசாயிகள் அந்த மரவள்ளிக் கிழங்கு—அதற்கான சாகுபடிப் பணி அளவு குறைகின்ற காரணத்தினாலே—இந்த முறை அவர்கள் அதிக அளவிலே உற்பத்தி செய்கிறார்கள். ஆனால் மூட்டை ஒன்று அது 11 ரூபாய்க்கு விற்கிறது. இப்படிப்பட்ட நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பது தான் இன்றைய தேவையாகும்.

(முற்பகல் 10-40)

அடுத்து, தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், விவசாயத் தேவையும் மின்சாரத் தேவையும் ஒன்றோடொன்று இணைந்திருக்கின்றன. காரணம் நிலத்தடி நீரை நம்பியிருப்பதுதான். தற்போது விவசாயத் துறைக்கு காலை 6 முதல் 12, மற்றும் 12 முதல் 6, மற்றும் இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை என்று மின்சாரத்தை வழங்குவதற்கு அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது.



இதைப் பொறுத்தவரையில், நான் ஒன்றைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இப்படி மாற்றித் தருவதன் காரணமாக ஒரே நேரத்தில் மின் பயனீட்டாளர்கள் மின்சாரத்தைப் பயன்படுத்தி தண்ணீரை காணும் முயற்சியில் ஈடுபடுகிறார்கள். இதன் காரணமாக அந்தப் பகுதிகளில் மின் அழுத்தம் அதிகமாக ஏற்பட்டு, மின்சார மோட்டார்கள் பழுதுபடும் நிலை ஏற்பட்டு விடுகிறது. மேலும் அவுட் புட் (out put) எனப்படும் தண்ணீரை வெளியேற்றும் திறனும் ஒரே சமயத்தில் எல்லோரும் மோட்டார் பம்ப் செட்டுகளைப் பயன்படுத்துவதன் காரணமாக, வெகுவாகக் குறைந்து விடுகிறது. எனவே இதையெல்லாம் கருத்தில் கொண்டு மின்சாரத்துறை செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இவ்வாண்டு தமிழகத்தில் மேலும் 20,000 முதல் **50,000** புதிய மின் இணைப்புகள் இந்தத் துறையில் வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் செய்தி மிகவும் மகிழ்ச்சிகரமாக இருந்தபோதிலும்கூட, இவ்வாறு புதிதாக மேலும் 50,000 சர்வீஸ்கள் கொடுப்பதன் மூலமாக இனிமேல் குறைந்த அளவு மின்சாரமே தங்களுக்குக் கிடைக்குமோ என்ற அச்ச நிலையில் தமிழக விவசாயிகள் இருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, ஏற்கனவே ஒப்புக் கொள்ளப்பட்ட நேரத்தில் தங்கலற்ற மின்சாரம் வழங்குவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அத்துடன் உயர்ந்த அழுத்தம் அல்லது குறைந்த அழுத்தம் காரணமாக விவசாயிகளின் மோட்டார்கள் எந்த வகையிலும் பழுதுபடாத நிலையையும் உருவாக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். அது ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையிலேயே சொல்லப்பட்டு தற்போது நடைமுறையில் இருந்து வருகிற திட்டமாகும். அதுதான் விவசாயிகளுக்கு இலவச மின்சாரத் திட்டம். இந்த சாதனையை பார்க்கும்போது உலகத்தில் வேறு எங்கேயும் நடக்காத ஒரு சாதனையாக இது இருக்கிறது. நினைக்கும்போதே நெஞ்ச மெல்லாம் இனிக்கிறது. வானம் பொழியாதா, பூமி விளையாதா என்று ஏழை விவசாயி ஏங்கிக் கொண்டிருக்கிறான். விவசாயி சேற்றில் கால்

வைத்தால்தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும் என்ற நிலையை உணர்ந்திருந்த காரணத்தால், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தைக் கண்டு விவசாயிகள் எல்லோரும் மகிழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதையொட்டி இன்னொரு கருத்தையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இலவச மின்சாரம் வழங்கப்படுவதன் மூலமாக எவ்வளவு பேர் தமிழகம் முழுவதுமாகப் பயன் பெறுகிறார்கள் என்ற விவரத்தையும், இதன் காரணமாக மின் வாரியத்திற்கு எவ்வளவு இழப்பு ஏற்படுகிறது என்ற விவரத்தையும் இங்கே கொடுக்கவில்லை. அதையும் தெரிவிப்பது இந்த மாமன்றத்திற்கு உதவியாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே மற்றொரு திட்டத்தையும் அறிவித்திருக்கிறார்கள். அது குடிசைக்கு ஒரு இலவச ஒளி விளக்குத் திட்டம். 1984 ஆம் ஆண்டு வரை 6.2. லட்சம் குடிசைகளுக்கு இலவச மின்சாரம் அளிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்த வரையில், இது ஒரு மிகப் பெரிய சமுதாயச் சீர்திருத்தமாகும். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் குடிசையில் வாழ்கிற ஏழை மக்களைக் கருத்தில் கொண்டுதான் எப்போதும் பணியாற்றிக் கொண்டிருக்கிற மிகப் பெரிய மனிதர் என்பதற்கு ஒரு சான்று இது. முதலில் சத்துணவு தந்தார்கள். அப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசும்போது, கைகளில் தட்டுகளை ஏந்த வைத்து இந்தக் குழந்தைகளையெல்லாம் பிச்சை எடுக்க வைத்துவிடாதீர்கள் என்று பேசினார். ஆனால் அதற்குப் பிறகு தேர்தலைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டபோது எந்தச் சத்துணவுத் திட்டத்தைச் சொல்லி மாணவர்களைப் பிச்சை எடுக்க வைக்காதீர்கள் என்று சொன்னாரோ அதே திட்டத்தை நாங்கள் வந்தால் சீர்திருத்துவோம் என்று அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொள்கிற நிலைக்கு வந்தார்கள். எனவே முதலில் மாண்புமிகு புரட்சித் தலைவர் சத்துணவு அளித்ததைப் போல், அதற்குப் பின்னால் மக்களுக்கு உணவு மட்டும் அளித்தால் போதாது என்று உடுக்க உடையும் கொடுத்தார்கள். அதற்குப் பின்னாலே இருக்க இடமும் தந்தார்கள். இப்போது விவசாயிகளுக்கும் ஏழை குடிசைவாழ் மக்களுக்கும் இலவச மின்சாரம் வழங்கியிருக்கிறார்கள். தந்தை பெரியார் அவர்கள் ஒரு முறை ஒரு



கருத்தைச் சொன்னார்கள். அதாவது ஒரு சமுதாயத்தில் கல்வியால் தான் மாற்றத்தைச் செய்ய முடியும் என்றார்கள். அதைப்போலவே ஒரு முறை லெனின் பேசும்போது என்னிடம் மின்சாரத்தை மட்டும் தாருங்கள் 50 ஆண்டுகளில் நாட்டையே மாற்றிக் காட்டுகிறேன் என்றார்கள். இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் இன்றையதினம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு செயல்பட்டுக்கொண்டு வருகிறது.

தமிழ் நாட்டில் ஏறத்தாழ 21,136 ஆதி திராவிடர் குடியிருப்புகள் இருக்கின்றன. அவற்றில் 21,112 குடியிருப்புகளுக்கு அதாவது 99.9 சதவீதம் ஹரிஜனக் குடியிருப்புகளுக்கு தற்போது மின்சார இணைப்பு தரப்பட்டிருக்கிறது. இதை நினைக்கும்போதே, நெஞ்செல்லாம் இனிக்கிறது. காரணம் மிகப் பெரிய இந்த சாதனையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு சாதித்திருக்கிறது என்றால், அது மிகையாகாது. வாழ்க்கையின் கடைசி கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற ஏழை ஆதி திராவிட மக்கள் வாழ்க்கையில் மறுமலர்ச்சி காண வேண்டும். அவர்கள் பொருளாதாரத் துறையில் உயர்ந்து கல்வி பெற வேண்டும். அதன் மூலமாகத்தான் வாழ்க்கையில் ஒரு நிம்மதியான நிலையையும் பாதுகாப்பான வாழ்க்கையும் பெற முடியும் என்ற கருத்தையும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் 'குடிசைக்கு ஒரு விளக்கு' திட்டத்தை

(முற்பகல் 10-45)

அறிவித்திருக்கிறார்கள். அதன் மூலம் ஏழைகள் ஒளி விளக்கில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது கிராமங்களில் உள்ள ஒவ்வொரு குடிசைக்கும் ஒரு மின் விளக்கு தரப்பட்டிருக்கிறது. கிராமங்களுக்கு மட்டுமின்றி, பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தினால், அங்கே வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களும் பலன் பெறுவார்கள். ஆகவே அதை அருள்கூர்ந்து செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இப்போது குடிசைகளை அகற்றிவிட்டு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறார்கள். அப்படி வீடுகளைக் கட்டித் தருகிற நோக்கில் அவர்களுக்கு மின் விளக்கு அளிக்கக் கூடிய திட்டத்தைக் கொண்டுவந்தால் ஒரு நல்ல முன்னோடியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லாக் கல்வி நிலையங்களுக்கும் கட்டிடங்கள் கட்டித் தரப்படும் என்று நம்முடைய ஆளுநர் உரையில் சொல்லியிருப்பதைப் போலவே, எல்லாப் பள்ளிகளுக்கும் மின்சார இணைப்பு வழங்கப்படும் என்ற உறுதியைத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

'சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்' என்று சொல்லுவார்கள். முந்தைய அரசு உற்பத்தியில் அக்கறையின்றி விநியோகத்தில் வீரம் காட்டிய தன் விளைவாகத்தான் இன்றைக்கு இந்த நிலை. முற்போக்குத் திட்டங் களை தொலை நோக்கோடு நாம் தீட்டவில்லை என்று அவர்கள் சொல்லு கிறார்கள். அவர்களுக்கு ஒரு சிறிய சான்றைத் தருவது சிறப்பாக இருக்கும் என்று நம்புகிறேன். 1974-75 ஆம் ஆண்டு இருந்த மின் உற்பத்தியின் அளவு 5,340 மில்லியன் யூனிட்டுகள். ஆனால் 1985-ல் மின் உற்பத்தியின் அளவு 9,000 மில்லியன் யூனிட்டுகள். உற்பத்தி செய்து கொண்டிருக்கிறோம். அது மட்டுமல்லாமல் 1974-75-ல் விவசாயத்திற்கு வழங்கப்பட்ட மின்சாரத்தின் அளவு 1,847 மில்லியன் யூனிட்டுகள். ஆனால் இன்றைக்கு 2,500 மில்லியன் யூனிட்டுகள் வழங்கப்படுகின்றன.

தொழிற்சாலைகளுக்கு 1974-75-ல் வழங்கப்பட்ட மின்சாரத்தின் அளவு 2,402 மில்லியன் யூனிட்டுகளாகும். ஆனால் அது இன்று 4,500 மில்லியன் யூனிட்டுகளாக உயர்ந்திருக்கிறது. தமிழகத்தின் மின் உற்பத்தித் திட்டங் களின் நிறுத்திறன் 2,584 மெகாவாட்டாக முன்பு இருந்தது இப்போது 3,344 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது.

மின்சார வாரியம் நஷ்டத்திலே நடக்கிறது என்று சொல்லுகிறார்கள். மின்சார வாரியத்தில் நிர்வாகப்பணியில் சுணக்கம் இருப்பதாகச் சொல்லு கிறார்கள். மின்சார உற்பத்திச் செலவு யூனிட் ஒன்றுக்கு 80 காசுகள் ஆகிறது என்று இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் தெரு விளக்குகளுக்கு 37 காசுகள், குடிநீர்த் திட்டத்திற்கு 39 காசுகள், தொழிற்சாலைகளுக்கு 71 காசுகள் என்ற விகிதத்தில் மின்சாரத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே அரசுத் திட்டங்கள் எல்லாம் இலாப நோக்கோடு நடக்க வேண்டும் என்று சொல்லும் கருத்து சரியாக இருக்காது. ஏனென்றால் மத்திய அர சால் தரப்படுகிற போஸ்ட் கார்ட் அச்சடிக்க ஆகும் செலவு, அது போய்ச் சேருவதற்காகும் செலவு ஆகியவற்றைக் கணக்கிட்டால், அந்தக் கார்டுக்கு



ஒரு ரூபாய்க்கு மேல் ஆகிறது என்று கூறி, அந்தக் கார்டுக்கு ஒரு ரூபாய் என்று விலையேற்றினால், அதைத் தாங்க முடியுமா? ஆகவே மின்சார வாரியத்தில் நஷ்டம் வருகிறது என்றால், அந்த நஷ்டத்தை நிர்வாகத்தின் மூலமாகக் குறைக்கலாம். மேலும் மின்சாரக் கட்டணத்தை அதிகப்படுத்த மாட்டார் என்று நம்புகிறேன்.

நகராட்சிகளைப் பொறுத்த வரையில், பல்வேறு தெரு விளக்குகள் இருக் கின்றன. தெருவிளக்குகளைப் பொறுத்த வரையில், தனிப்பட்ட அபிப் பிராயம் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். பல்வேறு பேரூராட்சிகளிலும், கிராமங்களிலும் தெருவிளக்குகளுக்காக குண்டு பல்புகளைப் போட்டிருக் கிறார்கள். அதற்குப் பதிலாக நாலடி ட்யூப் லைட் போடுகிறோம் என்று உறுதி அளித்திருக்கிறார்கள். அதிலே பல்வேறு சந்தேகம் இருக்கிறது என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாலடி ட்யூப் லைட் போடுவதில் பல இடர்ப்பாடுகள் இருக்கின்றன. மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். டெண்டர்கள் மூலமாக பொருள்களைப் பெறும் நிலைமையை மாற்ற வேண்டும். டெண்டர்கள் மூலமாக என்றால், விலை குறைவானவற்றைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்து வரும், தரமான பொருள்களாக இருக்க வேண்டுமென்ற கருத்து வருவதற்கு இடமில்லை. ஆகவே ஐ.எஸ்.ஐ. முத்திரையிடப்பட்டுள்ள தரமான கம்பெனி களிடமிருந்து பல்புகளைப் பெற வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், பல்வேறு சமூக விரோதிகள் பல்புகளைத் திருடி விற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவற்றைத் தடுக்க பல்புகளின் ஓரத்தில் உள்ள ஹோல்டர்களில் (T.N.E.B.) என்ற இம்ப்ரெஷன்களைப் போட வேண்டும். அதுவும் பெயிண்டால் போட்டால் சுரண்டி விடுகிறார்கள். ஆகவே அழிக்க முடியாத அளவிற்கு இம்ப்ரெஷன்களைப் போடுவதன் மூலமாக இந்தத் திட்டத்தைச் சிறப்பாக நடத்த முடியும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, 1983 ஆம் ஆண்டுக்கு முன்பு ஒரு பத்து சதவீதம் முன் னுரிமைத் திட்டம் என்று வைத்திருந்தார்கள். அந்தத் திட்டத்தின் மூலமாக பொது வாழ்வில் ஈடுபட்டவர்கள், உடல் ஊனமுற்றவர்கள், விதவைகள், முன்னாள் இராணுவத்தினர் ஆகியவர்கள் சலுகையைப் பெற முடிந்தது. 1983-க்குப் பின்னர் இந்த முன்னுரிமைத் திட்டம் இல்லாமல் எடுக்கப்பட்டிருக்

கிறது. தயவு செய்து அந்தத் திட்டத்தை மீண்டும் கொண்டு வந்தால், அதன் மூலம் பல்வேறு சலுகைகளை அளிக்க முடியும் என்பதை இந்த நேரத்தில்

(முற்பகல் 10-50)

சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நிர்வாக ஊழியர்கள் பல சலுகைகளைப் பெற்றிருக்கின்றார்கள். தீபாவளிக்கு முன்பு அவர்கள் ஒவ்வொரு முறையும் போராட்டம் என்று அறிவிப்பார்கள். அவர்கள் போராடுவார்கள். ஆனால் இம்முறை 8.33 சதவிகிதம் போனஸ் என்று அறிவித்து ரூ. 225 கருணைத் தொகையாகத் தந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு சென்ற ஆண்டு ரூ. 150 போனஸ் தொகையாகத் தந்திருக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு எப்படியாவது ஒரு ரூ. 200 கருணைத் தொகையாகத் தருவார்கள் என்று எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் அதையும் மீறி இந்த முறை 225 ரூபாய் கருணைத் தொகையாகக் கொடுத்திருக்கிறார்கள். அதன் மூலம் அவர்கள் மகிழ்ச்சி அடைந்திருக்கின்றார்கள் என்பதை பல்வேறு நண்பர்களை நான் சந்தித்ததன் மூலமாகத் தெரிந்துகொண்டேன். இதை இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் போலவே மின் வாரியத் தொழிலாளர்களுக்கு ஊதிய விகிதத்தை மாற்ற இருப்பதாக பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த போனஸ் தொகையைப் போல் அரசு மிகச்சிறப்பாக உயர்த்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறையிலே ஆழ்ந்த அனுபவம் பெற்றவர்கள். நான் அவர்களுக்கு ஒரு அபிப்பிராயத்தைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அது என்னவென்று சொன்னால், இந்த லைன் மென், ஒயர்மென், ஹெல்ப்பர்ஸ் பல ஆண்டுக் காலமாக மின் வாரியத்தில் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு நிரந்தரமான இடமில்லை. அவர்களுக்கு ஒரு நிரந்தரமான இடம் எது என்று சொன்னால், அந்த அலுவலகத்திலே இருக்கின்ற தாழ்வாரங்கள், புளியமரங்கள். அங்கேதான் அவர்கள் அந்த அலுவலகத்திலே இருக்க முடியும். அவர்கள் வெளியிலே சென்று வேலை செய்பவர்கள் தானே, அவர்களுக்கு அலுவலகத்திலே எதற்கு இடம் என்று கேட்கக்கூடும். அவர்கள் அலுவலகத்திற்கு வந்து பிறகுதான் வெளியிலே வேலைக்குச் செல்ல வேண்டும். எனவே வருகின்ற நேரத்திலே அவர்களுக்கு மதிப்பு அளிக்கும் வகையிலே அலுவலகப் பகுதியிலே ஒரு சிறிய இடத்தை ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோலவே 52



யூனியன்கள் இந்த நிர்வாகத்திலே இருப்பதாக சொல்லக் கேட்கிறேன். இவ்வளவு யூனியன்கள் தேவைதானா என்பதை சிந்தித்துப்பார்க்க வேண்டும். ஏனென்று சொன்னால், அமைச்சர் அவர்கள் தொழிற் சங்கங்களிலே மிகுந்த அனுபவம் உள்ளவர்கள். எனவே இதை ஒரு நிலைப்படுத்தி சரியான தொழிற் சங்கங்களை உண்டாக்கி அவற்றினுடைய நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். அதுபோலவே, மற்ற ஒரு விஷயம் சொல்கிறேன். சென்னை நகரத்திலே பூக்கடைப் பகுதியிலேயும் தங்கம்பாக்கம் பகுதியிலேயும் இருக்கின்ற டிரான்ஸ்பார்மரிலே விபத்து ஏற்பட்டிருக்கிறது என்று செய்தியைப் பார்க்கிறோம். அமைச்சரே இருக்கின்ற, வாரியத் தலைவர் இருக்கின்ற இந்த நகரத்திலேயே இப்படிப்பட்ட தவறுகள் நடக்கின்றன என்று சொன்னால், கிராமப்புறங்களிலே அல்லது மற்ற நகரங்களிலே உள்ள மக்களுக்கு என்ன நிலை ஏற்படும் என்பதைக் கருத்தில் கொண்டு இந்தப் பராமரிப்புத் துறையிலே தாங்கள் உரிய கவனம் செலுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மின்வாரிய முடிவைப் பொறுத்தவரையில்; மிகச் சிறிய விஷயமாக இருந்தாலும்கூட, தலைவர் அவர்களே முடிவு எடுக்கின்ற நிலைமைகளை அவரே வைத்திருக்கின்றார்கள் என்று சொல்கின்றார்கள். அது உண்மையென்றால், நிர்வாகத்தினுடைய நலன்களைக் கருத்தில்கொண்டு சொல்கிறேன். அவர்களுக்குக் கீழ் பணியாற்றும் அதிகாரிகளிடம், தகுதியின் அடிப்படையிலே பகிர்ந்து அளிப்பதால், அவருடைய வேலைச் சுமை குறையும். அத்தோடு அவர்கள் உற்பத்தியிலேயும், வினியோகத்திலும் நிர்வாக சீரமைப்பிலும் கவனம் செலுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக, ஹோகேனக்கல் திட்டம்பற்றிச் சொல்கிறேன். அந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், இன்று காலையில்கூட வானொலியில் சொன்னார்கள். "அந்தத் திட்டம் விரைவு படுத்தப்படும். அந்தத் திட்டத்தின் மூலம் கர்நாடக அரசும் நம்முடைய அரசும் மின்சாரத்தைப் பகிர்ந்து எடுத்துக்கொள்வார்கள்" என்பதை நம்முடைய மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதாக டி.வி.-யிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதைக் கருத்திலே கொண்டு, அதை விரைவுபடுத்தி உடனடியாகச்

[திரு. அ. ப. சிவாராமன்] [1985 மார்ச் 19

செய்து நம்முடைய பாநிலத்தின் தேவைகளைப் பூர்த்திசெய்து மாநிலம் பூரணத்துவம் பெறுவதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், 1,500 மெகாவாட்டிலே புதிய மின்சார நிலையம் தொடங்க, தென் ஆற்காடு மாவட்டம் கடலூரில் ஏற்படுத்த அறிவிப்பு செய்திருப்பதாக நான் அறிகிறேன். அது பற்றி செயற்குறிப்பு எந்த நிலையில் இருக்கிறது என்று எனக்குத் தெரியாது. அதை விரைவுபடுத்தி தென் ஆற்காடு மாவட்டத்திலே ஒரு திட்டம் தொடர்வதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு தந்தமைக்கு நன்றி சொல்லி, அமைகிறேன். வணக்கம்.

**திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் காட்டிய பாதையைப் பின்பற்றுகிறேன். ஆங்கிலத்திலே பேசலாம் என்றுதான் வந்தேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் ஆங்கிலத்திலே பேசுவதாக இருந்தால் பேசலாம். நான் அதற்குத் தடை சொல்ல முடியாது.

**திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன் :** தலைவர் அவர்கள் உத்தரவைப் பார்த்து, நானும் அந்த உத்தரவுக்கு ஆளாகக்கூடாது என்ற சூழ்நிலையில் நான் தமிழிலேயே பேச முற்படுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் ஏதோ சொல்ல வருகிறார்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** முதலிலே தலைவர் அவர்கள் போய்விட்டு நான் அமரவேண்டியிருக்கும் என்ற கருத்தில் இருந்தேன். பேசப்போகிறார்கள் என்று தெரிந்து, தலைவர் அவர்களே அமர்ந்திருக்கின்றார்கள். உறுப்பினர் தமிழிலே பேசினால் சிறந்தது என்று நினைக்கிறேன்.

**திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன் :** தமிழில் பேசும்போது பிழையிருந்தால் பொறுத்துக்கொள்ளவும்.



1985 மார்ச் 19]

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தமிழவேள் திரு. பி. டி. ராஜன் அவர்கள் மகன் அல்லவா? தமிழிலே பேசும்போது என்ன தவறு இருக்கப் போகிறது?

**திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையையொட்டி என்னுடைய நீண்டநாள் நண்பர் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே வைத்த அறிக்கையையொட்டி சில கருத்துக்களைக் கூறலாம் என்று விழைகிறேன். இன்று ஓர் அறிக்கை வைத்திருக்கிறார்கள்.

(முற்பகல் 10-55)

சில மாதங்களுக்கு முன்னால் விவாதம் நடைபெற்ற காலத்தில் ஓர் அறிக்கை வைத்திருந்தார்கள். அந்த அறிக்கையின் துவக்கத்திலே மின் வாரியத்தைப் பற்றி கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு மகிழ்ச்சிகரமான செய்திகளை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தருவதாகச் சொல்லி, அமைச்சரவர்கள் அந்த அறிக்கையைத் துவங்கியிருக்கிறார்கள். நானும் பல முறை அந்த அறிக்கையைப் புரட்டிப் பார்த்தேன், என்ன மகிழ்ச்சி இருக்கிறதென்று பார்க்கலாமென்று. என்னுடைய கண்ணுக்கு எந்த மகிழ்ச்சியும் தெரியவில்லை. ஆனால் எனக்கு வேறு ஒரு விதத்திலே மகிழ்ச்சி. நீண்ட இடைவெளிக்குப் பிறகு மாண்புமிகு அமைச்சரவர்களை இந்த அவையிலே பார்க்கிறேன். நான் முன்பு பார்த்த காலத்தில் இளைய அமைச்சராகக் காட்சியளித்தார்கள். இன்றைக்கு மூத்த அமைச்சராகக் காட்சியளிக்கிறார்கள். அதற்காக மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் தமிழ்நாடு மின் வாரியத்தைப் பொறுத்தவரையில், மகிழ்ச்சிகரமான செய்தி வருமென்ற நம்பிக்கை நாட்டு மக்களுக்குக் கிடையாது என்பதை நாமெல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசாங்கத்தை ஒரு தாயாகக் கருதி, பல்வேறு இலாக்காக்களை அந்தத் தாயின் குழந்தைகளாகக் கருதினால், தமிழ்நாடு மின்சார வாரியம், மின் துறை நீண்ட நாட்களாக ஒரு நலிவுற்ற குழந்தையாகக் காட்சியளிப்பதை யாரும் மறுக்க முடியாது. இன்று, நேற்றல்ல; பல ஆண்டுகளாக இருக்கும் நிலை இது. ஒருவேளை 'கடந்த சில ஆண்டுகளாக' என்று என்னைப் போன்ற எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பேசிவிடுவார்களோ என்ற ஐயப்பாட்டின் காரணமாக நம்முடைய மாண்புமிகு துணைத் தலைவரவர்கள், இந்த அவையின் துணைத் தலைவராக இருந்தபோதும், தன்னுடைய கட்சிக்

[திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன்] [1985 மார்ச் 19

துச் செய்யும் உதவியாகக் கருதி, 1975-லே திரு. சாதிக் பாட்சா அவர்கள் மின் துறை அமைச்சராக இருந்தபோதே இந்த நிலை இருந்ததென்று சொன்னார்கள். அது முற்றிலும் உண்மை. தமிழகத்தைப் பொறுத்தவரையில், பல்வேறு துறைகளிலே நமக்குப் பெரும் புகழும் இருந்தாலும், இந்த மின் துறையைப் பொறுத்தவரையில், இந்தியாவிலேயே மிகப் பின் தங்கிய மாநிலம் தமிழகம் என்று பெயர் இருப்பதை யாரும் மறுக்க முடியாது. தொழில் வட்டாரங்களில் தமிழகத்தைப் பற்றிப் பேசும்போது, 'தமிழகம்' என்று சொல்லாமல், 'பவர்-கட் ஸ்டேட்' என்று வர்ணிப்பார்கள். எந்த ஆண்டும் 'பவர் கட்' இல்லாமல் இருந்ததில்லை. ஒருவேளை ஆண்டுகள் தவறிவிட்டாலும், 'பவர் கட்' தவறுவதில்லை. அப்படிப்பட்ட நிலை, தமிழகத்தைப் பொறுத்தவரையில், மின் துறையில் இருப்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் இதற்குக் காரணம் என்ன என்று ஆராய்ச்சி செய்து பார்த்தால், அரசாங்கமா, ஆட்சியா என்றால் இல்லை. இதற்குக் காரணம் இயற்கைச் சூழ்நிலைதான். பண்டைக் காலத்திலே நம்முடைய புலவர்கள் நம்முடைய பெருமையைப் பாடும்போது நீர் வளம், கனி வளம் பற்றிப் பாடினார்கள். அந்தத் தமிழகத்தின் எல்லை எப்படி இருந்தது என்று என்னைப் போன்றவர்களுக்குத் தெரியாது. மாண்புமிகு தலைவரவர்களைப் போன்றவர்களுக்குத் தெரிந்திருக்கும். இன்றைக்குத் தமிழ் நாட்டில் நீர் வளமும் இல்லை, கனி வளமும் இல்லை என்றுதான் வைத்துக்கொள்ள வேண்டும். நீர் வளத்தைப் பொறுத்தவரையில், நல்ல மனிதர்கள் ஒரு சிலர் நாட்டிலே இருப்பதால் பெய்யும் மழையைத் தவிர வேறு ஒன்றுமில்லை. நம்முடைய மாநிலத்திலே உற்பத்தியாகும் நதிகள் இல்லை. வேறு மாநிலத்தில் உற்பத்தியாகி, அவர்கள் தயவில் நமக்குக் கிடைப்பதுதான். கனி வளத்தைப் பொறுத்த வரையில், மாண்புமிகு அமைச்சரவர்கள் எடுத்துச் சொன்னதுபோல, நெய்வேலியைத் தவிர வேறு ஒன்றும் நம்மிடம் கிடையாது. வள்ளலார் பெருமான் நெய்வேலியை மனதிலே வைத்துக்கொண்டு, வடலூர் கடலூராகும் என்று சொல்லியிருந்தாலும், நெய்வேலியில் முதலீடு செய்து, அங்கே மின் உற்பத்தி செய்யும் சக்தி நம்முடைய அரசாங்கத்திற்கு இல்லாததால், பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே நெய்வேலி மத்திய அரசுக்குச் சொந்தமாகி விட்டது. அந்த வகையிலே தமிழ்நாட்டிலே மின் உற்பத்தி செய்வதற்கு வழி உண்டா என்றால், நிச்சயமாக, கண்ணுக்கு எட்டியவரையில் இல்லை என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த அறிக்கையிலே சுட்

தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1983-84 ஆம் ஆண்டுக்கான
நிதிநிலை அறிக்கை, 1982-83 ஆம் ஆண்டுக்கான துணை
நிதிநிலை அறிக்கை மற்றும் 1984-85 ஆம் ஆண்டுக்கான
நிதிநிலை அறிக்கை, 1983-84-ம் ஆண்டுக்கான
துணை நிதிநிலை அறிக்கைகள் ஆகியவற்றின்
மீது விவாதம் 

1985 மார்ச் 19] [திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன்]

(முற்பகல் 11-00)

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது தமிழகத்திலே இருக்கின்ற நிலைமைபற்றி தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே ஏறத்தாழ 13 ஆயிரம் மில்லியன் யூனிட் தேவைப்படுகிறது என்றும், 4 ஆயிரம் மில்லியன் யூனிட் நீர் மின்சாரம் மூலமும், 5 ஆயிரம் மில்லியன் யூனிட் மின்சாரம் அனல் மின்சாரம் மூலமும் ஈடு செய்யப்படுகிறது என்றும் எஞ்சிய 5 ஆயிரம் மில்லியன் யூனிட் மின்சாரம் மத்திய அரசின் தயவினால் தான் கிடைக்கிறது என்றும் தெளிவாக எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். மூன்றில் ஒரு பங்கு மின்சாரத்தை மத்திய அரசிடத்திலிருந்து நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். மின் தேவை அதிகமாக இருக்கிற காலம் இது. எதிர்காலத்தில் நம்முடைய மின் தேவை அதிகமாகும் அதே நேரத்தில் மத்திய அரசு நமக்கு அளிக்கும் பங்கு அதிகமாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது என்பதை மிகவும் தெளிவாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நீர் மூலம் மின் சக்தியை அதிகப்படுத்த இனி வாய்ப்பில்லை. ஏதோ சிறு சிறு திட்டங்கள் இருப்பதாகவும், அவைகளைக் கட்டாயம் செய்ய இருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அனல் மின் சக்தியைப் பொறுத்த வரையில், இப்போதிருக்கிற நிலக்கரிப் பற்றாக்குறை குறித்து உள்ள சோகக் கதையை அறிக்கையிலேயே நாம் காண முடிகிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், தங்கத்தை விட பெரிய மதிப்பு நிலக்கரிக்கு இருப்பதாகத் தெரிகிறது. பல்வேறு அனல் மின் நிலையங்கள் நிலக்கரிப் பற்றாக்குறை காரணமாக முழு உற்பத்தியைச் செய்ய முடியாத நிலை இருப்பதாக அறிக்கையில் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அவர்கள் எடுத்துக்கொண்ட பெரு முயற்சியின் காரணமாக நிலைமை ஓரளவுக்குச் சீரடைந்திருந்தாலும் கூட, எப்போதும் இல்லாத அளவுக்கு நிலக்கரிப் பற்றாக்குறை இருப்பதாக முடிவிலே சோகக் கதையைச் சொல்லியிருக்கிறார்கள். இறுதியாக மத்திய அரசின் அனுமதியைப் பெற்று ஆஸ்திரேலியாவிலிருந்து 1 லட்சம் டன் நிலக்கரியை இறக்குமதி செய்ய இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதோடு கூட இன்னும் 1 லட்சம் டன் நிலக்கரியை ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு அனுமதி கேட்டிருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே பார்த்தால், இந்திய நாட்டைப் பொறுத்தவரையில், அது நிலக்கரிப் பற்றாக்குறை உள்ள நாடல்ல. இந்தியாவிலே பல்வேறு நிலக்கரிச் சுரங்கங்கள் மத்திய அரசுக்குச் சொந்தமாக இருந்தும், ஒருசில மாநிலங்களிலே

விவசாயிகளுக்கு ஏராளமான சலுகைகள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கிறார்கள். சிறு விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணமே கிடையாது என்று சொல்லியிருக்கிறார்கள். மற்ற விவசாயிகளுக்கு ஒட்டுமொத்தமாக ஒரு குதிரை வேகம் மின்சக்திக்கு 75 ரூபாய் கட்டினால் போதும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் உண்மையான கணக்கை எடுத்துப் பார்த்தால், இந்த 75 ரூபாய்கூட அவர்கள் கட்ட வேண்டிய சூழ்நிலை இருக்காது. ஏனென்றால் பல மாதங்களுக்கு அவர்களுக்கு மின்சாரமே கிடைப்பதில்லை. எவ்வளவு உபயோகித்தாலும், 75 ரூபாய்தான் என்று பெருமையாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் என்னுடைய பார்வையில் எவ்வளவு உபயோகிக்காவிட்டாலும், 75 ரூபாய் கட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் கூட இந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். பல்வேறு மாவட்டங்களில் இந்த 75 ரூபாய் என்பது எந்தச் சலுகையையும் விவசாயிகளுக்குத் தரவில்லை. மாறாக அவர்கள் உபயோகித்த அளவைவிட அதிகமான அளவுக்குக் கட்டணம் கட்ட வேண்டியதாக இருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னார்கள். இதையும் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஒவ்வொரு ஆண்டும் ஏற்படுகின்ற மின்சார வெட்டு, அமைச்சர் அவர்களுக்கும், பொதுமக்களுக்கும் வருத்தத்தை ஏற்படுத்தினாலும், மின்சார வாரிய அதிகாரிகளைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு மகிழ்ச்சியையே கொடுக்கிறது. மின்சார வாரியத்திலே இருக்கிற அதிகாரிகள், மின்வெட்டு காலத்தை தங்கள் அறுவடைக் காலமாகக் கருதுகிறார்கள். தொழில் துறையில் இருப்பவர்களுக்கு எவ்வளவு மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று கணக்குப் போட்டு வாரியத்திற்கு அனுப்ப வேண்டிய சூழ்நிலையில் சில மின்சார வாரியப் பொறியாளர்கள் தங்கள் சொந்த இலாப நட்டக் கணக்கைச் சேர்த்து விடுகிறார்கள். நான் பொறுப்பற்ற முறையில் சொல்வதாகக் கருதிவிடக்கூடாது. எனக்கு நன்றாகத் தெரியும். மின்சார வாரியத் தலைவரை எடுத்துக்கொண்டால், அவரைப்போல நேர்மையான, ஒழுக்கமான, சுத்தமானவர் கிடையாது. அவரை குறை சொல்வதாகக் கருதிவிடக்கூடாது. ஆனால் அவருக்குக் கீழே பணியாற்றுகின்ற சில பொறியாளர்கள் இந்தத் தவறைச் செய்கிறார்கள். அதைக் கண்டிப்பாக மின் வாரியத் தலைவர்





அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒட்டுமொத்தமாக இந்த மின்வெட்டைப் பொறுத்தவரையில், திட்டவட்டமாக—செலவு அதிகமானாலும் பரவாயில்லை—விளம்பரம் செய்து தமிழ் நாட்டின் எந்த எந்தப் பகுதியில் மின்வெட்டு வரும், எந்த எந்தப் பகுதியில் மின் வெட்டு வராது என்று தெளிவாக மின் வாரியத் தலைவர் மூலம் அறிவித்துவிட வேண்டும். அந்த நேரங்களைத் தவிர மற்ற நேரங்களில் மின்வெட்டு ஏற்பட்டால், அதற்குக் காரணமாக இருக்கக்கூடிய அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மின் வாரியத் தலைவர் அவர்களை இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-15)

மின் கம்பத் தொடர் மூலமாக ஏற்படுகிற நட்டத்தைக்கூட அமைச்சர் அவர்கள் மகிழ்ச்சியுடன் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு முந்தைய ஆண்டு 21 விழுக்காடாக இருந்தது, இந்த ஆண்டு 18 விழுக்காடாக மாறியிருக்கிறதென்று சொன்னார்கள். ஆனால் முன்னேற்றம் அடைந்த நாடுகளிலே மற்ற அளவுக்குப் போனாலும் 4, 5 விழுக்காடுகளுக்கு மேல் போகக்கூடாது என்று நிபுணர்கள் சொல்கின்றார்கள். எந்தச் சூழ்நிலையிலும் 10 விழுக்காடுகளுக்கு மேல் போகக் கூடாது. அந்த வகையிலே 21, 18 ஆகக் குறைந்ததாலே மகிழ்ச்சி இருந்தாலும், அதை இன்னும் குறைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக மின்வாரியத் துறையைப் பொறுத்தவரையில், பொதுவாக மக்கள் மத்தியிலே அது திறமையாக நிர்வகிக்கப்படவில்லை என்ற கருத்து இருப்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஒருவேளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்த்தார்களோ இல்லையோ தெரியவில்லை. 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையிலே, மார்ச் 15 ஆம் தேதி "பவர் மேனேஜ்மென்ட் நாட் எபிஷியன்ட்" என்ற ஒரு பெரிய கட்டுரை அமைச்சர் பார்வையிலே ஒருவேளை படாமல் இருந்திருக்கலாம். [illegible] இது மதுரைப் பதிப்பு. சென்னைப் பதிப்பிலே வந்ததா, இல்லையா என்று எனக்குத் தெரியாது. அது ஒரு நீண்ட கட்டுரை. ஆனால் கட்டுரையிலே ஏதோ பெரிய குறைகளைச் சொல்வார்கள் என்று பார்த்தால், ஒன்றும் பெரிய குறை இல்லை. மிகச் சாதாரணக் குறையைத் தான் சொல்லியிருக்கிறார்கள். சாதாரணமாக ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, பிப்ரவரி மாதத்திலே 30 சதவிதம், 40 சதவிதம் என்று மின்வெட்டை

விவசாயிகளுக்கு ஏராளமான சலுகைகள் இருப்பதாக அமைச்சரவர்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கிறார்கள். சிறு விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணமே கிடையாது என்று சொல்லியிருக்கிறார்கள். மற்ற விவசாயிகளுக்கு ஒட்டுமொத்தமாக ஒரு குதிரை வேகம் மின்சக்திக்கு 75 ரூபாய் கட்டினால் போதும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் உண்மையான கணக்கை எடுத்துப் பார்த்தால், இந்த 75 ரூபாய்கூட அவர்கள் கட்டவேண்டிய சூழ்நிலை இருக்காது. ஏனென்றால் பல மாதங்களுக்கு அவர்களுக்கு மின்சாரமே கிடைப்பதில்லை. எவ்வளவு உபயோகித்தாலும், 75 ரூபாய்தான் என்று பெருமையாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் என்னுடைய பார்வையில் எவ்வளவு உபயோகிக்காவிட்டாலும், 75 ரூபாய் கட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் கூட இந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். பல்வேறு மாவட்டங்களில் இந்த 75 ரூபாய் என்பது எந்தச் சலுகையையும் விவசாயிகளுக்குத் தரவில்லை. மாறாக அவர்கள் உபயோகித்த அளவைவிட அதிகமான அளவுக்குக் கட்டணம் கட்ட வேண்டியதாக இருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னார்கள். இதையும் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஒவ்வொரு ஆண்டும் ஏற்படுகின்ற மின்சார வெட்டு, அமைச்சர் அவர்களுக்கும், பொதுமக்களுக்கும் வருத்தத்தை ஏற்படுத்தினாலும், மின்சார வாரிய அதிகாரிகளைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு மகிழ்ச்சியையே கொடுக்கிறது. மின்சார வாரியத்திலே இருக்கிற அதிகாரிகள், மின்வெட்டு காலத்தை தங்கள் அறுவடைக் காலமாகக் கருதுகிறார்கள். தொழில் துறையில் இருப்பவர்களுக்கு எவ்வளவு மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று கணக்குப் போட்டு வாரியத்திற்கு அனுப்ப வேண்டிய சூழ்நிலையில் சில மின்சார வாரியப் பொறியாளர்கள் தங்கள் சொந்த இலாப நட்டக் கணக்கைச் சேர்த்து விடுகிறார்கள். நான் பொறுப்பற்ற முறையில் சொல்வதாகக் கருதி விடக்கூடாது. எனக்கு நன்றாகத் தெரியும். மின்சார வாரியத் தலைவரை எடுத்துக்கொண்டால், அவரைப்போல நேர்மையான, ஒழுக்கமான, கைசுத்தமானவர் கிடையாது. அவரை குறை சொல்வதாகக் கருதிவிடக்கூடாது. ஆனால் அவருக்குக் கீழே பணியாற்றுகின்ற சில பொறியாளர்கள் இந்தத் தவறைச் செய்கிறார்கள். அதைக் கண்டிப்பாக மின் வாரியத் தலைவர்





அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒட்டுமொத்தமாக இந்த மின்வெட்டைப் பொறுத்தவரையில், திட்டவட்டமாக—செலவு அதிகமானாலும் பரவாயில்லை—விளம்பரம் செய்து தமிழ் நாட்டின் எந்த எந்தப் பகுதியில் மின் வெட்டு வரும், எந்த எந்தப் பகுதியில் மின் வெட்டு வராது என்று தெளிவாக மின் வாரியத் தலைவர் மூலம் அறிவித்துவிட வேண்டும். அந்த நேரங்களைத் தவிர மற்ற நேரங்களில் மின்வெட்டு ஏற்பட்டால், அதற்குக் காரணமாக இருக்கக்கூடிய அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மின் வாரியத் தலைவர் அவர்களை இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மூற்பகல் 11-15)

மின் கம்பி தொடர் மூலமாக ஏற்படுகிற நட்டத்தைக்கூட அமைச்சர் அவர்கள் மகிழ்ச்சியுடன் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு முந்தைய ஆண்டு 21 விழுக்காடாக இருந்தது, இந்த ஆண்டு 18 விழுக்காடாக மாறியிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் முன்னேற்றம் அடைந்த நாடுகளிலே [illegible] 4, 5 விழுக்காடுகளுக்கு மேல் போகக்கூடாது என்று நிபுணர்கள் சொல்கின்றார்கள். எந்தச் சூழ்நிலையிலும் 10 விழுக்காடுகளுக்கு மேல் போகக் கூடாது. அந்த வகையிலே 21, 18 ஆகக் குறைந்தது மகிழ்ச்சி இருந்தாலும், அதை இன்னும் குறைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக மின்சாரத் துறையைப் பொறுத்தவரையில், பொதுவாக மக்கள் மத்தியிலே அது திறமையாக நிர்வகிக்கப்படவில்லை என்ற கருத்து இருப்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அதேபோல மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்த்தாரோ இல்லையோ தெரியவில்லை. 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையிலே, மார்ச் 15 ஆம் தேதி "பவர் டெவலப்மென்ட் நாட் எபிசியண்ட்" என்ற ஒரு பெரிய கட்டுரை அமைச்சர் பார்வையிலே ஒருவேளை படாமல் இருந்திருக்கலாம். காரணம் இது மதுரைப் பதிப்பு. சென்னைப் பதிப்பிலே வந்ததா இல்லையா என்று எனக்குத் தெரியாது. அது ஒரு நீண்ட கட்டுரை. ஆனால் கட்டுரையிலே ஏதோ பெரிய குறைகளைச் சொல்வார்கள் என்று பார்த்தால், ஒன்றும் பெரிய குறை இல்லை. மிகச் சாதாரணக் குறைகளைத்தான் சொல்லியிருக்கிறார்கள். உதாரணமாக ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, பிப்ரவரி மாதத்திலே 30 சதவிகிதம், 40 சதவிகிதம் என்று மின்வெட்டை

உருவாக்காமல் செப்டம்பர் மாதத்திலிருந்து 15 சதவீதமாக—பற்றாக்குறை இல்லாவிட்டாலும் 15 சதவீதமாக—சமப்படுத்தலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். நீர் மின் நிலையங்களிலும், அனல் மின் நிலையங்களிலும் உள்ள உண்மை நிலை அன்றாடப் பத்திரிகைகளிலே வரவேண்டும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், டிரான்ஸ்மிஷன் லைன், இன்டர் ஸ்டேட் டிரான்ஸ்மிஷன் லைன், மற்ற மாநிலங்களுக்கும் போகின்ற இந்த டிரான்ஸ்மிஷன் லைன்கள் தமிழக மின்வாரியத்தின் சார்பிலே சீராக இன்னும் அமைக்கப்படவில்லை என்று ஒரு குறையைச் சொல்லியிருக்கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவர்களுடைய அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். இராமகுண்டத்திலே இருந்து நமக்கு வரவேண்டிய மின்சாரம் இன்னும் அந்த டிரான்ஸ்மிஷன் லைன் தயாராகாத சூழ்நிலையில் நாம் எதிர்பார்த்த அளவு வரவில்லை. ஆந்திர டிரான்ஸ்மிஷன் லைன் மூலமாக சீராக வரவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆகவே இது ஒரு பெரிய கட்டுரையாக இருந்தாலும், பெரிய குறைகளை நாம் பார்க்கவில்லை. ஆனால் ஒரு நல்ல கருத்தை அவர்கள் சொல்லியிருப்பதாகக் கருதுகின்றேன். பக்கிங்காம் கால்வாயை தூர் எடுத்து, மராமத்து செய்தால், ஆந்திர மாநிலம் தெண்டேரிலிருந்து தென்னார்க்காடு மாவட்டம் மரக்காணம் வரை அதை தண்ணீர் போக்குவரத்துக்குப் பயன்படுத்தலாம்; தோணிகளிலே நிலக்கரியைக் கொண்டு வருவதற்கு அது வாய்ப்பாக இருக்கும் என்ற கருத்தையும் அவர்கள் இந்தக் கட்டுரையிலே சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கட்டுரையிலே கூறப்பட்ட குறைகள் உண்மையா, இல்லையா என்பது எனக்குத் தெரியாது. இருப்பினும் இது மதுரை பதிப்பாக இருக்கின்ற காரணத்தால், உங்கள் அனுமதியோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்வைக்கு இதைக் கொடுக்கின்றேன்.

மின்வாரியத்தின் பற்றாக்குறையைப் பற்றிப் பேசினார்கள். இந்த ஆண்டு கூட 200 கோடி ரூபாய் பற்றாக்குறை என்று சொன்னார்கள். இந்தக் குறைக்கு எப்படிப் போடுகின்றார்கள் என்பது எனக்குத் தெரியாத காரணத்தினால், எனக்கு ஏற்பட்ட ஐயப்பாட்டைச் சொல்ல விரும்புகின்றேன். அரசாங்கத்தின் சார்பிலே பல்வேறு சலுகைகள் சமுதாயத்தில் நலிந்தவர்களுக்காக அளிக்கின்றார்கள். அப்படிப்பட்ட சலுகைகள் மூலமாக ஏற்படுகின்ற நட்டம் மின்வாரியத்தின் வரவுசெலவுத் திட்டத்திலே இடம் பெறுகிறதா, அல்லது



அரசாங்கப் பணத்திலே இருந்து கொடுக்கிறார்களா என்பது எனக்குத் தெரியாது. ஏனென்றால், மின்வாரியம் ஒரு அரசுத் துறை அல்ல, அது ஒரு ஆட்டானமஸ் கார்ப்பரேஷன். அரசு வெளிநாட்டிலே இருக்கின்ற நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் வாங்க வேண்டுமென்று சொன்னால், இந்த மின்வாரியத்தின் நிதிநிலை அறிக்கையைத் தான் முதன்முதலில் பார்ப்பார்கள். பல ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகத்துக்கு வந்த உலக வங்கியின் தலைவர் ராபர்ட் மக்னமாரா எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் கூட்டத்திலே ஆங்கிலத்திலே சொன்னார்கள்.

"You must make a clear distinction between business and charity. The World Bank will support business but will not patronise charity"

என்று தெளிவாகச் சொன்னார்கள். வியாபார நோக்கு இருக்க வேண்டும். அரசு நிறுவனங்களிலே தர்மத்தை வேறு கண்ணோட்டத்திலே பார்க்க வேண்டும். உலக வங்கி, அது ஒரு தொழில் திட்டமாக இருந்தால், நிச்சயமாகப் பண உதவி கொடுக்கும்; ஆனால் தர்மம் என்றால் உதவி செய்யாது என்று அந்த நோக்கிலே தெளிவாக அந்தக் கருத்தைச் சொன்னார்கள். ஆகவே இப்படி சலுகைகள் மூலமாக ஏற்படுகின்ற நட்டம் மின்வாரியத்தின் வரவு-செலவுத் திட்டத்திலே இடம் பெறக்கூடாது என்ற கருத்தை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(முற்பகல் 11-20)

மின்சார வாரிய ஊழியர்களைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அவர்களுக்கெல்லாம் போனஸ் கொடுத்ததைப்பற்றியும் மிகவும் மகிழ்ச்சியோடு தெரிவித்தார்கள். கருணைத் தொகை கொடுத்ததைக்கூட மிகவும் பெருமையோடு தெரிவித்தார்கள். நன்மைதான், நான்கூட அதைப் பாராட்டுகிறேன். ஆனால் அதையொட்டி ஒரு கருத்தையும் தெரிவிக்க விரும்புகிறேன். இப்போது மின் வாரியத்தில் ஏறத்தாழ ஒரு லட்சம் ஊழியர்கள் இருக்கிறார்கள். ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை அவர்கள் வாரியத்தோடு ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்கிறார்கள். அந்த ஒப்பந்தம் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 1 ஆம் தேதியோடு முடிந்துவிட்டது. அதாவது அந்த ஒப்பந்தம் முடிந்து இப்போது ஆறு மாதங்கள் ஆகிவிட்டன. எனவே விரைவில் அந்த ஒப்பந்தத்தை மீண்டும் புதுப்பிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன்] [1985 மார்ச் 19

அடுத்து, மின்வாரியத்தில் வேலைக்காக இப்போதும் சிலரை எடுப்பதாகச் சொல்கிறார்கள். இப்படி அரசாங்கம் அறிவித்த உடனே பல இடைத் தரகர்கள் நாட்டில் கிளம்பிவிடுகிறார்கள். இதைச் சொல்லும்போது, ஏதோ கட்சி மாச்சர்யத்தோடு ஆளும் கட்சியைக் குறை சொல்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருதக் கூடாது. யார் ஆட்சியில் இருந்தாலும், இந்த இடைத் தரகர்கள் ஆளும் கட்சியின் பெயரைச் சொல்லிக்கொண்டு பணம் வாங்குகிற வேலையில் ஈடுபடுகிறார்கள். இப்போது மின் வாரியத்தில் வேலை வாங்கிக் கொடுப்பதற்கு ரூ. 7,000 முதல் ரூ. 10,000 வரை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதாவது சந்தைகளில் மாடு பிடிப்பதைப்போல், இவர்கள் ஆட்களைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், மின் வாரியத் தலைவர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன்.

ஆகவே, ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது, தமிழகத்தில் மின் வாரியத்தைப் பொறுத்த வரையில், அது நீண்ட நாட்களாகவே நலிவுற்ற ஒரு குழந்தையாக இருந்து வந்திருக்கிறது. அது உடல் நலம் பெறுவதற்கு வாய்ப்பு கிடைப்பது அரிது. ஆனால் அப்படிப்பட்ட வாய்ப்பு ஒன்று கிடைத்திருக்கிறது. காரணம் எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் பல துறைகளைப் பார்த்தவர்கள். அதோடு மின் துறையிலேயே பணியாற்றியவர்கள். அந்த அடிப்படையில் மின் துறையின் குறைகளை நன்றாக உணர்ந்தவர்கள். அதைப் போலவே வாரியத் தலைவர் அவர்களும் திறமையானவர்கள் மட்டுமல்ல, நேர்மையானவர்கள், ஒழுக்கமானவர்கள் என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப் பட்டவர்கள் இருக்கிற காலத்தில்கூட இந்த மின்வாரியத்திற்கு ஒரு விமோசனம் ஏற்படாவிட்டால், இனி எந்தக் காலத்திலும் விமோசனம் ஏற்படாது என்ற கருத்தைச் சொல்லி, இந்த மின் வாரிய நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கான வாய்ப்பு அளித்த மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நல்ல தமிழில்தானே பேசுகிறார்கள். தமிழில் பேச முடியுமா என்று சந்தேகப்பட்டார்களே, இனி தமிழிலேயே பேசலாம்.



1985 மார்ச் 19]

**திரு. மு. செ. சங்கரலிங்கம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மின்வாரிய நிதிநிலை அறிக்கையின்மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். 1981-82, 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கைகள் அவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அந்தக் காலகட்டத்திலிருந்து மின் வெட்டு தொடர்ந்து ஆண்டுதோறும் நடைமுறையிலே இருந்து வருகிறது. இத்தகைய மின்வெட்டை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. அனல் மின் நிலையங்களுக்குப் போதுமான நிலக்கரி இல்லை, நிலக்கரி இருந்தாலும் அது இங்கே வந்து சேருவதற்குப் போதிய போக்குவரத்து வசதிகள் இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவை களிலும் அபிவிருத்தி ஏதுமில்லை என்பதைத்தான் இப்போதும் இருக்கிற மின்சார வெட்டு நமக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது.

வீட்டுப் பயனீட்டாளர்களுக்கு மின்வெட்டு இல்லை என்று ஒரு குறிப்பு இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நேற்றிரவு மின்சாரம் குறித்த பேப்பர்களைப் படிக்கும்போதே மின்வெட்டு வந்துவிட்டது. நடைமுறையில் நாடு முழுவதும் மின்வெட்டு என்ற பெயரைச் சொல்லாமல், மின்சாரம் இல்லாத நிலை இருந்து வருகிறது. இந்த நிலையைப் போக்குகிற வகையில் அடுத்த ஆண்டாவது மின் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் ஒரு திட்டத்தை வகுக்க ஒரு பிளானிங் கமிஷன் கண்டிப்பாக அமைக்கப்பட வேண்டும். அதோடு மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் இப்போது நல்ல முறையில் சுமுகமான உறவு இருக்கிற கால கட்டத்தில் திரும்பத் திரும்ப "எங்களுக்கு நிலக்கரி கிடைக்கவில்லை, மத்திய அரசு தேவையான ஒப்புதல் தரவில்லை" என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பது நியாயமாகாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இங்கே இருக்கிற அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி வற்புறுத்தி கண்டிப்பாக அனல் மின்சார உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் நிலக்கரியை அதிகமாகப் பெறவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நாட்டில் புனல் மின்சாரம் எப்போதும் நம்மை ஏமாற்றுவது இயற்கைதான். ஆனால் இயற்கையை நம்பி வாழ முடியாது என்ற

(முற்பகல் 11-25)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

அடிப்படையில் அணு மின்சாரத்தைக் கொண்டு வருவதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசோடு பேசி, நெல்லை மாவட்டத்தில் உள்ள கூடங்குளத்தில் அணு மின்சார நிலையம் வருவதற்கென்று பேச்சு வார்த்தை நடத்தியிருப்பதாக இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்தச் செயற்குறிப்பு எப்படி இருக்கிறது என்பது பற்றி விளக்கக் குறிப்பு இல்லை. அமைச்சர் அவர்கள் இதைத் தெளிவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டம் வருமானால், நிச்சயமாக நாம் அந்த அணு மின்சாரத்தை அதிகமாகப் பயன்படுத்த வாய்ப்பாக இருக்கும். அது மட்டுமல்லாமல், நிர்வாகச் சீர்திருத்தம் இல்லாமல் நஷ்டம் அதிகமாக வந்திருப்பதாக பத்திரிகையின் வாயிலாக அறிகிறேன். 201 கோடி ரூபாய் மின்சார வாரியத்திற்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் என்னவென்று விளக்கமாக அளிக்கப்படவில்லை. மேலும் மின் கட்டணம் வசூலிக்கப்படாத இடம் இருக்கிறதா, மின் கட்டணம் வசூலிக்கப்படாத தொழிற்சாலை இருக்கிறதா என்பதையும் தெரிவிக்க வேண்டும்.

மின் இழப்புபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மின் இழப்பு மட்டுமல்லாமல், மின் திருட்டும் ஆண்டுதோறும் அதிகமாகி, கடைசியாக 209 இலட்சம் ரூபாய் அளவுள்ள மின் திருட்டு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதிலே குறிப்பிட்ட அளவுதான் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா அல்லது முழு அளவும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதா என்று தெரியவில்லை. மின் திருட்டும், மின் இழப்பும் அதிகமாக உள்ளதால், அதை நிவர்த்தி செய்தால், ஓரளவிற்கு நஷ்டத்தைச் சமாளிக்க வாய்ப்புகள் இருக்கின்றன. மின் இழப்புக்குக் காரணமாக உள்ள டிரான்ஸ்ஃபார்மர்கள் புதுமையாக இல்லாமல் இருக்கின்றன. மேலும் அவற்றைப் பழுதுபார்க்க வேண்டிய நிலையங்களும் ஆங்காங்கே இல்லை. உதாரணமாக, திருநெல்வேலியில் பழுது பார்க்க வேண்டிய டிரான்ஸ்பார்மரை 200 மைல்களுக்கு அப்பால் கொண்டுபோக வேண்டியிருக்கிறது. அவற்றை அவ்வளவு தொலைவு எடுத்துச் செல்ல வாய்ப்புகள் குறைவாக இருப்பதால், பல வருடங்களாகப் பழுதுபார்க்கப்படாமல் இருக்கின்றன.

இவ்வளவு நஷ்டங்கள் இருக்கிற கால கட்டத்தில், நிர்வாகத்தில் உள்ள பணியாளர்களை மாற்றம் செய்திருப்பதால் வேறு நஷ்டம் ஏற்படுத்தப் பட்டிருப்பதாக செய்தி இருக்கிறது. ஏன் இவ்வளவு நஷ்டம் இருக்கும்போது,



விருப்பம் இல்லாமல் உள்ள ஆயிரக்கணக்கான பணியாளர்களை மாற்றம் செய்திருக்கிறார்கள் என்பதை அரசுத் தரப்பில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், 1—12—1984 முதல் மின்சார வாரியப் பணியாளர்களின் ஊதிய விகிதங்கள் மாற்றியமைக்கப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த வாக்குறுதியின்படி, 1—12—1984-க்குப் பிறகு ஊதிய விகிதத்தைத் திருத்த பேச்சுவார்த்தை நடக்கவில்லை என்று போராட்டம் நடந்தது. ஆகவே அது குறித்து அரசு என்ன நிலை எடுக்கிறது என்பதையும் இங்கே கூற வேண்டுகிறேன்.

சிறிய நீர் மின் திட்டங்களை அமைப்பதற்காக மத்திய அரசின் ஒப்புதலுக்காக இங்கேயிருந்து அனுப்பப்பட்ட திட்டங்கள் எந்த நிலையில் உள்ளன? முன்பிருந்த சட்டப்படி, ஒரு கோடி ரூபாய் அளவிற்குள்ள திட்டங்களைத்தான் மாநில அரசு தானே எடுத்துக்கொள்ளலாம் என்ற நிலை இருந்தது. அதைத் திருத்துகிற வகையில் நாம் இங்கே ஒரு மசோதாவைக் கொண்டு வரலாம். மாநில அரசே மின் நிலையத் திட்டத்தைக் கொண்டு வந்தால், செலவு ரூபாய் ஒரு கோடியாக இல்லாமல்; குறைந்தது 25 கோடி ரூபாய் என்று இருக்கலாம். ஆகவே 25 கோடி ரூபாய் அளவுள்ள திட்டத்தை மாநில அரசே செய்யக்கூடிய அளவிற்கு மசோதா கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, அமர்கிறேன்.

திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நமது மின்சாரத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின்மீது ஆசிரியர்-பட்டதாரி முற்போக்கு முன்னணியின் சார்பிலே சில கருத்துக்களைக் கூற விழைகிறேன். எந்த ஒரு மாநிலத்தினுடைய முன்னேற்றமும், தொழில் வளர்ச்சியும், பொருளாதாரமும், தொழில் நுட்ப வளர்ச்சியும் மின்சாரத்தைப் பொறுத்துத்தான் இருக்கிறது என்பதை நாம் யாவரும் நன்கு அறிவோம். ஒருவேளை பக்ராநங்கல் போல் நமக்கு ஒரு நீர்வளம் உள்ள அணை இல்லாத காரணத்தால், பஞ்சாபைப் போல், அரியானாவைப் போல், இராஜஸ்தானைப் போல் நாம் இருக்க முடியவில்லை. ஆனால் நம்முடைய மாநிலத்திலே உள்ள மின்சார வாரியமானது கொள்கையில் மிகச் சிறப்பாக இருப்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். இதற்காக இந்த அரசையும், மாண்புமிகு மின்சாரத் துறை

(முற்பகல் 11-30)

அமைச்சர் அவர்களையும் வெகுவாக நான் பாராட்டுகிறேன். நூற்றுக்கு நூறு விழுக்காடு கொடுக்கக்கூடிய அளவிலே, 99 விழுக்காடு வழங்கல் கொள்கையானது சிறப்பாக இருந்தது. ஒருவேளை இப்போது உற்பத்திக்கும் இணைப்புக்கும் பொருத்தமில்லாத காரணத்தினாலேயே, மின்வெட்டு ஏற்பட்டிருக்கின்றது என்ற கருத்து நிலவினாலும்கூட, சமூக நலனை உற்று நோக்கி கவனிக்கும்போது, நம்முடைய மாநிலத்தினுடைய கொள்கையானது ஏழையெளிய மக்களுக்கு, வருமானம் அதிகமாக இல்லாதவர்களுக்கு ஊக்கமளிக்கக்கூடிய, ஆதரிக்கக்கூடிய நிலையிலே இருப்பதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். பல சலுகைகள் அண்மையிலே வழங்கப்பட்டன. குறிப்பாக நீர் ஏற்று இயந்திரங்களை வைத்திருக்கக்கூடிய விவசாயிகளுக்குச் சலுகை வழங்கப்பட்டது. இரண்டரை ஏக்கர் நஞ்சைக்குக் குறைவாக உள்ளவர்கள் இந்த மின் கட்டணத்தைக் கட்டத் தேவையில்லை என்று வந்தது. அந்த அடிப்படையிலே மின் வாரியத்தைச் சேர்ந்த பணியாளர்கள் பல இடங்களுக்குச் சென்று நீர் ஏற்ற இயந்திரங்களின் மீட்டர்களை அகற்றியிருக்கின்றார்கள். ஒரு அறிவிப்புகூட கொடுத்திருக்கின்றார்கள். விவசாயிகள் பணம் கட்டத் தேவையில்லை என்று சொல்லியிருக்கின்றார்கள். அதன் பிறகு மூன்று, நான்கு மாதங்கள் கழித்து சமீபத்திலே அந்த விவசாயிகளை அணுகி மாதந்தோறும் இவ்வளவு கட்ட வேண்டும் என்று வற்புறுத்துகின்ற நிலை இருக்கின்றது. அவர்களை இதைப்பற்றிக் கேட்டபோது, அவர்கள் "எங்களுக்கு மேலேயுள்ள அதிகாரிகள் சொல்கின்றார்கள். இப்போது கட்டணம் வசூல் செய்யச் சொல்கின்றார்கள். உங்களுக்கு விதிவிலக்கு வேண்டுமென்றால், தாசில்தார் அவர்களிடம் 2½ ஏக்கருக்குள்ளாக நஞ்சை நிலம் இருப்பதாக ஒரு சான்றிதழ் பெற்றுத் தாருங்கள்" என்று சொல்கின்றார்கள். நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். நம்முடைய அரசின் வருவாய்த் துறையில், ரெவின்யு டிப்பார்ட்மென்டில் தஸ்தாவேஜி இருக்கிறதே, அங்கே நம்முடைய வி.எ.ஓ. இருக்கிறார்களே அவர்களிடம் ஒரு சான்றைப் பெற்று 2½ ஏக்கர் நஞ்சைக்குக் குறைவாக நிலம் உள்ளவர்களுக்கு விதிவிலக்கு நாமே வழங்கிவிட வேண்டியதுதானே. அதை விட்டுவிட்டு அவர்களே போய் வாங்க வேண்டும் என்று சொன்னால், அதிலே இடையிலே உள்ள தொல்லைகளை நான் எடுத்துச் சொல்லவேண்டியதில்லை. காரணங்களை நன்கு அனைவரும் அறிவோம் என்ற காரணத்தினாலே நான் அதை இங்கே சொல்ல விரும்ப



வில்லை. அந்த நிலையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது ஒரு நல்ல முடிவை எடுத்து அந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ரூபாய் 75 ஒரு குதிரைத் திறனுக்குக் கட்ட வேண்டுமென்பதைப்பற்றிக் கூட இப்போது சில கருத்துக்கள் சொல்லப்பட்டன. அந்த முறையிலே விவசாயிகளுக்கு இழப்பு இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளைப் பொறுத்தவரையில், மூன்று தவணையாக மின்சாரம் வழங்குகிறோம். பகலிலே 6 மணி நேரம் என்றும் இரவிலே 8 மணி நேரம் என்றும் வழங்குகின்றார்கள் என்று சொல்கின்றார்கள். நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இரவு நேரங்களிலே எப்படி தொழிலாளர்கள் வர முடியும்? எப்படி விவசாயிகள் அவர்களுடைய விவசாயப் பணியை மேற்கொள்ள முடியும்? ஆகவே விவசாயப் பெருமக்களைப் பொறுத்தவரையில், பகலில் மின்சாரம் வழங்கக் கூடிய முறையைத்தான் அமல்படுத்தவேண்டுமே தவிர, இரவு நேரம் என்பதைத் தவிர்க்க வேண்டுமென்ற கருத்தை உங்கள் முன்பாக வைக்க விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்தில் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து சுற்றிக்கொண்டே வருகிறது. இந்த மின்சாரப் பற்றாக்குறை, மின்வெட்டு இவைகளுக்கு எல்லாம் பொதுவாகச் சொல்லப்படும் காரணங்கள் என்னவென்றால், நம்முடைய நீர் மின் நிலையங்களிலே தண்ணீர் இல்லை. மின்சாரம் போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை என்கிறோம். அனல் மின் நிலையம் என்று எடுத்துக்கொண்டால், நிலக்கரி இல்லை, நிலக்கரி கொண்டுவரக் கப்பல் இல்லை. மத்திய அரசு கப்பல் வாங்க அனுமதி அளிக்க வேண்டும் என்று சொல்கிறோம். அண்மையிலேகூட ஜப்பான் நாட்டிலிருந்து ஆறு கப்பல்கள் வாங்குவதற்கு அனுமதி கேட்டோம். கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். அல்லது நம்முடைய இயந்திரங்கள் பழுதடைந்திருக்கின்றன என்கிறார்கள். அல்லது பெல் நிறுவனம் கொடுத்த இயந்திரம் சரியாக வேலை செய்யவில்லை. மற்ற நாட்டிலிருந்து வல்லுநர்கள் வரவழைக்கப்பட்டிருக்கின்றார்கள். நம்முடைய வல்லுநர்கள் சேர்ந்து செயல்படுகின்றார்கள் என்றும் சீர்திருத்த முயலுகிறோம் என்றும் ஏதாவது ஒரு காரணத்தைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கின்றார்கள். எரி எண்ணெய் போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை. எரி எண்ணெய் குறைந்த நிலையிலே, சுரங்க [illegible] நடக்கக் கிடைக்கவில்லை. இதைப்போன்று காரணங்களாகச்

சொன்னாலும் கூட, அணு மின் நிலையத்திற்குப் போகும்போது, அதில் 10 ஆண்டுக்காலம் கடந்து மின்சாரம் உற்பத்தி ஆகிறது. அது மத்திய அரசினுடைய நிறுவனம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதில் நாம் ஒன்றும் செய்ய முடியாது. இது மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது. ஆனால் ஒரு நல்ல மகிழ்ச்சியான செய்தி என்னவென்றால், இதில் முதல் பிரிவிலே வரும் மின்சாரத்தை முழுமையாக தமிழகத்திற்குக் கொடுக்கின்றார்கள். இரண்டாவது பிரிவிலே 50 சதவிகிதம் கொடுக்கிறார்கள் என்று சொன்னாலும், அங்கே உற்பத்தியாகின்ற மின்சாரம் எவ்வளவு என்று சொன்னால், 100 மெகாவாட்தான் என்று சொல்கின்றார்கள். என்னுடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 7-ம் தேதியிலிருந்து 100 மெகாவாட்தான் என்று சொன்னார்கள். 235 மெகாவாட் உற்பத்தி எங்கே இருக்கின்றது? 100 மெகாவாட் உற்பத்தி எங்கே இருக்கின்றது? இந்த நிலையிலே அது செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. மேலும் நம்முடைய மாநிலத்திலே மின்வெட்டைப்பற்றிப் பலரும் பல கருத்துக்களைச் சொன்னார்கள். அதிகமாக உயர் மின் அழுத்தம் உள்ள தொழிற்சாலைகளுக்கு, 50 விழுக்காடு, 40 விழுக்காடு என்று சொல்கின்றார்கள். வீடுகளுக்கும், வணிகத் துறைகளுக்கும், மருத்துவ மனைகளுக்கும் மின் வெட்டே இல்லை என்றும் சொன்னார்கள். அதைப் பற்றிக்கூட,

(மு.ப. 11-35)

மதுரையிலேயிருந்து வந்துள்ள மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சற்று நேரத்திற்கு முன்பு சொன்னார்கள். பொதுவாக எல்லோருக்கும் மின்வெட்டு இருக்கிறது. முன்னாலே தயாரித்த அறிக்கையாக நிதிநிலை அறிக்கை இருப்பதால், ஒருவேளை அப்படி இருக்கலாம். நிச்சயமாக மின் வெட்டு அமுல் படுத்தப்படுகிறது. சாதாரணமாக ப்யூஸ் போய்விட்டதென்றால், அதைச் சரி செய்ய 6 மணி நேரம், 8 மணி நேரம், 1 நாள் கூட ஆகிவிடுகிறது. இப்படிப்பட்ட தொல்லைகளை எல்லாம் அனுபவித்து வருகிறோம். இவற்றை அவையின் முன் வைக்க விரும்புகிறேன். சாதாரணமாக மின்சாரம் கிடைக்கும் சமயங்களில் கூட ப்யூஸ் போய்விட்டால், அதைப் பழுது பார்க்க காலதாமதமாகிறது.

அடுத்து, சிறு தொழிற்சாலைகளுக்கு மின் வெட்டு இல்லை என்று சொல்லுகிறார்கள். இதில் கவனம் செலுத்த வேண்டும். சிறு தொழிலதிபர்கள் ஜெனரேட்டர்கள் வாங்க முடியாது. அவர்களைக் கட்டாயம் பாதுகாக்க



வேண்டும். சிறு தொழில்கள் நசித்துவிட்டால், அதனால் தொழில்கள் மாநிலத்தில் [illegible]யாகப் பாதிக்கப்படும். சிறு தொழிலதிபர்கள் ஜெனரேட்டர்கள் வைத்துக்கொள்ள முடியாது. அதை மனதிலே வைத்து, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மின் உற்பத்தியைப் பொறுத்தவரையில், 1,500 மெகாவாட் நீர் மின்சாரமும், 1,500 மெகாவாட் அனல் மின்சாரமும் உற்பத்தியாவதும், அண்டை மாநிலத்திலிருந்து 150 மெகாவாட் வருகிறதென்று சொல்லப்படுகிறது. மாநிலத்தின் தேவை அதிகமாக இருக்கும்போது, நம்முடைய உற்பத்தி தன்னிறைவு பெற வேண்டுமானால் கோடைக் காலத்தில், நீர் இல்லாத காலங்களில் நாம் நிச்சயமாக நீர் மின் நிலையங்களைச் சார்ந்திருக்க முடியாது. மழைக் காலங்களில் ஏராளமாக [illegible] தேக்கங்களில் தண்ணீர் இருக்கும்போது, தேவையான அளவுக்கு அங்கே மின்சாரத்தை உற்பத்தி செய்கிறோமா என்றால் இல்லை. உற்பத்தி செய்ய வசதியிருந்தும், அவைகளைப் பயன்படுத்துகிறோமா என்ற கேள்வி எழுகிறது. நீர் மின் நிலையங்களை உருவாக்கும் சாத்தியக்கூறு உள்ள இடங்களில் எல்லாம் நீர் மின் நிலையங்களை உருவாக்கி, மழைக் காலத்தில் மின்சாரத்தை அங்கே உற்பத்தி செய்தால், அனல் மின் நிலையங்களில் உற்பத்தியை அந்தக் காலத்தில் நிறுத்தி வைத்து, அங்கேயுள்ள இயந்திரங்களைச் சரி செய்யலாம் அல்லவா? நமக்குப் பற்றாக்குறை என்று வரும்போது, அனல் மின் நிலையங்களும் சேர்ந்து மோசடி செய்வதுபோல் இருக்கிறதே! இதற்கு மாற்று ஏற்பாடு செய்ய வேண்டாமா? சில மாதங்களுக்கு முன்னால் பத்திரிகையில் ஒரு செய்தியைப் பார்த்தேன் . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அனல் மின் நிலையங்கள் மோசம் செய்கின்றன, மோசடி செய்யவில்லை.

**திரு. பா. ரா. தாமஸ் :** இன்னமும் வைத்துக்கொள்ளலாம், துணைத் தலைவர் அவர்களே, எதிர்பார்த்த அளவுக்குத் தேவையான மின்சாரத்தைக் கொடுக்காமல் இருக்கும் நிலை ஏற்படுகின்றதால், பெருமளவுக்கு மாநிலத்தின் முன்னேற்றம் பாதிக்கப்படுகிறது. [illegible] கொண்டாடுவோம் [illegible] வைகை, வைக்காரா நீர் மின் திட்டங்களைச் செயலாக்கப் போகிறோமென்று சொன்னோமே. அது 1984-ல் முடியுமென்று சொன்னோமே, முடிந்துவிட்டதா? அதனுடைய நிலை என்ன என்று அறிய விரும்புகிறேன். மேல் தாமிரபரணி நீர் மின் நிலையம் தொடங்குவதாகச் சொன்னோமே. அங்கே உற்பத்தி

தொடங்கிவிட்டதா? மேற்கிலே போகும் ஆறுகளைக் கிழக்கிலே திருப்பப் போகிறோமென்றும், அங்கே 80 விழுக்காடு மழை நீர் வீணாகக் கடலிலே விழுகிறது, அதைக் கொண்டு வந்து மின்சாரம் உற்பத்தி செய்யவும், விவசாயத்திற்கும் பயன்படுத்தப் போகிறோம் என்று சொன்னோமே, அதன் நிலை என்ன? அது குறித்து மத்திய அரசை அணுகினோமா? பேச்சு வார்த்தை நடத்தியதால் ஏற்பட்ட முன்னேற்றம் என்ன? இவற்றையெல்லாம் அறிய விரும்புகிறேன்.

திட்டங்கள் நம்மிடம் ஏராளமாக இருந்தாலும், அவற்றை அமுல்படுத்தாததால், ஆண்டுக்காண்டு இந்தத் தொல்லைக்கு நாம் ஆளாகிறோமென்ற கருத்தை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். கருநாடக மாநிலமும், நாமும் ஜாயின்டாக காவிரி நதியில் ஒரு பிராஜக்ட் ஆரம்பித்து, மின்சார உற்பத்தி செய்வதாக இருந்தது. அதனுடைய நிலை என்ன? அதிலே ஏதாவது முன்னேற்றம் கண்டிருக்கிறோமா? பழைய நிலையில்தான் அந்தத் திட்டம் இருக்கிறதா?

திருநெல்வேலி மாவட்டம், கூடன்குளத்தில் அணு மின் நிலையம் ஒன்றினை மத்திய அரசு அனுமதியோடு ஆரம்பிக்க இருப்பதாகச் சொன்னோமே, அதற்கு மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்றோமா? வேறு வழியே இல்லை என்று சொல்கிறோமே, அதுபற்றி என்ன செய்கிறோம் என்று கேட்க விரும்புகிறேன். இவ்வாறு நீர் மின் நிலையங்களை அதிக

(முற்பகல் 11-40)

அளவில் ஏற்படுத்த வேண்டும். நீர் மின் நிலையங்களின் மூலம் [illegible] கிடைக்க வாய்ப்புள்ள முழு சக்தியையும் பயன்படுத்தினால், அதிகமாக நீர் மின் நிலையங்களின் மூலம் மின்சாரம் கிடைக்கும் காலங்களில் அனல் மின் நிலையங்களில் ஏற்படுகின்ற பாதிப்புகளைப் போக்க முடியும். பராமரிக்க வாய்ப்பு ஏற்படும். அப்படிச் செய்யும் காலகட்டத்தில் 4 ஆயிரம் அல்ல, 5 ஆயிரம் மில்லியன் யூனிட்டுக்கு மேல் நாம் மின் சக்தி பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அண்மையில் பேசும்போது, பல்வேறு முறைகளில் மின்சாரம் உற்பத்தி செய்வதுபற்றி ஆராயப்படுவதாகச் சொன்னார்கள். கடல் நீரிலிருந்து மின்சாரம் பெற ஆய்வு செய்யப்படுவதாகவும் சொன்னார்கள். அதோடு காற்றின் அழுத்தத்திலிருந்து மின்சாரம் உற்பத்தி



செய்யப்படுவதாகவும் சொன்னார்கள். அப்படிச் செய்பவர்களுக்குச் சில சலுகைகளைக் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். சோலார் எனர்ஜி யூனிட்டை சிலர் வீடுகளில் வைத்திருக்கிறார்கள். இவர்களுக்கு அரசு சலுகை அளிக்கிறது. மூன்று ஆயிரம் ரூபாய் செலவு செய்து சோலார் எனர்ஜி யூனிட் வைத்து விட்டால், கொதி நீர் போன்றவற்றை நாம் தயாரிக்கலாம். இப்படி மின்சாரம் உற்பத்தி செய்பவர்களுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். பெலும் கியாஸ் கொண்டு 50 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதாகச் சொன்னார்கள். இந்த ஆண்டு அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து விடுவார்களா என்று அறிய விரும்புகிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஆயிரம் கிலோமீட்டருக்கு மேல் நமக்குக் கடற்கரை இருக்கிறது. பிரான்ஸ் நாட்டில் கடல் அலையிலிருந்து மின்சாரம் எடுக்கப்படுகிறது. இதுபற்றியெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்ல வேண்டும் என்பதல்ல என் கருத்து. என்றாலும் எந்த அளவுக்கு இந்த முறைகளையெல்லாம் பின்பற்றி தன்னிறைவு அடைய முடியும், போர்க் கால அடிப்படையில் எதை எதையெல்லாம் செய்து முழு அளவில் மின்சார உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்பதுபற்றி ஆராய வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஒரு கருத்து பரவலாகச் சொல்லப்படுகிறது. மின்சார வாரியம் சிறப்பாகப் பணியாற்றினால் கூட, நம்முடைய துறையினர் அவர்களோடு ஒத்துழைக்கவில்லை என்று சொல்கிறார்கள். அவர்கள் முழுமையாக ஒத்துழைக்காத காரணத்தால் தான், முன்னேற்றமான திட்டங்களைச் சரியாக அமுல்படுத்த முடியவில்லை என்று சொல்கிறார்கள். இதுபற்றியெல்லாம் மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் என்ன சீர்திருத்தம் செய்ய இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன் என்று சொல்லி வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** துணைத் தலைவர் அவர்களே, தமிழக மின் வாரியம் செயல்படும் முறைகளைக் குறித்து இன்றைய விவாதத்திலே பல மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்துகொண்டு தங்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். பொதுவாகவே மின்சாரத்தைப் பொறுத்தவரையில், தமிழகத்தைப் பொறுத்தவரையில், உற்பத்தியை விட தேவை மிகவும் அதிகமாக இருக்கிறது. [illegible] மின் தேவை அதிகமாகவும்

உற்பத்தி குறைவாகவும் இருந்து வருகிறது. அப்படிப்பட்ட ஒரு புள்ளி விவரத்தை நான் பார்த்தேன். இன்னும் 15 ஆண்டுகளில் நம்முடைய மின் தேவை இப்போது உற்பத்தியாவதைப்போல் 4 மடங்காக இருக்கும் என்கிற விவரத்தை நான் பத்திரிகையில் படித்தேன். அப்படியானால், அந்த அளவுக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. மின்சாரப் பற்றாக்குறை ஒருபுறமிருக்க, 200 கோடி ரூபாய் நஷ்டத்திலே மின் வாரியம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்று வேறு சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால், இன்னும் 4 மடங்கு நாம் மின்சாரத்தை உற்பத்தி செய்தால் கூட, 4 மடங்கு நஷ்டம் வரும் ஆபத்து இருக்கிறது என்று மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் இங்கே சொன்ன கருத்தை நானும் பிரதிபலிக்கிறேன். மின் வாரியத்திலே நஷ்டம் வராமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்றால் நீண்ட காலக் கண்ணோட்டத்தோடு திட்டங்களை மனதிலே கொள்ள வேண்டும். அதனால் தான் பஸ் கட்டணத்தையும், மின்சாரக் கட்டணத்தையும் உயர்த்த வேண்டுமென்று திட்டக் கமிஷனும், மத்திய அரசும் சொல்கின்றன. அப்படி அவர்கள் சொல்வது மாநில அரசுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் எண்ணத்தில் சொல்வதல்ல, வியாபார நோக்கில் அது லாபகரமானதாக இருக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் தான் அவர்கள் அப்படித் தெரிவிக்கிறார்கள். இப்பொழுது நாம் குறைவான அளவில் தான் மின்சாரத்தைப் பயன்படுத்துகிறோம். நாம் எவ்வளவு மின்சாரம் பயன்படுத்துகிறோம் என்பதை வெளிநாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்துத் தான் சொல்ல முடியும். குறிப்பாக வளர்ச்சியடைந்த ஒரு வெளிநாட்டில் அவர்கள் எவ்வளவு மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்கள், ஒரு நபர் சராசரி எவ்வளவு பயன்படுத்துகிறார், பெர் கேப்பிட்டா கன்சம்ஷன் எவ்வளவு என்று பார்த்துத்தான் அதைச் சொல்ல முடியும். அப்படிப் பார்த்தால், வளர்ச்சியடைந்த நாட்டிலே, குறிப்பாக மிகவும் பின்தங்கிய நாட்டிலே அந்த ஒரு நபர் பயன்படுத்தும் மின்சாரத்தில் 5 சதவிகித மின்சாரத்தைத்தான் நாம் பயன்படுத்துகிறோம். நாம் 140 யூனிட் தான் சராசரி பயன்படுத்துகிறோம். நிலைமை இவ்வாறு இருக்கும்போது, வியாபார நோக்கத்தோடு மின்வாரியம் லாபத்தில் நடைபெற்றால்தான் நாமும் வெளிநாடுகளில் பயன்படுத்தும் மின் சக்தி எல்லையை அடைய முடியும். ஆனாலுங்கூட, சமுதாயத்திலே நலிந்தவர்

(நண்பகல் 11-45)

களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். குடிசை ஒன்று, விளக்கு ஒன்று என்ற திட்டம்





ஐந்தாறு ஆண்டுக்காலமாகச் செயல்பட்டாலும், அந்த விளக்குக்கு ரூபாய் 2½ வசூலிக்கப்பட்டு வந்தது. அதை கடந்த செப்டம்பர் மாதத்திலிருந்து தள்ளுபடி செய்திருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கதோடு பாராட்டப்பட வேண்டிய திட்டம்தான். ஆனால் விவசாயிகளுக்கு, சிறு விவசாயிகளுக்கு இரண்டரை ஏக்கர் நஞ்செய் நிலம் அல்லது 5 ஏக்கர் புஞ்சை நிலம் வைத்திருக்கும் சிறு விவசாயிகளுக்கு, மின்சாரக் கட்டணம் வசூல் செய்யப்படாது என்று அறிவித்திருக்கிறார்கள். அதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏற்கெனவே இந்த விவசாயிகளுக்கு மின் கட்டணம் பாக்கி, 5 மாதம், 6 மாதம், ஒரு வருடம் என்று இருந்ததை என்ன செய்யப் போகிறார்கள், அதைத் தள்ளுபடி செய்யப்போகிறார்களா அல்லது அதை வசூலிக்கப் போகிறார்களா என்ற விளக்கம் தேவை.

இரண்டாவதாக, இங்கே பல உறுப்பினர்கள் சொன்னதைப்போல, 5 ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருப்பவர்கள் சான்றிதழ் வாங்க ரூ. 200, ரூ. 300 என்று கையூட்டு கொடுக்கின்ற நிலை ஏற்படுவதாகப் புகார் வந்திருக்கிறது. இது ஒரு ஆண்டு மின் கட்டணத்தை விட கூடுதலாக ஆகிவிடுகின்றது. நிலைமை இப்படியென்று சொன்னால், அரசாங்கம் எதிர் பார்க்கிற நன்மை விவசாயிகளுக்குக் கிடைக்க வாய்ப்பில்லை என்பதை நான் சொல்வது என் கடமையென்று கருதுகிறேன்.

மூன்றாவதாக, இந்த விவசாயிகள், 6 மாதம் கழித்து 1 வருடம் கழித்து கொஞ்சம் நிலம் வாங்கிவிட்டால், சிறு விவசாயி என்ற நிலை மாறிப் போகிறது. இந்த மார்ஜினல் பார்மர்கள் ஹை பவர் கனெக்ஷனுக்கு விண்ணப்பிக்கவேண்டுமென்றால், ஆண்டுக்கு ஆண்டு இந்தச் சான்றிதழ் பெற முயற்சிக்க வேண்டுமா? அப்படி எவ்வளவு காலத்திற்கு அவர்கள் இந்தச் சான்றிதழை வாங்கிக் கொடுக்கவேண்டும், அல்லது ஒரே ஒரு முறை வாங்கிக் கொடுத்தால் போதுமா என்றும் விளக்கியாக வேண்டும். அப்படி அடிக்கடி வாங்க வேண்டுமென்று சொன்னால், அதனால் ஏற்படும் தொல்லைகளை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படி எண்ணிப் பார்க்கும்போது, இந்தச் சலுகைகள் பயனுள்ளதாக இல்லை என்பதையும் நான் சொல்லாமல் இருக்க முடியாது.

[திரு. எம். பி. சுப்பிரமணியம்] [1985 மார்ச் 19

விவசாயிகளைப் பொறுத்தவரையில், அவர்களுக்குப் போதிய மின்சாரம் கிடையாது. அவர்களுக்குத் தேவையான மின்சாரம் கொடுத்து, அவர்களின் உற்பத்திப் பொருட்களை நியாய விலையில் அரசாங்கம் எடுத்துக்கொண்டால், இந்தப் பிரச்சினைகள் வரப்போவதில்லை. விவசாயிகளுக்கு தர்மம் செய்து அவர்களின் நன்மதிப்பைப் பெறவேண்டுமென்றுதான் இங்கே காரியங்கள் செய்யப்படுவதாகத் தோன்றுகிறது. அந்தக் கொள்கை வெகுவாகப் பாராட்டப் படக்கூடியதாக இல்லை. பொதுவாகவே இன்றையதினம் நம்முடைய மின் சக்தியில் இன்னும் கூடுதலான உற்பத்தியைப் பெற்றிருக்க முடியும் என்று பலரும் சொல்கிறார்கள். ஏற்கெனவே நமக்கிருக்கிற அனல் மின் நிலையங்களின் திறன் முழுமையாகச் செயல்படவில்லை. ஏற்கெனவே உள்ள திறனில் 5 சதவிதம் கூடுதலாகப் போனால்கூட, நாம் எதிர்பார்க்கும் மின்சார உற்பத்தியில் 90 சதவிதம் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். மொத்த இந்தியாவின் மின்சார உற்பத்தியே கிட்டத்தட்ட 50 சதவிதம் தான். (Capacity Utilisation) அதிலே 6 சதவிதம் 7 சதவிதம் கூடினாலே மின் பற்றாக்குறையை 30 சதவிதம் போக்கிவிடலாம் என்று சொல்கிறார்கள். அப்படி இருக்கும்போது, தமிழ் நாட்டிலே அதற்குரிய இடம் இல்லையா என்று பரிசீலிக்க வேண்டுகிறேன். ஏற்கெனவே சில துறைகளில் 80 சதவிதம் உற்பத்தியில் உயர்ந்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். எல்லா அனல் மின் நிலையங்களும் தங்களது முழு சக்தியைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கினால், பற்றாக்குறையைத் தவிர்க்க முடியும். 12 மாதங்களிலும் ஏதாவது ஒரு மாதம் ஒவ்வொரு காரணத்தைக் காட்டி உற்பத்தியை நிறுத்தி விடுகிறார்கள். தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில், ஒரு முறை [illegible] லீக்கேஜ் ஏற்பட்டு சில மாதங்கள் அது உற்பத்தி செய்யவில்லை. எண்ணூர் அனல் மின் நிலையத்தில் ஒன்றிரண்டு பிரிவுகள் வேலை செய்யாமல், அந்தப் பிரிவுகள் சிப்பேர் என்று மூடிக்கிடந்தன. ஏற்கெனவே பல நிலையங்கள் செயல்படாமலிருக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அது முழுவதுமாகச் செயல்படுகிற அளவுக்கு இயந்திரங்கள் பழுதடையாமல் இருக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரிகைச் செய்திகளைப் பார்த்தால், வெளியிலிருந்து நாம் நிலக்கரியை வரவழைக்கிறபோது, தரமான நிலக்கரி கிடைப்பதில்லை என்று தெரிகிறது. 1983-84 ஆம் ஆண்டு தூத்துக்குடிக்கு வந்த நிலக்கரியில் 72,000 டன் கல்



1985 மார்ச் 19] [திரு. எம். பி. சுப்பிரமணியம்]

(முற்பகல் 11-50)

இருந்ததாகப் பத்திரிகைகளில் செய்தி வந்தது. அந்த அளவுக்கு கல் இருக்குமா? 72,000 டன் கற்கள் இருக்கின்றன என்று சொன்னால், அது என்ன வியாபாரம்? எப்படி அரசாங்கத்திற்கு இது தெரியாமல் வாங்கியிருக்கிறார்கள்? மத்திய அரசாங்கம்தான் என்ன செய்கிறது? அப்படித் தரம் கெட்ட நிலக்கரியை ஏன் வாங்க வேண்டும்? நாம் பார்க்கக்கூடிய வழிமுறைகளை [illegible] ஏன் கடைப்பிடிக்கவில்லை? இவை எனக்குத் தெரியவில்லை.

தமிழ் நாடு அரசாங்கம் ஒவ்வொரு காலகட்டத்திலேயும் சொல்லக் கூடிய ஒரு பதில், "நமக்குத் தேவையான அளவுக்கு நிலக்கரி வந்து சேரவில்லை" என்பதாகும். நிலக்கரிச் சுரங்கத்திலே நிலக்கரி நிறைய இருக்கிறது. ஆனால் அவைகள் சேரவேண்டிய இடத்திற்கு வந்து சேர்வதற்கான வழிவகைகள் இல்லை என்று சொல்லப்படுகிறது. இரயில்வே வேகன்கள் சுரங்கத்திற்குச் சென்று சரியான முறையில் அதை எடுத்துவருவதில்லை என்று சொல்லப் படுகிறது. இரயில்வே இலாகா இதற்குப் பதில் சொல்ல வேண்டும். நிலக்கரியை துறைமுகத்தின் மூலமாகவும், இரயில்வே வேகன்கள் மூலமாகவும் எடுக்க முடியவில்லை என்று சொன்னால், கப்பல் வாங்கி கொண்டுவரக்கூடிய சீரிய முயற்சியில் இந்த அரசு இருக்கிறதா? இந்தப் பிரச்சினையைச் சரியான முறையில் தீர்க்க முடியவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

நம்முடைய நாட்டிலுள்ள நிலக்கரி போதுமானதாக— அதிகமாக இல்லை என்ற காரணத்தால், ஆஸ்திரேலியாவிலிருந்து ஒரு லட்சம், இரண்டு லட்சம், 5 லட்சம் டன் வரையாக வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும் என்ற திட்டத்தைக் கொடுத்தது. அதன் அடிப்படையில் ஒரு லட்சம் டன் வாங்கியும் வைத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இதை நான் வரவேற்கிறேன். நம் நிலக்கரி தரத்திலேயும், நிலையிலேயும் குறைவாக இருக்கிறபோது, மாநில அரசு இவ்வாறு வாங்கி வைத்திருப்பதை வரவேற்கிறேன். [illegible] இந்த லட்சம் டன்னையும் வாங்கி [illegible] விரும்புகிறேன்.

ஆரம்ப காலத்திலே தமிழ் நாட்டிலே மின் உற்பத்தி வளர்ந்த அளவுக்கு இப்போது இல்லை என்பதையும், அதன் வேகம் இப்போது குறைந்துவிட்டது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1960-61-லிருந்து 1970-71-க்குள் இந்த பத்தாண்டுக் காலத்திலே மின் உற்பத்தி மிக வேகமாக இருந்தது. அப்போது 560 மெகாவாட்டாக இருந்தது, 1,965 மெகாவாட்டாக உயர்ந்து கிட்டத்தட்ட 250 விழுக்காடு வளர்ச்சி ஏற்பட்டது. ஆனால் அதன்பின் 1970-71-லிருந்து 1980-81-ற்கான பத்தாண்டு காலத்தில் அதன் வளர்ச்சி மிகக் குறைவாக இருந்தது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதற்குக் காரணம் மாநில அரசும், மின்சார வாரியமும் சரியான முறையில் சரியான திட்டம் உருவாக்காததுதான் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தக் காலகட்டத்தில் 49 விழுக்காடு வளர்ச்சிதான் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இந்திய அளவிலும், மற்ற மாநிலங்களிலும் 93 விழுக்காடு வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. தமிழகத் தொழில் துறை வளர்ச்சி அடையாமல் பின்தங்கி இருப்பதற்கு அடிப்படையான காரணம், தேவையான காலத்திலே தேவையான அளவு மின்சாரத்தை தொழிற்சாலைகளுக்குக் கொடுக்காததுதான்.

தொழில் வளர்வதற்கு மிக முக்கியம், மின்சாரமும், தண்ணீரும், அரசாங்கத்தின் அரவணைப்பும்தான். இவைகளை மாநில அரசு கவனத்தில் கொண்டு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு உடனடியாக அனுமதி பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் குறிப்பிலிருந்து, திட்டம் சரியானது என்று முதலில் அனுமதி பெற்று, பின் சென்ட்ரல் எலெக்ட்ரிசிடி அத்தாரிடி அனுமதி பெற்று, பின் பல வருஷங்கள் கழித்து திட்டக் கமிஷன் அனுமதி வாங்க வேண்டியிருக்கிறது என்று தெரிய வருகிறது. இவ்வாறு மிகவும் காலம் கடந்து போகிற நிலைமை இருப்பதால், இந்நிலையை மாற்ற வேண்டும். திட்டத்தை எடுத்துக்கொள்கின்ற சமயத்திலேயே டெக்னிக்கல் அத்தாரிடியின் அனுமதியும், திட்டக் கமிஷன் அனுமதியும் வாங்குவோமானால், அந்த திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.



தமிழகத்தைப் பொறுத்தவரையில், இப்போதுள்ள தேவைகளை மனதில் கொண்டு வரவுசெலவுத் திட்டத்திலே தொகை ஒதுக்கியிருந்தாலும், மின்சார உற்பத்திக்கு மேலும் அதிக அக்கறை செலுத்த வேண்டும். மின்சாரம் நாட்டு வளர்ச்சிக்கு அதிக அளவில் தேவைப்படுகிறது என்ற கருத்தைக் கூறி விடை பெறுகிறேன்.

(முற்பகல் 11-55)

* மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு நல்ல கருத்துரைகளையெல்லாம் வழங்கிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மின் வாரியம் நல்ல லாபத்தில் நடைபெற வேண்டுமென்று மேலவைத் துணைத் தலைவராகிய நீங்கள் நல்ல எண்ணத்தோடு துவக்கி வைத்தீர்கள். அடுத்துப் பேசிய அருமை உறுப்பினர்களும் அக் கருத்தை எதிரொலித்தார்கள். அது லாபத்தில் நடக்கக் கூடாது என்ற கொள்கை அரசாங்கத்தினுடைய கொள்கையல்ல. என்னைப் பொறுத்தவரையில், அது லாபத்தில் நடக்கிறதா, இல்லையா என்பது ஒருபுறமிருக்க, நஷ்டம் இல்லாமல் நடந்தாலே போதும். "தரி வலம் போனால் என்ன, இடம் போனால் என்ன, தம்பிரது விழுந்து பிடுங்காமல் போனால் அதுவே போதும்" என்பார்கள். அதைப்போல, மின் வாரியத்தின் நிதிநிலையைப் பொறுத்த வரையில், இழப்பீடு இல்லாமல் நடந்தால், அதுவே போதும். ஆனால் இழப்பீடு என்று சொல்லும்போது, அது மின் வாரியத்தின் கட்டுக்கோப்புக்குள் மட்டும் இருக்கிறதா, அல்லது ஒரு மாநில அரசின் அதிகார வரையறைக்கு உட்பட்டு இருக்கின்றதா அல்லது பல்வேறு அமைப்புகளில் சங்கிலித் தொடர் போன்று பொருளாதார விளைவுகள் அதைப் பாதிக்கின்றனவா என்பதை அருள்கூர்ந்து மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் "சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்". நம்முடைய தமிழ்நாடு மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில், தமிழ் நாடு மின்சார வாரியம் என்று மட்டுமல்ல, இன்று பொதுவாக மாநிலங்களால் நடத்தப்படுகிற மின்சார வாரியங்கள் அனல் மின்நிலையத்தைச் சார்ந்தவைகளாக இருக்கிறபடியால், அதற்கான இயந்திரங்களை வாங்குவது பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட், அதற்கான கருவிகளைப் பெறுவது இன்ஸ்ட்ருமெண்டேஷன் லிமிடெட், கோட்டா நிலக்கரி பெறுவது

கோல் இந்தியா நிறுவனம், இவையெல்லாம் மத்திய அரசு நிறுவனங்கள் நிலக்கரியைக் கொண்டு வருவதற்கு ரயிலேயானாலும், துறைமுகமானாலும் அதுவும் மத்திய அரசினுடைய பொறுப்பில் இருக்கின்றன. நிலக்கரியைத் தருவது—இங்கே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள், தருவது கரிகளையா தருகிறார்கள், கற்களை அல்லவா தருகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். வேறு வழி இல்லாமல் நாம் வாங்குவதற்கு என்று இருக்கின்ற ஒரே நிறுவனம் கோல் இந்தியா என்பது மத்திய அரசின் பொறுப்பிலே இருக்கிறது. ஏன் இதையெல்லாம் குறிப்பிடுகிறேன் என்றால், ஏதோ மாநில அரசு அதிலே அக்கறை செலுத்தாததாலோ அல்லது மின்சார வாரியத்தை நடத்துகின்றவர்கள் போதிய கவனம் செலுத்தாததாலோ இழப்பு என்ற கருத்து ஏற்கத்தக்கது அல்ல என்பதை முதலில் குறிப்பிட விரும்பு கிறேன். நான் குறிப்பிட்ட நிறுவனங்கள் எல்லாம் இந்திய அரசு நடத்துவது என்பது மட்டுமல்ல, அதைப்போன்று வேறு நிறுவனங்களும் இந்தியாவிலே கிடையாது. அதாவது "மனோபாலி" என்று சொல்வார்களே அதைப் போல அவை உள்ளன. சான்றாக இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்னால் ரயில்வே கட்டணம் உயர்த்தப்பட்டதாலும், அதற்குப் பிறகு மத்திய அரசினுடைய வரவு-செலவுத் திட்டத்தில் பெட்ரோலியப் பொருட்கள் மீது விதிக்கப்படுகின்ற வரி உயர்வினாலும் 8.16 கோடி ரூபாய் கூடுதலாக நாம் செலவழிக்க வேண்டி உள்ளது. மின் வாரியத் தலைவரைப் பார்த்து, "நீங்கள் நேர்மையானவர், ஒழுக்கமானவர், எப்படியும் இதிலே சிக்கனம் வேண்டும்" என்று கேட்டால் அவர் இதில் சிக்கனம் செய்வதற்குப் பதிலாக ஒழுங்காகவும், நேர்மையாகவும் முதலிலே இந்தப் பணத்தை செலவு தான் செய்வாரே தவிர சிக்கனம் செய்வதற்கு இடம் இல்லை. இப்படி மின்வாரியத்தினுடைய நிதி நிலையைப் பொறுத்த வரையில், தொடர்ந்து மாநில அரசும், மின்வாரியத்தின் எல்லைக்கு உட்படாத காரணத்தால், அதனுடைய நிதிநிலை பாதிக்கப்படு கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசுகிறபோது கூட, ஒரு பழமொழியைக் குறிப்பிட்டார்கள். "ஏதோ, மாதா மடிப்பிச்சை ஏந்துகிறபோது, மகன் கோ தானம் கொடுத்தானாம்" என்று அவர் சொன்னதாக எனக்கு நினைவு. அது 5 மாதங்களுக்கு முன்னாலே சொன்ன பழமொழி என்கின்ற காரணத்தினால், நான் சரியாகச் சொல்கிறேனா,



இல்லையா என்பது எனக்குத் தெரியாது. இருந்தாலும் கருத்து அதுதான் என்று கருதுகிறேன். தானம் தேவை. எப்போது என்றால், தகுதி உள்ளவர்களுக்கு தானம் தருவது மிக மிக முக்கியமான ஒன்று. இந்த அரசைப் பொறுத்தவரையில், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சில கொள்கை முடிவுகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்றால், யாருக்கு வாழ்க்கை சுமையாக இருக்கிறதோ, யார் தங்களுடைய வாழ்வை அமைத்துக் கொள்வதிலே பல்வேறு இடைஞ்சல்களுக்கு ஆளாகின்றார்களோ, அந்தச் சுமையைக் குறைக்கின்ற அளவுக்கு அவர்களுக்கு மின்வாரியம் ஆனாலும், அதை பொறுப்பேற்று நடத்துகிற அரசானாலும் அவர்களுடைய சுமையைக் குறைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

(நண்பகல் 12.00)

அந்த வகையில்தான் குடிசைகளுக்கு ஒரு விளக்குத் திட்டமானாலும் ஏழை விவசாயிகளுக்கு இலவச மின்சாரமானாலும் சரி, அறிவிக்கப்பட்டன என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஏழை விவசாயிகள் என்னும்போது, 5 ஏக்கர் புஞ்சை நிலம் அல்லது 2½ ஏக்கர் நஞ்சை நிலம் வைத்திருப்பவர்கள் என்று போட்டு அத்துடன் வேறு வகையில் அவர்களுக்கு வருமானம் வந்தால், அவர்களுக்கெல்லாம் இந்தச் சலுகை கிடையாது என்றும் போட்டோம். அதன் நோக்கம் என்னவென்றால், வறுமைக் கோடு என்று வரையறை செய்யும்போது, 5 ஏக்கர் புஞ்சை நிலமாக இருந்தால், அதிலிருந்து வருகிற வருவாய் வறுமைக் கோட்டின் எல்லையாகக் கருதப்படுகிறது. அதைப்போலவே நஞ்சை நிலமாக இருந்தால் இரண்டு ஏக்கர் புஞ்சை நிலம் ஒரு ஏக்கர் நஞ்சை நிலத்திற்குச் சமம் என்று போட்டு, 2½ ஏக்கர் நஞ்சை நிலத்திற்கு உட்பட்டு வைத்திருப்பவர்களுக்கு இலவச மின்சாரம் அளிக்கப்படும் என்று ஒரு வரையறை செய்யப்பட்டது.

அதைப்போலவே வேறு வகையில் வருமானம் உள்ளவர்களுக்கு இந்தச் சலுகை கிடையாது என்று குறிப்பிட்டதற்குக் காரணம் அவர்கள் நகரத்தில் நல்ல வியாபாரம் செய்து கொண்டிருப்பார்கள், பெரிய துணிக் கடை வைத்திருப்பார்கள் அல்லது சென்னை போன்ற இடத்தில் ஒரு ஓட்டல் வைத்திருப்பார்கள் அல்லது சினிமாக் கொட்டகையை வைத்திருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் 2 ஏக்கர் புஞ்சை நிலம் வைத்திருந்தால், அவர்களுக்கும்

இந்தச் சலுகை கிடைக்கிறது என்றால், யாருக்குக் கிடைக்க வேண்டும் என்று நாம் கருதி இந்தத் திட்டத்தை அறிவித்தோமோ அவர்களுக்கு அந்தப் பலன் போய்ச் சேராது என்ற காரணத்தால், அதிலே வரையறை செய்யும் போது, தகுதி உள்ளவர்களுக்கு இந்தச் சலுகை கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் அதை நிர்ணயித்திருக்கிறோம்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பேசும்போது, மின்வாரிய நிர்வாகத்தில் செலவைக் குறைக்க வாய்ப்பு இல்லையா என்று கேட்டார்கள். பண்டங்களின் இருப்பு ரூ. 150 கோடிக்கு மேல் இருக்கிறதே என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள்கூட கேட்டார்கள். அத்துடன் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களும் கேட்டார்கள். அதோடு காஸட் கன்சல்டன்சி என்று போட்டாவது எந்த வகையிலாவது சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் முயற்சியைச் செய்யக்கூடாதா என்றும் கேட்டார்கள். எங்கெங்கே விரயமாகிறதோ அதைக் கண்டறிந்து அதையெல்லாம் சிக்கனப்படுத்த நடவடிக்கை எடுக்கக் கூடாதா என்று அவர்கள் கூறிய நல்ல கருத்தையெல்லாம் மின்வாரியம் கவனத்தில் கொண்டுதான் செய்கிற காரியங்களில் சிக்கனப்படுத்தும் முயற்சியை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். கட்டாயமாக மின் வாரியம் இத்தகைய முயற்சிகளை மேற்கொள்ளும் என்ற உறுதியையும் இந்த நேரத்தில் தர விரும்புகிறேன்.

அடுத்து, மின் வாரியத்தில் தொடர்ந்து ஏற்படும் இழப்பு கவலைக்குரிய ஒன்றுதான் என்றாலும், அதனைப் படிப்படியாகப் போக்க வேண்டுமென்றால், பல்வேறு நிறுவனங்கள் நமக்குத் துணை புரிய வேண்டும்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், பொதுத் துறை நிறுவனம் ஒன்று மானோபலி என்கிற ஒரு நிலையின் காரணமாகத் தான் உற்பத்தி செய்கிற பொருள்களுக்கு தற்போது விதிக்கப்படுகிற விலை ஓரளவுக்குக் கட்டுப் படுத்தப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், மத்திய அரசுக்கும் நிதியாதாரங்கள் அதிகமாகத் தேவைப்படு கின்றன. ஆகவே அவர்கள் நடத்துகிற பொது நிறுவனங்களைப் பார்த்து, "நீங்கள் நிறைய இலாபத்தை ஈட்ட வேண்டும், அதிகமான உபரியை





உருவாக்க வேண்டும்" என்று கேட்டவண்ணம் இருக்கிறார்கள். அதன் காரணமாக, நிறுவனத்தின் திறனை மேம்படுத்தி அல்லது உற்பத்தித் திறனை மேம்படுத்தி அந்தப் பொது நிறுவனங்கள் அந்தக் குறிக்கோளை அடைவதில்லை. புரொடக்டிவிடி அண்டு எபிஷியன்சியை அதிகரித்து அதன் காரணமாக உபரியை அல்லது இலாபத்தைப் பொது நிறுவனங்கள் ஈட்டுவார்களானால், அது வரவேற்கத் தக்கதாகும். ஆனால் அதற்கு மாறாக, உற்பத்தியாகிற பொருள்களுக்கு அதிக விலை விதிப்பார்களானால், மாநில அரசுகளால் நடத்தப்படும் மின்வாரியங்கள் தங்களுக்குத் தேவைப் படும் இயந்திரங்கள் மற்றும் உதிரி பாகங்களை வேறு எங்கேயும் பெற முடியாத நிலையில் இத்தகைய பொது நிறுவனங்களிடமிருந்து அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய சூழ்நிலை உருவாகிறது. இதன் காரணமாக மாநில அரசுகள் கூடுதலாக விலையைக் கொடுக்கும் நிலை உருவாகிறது. ஆங்கிலத்தில் இதை "ரிவெர்சிபிள் ஃப்ளோ" என்பார்கள். அந்த வகையில் இந்தியப் பேரரசின் பொது நிறுவனங்கள் விழிப்போடு இருக்க வேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன். மின்துறை அமைச்சர்களின் மாநாடு டெல்லியில் நடைபெற்றபோதுகூட நான் இதே கருத்தை வலியுறுத்திப் பேசியிருக்கிறேன்.

அடுத்து மின்வெட்டுபற்றி இங்கே பலரும் குறிப்பிட்டார்கள். ஆண்டுகள் வரத் தவறினாலும்கூட மின்வெட்டு வரத் தவறுவதில்லை என்று என்னுடைய அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் ராஜன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஆண்டுகள் வரத் தவறுகிறதோ இல்லையோ அவர் இங்கே வந்திருக்கிறார் என்பதிலே பழைய நண்பர் என்ற முறையில் நான் மகிழ்ச்சியடைகிறேன். அவரைப் பாராட்டுகிறேன். மின் வெட்டு என்பது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. சில ஆண்டுகள் என்று பேசும்போது குறிப்பாக 1960-61 ஆம் ஆண்டிலிருந்து தொடர்கதையாக இது வருகிறது. அதற்கு இந்தக் கட்சிதான் காரணம், அந்தக் கட்சிதான் காரணம் என்று சொல்வதைவிட மின் வெட்டு வருவதற்கு என்ன அடிப்படைக் காரணம் என்று பார்க்க வேண்டும்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1985 மார்ச் 19

(பிற்பகல் 12-05)

இந்த மின்வெட்டில் இரண்டு பிரச்சினைகள் முக்கியமாக இருக்கின்றன. மாநில அரசு செய்யக்கூடியவை, மின் வெட்டைத் தவிர்ப்பதற்காக எந்தெந்த வகைகளை மேற்கொள்ளலாமோ அது. இன்னுமொன்று, மற்ற எல்லாருடைய ஒத்துழைப்பையும், தயவையும் வைத்து ஆற்ற வேண்டிய பணிகள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், காங்கிரஸ் ஆண்ட பத்தாண்டுக் காலத்தைக் கணக்கிட்டு வேக வளர்ச்சியைச் சொன்னார்கள். வேக வளர்ச்சியைப் பொறுத்த வரையில், ஆற்றின் சராசரி ஆழத்தைக் கணக்கிடுவது போல கணக்கிட்டால், நம்மை சில நேரத்தில் மூழ்கடித்துவிடும். வேகவளர்ச்சி என்பது நூறிலிருந்து இருநூறாக ஆகிறது என்பது ஒன்று. ஆயிரத்திலிருந்து இரண்டாயிரம் ஆவது என்பது ஒன்று. எந்த அடிப்படையில் அந்த வளர்ச்சிக் கூறுகள் ஏற்படுகின்றன என்பதை நாம் பார்க்க வேண்டும்.

இன்னுமொன்று. ஆரம்பக் கட்டத்திலே தமிழ்நாட்டிற்கு நீர் மின் நிலையங்களை நிறைய போட்டு நிறைவேற்றும் வாய்ப்பு இருந்தது. ஆனால் இந்த நீர்மின் நிலையங்கள் இல்லாத சூழ்நிலையில் அனல்மின் நிலையங்களையும், அணு மின் நிலையங்களையும் நாம் பெரிதும் நம்ப வேண்டியிருக்கிறது. அனல் மின் நிலையங்களைப் பொறுத்த வரையில், நான் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். இந்திய அரசும், தமிழக அரசும் சேர்ந்து அனல் மின் நிலையங்களை நிறுவவும், அதை இயக்கவும். அதன் உற்பத்தியைப் பெருக்கவும் எந்த அளவிற்கு ஒத்துழைப்போடு அந்த முயற்சியில் ஈடுபடுகிறார்களோ அதைப் பொறுத்துத்தான் அனல் மின் நிலையங்களின் எண்ணிக்கையும், வளர்ச்சியும், உற்பத்திப் பெருக்கமும் அமையும் என்பதைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். அந்த வகையிலே இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, தூத்துக்குடி மின் நிலையமானாலும் அல்லது மேட்டூரில் உருவாகிற அனல் மின் திட்டமானாலும், வட சென்னை அனல் மின் திட்டமானாலும், கடலூரில் உருவாகும் ஒரு புதிய அனல் மின் திட்டமானாலும், எண்ணூரில் இருக்கின்ற அனல் மின் திட்டத்தை நன்றாக இயக்குகின்ற முயற்சியானாலும், கல்பாக்கத்தில் உள்ள அணு மின் திட்டத்தில் உற்பத்தியாகின்ற மின்சாரத்தை நாம் பெறுவதானாலும், கேஸ் டர்பைன்



1985 மார்ச் 19] [திரு. ச. இராமச்சந்திரன்]

ஒன்றை பேசின் பிரிட்ஜில் போடுவதானாலும், கூடங்குளத்தில் இன்னுமொரு அணு மின் திட்டம் வேண்டும் என்று வற்புறுத்துவதனாலும் சரி, இதே வேலையாகத்தான் இந்த அரசு இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

THIRUMATHI TARA CHERIAN: On a point of clarification. Sir, could I ask the Hon. Minister whether, as we were discussing last year, we could not give to the private sector the opportunity to produce energy, as is happening in Mararashtra State? I want to know whether this is being considered by the Government?

The HON. THIRU S. RAMACHANDRAN: In fact, we are large-hearted to encourage the private sector. There is a proposal—duly sponsored by our Government—already sent to the Government of India which is pending with them.

மின்சார உற்பத்தியை யார் உற்பத்தி செய்கிறார்கள் என்பதுகூட முக்கியமல்ல. உற்பத்தி இருந்தாலே போதும். நிறைய உற்பத்தி வருவதைப் பொறுத்துதான் தொழில் வளர்ச்சியும், வேளாண்மை வளர்ச்சியும் இருக்கும். ஆனால் ஒன்று மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். 1960-61-லிருந்து மின் வெட்டு என்று நாம் சொல்லுகிறபோது, முதலிலே தமிழ் நாடு கருநாடகாவை நம்பியிருந்தது. கருநாடகாவின் உபரி மின்சாரத்தை வைத்து ஓரளவு சரிக்கட்ட முடிந்தது. அதற்குப் பிறகு 1970 ஆம் ஆண்டிலிருந்து கேரள மாநிலத்திலிருந்து நாம் பெருமளவிற்குப் பெற்று வந்தோம்.

ஆனால் கடந்த மூன்று நான்கு ஆண்டுகளாக கேரள மாநிலத்திலிருந்து—சாதாரணமாக ஆயிரம் மில்லியன் யூனிட் கிடைத்துவந்த இடத்திலேயிருந்து—இன்றைக்கு 120, 200 மில்லியன் யூனிட்டுகள்கூட நம்மாலே பெற முடியவில்லை. பருவ மழை தவறியது ஒரு காரணம். கேரள மாநிலத்தினுடைய தேவை அதிகமாகி வருகிற நிலையும் ஒரு காரணம். ஆகவே இன்று நாம் 30 சதவீதம், அல்லது 40 சதவீதம் மின்வெட்டு மட்டுமே போட்டு நம்முடைய மின் தேவையை நிறைவு செய்து கொண்டிருக்கிற நிலைமையில் இருக்கிறோம் என்றால், நான் சொல்லுகிறேன்; கர்நாடக மாநிலத்தை நம்பியல்ல, கேரள மாநிலத்தை நம்பியல்ல. நாம் நம்முடைய தன்சார்பு நிலையை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறோம் என்பதற்கு இவைகள் எல்லாம் எடுத்துக்காட்டு. இராமகுண்டம் அனல் மின் நிலையத்திலிருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய பங்கு இழுபறியாக

கிடைத்து, நெய்வேலி இரண்டாவது சுரங்கத்தின் மூலம் கிடைக்க வேண்டிய மின்சார உற்பத்தி கிடைத்து, மேட்டூர் அனல் மின் திட்டம் இயங்குவதற்கு முற்படுமேயானால், அதே போல மற்ற திட்டங்களும் வந்து விடுமேயானால்—என்னைப் பொறுத்த வரையில், நான் எதிர்பார்ப்பது—ஓரளவிற்கு நாம் சரிக்கட்டக்கூடிய, சமாளிக்கக்கூடிய நிலையை எய்துகின்ற தன்மைக்கு நாம் வந்திருக்கிறோம்.

மின் நிறுத்தங்கள் இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தார்கள். இந்த மாதம் வரையில் அது இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஏப்ரல் மாதத்திலிருந்து சரியாகும் என்பது என்னுடைய கணிப்பு. அதற்குக் காரணம் கல்பாக்கம் அணு மின் நிலையத்தில் 230 மெகாவாட் கொண்ட இயந்திரம் உற்பத்தியைத் துவங்கியிருக்க வேண்டும்.

(பிற்பகல் 12-10)

அது இன்னும் உற்பத்தியைத் துவங்கவில்லை. அது பிப்ரவரி மாதம் 15-ம் தேதியே வந்துவிடும் என்றார்கள். ஆனால் இப்போது வந்து வந்து போய்க்கொண்டிருக்கிறது. இன்னும் வரவே இல்லை. அநேகமாக இந்த மாத இறுதிக்குள்ளே அது உற்பத்தியைத் துவங்கும் என்று எதிர்பார்க்கிறோம். அதுபோலவே தூத்துக்குடியிலே இருக்கக்கூடிய 3-வது யூனிட்டும், ஹைட்ரோஜன் லீக் ஆகி, அதுவும் கூடிய சீக்கிரத்திலே, அநேகமாக ஏப்ரல் இறுதிக்குள்ளாக வரும் என்று கருதுகிறோம். இதிலே 200-ம், 200-ம் ஆக 400 மெகாவாட் வரவேண்டியது வராததனால், நாம் எந்த அளவுக்குத் திட்டமிட்டோமோ அந்தத் திட்ட இலக்கையும்கூட ஓரளவுக்குச் சீர்குலைக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது, அனல் மின் உற்பத்தி நிலையங்கள் திறமையாகச் செயல்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அனல் மின் உற்பத்தி நிலையங்கள் திறமையாகச் செயல்படுவதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக எண்ணூரை எடுத்துக்கொண்டால், நாம் செக்கோஸ்லோவேக்கியாவில் இருந்து அந்த டெக்னாலஜியை வாங்குகிறோம். அதுவும் சரியில்லாமல் மிகுந்த சிரமத் தோடு இயங்கிக்கொண்டிருக்கிறது. அந்த நிலையிலேதான் நாம் இருந்து கொண்டிருக்கிறோம்.



அதுபோலவே, தூத்துக்குடியிலே, பெரிய டிசைன்ஸ்தான் வாங்கிச் செய்து வருகிறோம். இந்த ஹைட்ரோஜன் லீக்கேஜ் நம்முடைய தூத்துக் குடியிலே மட்டுமல்லாமல், இந்தியாவிலே இன்னும் பல்வேறு யூனிட்டுகளிலே ஏற்பட்டு இருக்கின்றது. இவைகள் இப்போது சரி செய்யப்படுகின்றன. முதலிலே அந்த டிசைனை வாங்குகின்றபோது, அதை அப்படியே நிறுவிய காரணத்தினாலேயே, அந்தப் பிரச்சினையெல்லாம் ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவைப் பொறுத்தவரையிலே, ஒன்றை நன்றாக நினைவிலே வைத்துக் கொள்ள வேண்டும். அனல் மின் நிலையங்கள் அல்லது அணுமின் நிலையங்கள் என்று சொல்லும்போது, பிற மின் நிலையங்களை இயக்குவது போல அல்ல. இந்த மின் நிலையங்களை இயக்குவதற்கு சிறந்த தொழில் நுட்பத்திறன் தேவை. அதை நிர்வகிக்கின்ற பொருள்களை உருவாக்குகின்ற தொழிற் சாலைகள் தரமுள்ளதாக இருக்க வேண்டும். அவைகள் தரமுள்ள பொருள் களை உருவாக்க வேண்டும். அதிலே டிசைன் சரியாக இருக்க வேண்டும். இயக்குகின்ற பொறியாளர்களும் நல்ல பயிற்சியைப் பெற வேண்டும். இந்தியா வளர்ந்து வருகின்ற நாடு என்ற காரணத்தினாலே, இந்தியா [illegible] நாம் இப்போதுதான் படிப்படியாகப் பயிற்சியைப் பெற்று வருகிறோம். அது மின்சார வாரியமாக இருந்தாலும் சரி அந்த இயந்திரங் களை உருவாக்கித் தருகின்ற பாரத் ஹெவி எலெக்ட்ரிக்கல்ஸ் லிமிடெட் போன்ற நிறுவனமாக இருந்தாலும் சரி, பயிற்சி சிறிது சிறிதாகப் பெற்று நாம் முன்னேறிக்கொண்டு வருகிறோம் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. அந்த வகையிலே பார்க்கின்றபோது, நம்முடைய அனுமின் உற்பத்தி நிலையங்கள் சிறந்த முறையிலே இயங்கி வருகின்றன.

நிலக்கரி இறக்குமதியைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் ராஜன் அவர்கள்கூட ஒன்றை இங்கே பேசுகின்றபோது குறிப்பிட்டார்கள். நிலக்கரி இறக்குமதியைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். நிலக்கரி இறக்கு மதியினாலே [illegible] வாய்தான். எப்படி என்றால் [illegible] நிலக்கரி இன்னொன்று அது மலிவான விலை யிலும் கிடைக்கிறது. ஆனால் அதிலே இருக்கின்ற ஒரே கஷ்டம் அந்நியச் செலாவணி செலவாகிறது. ஆனால் ஆஸ்திரேலியாவிலே நாம் நிலக்கரி வாங்குகின்றபோது டன் ஒன்றுக்கு நமக்கு ரூ. 1,040 ஆகிறது. அவைகள் வேண்டும் என்றுதான் சேர்த்துத்தான் சொல்கிறேன். அதிலே பெங்கால்-பிஹார் [illegible] அதிக கணிசமான [illegible] வேண்டும்.

அதே அளவுக்கு வெப்பம் தரக்கூடிய நிலக்கரி 1,394 ரூபாய் ஆகிறது. ஆகவே அதிலே நமக்கு இழப்பு இல்லை. இதிலே என் இறக்குமதி செய்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது என்றால், நிலக்கரி இல்லாததனாலே அல்ல, நம்முடைய இந்திய அரசினிடத்திலே நிரம்ப நிலக்கரி இருக்கிறது. ஆனால் நிலக்கரியைக் கொண்டுவருவதற்கு ஹால்டியா துறைமுகத்தில் போதிய கொள்திறன் இல்லை, அதாவது கெபாசிடி கிடையாது. நிலக்கரி அனுப்புவதற்கு அவர்களுக்கு ஆசையாக இருந்தாலும், அவர்கள் கப்பலிலே ஏற்றி இங்கு வந்து சேர்வதற்கு வேண்டிய வசதிகள் போக்குவரத்துக்கான துறைமுக வசதி இல்லை. அந்த வசதி ஏற்படுகின்ற வரையிலே, இன்னும் ஒரு இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் ஆகிறது என்று வைத்துக்கொள்வோம். அது வரையிலே நாம் தூத்துக்குடி அனல் மின் நிலைய உற்பத்தியை வெறுமனே நிறுத்தி வைக்க முடியாது. ஆகவேதான் இந்த நிலக்கரி வேண்டும் என்று நிறுத்தி வைக்க முடியாது. ஆகவேதான் இந்த நிலக்கரி வேண்டும் என்று இந்திய அரசைக் கேட்டோம். இந்திய அரசு இதுவரை யாருக்கும் தன்னிடத்திலே நிலக்கரி ஸ்டாக் இருக்கின்றபோது வாங்குவதற்கு, அதாவது வெளிநாட்டிலிருந்து வாங்குவதற்கு அனுமதி கொடுத்தது கிடையாது. இருந்தாலும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நம்முடைய பெரும்பான்மையான தேவையை நிறைவேற்றக்கூடியது தூத்துக்குடி அனல் மின் நிலையம் என்ற காரணத்தினாலே, ஒரு இலட்சம் டன் நிலக்கரியை இறக்குமதி செய்வதற்கு அனுமதித்திருக்கின்றார்கள். மேலும் ஒரு இலட்சம் டன் நிலக்கரி இறக்குமதிக்கும் அனுமதிக்க வேண்டும் என்று நாம் தமிழக அரசின் சார்பில் வற்புறுத்தி வருகிறோம். அதற்கான அனுமதியை விரைவிலே வழங்குவார்கள் என்று நம்புகிறோம். ஆகவே மின் உற்பத்தியைப் பொறுத்தவரையில் நான் திரும்பத் திரும்பச் சொல்வது நாம் எந்த அளவுக்கு [illegible] மிட்டு உற்பத்தியைப் பெருக்குகிறோமோ அதைவிட [illegible] மின் தேவை அதிகரிக்கிறது. ஆனால் மின் தேவை அதிகரிப்பது [illegible] தான். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. [illegible] பேசுகிறபோது, "It is a power cut State" என்று சொன்னார்கள். ஆகவே யாரும் வர மாட்டேன் என்று சொல்கின்றார்கள் என்று குறிப்பிட்டார்கள். அது என்ன காரணம் என்று என்னால் சொல்ல முடியவில்லை. [illegible] என்பதால் யாரும் [illegible] போகவில்லை. தமிழகத்தைப் பொறுத்தவரையில் தேவை மிகவும் [illegible]





(பிற்பகல் 12-15)

[illegible] ஆகும். [illegible] தொழில் துவங்குவதற்கு [illegible] ஆகும். அந்தத் [illegible] பெருக்க வேண்டியதும் [illegible] வேகமாக உற்பத்தியைப் பெருக்க வேண்டியதும் [illegible] நம்மைப் [illegible] இடத்தில் [illegible]. அதைப்போல நம்மைப் பொறுத்தவரையில், மின் தேவையை நிறைவு செய்வதற்கு, ஓடிக் கொண்டே இருந்தால்தான், அந்தத் தேவையை நிறைவு செய்யலாம் என்ற நிலையிலே [illegible] முதல்வர் [illegible] புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொண்ட உடனே சொன்னார்கள், நாம் கேரளாவை நம்பி இருக்கக்கூடாது, கர்நாடகத்தை நம்பி இருக்கக்கூடாது. நம்முடைய தேவையை நாமே பெருமளவுக்கு நிறைவு செய்யும் தன்மையில் திட்டங்களை மேற்கொள்ள வேண்டுமென்று. அவர்கள் அப்படித் தெரிவித்ததன் அடிப்படையில், ஏராளமான திட்டங்கள் போட்டு, அந்தத் திட்டங்களுக்குப் பெருமளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்து, அந்தத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆகவே கூடிய சீக்கிரத்தில், இன்னும் இரண்டு ஆண்டுகளில் மின் வெட்டு இல்லை என்ற நிலையை நம்மாலே உருவாக்க முடியும்.

நிர்வாகச் சீரமைப்பு பற்றி இங்கே மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். உற்பத்திக்கு என்று தனி நிறுவனம் அமைக்கலாமா, விநியோகத்திற்கு என்று தனி நிறுவனம் அமைக்கலாமா என்றெல்லாம் அவர்கள் கருத்துக்களைச் சொன்னார்கள். அந்தக் கருத்துக்கள் எல்லாம் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன. [illegible] நேரத்தில் தக்க முடிவுகளை அரசாங்கம் எடுக்குமென்று எதிர்பார்க்கிறேன். ஏனென்றால் மின் வாரியம் [illegible] ஒரு நிறுவனம். சாதாரணமாக எல்லோருக்கும் தேவைப்படுகிற நிறுவனமாக இருக்கிறது. 40 இலட்சம் பேர்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய நிறுவனம் அது. 40 இலட்சத்திற்கும் மேற்பட்ட பயனீட்டாளர்களுக்கு இருக்கக்கூடிய நிறுவனம். இன்னும் வர வர எல்லோருக்கும் மின்சாரம் பயன்படுமென்று பார்க்கும்போது, எல்லோருடைய பிரச்சினைகளையும் [illegible] ஒரு நிறுவனம் தாங்குப் பிடிக்குமா என்று நாம் சிந்திக்க வேண்டியிருக்கிறது. அதையும் கவனமாக அரசு பரிசீலிக்க வருகிறது. விரைவிலே அதுபற்றி முடிவை எடுக்கும் என்று [illegible] தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, மின் வெட்டைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். சில இடங்களில் பொறியாளர்கள் சரியாக இல்லை; இதைப்போல மதுரை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், சரியாக அமுல் நடத்தப்படவில்லை; தஞ்சை நகராட்சியைப் பொறுத்தவரையில், கட்டணங்கள் அதிகமாக இருக்கின்றன என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகியவற்றினிடத்திலுள்ள மின் விநியோகத்தை அவர்களிடத்திலே விட்டுவிடுவதா அல்லது நாமே எடுத்துக்கொண்டு, ஆங்காங்கே விநியோக நிறுவனங்கள் என்று 6 அல்லது 7 விநியோக நிறுவனங்களை உருவாக்கலாமா என்ற கருத்தும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அப்படி உருவாக்கும்போது, இவை எல்லாவற்றையும் சேர்த்துச் சேர்க்கலாமா என்ற யோசனை அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அப்படி அமையும்போது, நகராட்சிகள், மாநகராட்சிகளால் ஏற்படும் பிரச்சினைகள் நிச்சயமாகத் தீர்க்கப்படுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் பேசும்போது, மரபு எனர்ஜி சோர்சஸ் பற்றி, சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் எடுப்பது, கடல் அலையிலிருந்து மின்சாரம் எடுப்பது பற்றி எல்லாம் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்களும் அதை இங்கே குறிப்பிட்டார்கள். அதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதில் [illegible]. ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் அவை இன்றைய தேவைக்குப் பயன்படுமா என்றால், பயன்படாது. இன்னும் அவைபற்றிய ஆராய்ச்சி பல்வேறு நாடுகளிலே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வணிக ரீதியில் மலிவாக உற்பத்தி செய்ய இயலுமா என்பது இன்னும் கேள்விக் குறியாக இருக்கிறது. பல நாடுகளிலே ஆராய்ச்சி அளவிலேதான் இருக்கிறதே தவிர அதை வணிக ரீதியிலே பயன்படுத்தும் திட்டம் உருவாகவில்லை. ஆராய்ச்சியை நடத்தும் அதே நேரத்தில், அது இன்றைக்கு நமது பசியைப் போக்கும் என்று கருதுவது சரியாக இராது. ஆராய்ச்சியை வேண்டுமானால் மேற்கொள்ளலாம். காற்றிலிருந்து மின்சாரம் எடுப்பதானாலும், கடல் அலைகளிலிருந்து மின்சாரம் எடுப்பதானாலும், கடலிலே உள்ள வெப்ப ஏற்றத் தாழ்விலிருந்து மின்சாரம் எடுப்பதானாலும், பூமிக்கு அடியிலே இருக்கிற வெப்ப ஏற்றத்தாழ்வை வைத்து மின்சாரம் எடுப்பதானாலும், சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் எடுப்ப



தானாலும், இவைகள் எல்லாம் படிப்படியாக ஆய்ந்து மேற்கொள்ள வேண்டியவைகளே தவிர, [illegible] என்பதைத் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-20)

இங்கே பணியாற்றுகின்ற ஊழியர்களைப் பொறுத்தவரையில் சிலவற்றை இங்கே குறிப்பிட்டார்கள். ஊதிய உயர்வுக்கான ஒப்பந்தம் அவர்களோடு ஏற்பட்டு வருகிறது. விரைவிலே அது நிறைவுறும். கணிப்பாளர்கள் [illegible] தேர்வுகள், மற்ற தேர்வுகள் பற்றியும் குறிப்பிட்டார்கள். தேர்வுகளில் தவறு நடைபெறுவதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் ராஜன் குறிப்பிட்டார். எந்த அடிப்படையில் தேர்வுகள் நடைபெறுகின்றன என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன். அவர்களை நியமிக்கும்போது, எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சில் இருந்து பட்டியல் கேட்டு வாங்குகிறோம். அப்படி அனுப்பப்படுகிறவர்கள் மார்க் அடிப்படையில்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மார்க்கைத் திருத்தினாலொழிய, தவறு நடைபெற வழியில்லை. ஆனால் எதுவும் நம்முடைய நாட்டிலே நடக்கலாம். Entirely on the basis of marks secured by them ......

**திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன்:** எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சில் இருந்து பெயர் அனுப்புவதில் கூட ஏராளமாக ஊழல் நடைபெறுகிறது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** குறிப்பிட்ட தகுதியுடையவர்களைத்தான் அங்கே கேட்பார்கள். எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சில் எங்காவது தவறு நடைபெறுவதாக மாண்புமிகு உறுப்பினர் கருதினால்—எங்கே நடைபெறுகிறது என்று தெரிந்தால்—குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட அமைச்சருக்குத் தெரிவித்தால், அவர் உரிய நடவடிக்கை எடுப்பார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மின் வாரியத்தைப் பொறுத்தவரையில், அவர்கள் எடுத்த மார்க் அடிப்படையில்தான் தேர்வு செய்யப்படுகிறார்கள் என்பதைத் தெளிவாக்குவதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன்.

குடிசைகளுக்கு விளக்கு வழங்கும் திட்டத்தை பேரூராட்சிகளுக்கும் விஸ்தரிக்க முடியுமா என்று மாண்புமிகு திரு. சிவராமன் கேட்டார். அதோடு கூட குடிசை மாற்று வாரியம் கட்டுகிற வீடுகளுக்கும் இத்திட்டத்தை விஸ்தரிக்க முடியுமா என்றும் கேட்டார். இப்படிப்பட்ட திட்டங்களை

[திரு ச. இராமச்சந்திரன்] [1985 மார்ச் 19

எல்லாம் நிறைவேற்ற வேண்டுமானால், நமக்கு இரண்டு அம்சங்கள் தேவைப்படுகின்றன. ஒன்று போதுமான நிதி வசதி. இரண்டு தேவையான மின்சாரம். முதலிலே கிராமப் பகுதியிலே வாழ்கின்ற ஏழையெளிய மக்களுக்கு, குடிசையில் வாழ்பவர்களுக்குத் தந்து விட்டு, பிறகு தேவைப்படுமானால் மற்றவர்களைப் பற்றிப் பரிசீலிக்கலாம். இன்றைக்கு அரிஜன வீட்டு வசதி வாரியம் கல் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதே அவர்களுக்கு ஒரு சலுகைதான். அதை அவர்கள் அரசாங்கத்திடமிருந்து ஏற்கெனவே பெற்றிருக்கிறார்கள். ஆனால் குடிசைகளில் வாழ்பவர்களுக்கு அந்த வசதி கூட இல்லையென்ற காரணத்தால் தான், ஒரு விளக்கு வசதி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, பம்ப்செட்டுகளுக்கு நிறைய மின்சாரம் தர வேண்டுமென்று பேசினார்கள். இப்போதே நிறைய மின்சாரம் கொடுக்கிறோம். ஆனால் ஒன்றை மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். நாம் இப்படி மின்சாரம் நிறைய கொடுக்கக் கொடுக்க நிலத்தடி நீரின் அளவு கீழ் நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. அன்றைக்கு மக்கள் தொகை குறைவு அதே நேரத்தில் கனி வளம், நீர் வளம், நில வளம் மிகுதியாக இருந்தது. இன்றைக்கு மக்கள் தொகை பெருகியுள்ள நிலையில் நீர் வளமும், நில வளமும் குறைந்திருக்கிறது. வயதானவர்களுக்குத் தெரியும், முன்பெல்லாம் சாதாரணமாக ஓடைகளில், வாய்க்கால்களில் ஏராளமாக தண்ணீர் எப்பொழுதும் ஓடிக்கொண்டேயிருக்கும். ஆனால் இப்போது அப்படி நாம் பார்க்க முடியாது. காரணம் நிலத்தடி நீர் வற்றிப் போய் விட்டது. நீர் ஏற்றிகளை இந்தியாவிலேயே அதிக அளவில் தமிழ்நாடு பயன்படுத்திக் கொண்டிருப்பதால், நிலத்தடி நீர் கீழ் நோக்கிப் போய் கொண்டிருக்கிறது. திட்டமிட்டு காரியங்களைச் செய்யும்போது, நம்முடைய நிலத்தடி நீர் வற்றிப் போய்விடக் கூடாது. அடுத்த தலைமுறைக்கும் இருக்க வேண்டுமென்ற நல்லுணர்வோடு செயல்பட வேண்டும். விவசாயிகளைப் பொறுத்தவரையில், நீர் ஏற்றிகளுக்குத் தேவையான மின்சாரம் தரப்படுகிறது. 10 சதவிகிதத்தை துன்புறுவோர்க்கு, கஷ்டப்படுவோர்க்குத் தர இயலுமா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவராமன் கேட்டார். அவர் அப்படிப் பேசுகிறபோது கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது. உண்மையிலேயே 10 சதவிகிதத்தை டிசர்விங் கேசஸ்க்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு



1985 மார்ச் 19] [திரு ச. இராமச்சந்திரன்]

இராணுவத்தில் வேலை செய்பவர்களுக்குக் கொடுக்கிறபோது கூட—இங்கே சொன்னார்களே அது போல் அங்கே ஆயிரம் வாங்கிக் கொண்டார்கள், இங்கே இரண்டாயிரம் வாங்கிக் கொண்டார்கள் என்று சில நேரங்களில் தவறுகள் நடைபெறுவதாகச் சொல்கிற காரணத்தால், நல்லதைக் கூட செய்ய முடியாத

(பிற்பகல் 12-25)

நிலைமைக்கு ஆளாக தள்ளப்படுகிறது. இருந்தாலும் இதுபற்றிப் பரிசீலித்து, உரிய முறையில் அதற்கான ஏற்பாடுகள் எடுக்கப்படும் என்பதையும் மீண்டும் நான் இந்த நேரத்தில் உறுதியாகக் கூறிக்கொள்கிறேன். மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில், அது ஒரு நிறுவனம் என்று கருதுவதை விட, பல நிறுவனங்களுக்குத் துணை செய்கிற, உயிர் நாடியாக இருக்கிற சிறந்த அமைப்பு என்ற வகையில் பார்க்கிறபோது, மின்சார வாரியத்தின் பெர்பார்மன்ஸ் அதனுடைய ஒட்டுமொத்த இயக்குதிறனைக் காண்கிறபோது, அதைத் தனித்துப் பார்ப்பதைவிட, இந்த நாட்டின், இந்த மாநிலத்தின் பொருளாதாரத்தில் எந்த அளவுக்குப் பங்கேற்கிறது என்ற அடிப்படையில் பார்க்கிறபோது, வேளாண்மைத் தொழிலாக இருந்தாலும் சரி, தொழில் துறையாக இருந்தாலும் சரி, மற்ற மற்ற பொருளாதாரத் துறையாக இருந்தாலும் சரி, எப்படி உடலில் இரத்த ஓட்டம் இருந்தால் உடலுக்கு வலிமையும், பலத்தையும், பொலிவையும் சேர்க்கிறதோ அதைப்போல தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், மின்சார வாரியம் இரத்த ஓட்டமாக இருந்து, அதன் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிகிறது என்பதை நாம் காணலாம்.

இங்கே இந்த விவாதத்தில் பல உறுப்பினர்களும் கலந்து கொண்டு பல் வேறு சிறந்த கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் என் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன். பல மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிய பல கருத்துக்களுக்கு இங்கே நான் பதில் அளிக்காவிட்டாலும், அதை ஒளிக்கக்கூடாது என்ற எண்ணமல்ல, அளிக்க நேரமில்லை என்ற காரணத்தால், அளிக்க இயலவில்லை என்று எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கூறி, இந்த மின்வாரிய நிதிநிலை அறிக்கையை எல்லோரும் நிறைவேற்றித் தர கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. க. மீனாட்சிசுந்தரம் எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : திரு. ஆர். ம. [illegible] அன்றையதினம் பேச எழுந்தபோது நீங்கள்தான் எதிர்த்தீர்கள்

The hon. Member should have asked him when he was speaking and not afterwards.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** என்னுடைய விஷயத்தில்தான் மிகவும் ஸ்டிரிக்டாக இருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன, அவை மீண்டும் 20—3—1985 புதன் கிழமை காலை 10.00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 12.27)

## 4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ. சட்டபடிக்கான விதிகளும், ஆணைகளும்.

128. 1983-84 ஆம் ஆண்டிற்கான தமிழ் நாடு பீங்கான் நிறுவனத்தி[illegible]பத்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் 619 (அ) ஆம் பிரிவின்கீழ், அவை முன் வைக்கப்படுகிறது].

129. வணிக வரிகள்-அறநிலையத்துறையின் 9—6—1982 ஆம் நாளிட்ட II (1) [CTRE/177/84 ஆம் நாளிட்ட அறிவிக்கையில் செய்யப்பட்ட திருத்தங்கள் குறித்து, வணிக வரிகள்-அறநிலையத் துறையின் 30—1—1985 ஆம் நாளிட்ட 69 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின்கீழ், அவை முன் வைக்கப்படுகிறது].

130. கோயம்புத்தூர், குன்னூர் ஆகிய இடங்களிலுள்ள எல் மையங்களின் மூலம் தேயிலை விற்பனை மீது விதிக்கப்படுகின்ற வரி வீதத்தைக் குறைப்பது குறித்து வணிக வரிகள்-அறநிலையத்துறையின் 12—12—1981 ஆம் நாளிட்ட 1337 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின்கீழ், அவைமுன் வைக்கப்படுகிறது].



### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

29. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு வெட்டு மர விதியில் (எடுத்துச் செல்வதைக் கட்டுப்படுத்தல்) செய்யப்பட்ட திருத்தம் குறித்து, வன-மீன் துறையின் 10—10—1982 ஆம் நாளிட்ட 1184 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

*30. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1983-84 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை 1982-83 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை மற்றும் 1984-85 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை, 1983-84-ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை இவற்றைக் குறித்து தமிழ்நாடு சட்ட மேலவையில் தொடரும் விவாதத்தைத் துவக்கி வைத்து மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன், மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஆற்றும் உரை (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

@ 31. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1985).

@ 32. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1985 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1985).

@ 33. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1985 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1985).

@ 34. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1985).

@ 35. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1985 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1985).

@ 36. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1985).

@ 37. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1985).

@ 38. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1985).

---

* 16—3—1985 அன்று உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டது.

@ 18—3—1985 அன்று உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டது.





## இணைப்பு I

(83 ஆம் பக்கத்தில் இனம் 2 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

தற்போதுள்ள அரசாணையின்படி தாலுகா தலைமையிடத்தில் பணியாற்றும் அரசுப் பணியாளர்கள் மற்றும் அரசு கல்வி நிலையங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் நிலை III ( Grade III ) இடத்திற்கு உரிய வீட்டு வாடகைப்படியைப் பெறத் தகுதியுடையவர்கள். தரங்கம்பாடி தாலுகா தலைமையிடமாக 11—1—1982 முதல் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அங்கு பணிபுரியும் பணியாளர்கள் நிலை I I Grade III பகுதிக்கு உரிய வீட்டு வாடகைப் படியைப் பெற தகுதியுடையவர்கள். ஆனால் தரங்கம்பாடியில் பணியாற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் பணியாற்றும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாதோர்களுக்கு கிராமப்பணி ஊக்கப்படி மட்டுமே வழங்கப்பட்டு வருவதாகவும், மயிலாடுதுறை மாவட்டக் கல்வி அலுவலர், இவர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்கும் செயற்குறிப்பு பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அதற்கான அரசாணைக்கு காத்திருப்பதாகவும் அரசுக்கு செய்திகள் வந்தன.

2. எனவே, தரங்கம்பாடி வட்டத் தலைமையிடத்தில் உள்ள அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற கிராமப்பணி ஊக்கப் படிக்கு பதிலாக, நிலை III (Grade III) இடங்களுக்கு உரிய வீட்டு வாடகைப் படியை வழங்க ஆணைகள் வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கல்வித் துறை செயலர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இது பற்றி கல்வித் துறை செயலரும் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அறிவுரைகள் வழங்கியுள்ளார்.

## இணைப்பு II

(86 ஆம் பக்கத்தில் இனம் 2 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக் கொடை திட்டத்தை அரசு உதவி பெறும் பள்ளிப் பணியாளர்களுக்கு விரிவுபடுத்தும் கோரிக்கையினை ஏற்கலாம் என கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு எவ்வாறு கணக்குகள் வைக்கப்பட வேண்டும் என்பது குறித்து மாநிலக் கணக்காயருடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது. நகராட்சிப் பள்ளிப் பணியாளர்களுக்கு இத்திட்டத்தை விரிவு படுத்துவதற்கான கருத்துரு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வசதி துறையில் தனியாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. அத்துறையின் அரசாணை நிலை எண் 129 நாள் 31—7—1984-ல் சென்னை மாநகராட்சிப் பள்ளிப் பணியாளர்களுக்கு 1—8—1984-லிருந்து இத்திட்டத்தை விரிவுபடுத்தி ஆணைகள் ஏற்கெனவே வெளியிடப்பட்டுவிட்டன.





## இணைப்பு III

(90 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

Honourable Chairman Sir,

1. The discussion on the Annual Financial Statement for 1983-84 and the Supplementary Financial Statement for 1982-83 and the Annual Financial Statement for 1984-85 and the Supplementary Financial Statement for 1983 84 of the Tamil Nadu Electricity Board which commenced on 15th October 1984 was postponed. I rise to move that the above discussion be continued. The Government and the Board will take due note of the comments of the Honourable Members. However, before the discussions commence, I will briefly narrate the developments. between October 1984 and now, in the power position in the State and other activities of the Board.

2. *Power Position*.—As I mentioned in my speech initiating the discussions, the South-West monsoon was a failure this year. The North-East monsoon also failed, with the result that during the period from July 1984 to February 1985, we received inflows in the hydra reservoirs equivalent to only 2,276 m.u. as against the 10 year average inflow equivalent of 2,877 m.u. and 3,500 m.u. in 1981-82.

The failure of the monsoons affected the supplies from Kerala also. In August 1984, we entered into an agreement with Kerala for the purchase of the entire surplus power from Kerala. At that time, it was indicated that Kerala would be able to supply 1,000 m.u.. to Tamil Nadu during the period from August 1984 to June 1985 and the expectation was that at least 581 m.u. out of this suplus would be drawn before March 1985. As a result of the failure of the monsoon in Kerala also, there was a shortfall in supplies from Kerala and we have received only a discontinued supply of 172 m.u. from Kerala from December 1984 onwards.

Tamil Nadu is entitled to a share of 88 MW. from the two 200 MW units of Ramagundam Super Thermal Station which came into commercial operation in April 1984 (First Unit) and August 1984 (Second Unit). As the 400 KV Transmission system required to transmit the power to Tamil Nadu has not yet been completed, our

share of power had to be drawn only through the transmission lines of Andhra Pradesh. Because of the limitations in the transmission grid of Andhra Pradesh, they have been able to transfer power only from December 1984. Even the relief that we are now getting in this manner is not steady and is subject to daily variations. We have received only 86 m.u. so far, as against out share of 275 m.u., had the transmission lines been ready.

In October 1984, our expections were that Kalpakkam Nuclear Plant would supply about 1,023 m.u. during 1984-85. Against this Kalpakkam had supplied only 902 m.u. till 28th February 1985. The plant was shut down on 7th December 1984 for overhaul. It was expected to be back in service in January 1985 but the Unit was recommissioned only on 6th March 1985. The Unit has not yet stabilised.

As I mentioned in my speech in October 1984, Tuticorin Thermal Station has been performing very well. In January 1985, the Station achieved an all time record generation of 419 m.u. which is equivalent to a plant load factor of 89.56 per cent. On 1st February 1985, there was a set back in the generation at Tuticorin Thermal Station. Unit III of 210 MW capacity had to be shut down due to hydrogen leakage and related faults. This is a genetic problem faced by many of the 210 MW BHEL sets. Out of the 47 sets of 210 MW (Similar design) supplied by BHEL, this problem is faced by 13 sets in the country. BHEL Engineers and a Russian expert are attending to the rectification. This Uniot may be recommissioned only in June 1985.

Unit V of Ennore Thermal Power Station is under scheduled annual overhaul with scheduled major modifications of the boiler. The work commenced on 7th October 1984. The work has been completed and the plant has been recommissioned on 11th March 1985 and full power from this set will be available in the next few days.



In October 1984, I had indicated that the availability during 1984-85 would be 13,646 m.u. Against this, the present expectation is 13,643 m.u The table shows the comparative position—

| (1) | | | Original anticipation (2) | Present antioipation (3) |
|---|---|---|---|---|
| Hydro | .. | .. | 4,401 | 4,396 |
| Thermal | .. | .. | 4,706 | 4,899 |
| Neyveli | .. | .. | 2,933 | 3,077 |
| Kalpakkam | .. | .. | 1,023 | 977 |
| Kerala | .. | .. | 581 | 175 |
| NTPC | .. | .. | .. | 117 |
| Others | .. | .. | 2 | 2 |
| | | | 13,646 | 13,643 |

As I mentioned in October 1984, during the year 1984-85 the availability has increased by 31.8 per cent compared to 1983-84.

The power position till January 1985 was comfortable as anticipated. However, due to extended overhall of Kalpakkam Unit the shut down of Unit III at Tuticorin from 1st February 1985 and the non-availability of relief from Kerala, the State faced a situation of power shortage. This was further aggravated by the forced outage of Unit IX at Neyveli (100 MW) from 22nd February 1985 to 8th March 1985.

Under the circumstances, a power cut of 30 per cent on demand and energy was imposed on H.T. industries from 1st February 1985 and this was raised to 40 per cent on H.T. industries other than power intensive and 50 per cent on power intensive industries with effect from 1st March 1985. With effect from the same date supply to rural feeders has been regulated in three groups—two groups of six hours each during the day and one group of eight hours

during the night, the groups being rotated every Sunday. This is against the system which prevailed till 28th February 1985 of two groups getting supply during the day for six hours each and both the groups getting supply for 8 hours during the night.

There is no cut on domestic, commercial, L.T. industries and H.T. essential. This is in contrast to previous years. Similarly, unlike in the previous years, no peak hour restrictions have been imposed on industries. H.T. industries connected to the grid from 1st February 1982 have also been exempted from the power-cut. Unlike in previous years, no ban has been imposed in connecting up new industries.

During the past few weeks, there has been some unscheduled load shedding in many parts of the State because of the cumulative effect of the shut down of Kalpakkam. Unit III at Tuticorin, Unit V at Ennore and Unit IX at Neyveli and also interruptions in supply from Romagundam because of A.P.S.E.B.'s grid problem. Also, it takes time for the power cut to stablise and during the interregnum some load shedding became inevitable. Our hydro storage as on 9th March 1985 is only 613 m.u. compared to 1,052 m.u. on the same day last year. Therefore, any unscheduled temporary outages in the units either of TNEB or of Kalpakkam or of NLC or of Ramagundam cannot be met from the hydro and load shedding to that extent will become necessary notwithstanding the power-cut. It is expected that the unscheduled load shedding can be avoided after about a week when Kalpakkam, Unit V of Ennore and Unit IX of Neyveli will stabilise.

3. *Coal:*

Supply of coal to the thermal stations continues to be a constraint. Honourable Members would be happy to know that due to sustained efforts taken by us, Government of India have allowed an import of 1 lakh tonnes of Australian Coal for Tuticorin. This coal is being imported through MMTC. This Government is pressing for the import of one more lakh tonnes of coal from Australia.



4. *Allotment of Power from Kalpakkam:*

Honourable Members may recall that this Council passed a unanimous resolution in March 1984, requesting the Government of India to allocate the entire power from Kalpakkam Unit I. 50 per cent of the power from Unit II of Kalpakkam and the entire power from the Neyveli Second Thermal Station. The Government of India have since conceded our request in respect of Kalpakkam and have agreed to supply the entire power from Unit I and 50 per cent of the power from Unit II of Kalpakkam to Tamil Nadu.

5. *Rural Electrification:*

The present stage of Rural Electrification in the State is given in the table below :—

| *Item* | *Total existing in the State.* | *Electrified as on 28th February 1985.* | *Percentage.* |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. Towns .. .. | 435 | 439 | 100 |
| 2. Villages .. | 19,735 | 15,699 | 99.77 |
| 3. Hamlets .. | 47,838 | 47,511 | 99.32 |
| 4. Towns, Villages and Hamlets | 64,012 | 63,649 | 99.43 |
| 5. Adi-dravidar Colonies | *26,154 | 26,137 | 99.94 |
| 6. Agricultural pumpsets | 12 lakhs (estimated) | 10,21,759 | 85.15 |
| 7 Eligible applications received. | | | |
| *. Huts .. .. | .. | 6,20,554 | .. |

During 1984-85, 26 villages, 39,153 pumpsets, 58,277 huts and 25 Adi Dravidar colonies were electrified until February 1985.

6. *Annual Plan* 1984-85:

During 1984-85, TNEB budgetted to spend Rs. 256.92 crores on Capital works. The Planning Commission approved an outlay of Rs. 237.17 crores with Plan funds and Rs. 7.72 crores for pumpset energisation outside Plan funds. The outlay of Rs. 237.17 crores within Plan funds and Rs. 7.72 crores outside Plan is expected to be spent in full.

[1985 மார்ச் 19

7. *Revenue and Revenue Expediture*:

The table below shows the revenue and revenue expenses as indicated in October 1984 and as anticipated now:—

| | Estimated in October 1984 | Present Anticipation. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (Rs. in crores) | |
| *Revenue Receipts* .. .. | 535.90 | 527.52 |
| *Revenue Expenditure* : | | |
| Fuel .. .. | 183.73 | 213.30 |
| Power purchase .. .. | 177.73 | 199.75 |
| O & M Establishment and Central Excise | 172.10 | 169.91 |
| Interest and Depreciation | 155.76 | 146.30 |
| | 689.32 | 729.26 |
| *shortfall* .. | 153.42 | 201.74 |

The increase in fuel charges is due to use of oil at Tuticorin Thermal Station to overcome shortage of coal supply and the increase in price of coal from Sigareni Collieries.

8. *Bonus for employees:*

In addition to the admissible Bonus for the year 1983-84 at the rate of 8.33 per cent of salary, an ex-gratia payment of Rs. 225 was made to each employee.

I solicit the valuable views of the Honourable Members to improve the performance of the Board.



1985 மார்ச் 19]

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1985-86 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை 1984-85 ஆம் ஆண்டுக்கான [illegible] நிதிநிலை அறிக்கை மற்றும் [illegible] ஆம் [illegible] அறிக்கை/1983-84 ஆம் ஆண்டுக்கான [illegible] நிதிநிலை அறிக்கை ஆகியவற்றுடன் கடந்த 15—10—1984 அன்று அவைக்கு [illegible] வைக்கப்பட்டது. இவ்விவாதம் மீண்டும் தொடர்ந்திட நான் முன்மொழிகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை அரசும் மின்சார வாரியமும் கருத்தில் கொள்ளும். எனினும் விவாதம் தொடங்கும் முன்னர், கடந்த 1984 அக்டோபர் திங்களுக்குப் பின்னர் மின்சார நிலைமையிலும் மின்சார வாரியத்தின் நடவடிக்கைகளிலும் ஏற்பட்ட மாற்றங்களைச் சுருக்கமாகக் கூறுகிறேன்.

மின்சார நிலைமை :

[illegible] உணவில் ஏற்கெனவே [illegible] மழை தவறியது. [illegible] கடந்த 10 ஆண்டு [illegible] 2,877 மி. யூ. மற்றும் 1981-82-ல் பெற்ற 3,500 மி.யூ.-க்கு மாறாக, 1984 ஜூலைத் திங்கள் முதல் 1985 பிப்ரவரி திங்கள் வரை நீர்த் தேக்கங்களில் 2,676 மி. யூனிட் [illegible] பெறப்பட்டது.

பருவ மழை பொய்த்ததால், கேரள உதவியும் பாதிக்கப்பட்டது. கேரளத்தின் [illegible] உபரி மின்சாரத்தையும் நாம் பெறும் வகையில் 1984 ஆகஸ்ட் திங்களில் நாம் கேரளத்துடன் ஒர் ஒப்பந்தம் செய்தோம். 1984 ஆகஸ்ட் திங்கள் மற்றும் 1985 ஜூன் திங்களுக்கிடையில் கேரளம் தமிழ்நாட்டிற்கு 1,000 மி.யூ. மின்சாரம் [illegible] குறிப்பிடப்பட்டது. 1985 மார்ச் திங்களுக்கு முன்னர் இதில் 581 மி. யூனிட்டுகளாவது பெற [illegible] எதிர்பார்க்கப்பட்டது. கேரளத்திலும் பருவ மழை தவறியதால், கேரள உதவி [illegible] குறைந்த 172 மி.யூ. மட்டுமே கிடைத்தது. 1984 [illegible] முதல் கேரளத்திலிருந்து மின்சாரம் வருவது முழுவதுமாக நின்றுவிட்டது. 1984 மார்ச் திங்களில் முதல் பிரிவு மற்றும் 1984 ஆகஸ்ட் திங்களில் இரண்டாம் பிரிவு [illegible] செயல்படத் தொடங்கிய இராம[illegible] [illegible] மின் [illegible] நிலையத்தின் [illegible] 200 மெகாவாட் ஆகும். இதில் தமிழகத்தின் பங்கு 88 மெகாவாட் ஆகும். தமிழ்நாட்டிற்கு மின்சாரம் அனுப்பத் தேவையான 400 கி.வோ. மின் பாதைத் [illegible] அமைக்கும் பணி [illegible] [illegible], ஆந்திர மாநில [illegible]

[1985 மார்ச் 19

தொடர் மூலமாகவே நாம் மின்சாரம் பெற வேண்டியிருந்தது. ஆந்திராவின் மின் கம்பித் தொடர்களின் வரையறைகளினால் 1984 டிசம்பர் முதல்தான் ஆந்திரத்தினால் மின்சாரம் அனுப்ப முடிந்தது. தற்போது பெறும் இவ்வுதவியும் நிலையற்றதாகவும், தினமும் மாறுவதாகவும் உள்ளது. மின் கம்பித் தொடர்கள் தயாராக இருந்திருப்பின் நமக்குக் கிடைத்திருக்க வேண்டிய 275 மி.யூனிட்டுகளுக்கு மாறாக இதுவரை 86 மி.யூ. மட்டுமே பெறப்பட்டுள்ளது.

1984-85-ல் கல்பாக்கம் அணு மின் நிலையம் சுமார் 1,028 மி.யூ. தருமென 1984 அக்டோபரில் எதிர்பார்க்கப்பட்டது. இதற்கு மாறாக, 28—2—1985 வரை கல்பாக்கம் நிலையம் 902 மி.யூ. மட்டுமே வழங்கியுள்ளது. 7—12—1984-ல் சுத்திகரிப்புக்கென நிலையம் மூடப்பட்டது. 1985 ஜனவரி திங்களில் உற்பத்தி துவங்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 6—3—1985-ல் தான் நிலையம் மீண்டும் செயல்படத் துவங்கியது. இந்நிலைய மின் உற்பத்தி இன்னும் நிலை பெறவில்லை.

1984 அக்டோபரில், எனது உரையில், நான் ஏற்கெனவே குறிப்பிட்டவாறு, தூத்துக்குடி அனல் மின் நிலையம் சிறப்பாக இயங்கி வந்தது. என்றுமில்லாத அளவில் 1985 ஜனவரியில் 419 மி.யூ. உற்பத்தி செய்து சாதனை புரிந்தது. நிலைய உற்பத்தித் திறன் அளவில் இது 89.56 விழுக்காடு ஆகும். 1—2—1985-ல் நிலையத்தின் உற்பத்தியில் தடங்கல் ஏற்பட்டது. ஹைட்ரஜன் வாயு கசிவு மற்றும் இதைச் சார்ந்த கோளாறுகளின் காரணமாக 210 மெ.வா. உற்பத்தித் திறன் கொண்ட மூன்றாவது பிரிவு மூடப்பட்டது. இது, பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்தின் தயாரிப்பான 210 மெ.வா. திறன் கொண்ட பல அமைப்புகளில் ஏற்படும் ஒரு இயந்திர அமைப்பு குறைபாடாகும். பெல் நிறுவனத்தால் வழங்கப்பட்ட, நமது நாட்டிலுள்ள இது போன்ற மொத்தம் 47,210 மெ.வா. அமைப்புகளில், 13 இயந்திரங்களில் இக்கோளாறு காணப்படுகிறது. பெல் நிறுவனப் பொறியாளர்களும் ரஷ்ய நாட்டு தொழில் நுட்ப வல்லுநரும் இக் கோளாறைச் சரிசெய்வதில் ஈடுபட்டுள்ளனர். இப்பிரிவு, 1985 ஜூன் திங்களில்தான் மீண்டும் இயங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.



85 மார்ச் 19]

என்னூர் அனல் மின் நிலையத்தின் ஐந்தாவது பிரிவு திட்டமிடப்பட்ட முந்திய சுத்திகரிப்புக்காகவும் கொதிகலனில் பெருமளவில் மாற்றங்கள் செய்வதற்கெனவும் மூடப்பட்டது. 7—10—1984 அன்று வேலை துவங்கிப் பின்னர் முடிவுற்று 11—3—1985 அன்று இப்பிரிவு உற்பத்தியைத் துவங்கியது. முழு அளவு உற்பத்தி இன்னும் சில நாட்களில் கிடைக்கும்.

1984-85-ல் மொத்தம் 13,646 மி.யூ. மின்சாரம் கிடைக்குமென 1984 அக்டோபரில் நான் குறிப்பிட்டேன். இதற்கு மாறாக, தற்போதைய எதிர்நோக்கு 13,643 மி.யூ. ஆகும். ஒப்பீட்டு அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| | முன்னாள் எதிர் நோக்கு. | இந்நாள் எதிர் நோக்கு. |
|---|---|---|
| நீர் மின் நிலையம் .. .. | 4,401 | 4,396 |
| அனல் மின் நிலையம் .. .. | 4,706 | 4,899 |
| நெய்வேலி .. .. | 2,933 | 3,077 |
| கல்பாக்கம் .. .. | 1,023 | 977 |
| கேரளா .. .. | 581 | 175 |
| தேசிய அனல் மின்சாரக் கழகம் .. | .. | 117 |
| மற்றவை .. .. | 2 | 2 |
| | 13,646 | 13,643 |

1984 அக்டோபரில் நான் ஏற்கெனவே குறிப்பிட்டவாறு, 1984-85-ல் சென்ற ஆண்டைவிட 31.8 விழுக்காடு கூடுதல் மின்சாரம் கிடைத்துள்ளது.

எதிர்நோக்கியவாறு, 1985 ஜனவரி வரை மின்சார நிலைமை சீராக இருந்தது. எனினும், கல்பாக்க நிலைய சுத்திகரிப்பு நீடித்ததாலும், தூத்துக்குடி மூன்றாம் பிரிவு 1—2—1985 முதல் மூடப்பட்டதாலும், கேரள உதவி கிடைக்காததாலும் தமிழ்நாட்டில் மின் பற்றாக்குறை ஏற்

பட்டது. நெய்வேலியில் 22—2—1985 முதல் 8—3—1985 வரை 9-ஆம் பிரிவு (100 மெ.வா.) கட்டாயமாக மூடப்பட வேண்டியதானதால் நிலைமை மேலும் மோசமானது.

இந்நிலையில், உயர் மின் அழுத்தத் தொழிற்சாலைகட்கு 1—2—1985 முதல் மின் தேவை மற்றும் மின்சக்தி அளவில் 50 சதவீதம் மின் வெட்டு அமுலாக்கப்பட்டது. மின்சக்தியை அதிக அளவில் பயன்படுத்தும் உயர் அழுத்தத் தொழிற்சாலைகட்கு 50 சதவீதம் ஆகவும் இதர உயர் அழுத்தத் தொழிற்சாலைகட்கு 40 சதவீதம் ஆகவும் 1—3—1985 முதல் மின்வெட்டு உயர்த்தப்பட்டது.

28—2—1985 வரை விவசாய மின் இணைப்புகளுக்கு பகலில் 6 மணி நேரமும், இரவில் 8 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்பட்டிருந்தது. 1—3—1985 முதல் விவசாய மின் இணைப்புகளுக்கு மின்சக்தி வழங்குவது மூன்று பிரிவுகளாக முறைப்படுத்தப்பட்டது. இரு பிரிவுகட்கு பகலில் 6 மணிநேரமும் மூன்றாம் பிரிவுக்கு இரவில் 8 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்படுகிறது. ஞாயிற்றுக்கிழமை தோறும் இப்பிரிவுகள் மாற்றி அமைக்கப்படுகின்றன.

வீட்டு பயனீட்டாளர்கட்கும், வர்த்தக நிலையங்கட்கும், குறைந்த மின் அழுத்தத் தொழிற்சாலைகட்கும், இன்றியமையா உயர் மின் அழுத்தப் பணிகட்கும் மின் வெட்டு இல்லை. முந்தைய ஆண்டுகளில் இவர்களுக்கும் ஓரளவு கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இதே போன்று, சென்ற ஆண்டுகளுக்கு மாறாக தொழிற்சாலைகளின் உச்ச நேரத் தேவைகளில் கட்டுப்பாடு இல்லை. 1—2—1982-க்குப் பின்னர் உயர் அழுத்த மின் இணைப்புப் பெற்ற தொழிற்சாலைகட்கு மின் வெட்டிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. புதிய தொழிற்சாலைகட்கு மின் இணைப்பு வழங்குவதிலும் தடை ஏதும் இல்லை.

கடந்த சில வாரங்களாக, மாநிலத்தின் பல பகுதிகளில் திட்டமிடாத வகையில், மின் தடைகள் ஏற்பட்டன. கல்பாக்கம் நிலையம், தூத்துக்குடி



III -ஆம் பிரிவுகளும், V-1 பிரிவு மற்றும் நெய்வேலி IX -ஆம் பிரிவும் ஒரே சமயத்தில் பழுதானதும், ஆந்திர மாநில மின் வாரியத்துடன் மின் அமைப்புத் தொடர்புகளினால் இராமகுண்டத்திலிருந்து பெறப்பட்ட மின்சாரத்தில் தடங்கல் ஏற்பட்டமையாகவும், பெருமளவு மின் தடங்கல்கள் ஏற்பட்டன. மேலும், மின் வெட்டு, நிலைப்படுத்தப்பட்ட பிறகு காலம் ஆகும். இடைக்காலத்தில் இது போன்ற மின் நிறுத்தங்கள் தவிர்க்க முடியாதவை ஆகின்றன.

சென்ற ஆண்டில் இதே நாளில் இருந்த 1,052 மி.யூ.-க்கு மாறாக மார்ச் 1985 அணை நீர்த்தேக்கங்களில் நீர் அளவு 615 மி.யூ. மட்டுமே உள்ளது. எனவே, தமிழ்நாடு மின் வாரிய மின் நிலையங்கள், கல்பாக்கம், நெய்வேலி அல்லது இராமகுண்டம் ஆகிய அனல் மின் நிலையங்களில் எதிர்பாராத தடங்கல்களினால் மின் உற்பத்தியில் தடையேற்பட்டால், அமுலில் உள்ள மின் வெட்டுடன், மின் நிறுத்தங்களும் அந்த அளவிற்குத் தேவைப்படுகின்றன. கல்பாக்கம், எண்ணூர் பிரிவு-V நெய்வேலி பிரிவு -IX ஆகியவை இன்னும் ஒரு மாதத்தில் நிலையான உற்பத்தி செய்யும் எனவும், அதன் பின்னர் இவ்வகையான எதிர்பாராத மின் நிறுத்தங்களைத் தவிர்க்க முடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

**நிலக்கரி :**

அனல் மின் நிலையங்கட்கு நிலக்கரி வழங்குதலில் இன்னும் இடையூறு இருக்கிறது. நமது இடைவிடாத முயற்சிகளின் பயனாக, தூத்துக்குடிக்கென 1 இலட்சம் டன் ஆஸ்திரேலிய நிலக்கரியை இறக்குமதி செய்ய மத்திய அரசு அனுமதித்துள்ளது. இது சுரங்கங்கள் மற்றும் உலோகங்கள் வர்த்தகக் கழக (எம்.எம்.டி.சி.) வாயிலாக இறக்குமதி செய்யப்படும். ஆஸ்திரேலியாவிலிருந்து மேலும் ஒரு இலட்சம் டன் நிலக்கரி இறக்குமதி செய்வதற்கு அரசு முயற்சித்து வருகிறது.

**கல்பாக்கத்திலிருந்து மின்சாரம் ஒதுக்கீடு :**

கல்பாக்கம் பிரிவு I-ன் உற்பத்தி முழுவதையும், பிரிவு II-ன் உற்பத்தியில் 50 விழுக்காட்டையும் நெய்வேலி இரண்டாம் அனல் மின் நிலைய முழு உற்பத்தியையும் தமிழ்நாட்டிற்கே வழங்கவேண்டுமென மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்றினை இப்பேரவை 1984 மார்ச் திங்களில் ஒருமனதாக நிறைவேற்றியதை மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவு கூறுவர். கல்பாக்கத்தைப் பொறுத்தவரை மத்திய அரசு நம் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு பிரிவு I-ன் முழு உற்பத்தியையும், பிரிவு II-ன் உற்பத்தியில் 50 விழுக்காட்டையும் தமிழ்நாட்டிற்குத் தர இசைந்துள்ளது

### ஊரக மின் வழங்கல்.

தமிழ்நாட்டில் ஊரக மின் வழங்கலின் தற்போதைய நிலை கீழே தரப்பட்டுள்ளது :—

| இனம். | மாநிலத்தில் மொத்த எண்ணிக்கை | 28–2–1985 அன்று மின் இணைப்பு வழங்கப்பட்டது. | விழுக்காடு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. நகரங்கள் .. | 439 | 439 | 100 |
| 2. கிராமங்கள் .. | 15,735 | 15,699 | 99.77 |
| 3. குக்கிராமங்கள் .. | 47,838 | 47,511 | 99.32 |
| மொத்தம் .. | 64,012 | 63,649 | 99.43 |
| 4. ஆதி திராவிடர் குடியிருப்புக்கள் | 26,154* | 26,137 | 99.94 |
| 5. விவசாய நீரேற்றங்கள் | 12 இலட்சம் (மதிப்பீடு) | 10,21,759 | 85.15 |
| 6. குடிசைகள் .. | .. | 6,20,554 | .. |

1984-85-ல், 1985 பிப்ரவரி வரை 26 கிராமங்கள், 39,153 விவசாய நீரேற்றங்கள், 58,277 குடிசைகள் மற்றும் 25 ஆதி திராவிடர் குடியிருப்புக்கள் மின் இணைப்பு பெற்றுள்ளன.

**1984-85-க்கான ஆண்டுத் திட்டம் :**

1984-85-ல், முதலீட்டுப் பணிகளுக்கென ரூபாய் 256.82 கோடி செலவிட வரவு-செலவுத் திட்டத்தில் தமிழ்நாடு மின் வாரியம் நிதி ஒதுக்கீடு செய்தது. ஆண்டுத் திட்டச் செலவினத்தின் கீழ் ரூ. 237.17 கோடி செலவிடவும், திட்டச் செலவினத்தில் அல்லாத ரூபாய் 7.72 கோடி விவசாய நீரேற்றங்கட்கு மின் இணைப்பு வழங்கச் செலவிடவும் திட்டக் குழு இசைவளித்துள்ளது. மேற்சொன்ன, இரு தொகைகளும் முழுவதுமாகச் செலவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

* பெறப்பட்ட தகுதியான விண்ணப்பங்கள்.



**வருவாய் மற்றும் வருவாய்ச் செலவினம் :**

1984 அக்டோபரில் குறிப்பிடப்பட்ட மற்றும் தற்போது எதிர்பார்க்கும் வருவாய் மற்றும் வருவாய்ச் செலவின விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

(ரூபாய் கோடியில்)

| | 1984 அக்டோபர் மதிப்பீடு | தற்போதைய எதிர் நோக்கு |
|---|---|---|
| வருவாய் வரவு .. .. | 535.90 | 527.52 |
| வருவாய்ச் செலவினம்— | | |
| எரிபொருள் .. .. | 183.73 | 213.30 |
| மின்சாரம் வாங்குதல் | 177.73 | 199.75 |
| நிர்வாகச் செலவுகள் மற்றும் மத்திய சுங்கவரி | 172.10 | 169.91 |
| வட்டி மற்றும் தேய்மானம் .. | 155.76 | 146.36 |
| | 689.32 | 729.26 |
| பற்றாக்குறை .. .. | 153.42 | 201.74 |

நிலக்கரிப் பற்றாக்குறையைத் தவிர்க்க, தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் எண்ணெயை எரிப்பதும், மற்றும் சிங்கரேணிச் சுரங்கங்களில் நிலக்கரியின் விலையேற்றம் ஆகியவை கூடுதல் எரிபொருள் செலவுக்கான காரணங்களாகும்.

**அலுவலர்கட்கு போனஸ் :**

1984-85-ம் ஆண்டுக் காலத்திற்கு 8.33 விழுக்காடு என ஏற்கப்பட்ட போனஸ் தொகையில், ரூ. 225 [illegible] கருணைத் தொகையாக வழங்கப்பட்டது.

தமிழ்நாடு மின்வாரியத்தில் செயல்திறனை மேம்படுத்த மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான கருத்துக்களை வரவேற்கிறேன்.

2579/அ.கு/85

தமிழ்நாடு

சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

அதிகாரபூர்வமான வெளியீடு

# OFFICIAL REPORT

புதன்கிழமை, மார்ச் 20, 1985—தொகுதி 212-எண் 3

Wednesday 20th March 1985—Volume 212 - No. 3

சட்டமன்ற மேலவைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. George, Madras-600 009.

(246

பொருளடக்கம்.


பக்கங்கள்.

1. அறிவிப்புகள்—

(1) ஆளுநரிடமிருந்து செய்தி 171

(2) பேரவையிலிருந்து செய்தி 171—172

2. கவன ஈர்ப்பு—

(1) அரசு ஊழியர்கட்கும், ஆசிரியர்கட்கும் அளிக்கப்பட்ட ஓய்வுகாலத் திட்டத்தை 1-4-1984-க்கு முன்னர் ஓய்வு பெற்று பின்னர் ஓய்வு பெற்ற ஆசிரியராக கல்வியாண்டு இறுதிவரை பணியாற்றிய ஆசிரியர்களுக்கும் நீட்டிப்பது குறித்து 172—175

(2) சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் தூய்மைப் படுத்தாத சாக்கடை நீரை கூவம் ஆற்றில் சமீப காலமாக விடுவதால் அரும்பாக்கம் மற்றும் அண்ணா நகர் வாழ் ஏழை மக்கள் கொசுத் தொல்லையினால் பாதிக்கப்படுவதும், டைபாயிட்-மலேரியா போன்ற நோய்க்கு ஆளாவதும் குறித்து 175—177

3. அரசின் தீர்மானம்—
நிகழ்ச்சி நிரலில் மாற்றம் குறித்து 177—178

4. 1984-85-ஆம் ஆண்டிற்கான இறுதி துணை விவர அறிக்கையை அளித்தல் 178—180

5. அரசின் சட்ட முன்வடிவுகள்—

(1) தமிழ்நாடு 1985-ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1985) 180—202


143941

D



Y 211,32'N85
NK.....

| | |
|---|---|
| (2) 1985-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1985) | 202—244 |
| (3) 1985-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1985) | 245—246 |
| (4) தமிழ்நாடு 1985-ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1985) | 246—247 |
| (5) 1985-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1985) | 247—248 |
| (6) தமிழ்நாடு 1985-ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1985) | 248—249 |
| (7) தமிழ்நாடு 1985-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1985) | 250—251 |
| (8) தமிழ்நாடு 1985-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1985) | 251—252 |
| 6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் | 252—253 |


## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

---

**புதன்கிழமை, 1985 மார்ச் 20.**

**பங்குனி 7, ரக்தாட்சி, திருவள்ளுவராண்டு—2016.**

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. அறிவிப்புகள்.

#### (1) ஆளுநரிடமிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆளுநர் அவர்கள் தமிழ் நாடு 1985 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவை ஆய்விற்கு எடுத்துக் கொள்வதற்கு தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

#### (2) பேரவையிலிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :

(1) தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/1985).

(2) 1985 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/1985).

(3) 1985 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/1985).

(4) தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/1985).

(5) 1985 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/1985).

(6) தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1985).

(7) தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 10/1985).

(8) தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/1985).

**2. கவன ஈர்ப்பு.**

**(1) அரசு ஊழியர்கட்கும், ஆசிரியர்கட்கும் அளிக்கப்பட்ட ஓய்வு காலத் திட்டத்தை 1—4—1984-க்கு முன்னர் ஓய்வு பெற்று, பின்னர் ஓய்வு பெற்ற ஆசிரியராக கல்வியாண்டு இறுதிவரை பணியாற்றிய ஆசிரியர் களுக்கும் நீட்டிப்பது குறித்து.**

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். "ஊதியத்தில் ரூபாய் 20 பிடித்தம் செய்து, ஓய்வு பெறும் போது குறைந்தது ரூபாய் 5 ஆயிரம் அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக் கும் அளிக்கப்பட்ட ஓய்வு காலத் திட்டத்தை, 1983-84 ஆம் கல்வி ஆண்டில் பள்ளியில் பணியாற்றி 1—4—1984-க்கு முன்னர் ஓய்வு பெற்று பின்னர் ஓய்வு பெற்ற ஆசிரியராக கல்வியாண்டு இறுதிவரை பணியாற்றி பின்னர் பணி விடுப்பு பெற்ற ஆசிரியர்களுக்கும் நீட்டிப்பது குறித்து".

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுபற்றிய விரிவான அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப் பட்டிருக்கிறது.

---

@ ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே தரப்பட்டிருக்கின்ற செய்திகள் யாவும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் பொருத்தமான ஒன்றாகத் தரப்பட்டிருக்கிறது. நான் விரும்பி குறிப்பாக ஒன்றைக் கேட்டிருந்தேன். அதாவது 31—3—1984-க்கு முன்னர் ஓய்வுபெற்று பின்னர் ஓய்வு பெற்ற ஆசிரியராக கல்வியாண்டு இறுதி வரை பணியாற்றி பின்னர் பணிவிடுப்பு பெற்ற ஆசிரியர்களுக்கும் நீட்டிப்பது குறித்து கேட்டிருந்தேன். அரசு ஊழியர்களுக்கு இல்லாத வசதி இது. அரசு ஊழியர்கள் ஒரு தேதியில் பணி ஓய்வுபெற்றால், அவர் அன்றே பணியிலிருந்து விடுவிக்கப்படுகிறார். ஆனால் ஆசிரியர்களைப் பொறுத்த வரையிலே, அவர்கள் ஓய்வுபெற்ற பின்னும் கல்வியாண்டு முடிகிற வரையிலே அவர் பணியாற்றிய பள்ளியிலேயே பணியாற்றுவதற்கு வாய்ப்பு தரப் பட்டிருக்கிறது. ஒருவர் 31—3—1984-க்கு முன்னரும், ஒருவர் 1—4—1984-க்குப் பின்னரும் ஓய்வு பெற்று ஆனால் ஓரே சமயத்தில் ஓய்வு பெற்ற ஆசிரியர்களாக கல்வியாண்டு இறுதிவரை பணியாற்றி பின்னர் பணி விடுப்பு பெற்றாலும், ஒருவர் இந்த ஐயாயிரம் ரூபாயைப் பெறுகிறார், ஒருவர் பெற முடியவில்லை. இருவரும் சேர்ந்துதான் பணிவிடுப்பு பெற்று பள்ளியை விட்டுச் செல்கிறார்கள். இவ்வாறு 31—3—1984-க்கு முன்னர் ஓய்வு பெற்றவர்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைந்தவர்கள். அவர்கள் வாழ்நாளை எண்ணிக்கொண்டிருப்பவர்கள். ஆகவே அவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையிலே மேற்படி 5,000 ரூபாயை வழங்க மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவர அறிக்கையில் இப்போது அது மறுக்கப்பட்டிருந்தாலும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, மேற்படி தொகையைத் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-05)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இது தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. திட்டம், இயல்பாக ஓய்வு பெறுபவர்களுக்கு மட்டுமே இருக்குமேயன்றி, மறு நியமன அடிப்படையிலே பணியாற்றுபவர்களுக்குப் பொருந்தாது. 1—4—1984-க்கு முன் ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கும் பொருந்தாது. எனவே 1983-84 ஆம் கல்வி ஆண்டில் பள்ளிகளில் பணியாற்றி 1—4—1984-க்கு முன் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், கல்வி ஆண்டு இறுதி வரையில் பணி நியமன

அடிப்படையில் பணியாற்றி, 1—4—1984-க்குப் பின்னர் ஓய்வுபெற்ற ஆசிரியர்களானால் இத் திட்டத்தை நீட்டிக்க வழிவகை இல்லை என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எப்போது ஓய்வு பெற்றாலும், எந்தத் தொழிலில் ஓய்வு பெறுகிறார்களோ அந்தத் தொழிலில் ஓய்வு பெற்றவர்களாக மாற்றத்தான் அந்த மாத இறுதியில் 30 அல்லது 31 ஆம் நாள் ஓய்வு பெறலாம் என்று வைக்கப்பட்டது. தேர்வு முடிவு காரணமாக ஆசிரியர்கள் மறு நியமன அடிப்படையில் அந்தக் கல்வி ஆண்டில் பணியாற்றி இருந்தாலும், அந்தத் திட்டம் பொருந்தாது. இடையிலே போகக் கூடாது என்பதற்காகத்தான் அவர்கள் ஓய்வு பெறுகிற காலத்திலே கொஞ்சம் நீட்டித்து ஒரு சிலர் இருக்கிறார்கள். மறு நியமன அடிப்படையில் எல்லாத் துறைகளிலும் பல வகைகளிலே நியமிக்கப்பட்டிருப்பதன் காரணமாக இது இயலாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே 1—4—1984-க்குப் பின்னர் ஓய்வுபெற்ற அனைவருக்கும் உண்டு. அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு எல்லாம் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. என்றாலும் இது கொண்டுவந்த 1—4—1984-க்குப் பின்னால்—10, 11 மாதங்கள் ஆகிறது—தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கோ, நகராட்சியினுடைய ஆசிரியர்களுக்கோ இந்தத் திட்டம் விரிவாக்கப்படவில்லை. சென்ற கூட்டத் தொடரிலே நிதி அமைச்சர் அவர்கள், நகராட்சி ஆசிரியர்களுக்கு ஆணை தயார் ஆகிக் கொண்டிருக்கிறது ; தனியார் பள்ளிக்கு அந்தப் பணத்தை எங்கே கட்டுவது, எப்படி எடுப்பது என்று ஆலோசனை செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லி 11 மாதங்கள் ஆகின்றன. இது வரையில் அது விரிவுபடுத்தப்படவில்லை. அதற்குரிய நடவடிக்கையை உடனடியாக எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் நிதி அமைச்சர் என்ற முறையில் இந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறேன் என்று சொன்னேன். அதற்கான வழிவகைகளைக் காணவேண்டும். இந்தக் கணக்கை எப்படி எடுத்துக்கொள்வது என்பதிலே சிக்கல்கள் ஏற்பட்டதன் காரணமாக, இதை கல்வித் துறை ஆராயும்படி சொல்லப்பட்டிருக்கிறது. கல்வித் துறையினர் ஆராய்ந்து கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். இவ்வளவு சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டாம் என்பதுதான் என்னுடைய கருத்து. ஆக விரைவிலே அவர்கள் ஆராய்ந்து தருவார்களேயானால், முறைப்படி அவர்களுக்குக் கிடைக்க வேண்டியது கிடைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். ஆனால் அதில் ஏதோ சிக்கல் இருந்தாலும்கூட, அதை நிதித் துறையைச் சார்ந்தவர்கள், அதிகாரிகள் கல்வித் துறையோடு கலந்து பேசி அந்தச் சிக்கல்களைத் தீர்த்து முறைப்படுத்திக்கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். ஆனால் ஏற்கெனவே அவர்கள் தொடர்ந்து 20 ரூபாய் கட்டிக்கொண்டு வந்திருப்பார்களானால், அவர்களுக்குத் தருகின்ற சூழ்நிலை ஏற்படும். இல்லாவிட்டால் அவர்கள் சேர்த்துக் கட்டுகின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தித் தருகின்ற ஒரு சூழ்நிலையை கல்வித் துறை விரைவிலே—மாண்புமிகு உறுப்பினர்கள் பல தடவை இங்கே எழுப்பியிருப்பதன் காரணமாகவும், இப்போது எழுப்பியிருப்பதன் காரணமாகவும், இதை அடிப்படையாக வைத்து அந்த முடிவை நிதித் துறைக்கு அனுப்பி வைப்பார்களானால், அது நடைமுறைப்படுத்தப்படும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.



**(2) சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் தூய்மைப் படுத்தாத சாக்கடை நீரை கூவம் ஆற்றில் சமீப காலமாக விடுவதால் அரும்பாக்கம் மற்றும் அண்ணா நகர் வாழ் ஏழை மக்கள் கொசுத் தொல்லையினால் பாதிக்கப்படுவதும், டைபாயிட்-மலேரியா போன்ற நோய்க்கு ஆளாவதும் குறித்து.**

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் தூய்மைப் படுத்தாத சாக்கடை நீரை சென்னையில் கோயம்பேடுக்கும் அரும்பாக்கத்திற்கும் இடையில் கூவம் ஆற்றில் சமீப காலமாக விடுவதால் அரும்பாக்கம் மற்றும் அண்ணா நகர் வாழ் ஏழை மக்கள் கொசுத் தொல்லையினால் பாதிக்கப் படுவதும், டைபாயிட்-மலேரியா போன்ற நோய்க்கு ஆளாவதும் குறித்து."

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவையின் முன்வைக்கப்பட்டுள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மிக விரிவான ஒரு விவர அறிக்கை இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. விவர அறிக்கையின் 3-வது பத்தியில் குறிப்பிட்டவாறு, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஒரு பகுதி—இடைநிலை சுத்தம் செய்யும் தொட்டி—காலம்

@ 255-257 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

போக்கில் பழுதடைந்து உள்ளதாகவும், இதனைச் செப்பனிட வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் தவிர, கூவம் ஆற்றில் இரு கரைகளிலும் உள்ள குடிசைப் பகுதிகளிலிருந்து கழிவுநீர் ஆற்றில் கலப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு, ஒரு நாளைக்கு இவ்வாறு கழிவுநீர் 40 லட்சம் காலன் கூவம் ஆற்றில் கலப்பதாகவும் இதே அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படி இடைக் காலத்தில் கழிவுநீர் தொட்டியிலிருந்து, நிலையத்தின் ஒரு பகுதி பழுதடைந்திருப்பதன் காரணமாக, அந்தக் கழிவுநீர் சுத்தம் செய்யப்படாமலேயே கூவம் ஆற்றில் கலந்துவிடப்பட்ட கால கட்டத்தில் தான் ஏராளமான கொசுக்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன என்று நமக்குத் தெரிய வருகிறது. ஆகவே இந்தக் கழிவுநீர் சுத்திகரிப்பு பகுதியில், அந்தப் பழுதடைந்த பகுதி இன்னும் சுத்திகரிப்பு செய்யப்படாத காரணத்தாலே பல பிரச்சினைகள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன.

(முற்பகல் 10-10)

கடந்த சில நாட்களாக ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு மூல காரணமாக இது அமைந்துள்ளது என்றும் சொல்லப்படுகிறது. எனவே கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய இயந்திரம் பழுதடைந்திருப்பின், அதைச் செப்பனிட உரிய நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன். அதோடு தற்போது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் பழுதடைந்துள்ள பகுதிகளைச் சரி செய்வதற்கான முறையில் விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவாரா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, சுத்திகரிப்பு நிலையம் பழுதடைந்த காரணத்தாலேதான் இப்படிப்பட்ட நிலைகள் ஏற்பட்டிருக்கக்கூடும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். அப்படி அந்த இயந்திரம் பழுதடைந்து நீண்டகாலமாகப் பழுதுபார்க்கப்படாத நிலையிலிருந்தால், அதுபற்றி விளக்கத்தை அரசு நிச்சயமாகக் கேட்டுப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளும், ஏற்பட்டுள்ள சிக்கலுக்குக் காரணமாக மாண்புமிகு உறுப்பினர் சொல்லும் காரணம், கூவம் ஆற்றின் படுகையில் தண்ணீர் தேங்கி நிற்பதுதான் என்றார்கள். எனவே அந்தப்



படுகைகளில் தேங்கி நிற்காத அளவுக்குக் கால்வாய் கட்ட வேண்டும். அந்த வகையில் பொதுப் பணித் துறை பணியை மேற்கொள்ள வேண்டும். அந்தப் பணியை விரைவுபடுத்த அரசு முயற்சிக்கும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவர் அவர்களே, அரசால் நிறைவேற்றப்பட்ட பொல்யூஷன் ஆக்ட்-க்கேகூட விரோதமான முறையில் சுத்திகரிக்கப்படாத நீர் தற்போது கூவம் ஆற்றில் விடப்படுகிறது. எனவே சட்டத்திற்கே விரோதமான இந்தத் தன்மையையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, கூவம் ஆற்றின் படுகையில் தண்ணீர் தேங்கியிருப்பதைச் சுத்தம் செய்து கொசுக்களின் இனப் பெருக்கம் இல்லாமல் செய்ய பல நடவடிக்கை எடுப்பதாக விவர அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. உள்ளபடியே கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் அவையில் வரும்போது, விரிவான அறிக்கையை மட்டுமே அதிகாரிகள் அனுப்பிவைப்பது வழக்கமாக இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து நேரில் அந்த இடத்தைச் சென்று பார்வையிட்டு உண்மையிலேயே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா என்பதையும், அதிகாரிகள் கொடுத்த விவரங்கள் உண்மையா என்பதையும் பார்த்தால், உண்மை விளங்கும் என்பதையும் எடுத்துச் சொல்லி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடத்தை நேரில் சென்று பார்வையிடுவதற்கு முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசு கவனம் செலுத்தும் என்று சொன்னாலே, அமைச்சர் அதை நேரடியாகப் பார்வையிடுவார் என்பதும் அதில் அடங்கும்.

3. அரசின் தீர்மானம்.

நிகழ்ச்சி நிரலில் மாற்றம் குறித்து.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"மேலவை விதி 21 (3)-ன் கீழ், இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள இனம் 3 ஆன 1984-85 ஆம் ஆண்டிற்கான இறுதி ஆணை விவர அறிக்கையை அளித்தலை இனம் 2-க்கு முன்பு எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"மேலவை விதி 21 (3)ன் கீழ், இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள இனம் 3 ஆன, 1984-85 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை விவர அறிக்கையை அளித்தலை, இனம் 2-க்கு முன்பு எடுத்துக் கொள்ள வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**4. 1984-85 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை விவர அறிக்கையை அளித்தல்.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே,

1984-85 ஆம் ஆண்டிற்குரிய இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன். 1984-85 ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், எதிர்பார்க்கப்பட்ட செலவினங்கள் அனைத்தையும் சேர்க்க, அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. எனினும், மாநில அரசின் பொறுப்பு நாள்தோறும் அதிகரித்து வருவதால் இத் துணை மதிப்பீடுகளை தற்போது அவை முன் வைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதும் அவர்கள் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வு காண்பதும் அரசின் பொறுப்பாகும். அதன் பயனாக பல புதிய திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டியுள்ளது. மற்றும் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களுக்கான செலவையும் அதிகரிக்க வேண்டியுள்ளது. இந்த மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ. 976.12 கோடியில் ரூ. 336.77 கோடி வருவாய்க் கணக்கிலும் ரூ. 639.35 கோடி மூலதன, கடன் கணக்கிலும் வருகின்றன. இருப்பினும், வழிவகை முன்பணங்கள், மிகைப்பற்று ஆகிய வற்றை இந்திய ரிசர்வ் வங்கிக்கு அவ்வப்போது திருப்பிச் செலுத்தும்போது, நடைமுறைத் தேவைகளை நிறைவு செய்வதற்காக மட்டுமே கடன் கணக்கில் ரூ 530 கோடி காட்டப்படுகிறது. துணை மதிப்பீடுகள் மூலம் கோரப் பட்டுள்ள கூடுதல் தொகை குறித்த விவரங்களும் அதற்கான காரணங்களும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிக்கையில் விரிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளன. ஒரு சில முக்கியமான இனங்கள் பற்றி மட்டும் சுருக்கி குறிப்பிட விழைகிறேன்.





1984-85 ஆம் ஆண்டில், இம் மாநிலத்தில் இயற்கைச் சீற்றங்களினால் பெருஞ்சேதம் ஏற்படவில்லையென்றாலும், கடந்த ஆண்டின் இறுதியில் கடும் மழையினாலும் வெள்ளத்தினாலும் 1984-85 ஆம் ஆண்டின் புயலினாலும் பாதிக்கப்பட்ட பகுதிகள் சில இருந்தன. 1984 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் போர்க்கால நடவடிக்கை அடிப்படையில் துயர் தணிப்புப் பணி களை அரசு மேற்கொண்டது. இவ்வகையிலான செலவின் உச்சவரம்பை மத்திய அரசு ரூ. 18.76 கோடியாக நிர்ணயித்துள்ளது. 31—3—1985-க்கு முன்னர், மாநில அரசு, இத்தொகை முழுவதையும் துயர் தணிப்புப் பணி களுக்காகச் செலவிட இயலும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(முற்பகல் 10-15)

அரசு, வேளாண்மைத் துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. வேளாண்மைத் துறையில் நவீன முறைகளையும் இடு பொருள் களையும் பயன்படுத்துவதை மேலும் ஊக்குவிக்க வேண்டுமென்ற நோக்கத் துடன் நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு நேரடியாக நெல் வழங்கும் உழவர்களுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 15 உற்பத்தி ஊக்கத் தொகை அளிப்பது என்று அரசு முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக துணை மதிப்பீட்டில் ரூ. 14 கோடி சேர்க்கப்பட்டுள்ளது. பயிர்-தாவர பாது காப்பு நடவடிக்கைகளை அரசு அதிகரித்துள்ளது. இதற்காகத் துணை மதிப்பீட்டில் ரூ. 4.35 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் அரசுப் பணியாளர்களுக்கு 9 முறை அகவிலைப்படி வீதங்களை அரசு உயர்த்தியுள்ளது. மேலும், மாதம் ரூ. 350-ம் அதற்கு மேலும் அடிப்படை ஊதியம் பெறும் அரசுப் பணியாளர்களுக்கு ரூ. 300 என்ற விதத்திலும் ரூ 350-க்குக் குறைவாக அடிப்படை ஊதியம் பெறும் பணியாளர்களுக்கு ரூ. 200 என்ற விதத்திலும் ஒட்டுமொத்த நிவாரணத் தொகையை அரசு வழங்கியுள்ளது. இதற்கான மொத்தச் செலவு தோராயமாக ரூ. 90 கோடியாகும். எனினும், அதன் ஒரு பகுதி அந்தந்த மானிய மீதத்திலிருந்து ஈடு செய்யப்படுகிறது. எஞ்சிய தொகை இறுதித் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. இவை 'சம்பளங்கள்' என்பதன் கீழ் கூடுதல் நிதி தேவைப்படுவதற்கான காரணங்களாகும்.

சிறு உழவர்களுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கவும், ஏனைய உழவர் களுக்கு பரித் திறன் ஒன்றுக்கு ரூ. 75 என்ற சலுகை வீதத்தில் மின்சாரம் வழங்கவும் அரசு முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக மின்சாரியத்

திற்கு ஏற்படக்கூடிய இழப்பு பெருமளவிற்கு இருந்த போதிலும், இப்போதைக்கு இந்த இழப்பை ஓரளவிற்குச் சரிக்கட்ட ரூ. 10 கோடி வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தைத் தடையின்றி செயல்படுத்த அரசு அச்சங்கத்திற்கு ரூ. 2.25 கோடி வழிவகை முன்பணங்கள் வழங்க அனுமதி வழங்கியுள்ளது.

தொழில் வளர்ச்சியை மேம்படுத்த வேண்டுமென்பதில் அரசு அதிகக் கவனம் செலுத்தி வருகிறது. அதற்கேற்ப தமிழ்நாடு பத்திரிக்கைத் தாள்-காகித நிறுவனம் கரும்புச் சக்கையிலிருந்து காகிதத்தை வணிக முறையில் உற்பத்தி செய்வதற்காக அந்நிறுவனத்திற்கு ரூ. 13.5 கோடி வழிவகை முன்பணம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகை துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தத் துணை மதிப்பீட்டில் கேட்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கங்கள் தொடர்பான சில முக்கிய திட்டங்களை மட்டுமே நான் இங்கு கோடிட்டுக் காட்டியுள்ளேன். மக்களின் பெருகிவரும் தேவைகளையும், எதிர்பார்ப்புகளையும் நிறைவு செய்யவே இக்கூடுதல் நிதி ஒதுக்கம் வேண்டப்பட்டுள்ளது என்பது மேற்குறிப்பிட்டுள்ள திட்டங்களிலிருந்து தெளிவாகும். இதில் உள்ள அனைத்து இனங்களுக்கும் ஒப்புதல் அளித்து, அவற்றிற்குத் தேவையான நிதி ஒதுக்கத்தை வழங்கி இம் மாநில அரசு வளர்ச்சிப் பணியில் மேலும் முன்னேற்றம் அடைய அனுமதியளிக்குமாறு அவையை வேண்டி அமர்கிறேன்.

வணக்கம்.

### 5. அரசின் சட்டமுன்வடிவுகள்.

#### (1) தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1985).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26 ஆம் நாள் அப்போதைய சட்டமன்றப் பேரவை முன்னவர் ஒரு அறிவிப்பை வெளியிட்டார். அதாவது, 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் நாளிலிருந்து—



(ஏ) அமைச்சர்கள், சட்டமன்றப் பேரவைத் தலைவர், மேலவைத் தலைவர், சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர், சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் ஆகியோரின் சம்பளம் மாத மொன்றுக்கு மேலும் ரூபாய் 200 அதிகரிக்கப்படும் ;

(பி) நிதியாண்டு ஒன்றுக்கு ரயில்வே கூப்பன் தொகை 3,000 ரூபாயிலிருந்து 4,000 ரூபாயாக அதிகரிக்கப்படும். இந்த அறிவிப்பையொட்டி, தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 3, 4, 5, 6 ஏ (1), 12 (1) (ஏ), 12 ஏ (1) ஆகிய பிரிவுகளைத் திருத்தக் கருதப்பட்டுள்ளது.

உறுப்பினர்களுக்கு 12 ஏ (1) பிரிவின்படி, இரயில்வே கூப்பன்கள் வழங்குவது போல், முதலமைச்சர், பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், மேலவைத் தலைவர், மேலவைத் துணைத் தலைவர், அமைச்சர்களின் பேரவைச் செயலாளர்கள் உட்பட அமைச்சர்களுக்கு வழங்கப்படும்.

சட்டமன்றப் பேரவைத் துறையும், சட்டமன்ற மேலவைத் துறையும் தலைமைச் செயலகத்தின் தனித்துறைகளாக இருந்து வந்தன ; அதற்குப் பதிலாக அவைகள் தனித்தனிச் செயலகங்களாக அமைக்கப்பட்டதன் காரணமாக 12 (4.ஏ) (பி) பிரிவில் வருகின்ற சட்டமன்றப் பேரவைத் துறை பற்றிய குறிப்பீடுகளையும் மேலவைத் துறைக் குறிப்பீடுகளையும் அந்தந்தச் செயலகத்தைக் குறிக்கும் குறிப்பீடுகளாக மாற்றக் கருதப்பட்டுள்ளது.

(முற்பகல் 10-20)

மேலும் மேற்கூறிய சட்டத்தின் கீழ் செய்த அல்லது பிறப்பிக்கப்பட்ட யாதொரு விதி, அறிக்கை, படிவம் அல்லது ஆணை ஒன்றில் அந்தந்தத் துறைகள் பற்றி வருகின்ற குறிப்பீடுகளை சம்பந்தப்பட்ட செயலகத்தைக் குறிப்பிடுகின்ற குறிப்பீடுகளாகப் பொருள் கொள்ள வேண்டும் என்பதற்கான விதிமுறையை இயற்றவும் கருதப்பட்டுள்ளது.

மேற்கூறியவற்றை அமுல்படுத்துவதற்கு தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளம் வழங்கல் (இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவு சட்டப் பேரவையில் 1984 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 9 ஆம் நாள் அறிமுகம் செய்யப்பட்டது. ஆனால், சட்ட முன்வடிவு சட்டப்பேரவையில் ஆய்விற்கு எடுத்துக்கொள்வதற்கு முன்பாகவே சட்ட மன்றங்கள் நாள்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச் 20

குறிப்பிடாமல் 1984 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15 ஆம் நாள் அன்று ஒத்தி வைக்கப்பட்டன. மேலும் சட்டமன்றக் கூட்டத்தொடர் ஆளுநரால் 1984 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31 ஆம் நாள் அன்று முடிவுக்கப் பட்டது. பிறகு சட்டப்பேரவை 1984 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 15 ஆம் நாள் பிற்பகல் கலைக்கப்பட்டது. சட்டப்பேரவையில் ஆய்வுக்காக நிலுவையில் வைக்கப்பட்டிருந்த சட்ட முன்வடிவு காலாவதியாகிவிட்டது. மேற்கூறிய காரணத்தால் மேலே கூறப்பட்ட சலுகைகளை அமுல்படுத்து வதற்குத் தற்பொழுது ஒரு புதிய சட்ட முன்வடிவை சட்டப் பேரவையில் அறிமுகப்படுத்த கருதப்பட்டுள்ளது. அதை தம் பேரவையில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதை தம் மேலவையிலும் ஏற்றுக் கொள்வதற்குக் கருதி இந்தச் சட்டமுன்வடிவு இங்கே கொண்டுவரப்படுகிறது. இதை ஏற்றுக் கொள்ளுமாறு இந்த அவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1985 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்களை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த நிதி திருத்த மசோதாவிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற 8-வது பிரிவு பற்றி என்னுடைய கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்திய அரசியல் சட்டத்தினுடைய 187 வது பிரிவிலே ஆர்ட்டிக்கிள் 187 (1) ல் "The House or each House of the Legislative of a State shall have a separate secretarial staff."

@ 257–259 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



985 மார்ச் 20] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

அதாவது, ஒவ்வொரு அவைக்கும் தனியாகச் செயலகம் இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை அடிப்படையாகக் கொண்டு இந்தத் திருத்த மசோதாவை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்றார்கள். இதை நான் எடுத்துச் சொல்வதற்குக் காரணம் இதுவரை கவுன்சில் செக்கரட்டரியேட் ஆனாலும், அசெம்பிளி செக்கரட்டரியேட் ஆனாலும் தலைமைச் செயலகத்தின் கட்டுப்பாட்டில் வந்தது. அது ஒரு பெரிய பிரச்சினையாக ஆகிவிட்டது. இந்தச் சட்ட மன்றத் துறையிலே சில காலம் செயலராகப் பணியாற்றிய திரு. ஆர். வி. கிருஷ்ணய்யர் அவர்கள் மகன் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் இது குறித்து ஒரு கட்டுரை எழுதி, அந்தப் பிரச்சினை உரிமைப் பிரச்சினையாக மாறும் அளவுக்குப் போகின்ற நிலைமைகளை அன்றைக்கு நாம் பார்த்தோம். நல்லவேளையாக, நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அரசியல் அமைப்புச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். நம்முடைய அவை செக்ரட்டரி ஆனாலும் சட்டமன்ற பேரவைச் செக்ரட்டரி ஆனாலும், அவர் களும் நம்மோடு ஒரு பக்கம் இருந்து பணியாற்றுவதை நாம் பார்க்கிறோம். இன்று பத்திரிகையிலே ஒரு செய்தியைப் பார்த்தேன். நான் அதற்குள் மேலும் போக விரும்பவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலே ஒரு அசம்பா விதம் நடந்திருக்கிறது. நம் அவையின் செயலர் என்ற நிலையில் அல்ல. நான் மேலும் சொல்ல விரும்பவில்லை. அதிலே அவருக்கு ஒரு பாதகம் ஏற்படும் அளவுக்கு கருத்துக்களை நான் பார்த்தேன். நம்முடைய செயலர் அவர்கள் என்னையும்விட பொறுமையானவர்கள். கோபமே வராது. அப்பேர்ப்பட்ட செயலருக்கு ஏற்பட்ட நிலையை எண்ணும்போது, நம்முடைய உறுப்பினர்களுக்கு இதுபோல சலுகைகள் அளிப்பது மாத்திரமல்ல, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அவர்களுக்குரிய கடமைகளை உணர்த்த வேண்டும் என்றும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உறுப்பினர்களின் சம்பளத்தை ரூ 200 அளவுக்கு உயர்த்தி இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் சம்பளம் ரூ. 300 என்று நான் கருதுகிறேன். அது ரூ. 500 ஆக அதிகப்படுத் தப்பட்டிருக்கிறது. நேற்று நடைபெற்ற சம்பவத்தைக் கூட ஆழமாக, ஆழ்ந்து ஆய்ந்து பார்த்தால், ஏன் அந்த உறுப்பினர்களுக்குக் கோபம் வந்தது என்றால் சட்டமன்றத் துறையாலே கொடுத்திருக்கின்ற விடுதியிலே வசதியில்லை, உணவு வசதி இல்லை என்று மெம்பர்கள் பல பேர்கள் சொல்கின்றார்கள். "நம்

சட்டமன்ற உறுப்பினர்கள் ஹாஸ்டலில் கொடுக்கும் சாப்பாட்டைச் சாப்பிட்டால் அடுத்த நாள் வயிற்றுவலி வந்துவிடும்" என்று அவர்கள் சொல்கின்றார்கள். அதையெல்லாம் சரி செய்ய மசோதா கொண்டு வந்திருந்தால் நான் மகிழ்ச்சியுற்றிருப்பேன்.

(முற்பகல் 10-25)

200 ரூபாய் சம்பள உயர்வு என்று சொல்லும்போது, பத்திரிகையில் 200 ரூபாய் உயர்வு என்று வருவதில்லை. சில பத்திரிகைக்காரர்கள் 1,250 ரூபாய் கிடைக்கிற அளவுக்கு இருப்பதாகச் சொல்லுகிறார்கள். இப்போது 200 ரூபாயைச் சேர்த்துக் கொடுக்கிறார்கள். மொத்தம் 1,250 ரூபாய் கிடைக்குமென்று நினைக்கிறேன். நான் சொல்ல விரும்புவது, சம்பளத்தை மாத்திரம் உயர்த்தினால் போதுமா என்றால் இல்லை. இப்போது அமைச்சர்கள் அரசாங்க வீடுகளிலே குடியிருக்கிறார்கள். அரசாங்க வீடுகளில் குடியிருக்கவில்லை என்றாலும், வீட்டு வாடகை வாங்கிக்கொள்ளலாமென்று சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, தன்னுடைய வீட்டுக்கு வாடகை வாங்கிக்கொள்ளவில்லை. இன்னும் சொல்லப் போனால், அறிஞர் அண்ணா அவர்கள் இது போன்ற சட்டங்களை விரும்பவில்லை. இன்றைக்கு அமைச்சர்களைப் பொறுத்த வரையிலும், சொந்த வீடுகளில் குடியிருந்தாலும், பொதுப் பணித் துறை நிர்ணயிக்கும் வாடகையை, உச்சகட்டமாக ரூபாய் 2,000 வரை வீட்டு வாடகையாகப் பெற்றுக்கொள்ள வகை செய்யும் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்போது மெயின்டெனன்ஸைப் பொதுப் பணித் துறை பார்க்கிறது; செக்யூரிட்டிக்கு போலீஸ் போடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் செலுத்த வேண்டிய கார்ப்பரேஷன் டாக்ஸை வேண்டுமானால் செலுத்தலாம். அமைச்சர்கள் எல்லோருக்கும் வீடு இருக்க முடியாது. ஒரு சிலருக்குச் சொந்த வீடு இருக்கலாம். அப்படி சொந்த வீடு வைத்திருப்பவர்களுக்கு மாதத்திற்கு 2,000 ரூபாய் கொடுக்கலாமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த மசோதாவிலே, மொத்தச் செலவு ஆண்டுக்கு 11 லட்சம் ரூபாய் ஆகலாமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய நிதி அமைச்சரவர்கள் இது பெரிய தொகையல்ல, இன்னும் கூடக் கொடுக்கலாமென்று சொல்கிறார்கள். மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் இந்த மசோதாவை அறிமுகப்படுத்தும்போது, மிகவும் கஷ்டப்பட்டு கட்டுக்களைத் திறந்தார்கள். அந்த அளவுக்கு கட்டுக்களை மிகவும் கஷ்டப்பட்டு திறக்கிறார்கள் என்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய நிதி அமைச்சரவர்கள்



மிகவும் கண்டிப்பானவர், இன்றைக்கு சலுகைகள் என்ற அளவில் பணம் மாத்திரம் போதாது. இன்றைக்கு வருகிற பார்வையாளர்கள் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. உறுப்பினர்களுக்கு உதவுவதற்கு ஒரு டைப்பிஸ்ட் வேண்டுமென்று ஏற்கனவே கூட ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்ல, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர்களும் சென்னை நகரிலே இருக்க வீட்டு வசதி செய்து தர வேண்டும். அவர்கள் ஹாஸ்டலிலே சாப்பிடுவதால், அல்சர் எல்லாம் வருவதாகச் சொல்லுகிறார்கள். எனவே கொடுக்கும் வாடகையை அதிகப்படுத்தி, தனியான வீட்டை அவர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றும் ஒன்று. எம். எல். ஏ., எம். எல். சி. க்களுக்கு மாத்திரமல்ல, அமைச்சர்களுக்கும் ரயில்வே கூப்பன் கொடுக்கலாமென்று இருக்கிறது. ஏற்கெனவே அவர்கள் டி. ஏ. வாங்குகிறார்கள். சில மந்திரிகள் ஏ. சி. யிலே போகிறார்கள். அதுவும் காலையிலே போவது, மாலையிலே வருவது, அடுத்த நாள் மீண்டும் காலையிலே போவது; மாலையிலே வருவது. இப்படி 3,000 ரூபாய், 5,000 ரூபாய் என்று செலவாகிறது. அப்படிப்பட்ட அமைச்சர்களுக்கு ஏன் கூப்பன் என்று தெரியவில்லை. இன்னொரு கருத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன். தவறாக நினைக்கக்கூடாது. வயதில் முதிர்ந்த, உடல் நலிந்த அமைச்சர்கள் வேண்டுமானால் ஏ.சி.யில் போகட்டும், மற்றவர்கள் ஏ.சி.யில் போக வேண்டாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 'தலைவர் உட்பட.'

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வயதானவர்கள், உடல் நலக் குறைவானவர்கள் [illegible] வேண்டுமானால் ஏ.சி.யில் போகலாம். இங்கே இருக்கின்றவர்கள் என்னைவிட வயது குறைவானவர்கள் . . . .

திரு. ஜி. சுவாமிநாதன்: வயதான அமைச்சர்கள், வயதான தலைவர்கள், துணைத் தலைவர்கள், ஏ.சி.யில் போகலாம். (சிரிப்பு).

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தலைவர் பொறுப்புக்கு வந்துவிட்டால் இளைஞர்கூட வயதானவர் ஆகிவிடுகிறார். (சிரிப்பு).

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அவர்களை நான் சேர்க்காததால், அவர்கள் விட்டுக் கொடுத்ததாக எடுத்துக் கொள்ளட்டும். இரண்டாம் வகுப்பில் போய்ப் பாருங்கள், அப்போதுதான் கஷ்டம் தெரியும். அரசாங்கப் போக்குவரத்து இருக்கிறது. அதில் போக்குவரத்துத் துறை அமைச்சராவது

போக வேண்டும். 300 மைல்கள்கூடப் போக வேண்டாம். 100 மைல்கள் போய்ப் பாருங்கள். அமைச்சரவர்கள் அப்படி பிரயாணம் செய்வதால், இலாக்காவுக்கும் பெருமை, அதில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் அமைச்சரே வருகிறார் என்ற பெருமை கிடைக்கும்.

(முற்பகல் 10-30)

**திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அமைச்சராக இருந்தபோது இரண்டாம் வகுப்பு ரெயில் பெட்டியில் தான் போய்க்கொண்டிருந்தாரா ?

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியாது. நான் செக்கன்ட் கிளாஸ் மற்றும் பஸ்ஸில் எல்லாம் போயிருக்கிறேன்.

**திரு. எஸ். இராகவானந்தம் :** நான் கேட்பது ரெகுலராக அப்படிப் போயிருக்கிறார்களா?

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ரெகுலராகவும் போயிருக்கிறேன்.

**திரு. எஸ். இராகவானந்தம் :** ஏதோ ஒரு நாள் இரண்டு நாள் செக்கன்ட் கிளாஸில் போகலாம், மூன்றாவது வகுப்பில் கூட போகலாம். நடந்து கூட போய், அதை போட்டோ பிடித்துக் காட்டலாம். ஆனால் ரெகுலாரிட்டியாக எந்த கிளாஸில் போய்க்கொண்டிருந்தார்கள் என்பதைச் சொன்னால், நாங்களும் அதைப் பின்பற்றலாம் அல்லவா ?

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** என்னுடைய அனுபவத்தைச் சொல்கிறேன். நான் சொல்வதைக் கேட்காவிட்டால் என்ன செய்வது? 10 வருடம் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தில் இதைச் சொல்கிறேன். (சிரிப்பு) இவ்வாறு போவது நல்லதாகத் தெரியவில்லை. நான் நல்லதிற்குச் சொல்கிறேன். செக்கன்ட் கிளாசில் போகமாட்டோம் என்று சொன்னால். வேண்டுமானால் ஏரோபிளேனில் அல்லது ஏ.சி. யில் போய் வாருங்கள். யார் வேண்டாம் என்று சொன்னது? அனுபவரீதியாக இப்படியெல்லாம் போவது நல்லதாகத் தெரியவில்லையென்று சொல்கிறேன். நான் சொல்வது நல்லது என்று உங்களுக்குப் படுகிறது என்றால் அப்படிச் செய்யுங்கள். எல்லோருமே இதைப் பின்பற்ற வேண்டுமென்று நான் சொல்லவில்லை. முடியாது என்றால், எல்லோரும் ஏ.சி.யில் போய் வாருங்கள்.



**திரு. ஆர். டி. சீத்தாபதி :** மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சாதிக் பாட்சா அவர்கள் [illegible] நாளையதினம் இங்கே வீட்டு வசதி அமைச்சராக இருக்கிற மாண்புமிகு திரு. நல்லுசாமி அவர்கள் செக்கன்ட் கிளாஸில் செல்வதாக இருக்கிறார்கள் என்று நான் அறிகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 7 சட்ட முன்வடிவுகள் இருக்கின்றன. உறுப்பினர்கள் விவாதத்தில் கூடுமானவரை குறுக்கிடாமல் இருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். கூடுமானவரை தனிப்பட்டவர்கள் பற்றி இங்கே விவாதம் வேண்டாம்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** சென்னையிலே இருக்கிற சட்டமன்ற மேலவை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கு நான் முதலிலே சொன்னது போல், வீட்டு வசதி செய்து தர வேண்டும். அதுபோல் நான் சொல்லியுள்ள வசதிகளையும் செய்து தர வேண்டும். 200 ரூபாயை சம்பளத்துடன் சேர்த்துக் கொடுத்தால் பணம் உயர்த்தப்பட்டுள்ளது என்ற பெயர் தான் வருமே தவிர, வசதிகள் செய்து கொடுப்பதுபோல் ஆகாது. இந்த விஷயங்களையெல்லாம் இச்சந்தர்ப்பத்தில் சொல்லியாக வேண்டும் என்பதற்காகச் சொன்னேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினரைப் பேச வேண்டாமென்று நான் சொல்லவில்லை. குறுக்கீடுகள் வேண்டாமென்று தான் சொன்னேன்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சீத்தாபதி குறுக்கிட்டிருக்கிறார். அது ஆபத்து. எனவே இத்துடன் என்னுடைய பேச்சை முடித்து அமைகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் திருத்தச் சட்ட முன்வடிவின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இதன்மூலம் மேலவைக்குத் தனிச் செயலகம் ஏற்படுத்தப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். இப்படி தனிச் செயலகம் ஏற்படுத்தப்பட்டிருப்பதன் காரணமாக சில புதிய பதவிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. புதிய பதவிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றனவே தவிர, அந்த அலுவலர்களுக்குத் தேவையான அலுவலக அறைகள் சரியான முறையில் ஏற்பாடு செய்யப்படவில்லை என்பதையும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இங்கே உருவாக்கப்பட்டிருக்கின்ற பதவிகளுக்கு ஏற்ப, அவர்களுக்குரிய அலுவலக அறைகளை விரைவில் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும்.

[திரு. அ. ரா. லெட்சுமிகாந்தன்] [1985 மார்ச் 20

அப்பொழுதுதான் அவர்கள் தங்களுடைய கடமைகளைச் சரியான முறையில்
ஆற்ற முடியும். சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்களுக்கு
ஊதிய உயர்வு என்பது ஒருபுறம் இருந்தாலும், நாங்கள் நண்ட காலமாகக்
கோரிவரும் வேண்டுகோள் ஒன்று இருக்கிறது. அமைச்சர்களுக்கு எவ்வாறு
கடமைகளும், பொறுப்புகளும், அலுவலகங்களும் இருக்கின்றனவோ அதுபோல
சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஏராளமான கடமைகளும், பொறுப்புகளும்,
அலுவலகளும் இன்றையதினம் இருக்கின்றன. தினந்தோறும் பொதுமக்களிட
மிருந்து ஏராளமான கோரிக்கை மனுக்கள் வருகின்றன. அதோடு தினந்
தோறும் ஏராளமான மக்கள் சட்டமன்ற உறுப்பினர்களைச் சந்திக்க
வருகிறார்கள். அவர்கள் தருகின்ற கோரிக்கை மனுக்கள் மீது உரிய தீர்வு
கண்டு கொடுக்க வேண்டிய ஜனநாயகக் கடமை, பொறுப்பு சட்டமன்றப்
பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்களுக்கு இருக்கிறது. சட்டமன்ற
உறுப்பினர்கள் தங்களுடைய கடமைகளைச் சரியான முறையில் செய்ய
ஒவ்வொரு தொகுதியிலும் ஓர் அலுவலகம் வேண்டுமென்று கடந்த 5 ஆண்டு
களுக்கு மேலாக இதே அவையில் கோரி வந்துள்ளோம். இன்னும் எங்களுடைய
கோரிக்கை ஏற்கப்படவில்லை என்பது மிகவும் வருத்தத்திற்குரியது. சட்ட
மன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய கடமைகளை
ஜனநாயகக் கடமைகளை சரியான முறையில் ஆற்ற வேண்டுமென்றால்,
அவசியம் எங்களுடைய தொகுதியில் ஒவ்வொருவருக்கும் ஓர் அலுவலகம்
இருக்க வேண்டும். குறைந்த பட்சம் அங்கே ஓர் இளநிலை எழுத்தாளர்
வேண்டும். அல்லது மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள்
குறிப்பிட்டதுபோல், ஒவ்வொரு தொகுதியிலும் ஓர் டைப்பிஸ்ட்-கம்-இளநிலை
உதவியாளர் பதவி ஏற்படுத்தப்பட வேண்டும். அப்படிச் செய்தால், உறுப்
பினர்கள் தங்கள் கடமைகளைச் செய்யும்போது, அவர்களுக்கு இவர்கள் உறு
துணையாக இருக்க வாய்ப்பு ஏற்படும். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்
எங்களுக்கு இப்போது இருக்கின்ற இன்னல்களை உணர்ந்து அவசியம் இந்த
அடிப்படை வசதியைச் செய்து தர வேண்டுமென்று நான் மிகவும் முக்கிய
மான இந்தக் கோரிக்கையை இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்திக் கேட்டுக்
கொள்கிறேன். உறுப்பினர்களுக்கு ரயில் கட்டணக் கூப்பன்கள் ரூ. 3,000
லிருந்து ரூ. 4,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஆனால் அதே சமயத்தில் மத்திய ரயில்வே பட்ஜெட்டில் ரயில் கட்டணங்கள்
தாறுமாறாக உயர்த்தப்பட்டுள்ளன. இப்போதிருக்கிற கட்டணத்தில் 12½
சதவீதம் உயர்த்தப்பட்டிருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன. இதனால்
மிகவும் சுமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ரயில் கட்டணக் கூப்பன்



1985 மார்ச் 20] [திரு. அ. ரா. லெட்சுமிகாந்தன்]

[illegible] அல்லது உத்தரப் பிரதேசத்தில்
[illegible] உறுப்பினர்களுக்குத் தருகிறதைப்போல, செய்ய
[illegible] என்பதையோ [illegible] என்பதையோ அவ
[illegible] ஒவ்வொரு உறுப்பினருக்கும் ரயில்வே பாஸ் கொடுத்
[illegible] அதையும் மாநில அரசு கொடுத்திருக்கிறது. அவர்களு
[illegible] வேண்டுமானாலும் அவர்கள் பயணம் செய்யத்
[illegible] இது அதிகார பூர்வமான தகவலாகும். அந்தச்
[illegible] இருக்கிறது. [illegible] உறுப்பினர்களுக்கு ஏற்படுத்தித் தரவேண்டு
[illegible] சட்டமன்ற உறுப்பினர்களுக்கு [illegible] கேட்டுக் கொள்கிறேன்.
[illegible] நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-35)

சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியைப்பற்றி இங்கே சொல்லப்பட்டது.
அங்கே இருக்கும் சூழ்நிலை அவ்வளவு மகிழ்ச்சி தரத்தக்கதாக இல்லை.
சட்டத்தை உருவாக்கக்கூடிய பொறுப்பில் சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்
கிறார்கள். ஆனால் அவர்கள் தங்குகிற விடுதி எந்த நிலையில் இருக்கிற
தென்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நேரில் வந்து பார்க்க வேண்டு
மென்று அன்புடன் வேண்டிக் கொள்கிறேன். அங்கே நிலவுகிற நிர்வாகக்
கோளாறுகள் சரி செய்யப்பட்டு, உறுப்பினர்களுக்குத் தேவையான அடிப்படை
வசதிகள், மற்றும் சட்டம் ஒழுங்கு சரியான முறையில் பராமரித்தல் போன்ற
நிலைமைகளைச் சீர்திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் புதிய இல்லம்
ஒன்று அமைக்கப்பட இருப்பதாக அரசுத் தரப்பிலிருந்து அறிக்கையொன்று
வந்தது. அதை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறதா, அது எந்த நிலையில்
உள்ளது. அப்படிப்பட்ட திட்டம் இப்போதும் இருக்கிறதா என்று அறிய
விரும்புகிறேன். அதற்கான பூர்வாங்கப் பணிகள் தொடங்கப்பட்டனவா
என்றும் தெரியவில்லை. மேலும் பேரவைக்கும், மேலவைக்கும் இப்போதுள்ள
இடங்கள் பற்றாக்குறையாக இருப்பதால், புதிய கட்டிடங்கள் கட்ட திட்ட
மிட்டிருப்பதாக அரசு அறிக்கை வெளியிட்டிருந்தது. அதுவும் எந்த
நிலையில் இருக்கிறது என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மேலவையில் உறுப்பினர்கள் பேசுவதைப் பொறுத்தவரையில், அவர்கள்
பேசுகின்ற பகுதிகளை நகல் எடுக்க வேண்டுமென்று விரும்பினால், இங்கே
இருக்கிற ஒன்றிரண்டு டைப்பிஸ்டுகள் உடனடியாகவும், தேவையான அளவிலும்
நகல்கள் எடுத்துக் கொடுக்க முடியவில்லை. ஆகவே பேரவைச் செயலகத்தில்
இருப்பதுபோல், ஜெராக்ஸ் மெஷின் ஒன்று இங்கேயும் வாங்கி, உறுப்பினர்கள்

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1985 மார்ச் 20

பேச்சுகளை அதிகப்படி நகல் எடுக்க பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பேரவையில் எந்த நோக்கத்திற்காக வாங்கியிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆகவே மெல்லையில்லாவது அந்த வசதியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதையும் ஏற்பாடு செய்து தரவேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் எந்தவித கோரிக்கைகள் கொடுத்தாலும், அது குறித்து அரசு அதிகாரிகள் உரிய முறையில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், அது குறித்து உறுப்பினர்களுக்குத் தெரிவித்தாக வேண்டுமென்றும் அரசு ஏற்கெனவே ஒரு உத்தரவு போட்டிருக்கிறது. அதை கொஞ்ச காலம் அமுல்படுத்தினார்கள். நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று உடனே சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு ஒரு கடிதம் அரசுத் தரப்பிலிருந்து வரும். அதற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கிறார்களா இல்லையா என்பது வேறு விஷயம். முன்பெல்லாம் பரிசிலனை செய்யப்படுகிறது என்றாவது தபால் வரும். ஆனால் இப்போது எந்தவிதமான கடிதங்களும் வருவதில்லை. ஒரு சான்றிதழ் கடிதம் கூட வருவதில்லை. ஆகவே நிதியமைச்சர் அவர்கள் இது குறித்து சரியான நடவடிக்கை எடுத்து, அந்த உத்தரவை மீண்டும் பின்பற்ற வேண்டுமென்று அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** 'சம்பளம் வழங்கல் சட்ட முன்வடிவு' பற்றிய விவாதம் இங்கே நடக்கிறது. உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் பற்றிப் பேசுகிறார்கள். சட்டமன்ற நிர்வாகம் பற்றிய தனி விவாதம் வருகிறபோது, அதைப்பற்றிப் பேசலாம். இப்போது சம்பளம் வழங்கல் சட்ட முன்வடிவைப் பற்றிப் பேசலாம்.

(முற்பகல் 10.40)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** ஓய்வு பெற்ற உறுப்பினர்களைப் பொறுத்த வரையில், பேருந்து பயணச் சீட்டு அவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். அவர்களில் பலர் இன்னும் பொது வாழ்க்கையில் இருக்கிறார்கள். எனவே அவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்களுக்கு இப்போது அளிக்கப்பட்டிருக்கின்ற லெட்டர் பேட், வெள்ளைத் தாள்கள் தரம் மிகக் குறைவாக இருக்கின்றது. நல்ல தாள்களாக இருந்தால், எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று சொல்லி, அவ்வாறு நல்ல தாள்கள் தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1985 மார்ச் 20] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 300 ரூபாயிலிருந்து 500 ரூபாய் என்று அடிப்படைச் சம்பளம் உயர்த்தப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக வருமான வரிப் பிரச்சினை வருகிறது. அதை அலவன்ஸ் என்கிற அடிப்படையில் உயர்த்தியிருந்தால் வருமான வரிப் பிரச்சினை வராது. இந்த உயர்வை வருமான வரிக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது பிரச்சினை எழுகிறது என்பதையும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து, அதை அலவன்சாகக் கொண்டு வந்தால் இன்னும் பயன் அளிப்பதாக இருக்கும் என்பதையும் எடுத்துச் சொல்லி, இந்தக் கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக நன்றி கூறி அமைகிறேன்.

**திருமதி வி. ஜெயலட்சுமி:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழ் நாடு 1985 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவின்மீது நான் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்திலே நான் அவைக்கு ஒன்றைக் கூற விரும்புகிறேன். பாராளுமன்றத்தில் சபாநாயகராக இருந்த மாண்புமிகு டாக்டர் தில்லான் அவர்கள் ஒரு தடவை வேடிக்கையாகச் சொன்னார்கள். "எல்லாத் தரப்பினருக்கும் தொழிற் சங்கங்கள் இருக்கின்றன. ஆனால் துரதிர்ஷ்டவசமாக நாம் தொழிற் சங்கங்களைப் பெறவில்லை.

"Unfortunately, we are not having a trade union" வாய்ப்பு அதனாலேதான் நம்முடைய பிரச்சினைகள் ஒன்றுமே தீர்வதில்லை, சலுகைகள் பெற முடியாத நிலையில் இருக்கிறோம்" என்று வேடிக்கையாகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அது போல அவையிலேயே சொன்னார்கள். பல காரணங்களால் இந்தச் சட்ட முன்வடிவு நீண்டிக்கு முன்பே வந்திருந்தாலும், தள்ளிப் போய்விட்டு இன்றைக்கு அவை முன் வந்திருக்கிறது. காலம் தாழ்த்தி வந்திருந்தாலும் இப்போதாவது நிறைவேறுகிறதே என்கிற மகிழ்ச்சியோடு, இதை வரவேற்று மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் பேசும்போது, ஒன்றைச் சொன்னார்கள். அடிப்படைச் சம்பளம்தான் ரூ. 300-லிருந்து ரூ. 500 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இந்த 200 ரூபாய் உயர்வு சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்களுக்கும் அதே போன்று தலைவர்கள், துணைத் தலைவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு கொடுப்பதை விட அவர்களுக்கு வசதி வாய்ப்புகளை அதிகரிக்கக் கொடுத்திருந்தால் மிகவும் உதவியாக இருந்திருக்கும். உதாரண

மாக பல மாநிலங்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, பல வகை வசதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவை மாநிலங்கள் வாரியாக மாறுபட்டிருந்தாலும்கூட, குறிப்பாக ஒரு சிலவற்றை நாம் அவர்களிடமிருந்து எடுத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

உதாரணமாக, மகாராஷ்டிரா சட்ட மன்றத்திலே 10-ஆவது பிரிவிலே,

"Every member elected to the Legislative Assembly is entitled to have a full-time Assistant."

என்று கூறப்பட்டிருக்கிறது. அதிலே அவர்களுக்கு 500 ரூபாய் சம்பளம் பணமாக அரசே கொடுக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். நாம் அந்த அளவுக்கு ஒவ்வொரு உறுப்பினருக்கும் உதவியாளர் கொடுக்க முடியவில்லை என்று சொன்னாலும்கூட, ஆங்காங்கு சில சில உறுப்பினர்களாகப் பிரித்து, அவர்களுக்கு ஒரு டைப்பிஸ்ட் போட்டுத்தந்தால், உறுப்பினர்கள் இங்கே வரப் போகின்ற மசோதாக்களின்மேலே தாங்கள் பேசுவதற்கு வேண்டிய குறிப்புகளை எல்லாம் கொடுத்து தட்டச்சு செய்து, உறுப்பினர் பதவியை செம்மையாகப் பயன்படுத்துவதற்கு வசதியாக இருக்கும்.

தினந்தோறும் தொகுதிகளிலிருந்து உறுப்பினர்களுக்கு வருகின்ற தபால்கள் குறித்து சொல்லவே வேண்டியதில்லை, அவ்வளவு அதிகம் வருகின்றன. தொகுதிகளிலிருந்து வருகிற கடிதங்களில் கூறப்படும் அன்றாடப் பிரச்சினைகளுக்கு பதில்களைக்கூட போட முடிவதில்லை என்று சொன்னால், தொகுதி வாழ் மக்கள் மிகவும் குறைப்பட்டுக் கொள்கிறார்கள். எனவே இப்போதிருப்பதைவிட இன்னும் போஸ்டல் வசதியை, டெலிபோன் வசதியைக் கொஞ்சம் அதிகமாகக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த 200 ரூபாயைக் கொடுக்காவிட்டால்கூட அதைப் பெரிய குறையாக நினைக்க மாட்டோம். ஆனால் வசதிகளை அதிகமாக்கித் தருவதற்கு ஏதாவது வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று, அதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

(மதியம் 10-45)

மேலும் இந்த இரண்டு மன்றங்களிலும், சட்டமன்றப் பேரவைக்கென ஹவுஸ் கமிட்டி என்றும் சட்டமன்ற மேலவைக்கென ஹவுஸ் கமிட்டி என்றும் தனித்தனியாக இருக்கிறது. நானும் அந்த ஹவுஸ் கமிட்டியிலே ஒரு உறுப்பினராக இருக்கின்றேன். மன்றத்திலே சொல்லப்படுகின்ற பிரச்சினைகள் ஆலோசனைக்குச் சரியான முறையில் கவனிக்கப்படுகின்றதா என்று பார்த்தால், நேற்று முன்தினம் ஹவுஸ் கமிட்டி கூட்டம் நடந்தபோது 1981-லே



கொடுக்கப்பட்ட பரிந்துரைகள் இப்போது ஆய்வுக்கு எடுக்கப்பட்டு, அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. 3, 4 வருஷங்களுக்கு முன்னர் கொடுத்த பரிந்துரைகள் 1985-வது வருஷம் வருகின்றன என்று சொன்னால், ஹவுஸ் கமிட்டி எவ்வாறு ஒரு 'பவர்புல்' கமிட்டியாக இயங்க முடியும் என்பதையும் நீங்கள் கொஞ்சம் கவனித்து, ஹவுஸ் கமிட்டி முழுமையாகச் செயல்படக் கூடிய, முழுமை பெற்ற அதிகாரம் உள்ள கமிட்டியாக இயங்க வேண்டுமென்று நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மேலும் சட்டமன்ற விடுதியைப்பற்றி அனைத்து சகோதரர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி நம்முடைய வீட்டுவசதி அமைச்சர் அவர்கள் சார்பாக எழுந்து அவர் இனிமேல் இரண்டாவது வகுப்பு பெட்டியில் தான் பயணம் செய்வார்கள் என்று சொன்னார்கள்.

திரு. ஆர். டி. சித்தாபதி : தலைவர் அவர்களே, இரண்டாவது வகுப்பில் பயணம் செய்வார்கள் என்று நான் சொல்லவில்லை.

திருமதி வி. ஜெயலட்சுமி : தலைவர் அவர்களே, அவர்கள் இரண்டாம் வகுப்பில் கூட பயணம் செய்ய வேண்டியதில்லை. அவர்கள், சட்டமன்ற விடுதியிலே ஒரு வாரம் சேர்ந்தாற்போல தங்கியிருந்து, அங்கு போடப்படும் உணவைச் சாப்பிட்டு நல்லபடியாக தேக ஆரோக்கியத்துடன் வந்தால் நன்றாக இருக்கும் என்று குறிப்பிட விரும்புகிறேன். ஒவ்வொரு உறுப்பினரும், உணவு விடுதியிலே சாப்பிட்டுவிட்டு Lomotil மாத்திரைகளைப் போட்டுக்கொண்டுதான் சட்டமன்றத்திற்கு வருகிறோம். சுகாதார மற்ற ஒரு சூழ்நிலை அங்கு உருவாகிக்கொண்டிருக்கிறது. இன்னும் அதன் சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பார்த்தால், எங்கே பார்த்தாலும் புகையாக மண்டிக் கிடக்கிறது. இப்படி ஏனென்று கேட்டால், அது குறித்து பி.டபிள்யு.டி. பார்க்க வேண்டுமென்று சொல்கிறார்கள். தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவிக்க விரும்புகிறேன், ஹவுஸ் கமிட்டி உட்காரும்போது, பி.டபிள்யு.டி. அமைச்சரோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ, அந்த ஹவுஸ் கமிட்டியிலே இடம் பெற வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இங்கே நாம் ஹவுஸ் கமிட்டியிலே சொன்னால், பி.டபிள்யு.டி.-யிலே அதைச் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். அதை அவர்கள் சரியாகக் கவனிக்கிறார்களா என்பதும் இல்லை. அங்குள்ள குறைகளையெல்லாம் களைந்துடன் அந்த விடுதியை நல்ல முறையிலே, வசிப்பதற்கு உரிய வசதி வாய்ப்புக்களைச் செய்து கொடுக்கும்படி, சக பெண் உறுப்பினர் சகோதரர்கள்

சார்பாகவும் கேட்டுக் கொள்கிறேன். கூடுமானவரையில் கவர்ன்மெண்ட் எஸ்டேட்டிலுள்ள வீடுகளில் எங்களைப் போன்ற பெண் உறுப்பினர்கள் குடும்பத்துடன் குடியிருப்பதற்கு வசதி செய்து கொடுத்தால், நல்லவிதமாக, ஆரோக்கியமான ஒரு சூழ்நிலையிலே இருக்க முடியும் என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பெண் உறுப்பினர்களுக்காவது, தயவு செய்து, கவர்ன்மெண்ட் எஸ்டேட்டிலுள்ள பாதுகாப்பான ஒரு சூழ்நிலையிலே இருக்கின்ற வீடுகளை ஒதுக்கிக் கொடுத்தால், நல்லதாக இருக்கும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, முன்பு பேசிய சகோதரர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் சொன்னார்கள். குறிப்பாக இங்கே நாம் அவையிலே பேசுகின்ற நம்முடைய அவைப் பேச்சுக் குறிப்புகளை நாங்கள் பத்திரிகைகளுக்கோ, தொகுதியிலுள்ள மக்களுக்கோ கொடுக்க வேண்டுமென்றால், எங்களுக்கு ஒரு காபி தான், அதற்கு மேலே கேட்டால் காபியைப் பொறுத்து ஒரு காபி கொடுக்கிறார்கள். எனவே ஜெராக்ஸ் மெஷின் ஒன்றைக் கொடுத்து இன்னும் ஒரு காபிக்கு 10 காசு, 15 காசு என்றாலும் கூட, நாங்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்

(முற்பகல் 10.50)

என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களுக்கு எங்களுடைய பேச்சின் பிரதிகள் குறைந்த அளவு 5 அல்லது 6 ஆவது கிடைக்கும்படி செய்ய ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்களில் வசதி வாய்ப்பு இருப்பவர்கள் வீடுகட்டிக்கொள்ள நினைத்து அதற்காகக் கடன் கேட்டால், அரசு அவர்களுக்குக் கடன் வழங்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஹரியானா, பஞ்சாப் போன்ற மாநிலங்களில் இத்தகைய வீட்டுவசதிக்கான கடன்கள் தரப்படுகின்றன. அதைப்போலவே வாகனங்கள் வாங்கவும் கடன்கள் தரப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் ஏற்கெனவே குறிப்பிட்ட மாதிரி, சட்டமன்றம் பற்றிய கொள்கைக் குறிப்பு வரும்போது இவைகளையெல்லாம் விவரமாகப் பேசலாம். இப்போது சட்ட முன்வடிவு மீது மட்டும் கருத்தைச் சொல்ல வேண்டும்.

**திருமதி வி. ஜெயலட்சுமி :** எனவே இவைகளையும் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஊதிய உயர்வுக்கான மசோதா மீது பேசுவதற்கான வாய்ப்பு கொடுத்து அதே நேரத்தில் எங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லி அவைகளை நிவர்த்திசெய்யவும் கோர வாய்ப்பு அளித்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் 'இந்த



ஊதிய உயர்வைக் கூட ரூ. 200 என்ற அளவில் நிறுத்திவிடாமல்—சம்பள உயர்வு என்று நான் கேட்கவில்லை—வேறு பல வசதி வாய்ப்புகளையும் அதிகரித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவின் 12-வது விதியில் இருப்பதை நான் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதில் பழைய முறைப்படி கல்வி மற்றும் மருத்துவச் செலவுகளுக்கு சம்பளம் என்றால், ரூ. 300 தான் அடிப்படைச் சம்பளமாக கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தற்போது சம்பளம் ரூ. 500 என்று ஆவதால் கல்வி மற்றும் மருத்துவச் செலவுகள் இனி நமக்குக் கிடைக்குமா என்ற சந்தேகம் இருக்கிறது. ரூல் 5-ல் உள்ள வாசகத்தை நான் இங்கே படித்துக் காட்ட விரும்புகிறேன்.

"...... any rule or order relating to medical treatment in a hospital maintained by the State Government or to the grant of educational concession, scholarship or such other matters as may be prescribed "

எனவே சம்பளம் ரூ. 500 என்று ஆவதால் இனி மருத்துவ வசதிகளும் கல்வி வசதிகளும் கிடைப்பதில் சிக்கல் வருமா என்று நான் சந்தேகப்படுகிறேன். அதாவது 12 மாதங்களுக்கு ரூ. 6,000 ஊதியம் என்று வரும்போது, சிக்கல் வரும். எனவே இதைத் தெரிந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க விளக்கம் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ரெயில்வே கூப்பன்கள் ரூ. 4,000-க்கு இனி வழங்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே மாதத்திற்கு ரூ. 250-க்குக் கொடுத்தால், ரூ. 3,000 சரியாகப் போய்விடும். இப்போது ரூ. 4,000 அளவுக்கு உயர்த்தியிருப்பதைக் கூட மாதம் ஒன்றுக்கு ரூ. 325 என்றும் மற்ற மாதத்தில் ரூ. 100-க்கும் கூப்பன்களாக கொடுத்துவிடலாம். அதோடு கூப்பன்களைக் கொடுக்கும்போது வாங்குகின்றவர்கள் சரி, பயணம் செய்தால் அதற்குரிய பணத்தைத் திருப்பி வாங்குகின்றவர்கள் சரி, தேவையில்லாத குழப்பங்களும் சங்கடங்களும் ஏற்படுகின்றன. இங்கே ஒரு கணக்கு. ரெயில்வேயில் ஒரு கணக்கு. இப்படி இரட்டைக் கணக்கு முறை தற்போது இருந்து வருகிறது. எனவே கூப்பன்கள் என்ற வடிவத்தில் வழங்கப்படுவதற்குப் பதிலாக இந்தத் தொகைக்கும் தனியாக ஒரு செக் வழங்கினால் நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே [illegible] முன்பு இந்தத் [illegible] சொன்னபோது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் [illegible]

பரிவோடு கவனிக்கிறேன் என்று குறிப்பிட்டார்கள். தற்போது பயணம் ரத்தானால் 10 சதவிகிதம் முதல் 30 சதவிகிதம் வரை கழித்துக்கொண்டு மீதி தரப்படும்போது மீதி வருகிற கூப்பன்கள் ரூ. 20-க்கு கட்டணமா ஒரு ரூபாய் என்று கிடைக்கின்றன. இப்படிப் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. எனவே இந்த வசதிக்குப் பதில் பணமாகக் கொடுத்துவிட்டால், நமக்கும் ஒரே கணக்காக இருக்கும். அதோடு டிக்கட் வாங்குவதற்கு நாம் போகும்போது முன்னாலே இருப்பவரிடமிருந்து அனாவசியமான வசவுக்கும் ஆளாக வேண்டிய நிலை ஏற்படுகிறது. வேறு எதற்காகவாவது வசவு வாங்கினாலும் பரவாயில்லை. போயும் போயும் டிக்கட் வாங்கச் செல்லும்போது, வசவு வாங்குவது என்பது தேவையில்லாத ஒன்றாக இருக்கிறது. எனவே மாதத்திற்கு ரூ. 325 என்ற அடிப்படையில் கொடுத்து கடைசி மாதத்தில் ரூ. 100-க்கு பணமாகக் கொடுத்து விடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதை அரசு ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-55)

சட்டமன்ற உறுப்பினர்களுக்கான விடுதியைப் பற்றிச் சொன்னார்கள். அங்கே சாப்பாடும் மோசம்தான். அதைச் சுற்றி சுத்தம் செய்தால் தேவலை. சில இடங்கள் அடர்ந்து காடு மாதிரி இருக்கின்றன. அதனால் பூச்சி, பொட்டுகள் உள்ளே வருகின்றன. சட்டமன்ற விடுதியில், சட்டமன்றம் நடக்கும் நேரத்தில் சாப்பாடு, மற்றவற்றை வாங்கிவர உதவி செய்ய ஆள் கிடையாது. அதற்காக ஆள் போட்டிருக்கிறார்கள் என்றாலும், அவர்கள் அங்கே இருப்பதில்லை. ஆகவே சர்வீஸ் என்ற அம்சத்தில் அப்படிப்பட்டவர்கள் பணி செய்யுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். நன்றி.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, பேரவையால் நிறைவேற்றப்பட்டு மேலவையின் அனுமதி பெற வந்துள்ள இந்தச் சட்ட முன்வடிவு, 1984 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26 ஆம் நாள் சட்டமன்றப் பேரவையில், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஆகியோர்களுக்கு சம்பளம், இரயில்வே கூப்பன் ஆகியவற்றைப் பொறுத்து என்ன வெளியிடப்பட்டதோ அதை சட்டபூர்வமாக்கக் கொண்டு வரப்பட்டுள்ள சட்ட முன்வடிவே தவிர வேறு எதுமில்லை. அப்போது கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற இப்போது இந்தச் சட்ட முன்வடிவு வருகிறது. அதோடு மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமே தவிர அதற்கு மேல் போயிருக்கக் கூடாது. இந்தச் சட்டத்தை ஏற்கெனவே



கொண்டு வந்திருக்க வேண்டும். இடையிலே ஏற்பட்ட காரண விளக்கங்கள் எல்லாம் இங்கே தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டது. அந்த வகையிலே இப்போது இதற்கு அனுமதி தர வேண்டுமென்று கொண்டுவரப்பட்டிருக்கிறது. எப்படியெப்படி இருக்கலாம் என்பது குறித்து ஒரு உறுப்பினருக்கும் மற்றொரு உறுப்பினருக்குமிடையே கருத்து வேறுபாடு இருக்கலாம். "பனகல் இராஜா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, ஒரு ரூபாய் வாங்கிக் கொண்டார். அதுவும்தான் அரசாங்க ஊழியனாக இருக்கிறோம் என்பதைக் காட்டத்தான் அந்த ஒரு ரூபாயையும் வாங்கினார் என்று சொல்லுவார்கள். அதைப் போலவே எங்களுக்கும் சம்பளம் தேவையில்லை என்று எழுதிக் கொடுக்கும் பெருந்தன்மை கொண்டவர்கள் பல பேர் இருப்பார்களேயானால், 'சம்பளம் தேவையில்லை' என்று எழுதிக் கொடுத்து தங்கள் பெருந்தன்மையை நிலைநாட்டிக்கொள்ளலாம். இருக்கிற சூழ்நிலைகளைப் பார்க்கிறபோது, மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது. கொடுக்கிற சம்பளத்தில் வேறுபடுகிறது, கொடுக்கிற படிகளில் வேறுபடுகிறது. மாண்புமிகு தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போன்று, கொள்கை விளக்கக் குறிப்பு மீது விவாதம் வரும்போது மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுக் காண்பித்து நாம் எந்த அளவிற்கு நிலைமைகளை மேற்கொண்டிருக்கிறோம் என்பதை விரிவாக எடுத்துச் சொல்ல முடியும். ஒரு காலத்திலே 150 ரூபாய்தான் சம்பளம் இருந்தது. மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதற்காக நான் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நான் மேலவையின் உறுப்பினராக இருந்தபோது சம்பளம் 75 ரூபாய்கூட இருந்தது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** முதலில் 75 ரூபாயாக இருந்தது, பிறகு 100 ரூபாயாக ஆயிற்று, பிறகு 150 ரூபாயாக ஆயிற்று. நான் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தபோது, 150 ரூபாய் கிடைத்தது. நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காரணத்தால் எனக்கு ஊழியம் செய்வதற்காக ஒருவரைக் கொடுத்தால் நல்லது என்று அப்போதிருந்த முதலமைச்சரை நான் கேட்டபோது அவர் எல்லா மாநிலங்களுக்கும் எழுதி, எதிர்க் கட்சித் தலைவருக்கு என்று ஊழியர் உண்டா என்று கேட்டு, அவர்கள் 'இல்லை' என்று பதில் சொன்னவுடனே, அப்படி ஒன்றும் இல்லை என்று எனக்குப் பதில் வந்தது. 150 ரூபாயாக இருந்த சம்பளம் போகப் போக வளர்ந்தது. பிறகு படியும் சேர்க்கப்பட்டு, [illegible] 1050 ரூபாயாக இருந்தது. இப்போது 1250 ரூபாய் வரும். நான் சம்பளம் 500-தான் வரும். இதனால் வருமான வரி வராதா என்று கேட்டார்கள். வருமான வரியால் பாதிக்கப்படாது. உறுப்பினர்களுடைய சம்பளம் 1,500 ரூபாய்

வரை உயருகிற வரையில் பாதிக்கப்படாது. ஏனென்றால் இப்போது 15,000 ரூபாயிலிருந்து 18,000 ரூபாய் என்று வருமான வரிக்குரிய உச்சவரம்பை உயர்த்தியிருப்பதால், வருமான வரியால் பாதிப்பு வராது. எம்.எல்.சி.-க்களுக்கு சம்பளத்தை வைத்து எந்தக் காரணத்தைக் கொண்டும், எம்.எல்.ஏ., மற்றவர்களுக்கு உள்ள சலுகைகள், தடைப்படுத்தப்படமாட்டாது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.00)

மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் அமைச்சர்கள், மேலவைத் தலைவர் ஆகியவர்களுக்கு நாலாயிரம் ரூபாய் இரயில்வே கூப்பன் அவசியமா என்று கேட்டார்கள். அரசாங்கத்தின் சார்பில் நிகழ்ச்சிகள், மற்றவைகளுக்குச் செல்லுகிறபோது, அரசாங்கத்தின் சார்பாக படி மற்றவை கள் வாங்க உரிமை இருக்கிறது. ஆனால் சாதாரண பல வேலைகள் வருகிற போது, தனிப்பட்ட திருமண நிகழ்ச்சிக்குப் போகும்போது, போகும்போது, அரசாங்கத்தின் சார்பாகச் செலவழிப்பது தேர்தலுக்குப் அதற்காக ஏதேனும் அரசு நிகழ்ச்சியை வைத்துக்கொண்டு முறையாகாது. என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகும் நிலை ஏற்பட வேண்டாம். போடுகின்றகள் பட்ட ஒரு நிலை இருப்பதைவிட, இப்படிப்பட்ட நிலைமைகளில் அப்படிப் பட்ட பயணங்களுக்கு கூப்பன்களைப் பயன்படுத்திக்கொண்டு, தனிப களுக்குப் பயணப்படியைப் பயன்படுத்திக்கொள்ள இந்த ஆண்டுதான் அரசுப் பணி முறை புகுத்தப்பட்டிருக்கின்றது. வேறு எந்தக் காரணமும் இல்லை. அந்த மானவரையில் செலவினத்தைக் குறைக்க வேண்டும் என்றுதான் கூறி யிருக்கிறோம். கூடுமானவரையில் பயணத்தைக் குறையுங்கள் என்று சொல்லி சொல்லியிருக்கிறோம். கேபினட் அளவிலேகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எல்லா அமைச்சர்களுக்கும் கூட எடுத்துச்சொல்லியிருக்கின்றார் கள். கூடுமானவரையில் அவரவர்கள் தன்மைக்கு ஏற்ப பிரயாணங்களை அதிகமாக மேற்கொள்ளாமல் இருக்க வேண்டும். பயணம் அதிகமாக இருப்பது நல்லதுதான். பயணமே செய்யாமல் போனால் பணியில் இருந்தால், ஆங்காங்கு நடக்கவேண்டிய பல நன்மைகள் தடைப்படலாம். ஆகவேதான் நாங்கள் சிற்றூர்களுக்கு நிகழ்ச்சி தருகிறோம். காரணம், நாங்கள் சிற்றூர்களுக்குப் போகிறோம் என்று அதற்குத் தான், அந்தப் பகுதி சோடியம் 4, 5 நாட்களில் செப்பனிடப்பட்டு, தெரிந்த பிறகு படுத்தப்படுவதைப் பார்க்கிறோம். நாங்கள் போகிறோம் என்று சுற்றுப் பிறகுதான், அந்த சிற்றூர்களில், விளக்குகள் இல்லாமல் இருந்தால் தெரிந்த விளக்குகளைப் போட்டு சரி செய்து வைக்கின்றார்கள். "அதற்காகவாவது அங்கு நீங்கள் ஊருக்குள்ளே வர வேண்டும்" என்று கேட்கின்ற நிலை இருக்கின்றது.





இருந்தாலும்கூட இந்தப் பணிகளையெல்லாம் கட்டுக்கோப்பாக, ஒருங் கிணைந்த முறையில் செய்ய வேண்டுமென்பதைக் கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொல்லி யிருந்தாலும், அதிலே இருக்கின்ற வசதிகள் வாய்ப்புகள் பெருகத்தான் வேண்டும். சட்டமன்ற மேலவை, பேரவை உறுப்பினர்களுடைய மதிப்பு சமுதாயத்திலே உயர்த்தப்பட வேண்டும். அவர்கள் மதிக்கத்தக்க அளவுக்கு வர வேண்டும். பொதுமக்கள், சட்டமன்ற மேலவை, பேரவை உறுப்பினர்களை மதிக்க வேண்டுமென்றால், சட்டமன்ற உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் மதிக்கவும் வேண்டும். ஆக, சட்டமன்ற உறுப்பினர்களும் ஒருவரை ஒருவர் மதிக்கத்தக்க அளவுக்கு, அது பேரவையானாலும் சரி, மேலவையானாலும் சரி, மதிப்பு கொடுத்தாக வேண்டும். ஆகவேதான் 'ஆனரபிள் மெம்பர்' என்று வைத்தார்கள். "மாண்புமிகு உறுப்பினர்கள்" என்று வைத்ததற்குக் காரணமே, தரவேண்டிய மதிப்பைத் தந்துவிட்டு, கருத்திலே வேறுபாடு கொண்டு, எவ்வளவு வேண்டுமானாலும் கருத்துகளின் அடிப்படையிலே தாக்குதல் நடத்தினாலும், எதிர்ப்புகள் நடத்தினாலும் நாம் ஒருவரை ஒருவர் மதிக்கக் கற்றுக்கொண்டிருந்தால்தான் சமுதாயம் நம்மை மதிக்கும். ஆனால் சமுதாயத்தினுடைய பிரதிநிதிகளாக இருப்பவர்கள் என்றாலே மக்கள் சமுதாயத்தினால் மதிக்கத் தக்க அளவுக்கு இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான், சிலபல குறைபாடு களை மற்றவைகளை எல்லாம் அவ்வப்போது ஆராய்ந்து அவைகளை நீக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

இங்கே பல நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். இந்த விடுதியைப் பொறுத்தவரையில், ஒன்று சொன்னார்கள். விடுதியிலே இருக்கின்ற குறைபாடுகளையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். தனியாக மேலவை உறுப்பினர்கள், பேரவை உறுப்பினர்கள் அடங்கிய விடுதிக் குழு ஒன்று இருக்கிறது. இந்த ஆண்டு புதியதாக அமைப்பதற்கான செயற்குழுவை விரைவில் அமைக்க இருக்கிறோம். ஆக மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த மாதிரி, இந்த விடுதிக் குழுக் கூட்டத்திற்கு சட்ட மன்றத் துறை அமைச்சர் என்ற முறையில் நான் வேண்டுமானாலும் வருகிறேன். மேலவை முன்னவர் அவர்களும் நானும் வேண்டுமானாலும் வருகிறோம். நாம் சில பல திட்டங்களை வகுக்க வேண்டும். வகுத்ததற்குப் பிறகு இருக்கின்ற அவ்வளவு உறுப்பினர்களும் அந்தத் திட்டங்களைக் கடைப்பிடிக்கத் தயாராக இருப்பார்களானால், அது நல்லதாக இருக்கும். மேலவைத் தலைவர், பேரவைத் தலைவர் ஆகியோர் முன்னர் கூடி சில பல, விதிமுறைகளை, ஒழுங்குமுறைகளை வகுத்துத் தந்தோமே தவிர, அது

நடைபெறவே இல்லை. அதை நடைமுறைபடுத்துகின்ற அளவுக்கு அந்த ஒழுங்கு முறைகளை, சட்டமுறைகளை கடைப்பிடித்து நடக்க வேண்டும். கண்டவர்கள் அங்கே வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படி நடைமுறைப்படுத்துவதற்கு என்ன விதிமுறைகள் இருக்கின்றனவோ அவைகளைக் கடைப்பிடிக்க அரசும் தயாராக இருக்கிறது. எவ்வளவு பேரை, விருந்தினர்களை அனுமதிக்கலாம், யார் யாரை அனுமதிக்கலாம், எவ்வளவு காலத்திற்கு அனுமதிக்கலாம் என்பதை எல்லாம் குறித்து ஹவுஸ் கமிட்டியில் உட்கார்ந்து திட்டவட்டமான தெளிவான முடிவுக்கு வர வேண்டும். அதற்கு மேலவை முன்னவர், பேரவை முன்னவர் ஆகிய இருவரும் வருகிறோம். இத்துறை அமைச்சர் என்ற முறையிலும் வருகிறேன். அங்கு உட்கார்ந்து முடிவு செய்வோம். அப்படி முடிவு செய்த பிறகு, எந்தக் காரணத்தைக் கொண்டும் அதை நாம் தளர்த்தக் கூடாது. அந்த முடிவின்படி நடந்தால், சிலபல குறைபாடுகளைப் போக்கலாம். அங்கே உறுப்பினர்களுக்கு அடிப்படை வசதிகள், தேவைகள், வேண்டியிருந்தால், குறைபாடுகள் இருக்குமானால், அந்த அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கும், குறைபாடுகளை நீக்குவதற்கும் இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அந்தக் குழுவிலே உட்கார்ந்து கலந்து பேசி அவற்றைப் பற்றி முடிவு செய்ய இருக்கிறோம்.

சட்டமன்ற உறுப்பினர்கள் கூறுவது போன்று, புதிய சட்டமன்ற வளாகம் ஒன்று ஏற்படுத்தி அதிலே எல்லா வாய்ப்பு வசதிகளையும் அமைக்க வேண்டும் என்று ஏற்கெனவே ஒரு திட்டம் இருக்கின்றது. அந்தத் திட்டம் 4, 5 ஆண்டுகளுக்கு முன்பே போடப்பட்டாலும், அந்தத் திட்டம் செயற்குறிப்பு வடிவிலே இருந்துகொண்டிருக்கிறது. அதற்கு வேண்டிய இடத்தைத் தேடுவதிலே சிக்கல் இருக்கிறது. இங்கேயே கட்டுவதா, அல்லது கோட்டைக்கு எதிரிலே கட்டுவதா, அல்லது வேறு இடத்தைத் தேர்ந்தெடுப்பதா என்பதிலே பல சிக்கல்கள் இருப்பதுதான் காரணமாக இருக்கிறது. ஒரு தெளிவான முடிவிற்கு வந்த பிறகு, வசதிகளைச் செய்து கொள்ளலாம். வரைபடங்கள் எல்லாம் கொண்டுவரச் சொல்லி 40, 50 பேர்கள் வரைபடங்கள் கொண்டு வந்து காண்பித்திருக்கின்றார்கள். இந்தியா முழுவதிலும் இருக்கின்ற கட்டடக் கலை வல்லுநர்கள் 6 பேர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து அதிலே சிறந்தவற்றைத் தேர்ந்தெடுக்கவும் சொல்லியிருக்கிறோம்.

(முற்பகல் 11-05)

அவர்கள் 5, 6-ஐத் தேர்ந்தெடுத்து அதிலே மூன்று பேர்களுக்குப் பரிசு தருமளவுக்கு வந்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு அது இருக்கிறது. இடம் தேடியதற்குப் பிறகு அதைக் கட்ட வேண்டும்.



அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதுபோல, சிறிய குழுக்கள், பெரிய குழுக்கள் கூடுவதற்கு இடம்; உறுப்பினர்கள் தங்குவதற்கு இடம், உறுப்பினர்களுக்கு [illegible] வசதிகள், வாய்ப்புகள், நல்ல நூல் நிலையம் ஆகியவைகளை அமைக்க வேண்டும். நூல் நிலையம் ஒரு பக்கம், உறுப்பினர்கள் ஒரு பக்கம் என்று இல்லாமல், ஒரே இடத்தில் நூல் நிலையம் [illegible] இருக்க வேண்டும். மேலவை, பேரவை உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து இருக்க வேண்டும். இப்படிப்பட்ட அடிப்படையில் திட்டங்கள் [illegible] வகுக்கப்பட்டிருக்கின்றன.

அடுத்து, இப்போது நாமுடைய கட்டியுள்ள முறை உள்ளபடியே அது கட்டப்பட்ட காலத்திலிருந்து சரியாக இல்லை என்ற எண்ணம் கொண்டவன் நான். 6, 7 அடுக்கு மாடி கட்டிவிட்டு, 4 அடி வராண்டா இருப்பது ஆர்க்கிடெக்ட்ச்சர் சரியில்லை என்ற எண்ணத்தைத் தருகிறது. மேலும் கிழக்கே உதிக்கும் சூரியன் காலையிலே உள்ளே வந்தே தீரும், மாலையிலே மறையும் சூரியன் உள்ளே வந்தே தீரும். தமிழ் நாட்டிலே, தெற்கே பார்த்து வீட்டைக் கட்டு என்று பழமொழி உண்டு. அப்படிக் கட்டியிருந்தால், [illegible] தொல்லை இராது. அறையைத் திறந்த உடனேயே படுக்கை [illegible] உட்கார்ந்து பேச ஓர் அறை இருந்திருக்க வேண்டும். அவர்கள் [illegible] படுக்கை அறை தனியாக இருக்க வேண்டும். அந்த [illegible] தனித் தனி அறைகள் இருக்க வேண்டும். அந்த [illegible] கட்டும்போது கட்ட [illegible] உறுப்பினர்களுக்கு [illegible] டெல்லியில் இருப்பதுபோல ப்ளாட் வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. [illegible] காலம்வரையில் அவர்கள் [illegible] உறுப்பினராக இருக்கும் [illegible] திட்டத்தை வைத்திருக்கிறோம். [illegible] அவற்றையெல்லாம் நடைமுறைப்படுத்த முடியுமா என்பதை [illegible] அடுத்தடுத்து இவைகளைச் செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும் [illegible] சில பல மாநிலங்களில் அதை நிறைவேற்றி இருக்கிறார்கள். பல மாநிலங்களில் அதை நிறைவேற்ற முடியாமல் இருக்கிறார்கள். உறுப்பினர்கள் வசதிகள், வாய்ப்புகளைப் பெருக்க [illegible] வேண்டுமென்பதுபற்றி ஹவுஸ் கமிட்டியே சொல்லலாம். யாரைக் கொண்டு உணவு விடுதியை நடத்தலாம், யாருக்கு அந்தக் காண்ட்ராக்டை விடலாம் என்று அவர்கள் பரிந்துரை செய்யலாம். அதை அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது. யார் செய்யும் சமையல் நன்றாக இருக்கிறது என்று ஹவுஸ் கமிட்டியே சிபாரிசு செய்தால், அதை அரசு ஏற்றுக்கொள்ளும். அதற்குப் பிறகு உப்பு குறைவாக இருந்தாலும், புளி குறைவாக இருந்தாலும் அது அவர்கள் பாடு. ஹவுஸ் கமிட்டி உட்கார்ந்து பேசும்போது, இப்போது உள்ளவர்கள், காண்ட்ராக்டர்கள் சரியாக இல்லை என்றும், சரியாக

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச் 20

நடத்துபவர்களைப் போடுவதற்கான முடிவுகளையும் செய்யலாமென்று கூறி, சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்ட முன்வடிவுக்கு ஆதரவு தந்த மேலவை உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் நன்றி கூறி, அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1985-ம் ஆண்டு, சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 3/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் படவேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு, சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 3/1985) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1985 ஆம் ஆண்டு, சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 3/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

**(2) 1985 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 5/1985).**

**(2) 1985-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1985).**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, சென்னை மாநகராட்சி, கோயம்புத்தூர் மாநகராட்சி, நகராட்சி மன்றங்கள், மதுரை மாநகராட்சி குறித்த சட்ட முன்வடிவுகள் நான்கையும் ஒன்றாகப் பிரேரேபித்து விவாதித்துவிட்டால், பதில் அளிக்க வசதியாக இருக்குமென்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1985 மார்ச் 20]

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வர இருக்கிற 7 சட்ட முன்வடிவுகளும் ஒரே பொருள் பற்றியதாக இருப்பதால், முதல் சட்ட முன்வடிவை முன்மொழிந்த உடனேயே, விவாதத்தை சேர்த்து நிகழ்த்திவிட்டு, பின்பு எல்லாச் சட்ட முன்வடிவுகளையும் தனித் தனியாக நிறைவேற்றலாம் என்று அறிவிக்கிறேன்.

(முற்பகல் 11-10)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

சட்ட முன்வடிவுகள் ஏற்கெனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. சட்ட முன்வடிவுகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொன்னால் அரசின் சார்பில் நான் பதிலளிக்கும்போது விளக்கம் அளிக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 5/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

மீண்டும் சொல்கிறேன். உறுப்பினர்கள் பேசும்போது எல்லாச் சட்ட முன்வடிவுகள் மீதும் தங்கள் கருத்துக்களைச் சொல்லலாம். நிறைவேற்றும் போது ஒவ்வொன்றாக தனித் தனியாக எடுத்து நிறைவேற்றலாம்.

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த 7 சட்ட முன்வடிவுகளின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்பு உள்ளாட்சித் துறை அமைச்சராக பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் சார்ந்துள்ள வட ஆற்காடு மாவட்டத்தைச் சார்ந்தவர் என்ற முறையில் அவருக்கு என் சார்பிலும், என் அணியின் சார்பிலும் என்னுடைய பாராட்டுக்களையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற முறை நான் அவையில் பேசும் போது, வட ஆற்காடு மாவட்டத்திற்கு அமைச்சர் பிரதிநிதித்துவம் இல்லை என்று குறிப்பிட்டுப் பேசினேன். இப்போது வட ஆற்காடு மற்றும் தென் ஆற்காடு மாவட்டங்களின் சார்பாக ஓர் அமைச்சரை நியமித்திருப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@ 259-260 ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1985 மார்ச் 20

இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்ற சட்ட முன்வடிவுகளைப் பொறுத்த வரையில், அநேகமாக எல்லா உறுப்பினர்களும் சொல்வதைத்தான் நானும் சொல்ல வேண்டியிருக்கிறது. நகராட்சி, ஊராட்சி, மாநகராட்சி என்று எல்லாவற்றுக்கும் தேர்தலை விரைவில் நடத்த வேண்டுமென்று இந்த நாட்டு மக்கள் விரும்புகிறார்கள், அதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். விரைவில் இவைகளுக்கான தேர்தலை நடத்துவதன் மூலம் கிராமங்களிலும் நகரங்களிலும் பொதுமக்களுக்குத் தேவையான சாதாரண அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க முடியும். மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். நகராட்சிகளிலுள்ள தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிப்பதன் மூலம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பொறுப்பு வகிக்காத காரணத்தால், பல்வேறு வகைகளில் பொது மக்கள் அல்லல்படுகிறார்கள். இன்னும் சொல்லப்போனால், எங்களை விட ஆளும் கட்சியினர் இதன் விளைவுகளை மிகவும் அதிகமாக உணர்ந்திருப்பார்கள். ஆகவே இதைப்பற்றி நான் மீண்டும் மீண்டும் இங்கே சொல்ல விரும்பவில்லை. அனைவருமே எல்லோரும் இதை உணர்ந்திருக்கிறார்கள். எல்லோருடன் நானும் சேர்ந்து இதை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகஸ்ட் மாதத்தில் தேர்தல் நடத்தப்படும் என்று கொடுக்கப்பட்டுள்ள வாக்குறுதியை நாங்கள் நம்புகிறோம். அந்த வகையில் விரைவில் அனைத்து இடங்களுக்கும் தேர்தலை நடத்தி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் ஜனநாயக ரீதியில் நிர்வாகம் நடைபெற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாக தம் கடமையை உணர்ந்து இதை விரைவாக நிறைவேற்றுவார்கள் என்று நான் நம்புகிறேன். அமைச்சர் அவர்கள் இதை நிறைவேற்ற வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் பொறுப்பை ஏற்கும் வரை நகராட்சிகளில் தனி அதிகாரிகள், நகராட்சி ஆணையாளர்கள், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் இவர்கள் எல்லாம் தங்களுடைய கடமையை உணர்ந்து நல்ல முறையில் பணியாற்ற அறிவுரை கூற வேண்டும். மக்கள் பிரதிநிதிகள் பொறுப்பில் இருந்தால், எந்த அளவுக்கு மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வார்களோ, மக்களிடம் அனுதாபம் காட்டுவார்களோ, எந்த அளவுக்கு பொதுவாக மக்களிடம் அனுதாப உணர்வுகளைக் காட்டி அவர்களுடைய பிரச்சினைகளை கவனிப்பார்களோ அதுபோல் இவர்களும் அதனை உணர்ந்து செயல்பட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இப்பொழுது அப்படிப்பட்ட உணர்வுகள் அவர்களிடம்



1985 மார்ச் 20] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

இல்லை. ஏதோ ஒருசில அதிகாரிகள் விதிவிலக்காக இருக்கலாம். ஏதோ மேலெழுந்தவாரியாக தங்களுடைய கடமைகளைச் செய்கிறார்களே தவிர, பொதுமக்களுடைய பிரச்சினைகளை உணர்வு பூர்வமாக உணர்ந்து செய்ய வில்லை. இப்படிப்பட்ட ஒரு குறை அதிகாரிகளைப் பற்றி இருப்பதால் தான், உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள். அதிகாரிகள் தங்களுடைய கடமைகளை சரியாக உணர்ந்து, உணர்வுபூர்வமாக மக்களுக்குப் பணியாற்றினால், தேர்தலை உடனே நடத்த வேண்டுமென்று மக்களிடையே கோரிக்கை எழாமல் இருந்திருக்கும். இப்படி தேர்தலை உடனடியாக நடத்த வேண்டுமென்று கோரிக்கை வைப்ப தற்கு முக்கியமான காரணமே தனி அதிகாரிகள் பொதுமக்களுடைய குறை களை உள்ளபடியே களையாததுதான். தேர்தல் வந்து மக்கள் பிரதிநிதிகள் பொறுப்பேற்கும் வரை இந்தத் தனி அதிகாரிகள் தங்களுடைய பொறுப்பு களை உணர்ந்து உணர்வுபூர்வமாக மக்களுடைய குறைகளைக் களைய தகுந்த நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும்.

(முற்பகல் 11.15)

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

பல நகராட்சிகளைப் பொறுத்தவரையில், குறைகளைக் களைய வில்லை என்று கேட்டால், நிதிப் பற்றாக்குறை என்று தனி அதிகாரிகள் சொல்கின்றார்கள். நகராட்சிகளுக்குப் போதிய நிதி வசதி இல்லையென்ற காரணத்தால், சாதாரணமாகச் செய்யவேண்டிய கடமைகளைக் கூட அவர்களால் செய்ய முடிவதில்லை என்ற குறையை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். உதாரணமாக, வட ஆற்காடு மாவட்டத்தில், குடியாத்தம் நகராட்சி, திருவண்ணாமலை நகராட்சி, வேலூர் நகராட்சி ஆகியவற்றின் கீழ் உள்ள பள்ளிகளில், அங்கே பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஒழுங்காகச் சம்பளம் தரப்படுவதில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அது குறித்து அதிகாரிகளைக் கேட்டால், நாங்கள் என்ன செய்வது, போதிய நிதி வசதி இல்லாததால் தான் இந்த நிலைமை ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்குவதில்தான் இந்த நிலையே தவிர மற்ற ஊழியர்களுக்கு இந்த நிலைமை ஏற்படுவதில்லை என்பதையும் நான் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்தக் குறைபாடு களை நீக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொண்டு, 1 ஆம் தேதியே அவர்களுக்குச் சம்பளம் போய்ச் சேர வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். குடியாத்தம் போன்ற நகராட்சி

கள், அதன் கீழுள்ள பள்ளிகளை நிதிப் பற்றாக்குறை காரணமாக நிர்வகிக்க முடியாததால், அரசாங்கமே அதனை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தீர்மானம் போட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி அரசு ஏற்றுக் கொள்வதை இந்தப் பிரச்சினை தீராது என்று உயர் அதிகாரிகள் சொல் கிறார்கள். எந்தெந்த நகராட்சிகள் தங்கள் பள்ளிகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று தீர்மானங்கள் போட்டிருக்கின்றனவோ, அந்தப் பள்ளிகளை ஏற்றுக்கொள்ள அரசு உரிய துறைகள் மூலம் நடவடிக்கை எடுத்து, அத்தகைய பள்ளிகளை அரசின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதன் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன். அப்படி நகராட்சிப் பள்ளிகளை அரசு நேரடியாக எடுக்கும்வரையில், அவர்களுக்கான சம்பளத்தை அரசே நேரடியாக வழங்க முடிவு செய்யலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அமைச்சர் அவர்கள் சிறந்த நிர்வாகி என்று பெயர் பெற்றவர்கள். அவர்கள் நிச்சயமாக இதுகுறித்து நடவடிக்கை எடுப்பார் கள் என்று நம்புகிறேன்.

அடுத்ததாக, அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு கொடுக்க வேண்டுமென்று அரசு அண்மையில் உத்தரவு பிறப்பித்தது. ஆனால் சேலம் நகராட்சியில் அதை அமுல்படுத்தவில்லை. அங்குள்ள அதிகாரிகளைக் கேட்டால், இன்னும் அரசு ஆணை எங்களுக்குக் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். இங்கே பள்ளிக் கல்வித் துறையில் கேட்டால், நாங்கள் அனுப்பி விட்டோம் என்று சொல்லுகிறார்கள். இதுபோன்ற பிரச்சினைகளில் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்ததாக, நகராட்சி பஞ்சாயத்துக்களை பொறுத்தவரையில், அங்குள்ள வளர்ச்சிப் பணிகளைச் செய்ய நிதி வசதியில்லை, நிர்வாகம் செய்ய நிதி வசதி கிடைப்பதில்லை என்று அதிகாரிகள் பதில் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட நகரப் பஞ்சாயத்துகளுக்கு அதிக நிதி வசதி கொடுக்க அரசு முன்வர வேண்டும். அல்லது அவைகளை கிராமப் பஞ்சாயத்துக்களாக மாற்றி, மேன் போலவாவது அவைகளுக்குப் போதிய நிதி வசதியை தொடர்ந்து அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் இருக்கின்ற நகராட்சியானாலும், மாநகராட்சியானா லும் சரி, சுகாதார வசதிகளும் குறைந்து விட்டது என்பதை நான் வருத் தத்துடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதைத் தவிர்க்க உரிய நடவடிக்கைகளை எடுக்க, அரசு முன்னுரிமை வழங்க வேண்டும். குடிநீர் வசதியளிப்பதிலும் முன்னுரிமை நகராட்சிகளுக்கு அளிக்கப்பட வேண்டும்.



தென்னாற்காடு மாவட்டத் தலைநகர் கடலூரைப் பொறுத்தவரையில், அங்கே நிலத்தடி கழிவு நீர்த் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. ஒரு மாவட்டத் தின் தலைநகரே இந்த நிலையில் இருக்கிறது. ஆகவே புதிய அமைச்சர் அவர்கள் கடலூர் போன்ற மாவட்டத் தலைநகர்களில் உடனடியாக நிலத்தடி கழிவு நீர்த் திட்டம் அமைக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முன்பிருந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையில் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது, எந்தெந்த நகராட்சிகளில் ரயில்வே கேட்டுகள் குறுக்கிடுகின்றனவோ, அங்கங்கே நகராட்சி பாதித் தொகையும், மத்திய அரசு பாதித் தொகையும் போட்டு மேம் பாலங்கள் அமைக்கப்படும் என்று தெரிவித்திருந்தார்கள். இதுபோன்ற போக்குவரத்து நெரிசல் உள்ள இடங்களான சிதம்பரம், கடலூர், பண்ருட்டி போன்ற இடங்களில் உடனடியாக மேம்பாலங்கள் கட்ட நடவடிக்கை எடுத் தால், போக்குவரத்து நெரிசலால் மக்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

ஆகவே நகராட்சிகள் அவற்றின் செலவை ஏற்க முன்வர வேண்டும். நகராட்சி களிடம் நிதி வசதி இல்லை என்றால், தமிழக அரசே அவற்றை ஏற்க முன் வந்து, மத்திய அரசை அணுகி அந்த மேம்பாலங்களை அமைக்க முன்வர வேண்டும். over-bridge கட்ட அதிகச் செலவாகும் என்றும் under-bridge ஆவது கட்ட வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக இந்தப் பதவி நீட்டிப்புச் சட்டம் என்பது யாராலும் வரவேற்க முடியாத ஒன்று என்றாலுங்கூட, மிக விரைவாகத் தேர்தல் நடத்தப்படும் என்ற வாக்குறுதி—காலக்கெடு நிர்ணயித்து நிச்சயமாகத் தேர்தல் நடத்தப்படும் என்ற திட்டவட்டமான அறிவிப்பு வந்திருப்பதால், அதன்மீது நம்பிக்கை தெரிவித்து, இந்தக் கருத்துக்களைப் பேச வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

***திரு. க. மீனாட்சிசுந்தரம்** : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நகராட்சிகள், மாநகராட்சிகள், உள்ளாட்சி மன்றங்கள் ஆகியவற்றிற்கான தனி அதிகாரிகள் பதவி நீட்டிப்பு தொடர்பாக கொண்டு வந்திருக்கின்ற சட்ட முன் வடிவுகளை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே ஆதரித்து வரவேற்று பேச முடியாத நிலைமையில் இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1985 மார்ச் 20

ஜனநாயகம் இந்த நாட்டிலே நிலை பெறுவதற்கு கிராம இராஜ்ஜியங்கள், கிராம இராஜ்ஜியங்கள் மிகமிகச் சிறப்பாக நடைபெற வேண்டுமென்ற நோக்கத்தோடு காந்தியார் அவர்கள் பாடுபட்டு இந்த நாட்டிற்கு விடுதலைவாங்கிப் பெற்றுத் தந்ததற்கு பின்னாலே, அந்த ஜனநாயகம் அழிபட, நசுக்கப்பட, ஒழிக்கப்படக்கூடிய நிலையிலே இன்றைக்கு அவற்றுக்கான தேர்தல்கள் எல்லாம் நடைபெறாமல் இருக்கின்றன. ஒவ்வொரு தடவையும், ஒவ்வொரு மாதிரியாகச் சொல்லி, காலத்தைக் கடத்திக்கொண்டே செல்வதை ஜனநாயக விருப்பம் உள்ளவர்கள் ஏற்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் இந்த முறை எனக்கு ஓரளவு நம்பிக்கை. இன்றைய தினம்தான் இந்தச் சட்ட முன்வடிவுகளை இங்கே முன்மொழிகின்ற அந்த முதல் நிகழ்ச்சிக்கு மேலவைக்கு நம்முடைய பெருமதிப்பிற்குரிய, அன்பிற்குரிய, பாசத்திற்குரிய மாண்புமிகு அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் இங்கே வந்திருக்கிறார்கள். அவர்கள் ஒருவேளை இதற்கு முன்னர் இருந்த அமைச்சர்கள் காலத்தைக் கடத்தியதைப் போல காலத்தைக் கடத்தாமல், விரைவிலேயே தேர்தல்களை நடத்துவதற்கான செயல்களில் ஈடுபடுவார் என்று சற்றே நம்பிக்கை கொண்டு அவர்களை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் இதைச் செய்வார்கள் என்று நம்புகிறேன். காரணம் இதற்கு முன்னால் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்கள் ஒரு தேதியைக் குறிப்பிட்டு, "அந்தத் தேதியில் தேர்தலை நடத்தப் போகிறேன்" என்று சொல்லி, மேலும் நான் "உண்மையைச் சொல்வேன், சொன்னதைச் செய்வேன், வேறொன்றும் தெரியாது" என்ற ஒரு பாடலையும் பாடிக் காட்டினார்கள். நான் அப்போது, "நீங்கள் நிச்சயமாகச் செய்யமாட்டீர்கள். நீங்கள் சொல்வது 'உண்மையைச் சொல்லேன், சொன்னதைச் செய்யேன். வேறொன்றும் தெரியாது' என்று வேண்டுமானால் பாடுங்கள்" என்றுகூட நான் சொன்னேன். அதற்குப் பின்னாலேகூட இங்கே உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த . . . . .

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் "உண்மையைச் சொல்லேன், சொன்னதைச் செய்யேன்" என்று சொன்னார்கள். உண்மையைச் சொல்லேன் என்றால் பொய் சொல்கிறார் என்று அர்த்தம். பொய் செய்யேன் என்றால் உண்மையைச் செய்வதாக அர்த்தம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஆகவே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சராக



1985 மார்ச் 20] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

இருந்த மாண்புமிகு திரு. குழந்தைவேலு அவர்களிடம் ஒருமுறைகூட நான் சொன்னேன். உள்ளாட்சித் துறை அமைச்சராக இருப்பது என்பது, உங்களுக்கு மிகவும் வாய்ப்பானது. இப்போது "மூன்று மாநகராட்சிகளுக்கும் நீங்கள்தான் மேயர், 374 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நீங்கள்தான் பெருந்தலைவர், பல்லாயிரக்கணக்கான ஊராட்சி, பேரூராட்சிகளுக்கும் நீங்கள்தான் தலைவர். இதுபோன்ற அதிகாரங்களை, பதவிகளை வைத்துக் கொண்டிருக்கக்கூடிய நீங்கள் அந்த பதவிகளை விட்டுவிட்டு, தேர்தலை நடத்தி மக்களிடம் ஒப்படைக்க மாட்டீர்கள்" என்று சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் "19—4—1984 அன்றும், 23—4—1984 அன்றும் நிச்சயமாகத் தேர்தலை நடத்தப் போகிறோம்" என்று சொன்னார்கள். ஆனால் 20—3—1984 அன்று, தேர்தல் நடத்துவதை நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்து நிறுத்திவிட்டார்கள் என்று சொல்லி தேர்தலை நிறுத்தியதாக அறிவித்தார்கள்.

(முற்பகல் 11-25)

ஆகவே சொல்கின்றபோது, மிக இனிப்பாகச் சொல்கிறார்களே தவிர, அதை உண்மையிலே நடத்துவதாக இல்லை. திரு. சௌந்தரராஜன் அவர்கள் இந்த மசோதாவைத் தயாரித்தார்கள். தயாரித்தவர் அவர் படித்தவர் இவர். இந்தத் துறை நேற்று ஒருவருக்கு இருந்தது. இன்றைக்கு ஒருவருக்கு மாற்றப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை—

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு"

என்று வள்ளுவர் சொன்னார். ஆனால் இங்கே நெருநல் உள பதவி இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ்வரசு, என்று கூற வேண்டியுள்ளது. நேற்று உள்ளவருக்குள்ள பதவி இன்று இல்லை அல்லது பதவி மாற்றப்படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை எல்லாம் ஏற்படுகிறது. எனவே நீங்களாவது அத்தேர்தலை நடத்திடுங்கள். இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிடிவாதமாக இருந்து அமைச்சர் பதவிக்கு வந்திருப்பதைப் போல இதையும் சாதிக்கவேண்டும் என்பதற்காகவே பிடிவாதமாக இருந்து அதைச் சாதித்தே காட்டியிருப்பதைப் போல ஒரு அழுத்தமான குணம் உடையவர்கள். இவ்வமைச்சர் மேலவை உறுப்பினராக ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட

அவர்களை நான் இந்த அவையிலே பார்த்ததே இல்லை. பின்னாலே அறிந்தது, அமைச்சர் பதவி கிடைக்காததால் அவர் அவைக்கே வரவில்லை என்பது தான். ஆனால் இன்றைக்குக்கூட அமைச்சராகத்தான் அவர்கள் வந்திருக்கிறார்கள்; உட்கார்ந்திருக்கிறார்கள். எந்தப் பிடிவாத குணத்தோடு இருந்து அதைச் சாதித்தார்களோ அதைப்போல அவர் தேர்தலையும் நடத்தியாக வேண்டும். மேலவை உறுப்பினர் பதவியை, அமைச்சர் பதவி கிடைக்கவில்லை என்பதற்காகத் தூக்கி எறிந்தார்கள்—எங்களுடைய தலைவர் இன உணர்ச்சியைக் காட்டுவதற்கு, மான உணர்ச்சியைக் காட்டுவதற்கு, ஸ்ரீலங்கா தமிழர்கள் பாதிக்கப்படுவதை எடுத்துக் காட்டுவதற்கு பதவியைத் தூக்கி எறிந்தார்—ஆனால் இங்கே . . .

திரு. ஆர். டி. சீத்தாபதி: மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் உள் நோக்கத்தின் அடிப்படையில்தான் இதைப் பேசுகிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஏதோ அமைச்சர் பிடிவாதமாக இங்கே வந்தார் என்பது எல்லாம் தேவைதானா? காரணம் ஒரு அமைச்சரைத் தேர்ந்தெடுப்பது என்பது முதலமைச்சருடைய விருப்பம். அவர் பிடிவாதமாக இருந்தார், பிடிவாதமாக இருந்தார்; அவர் வந்தார் என்று சொல்வது நியாயம் தானா? இது அவைக் குறிப்பில் இருக்க வேண்டுமா என்பது குறித்து மாற்றுத் தலைவர் அவர்கள் தீர்ப்புத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: நான் அவருடைய அழுத்தமான, பிடிவாதமான கொள்கையை உடையவர் என்பதை, எதையும் சாதிக்கக்கூடிய ஆற்றலைத்தான் சொன்னேன். வேறு ஒன்றும் குறையாகச் சொல்லவில்லை.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): திரு. மீனாட்சிசுந்தரம் சொன்னது முறைப்படி பார்லிமென்டரி வார்த்தைகள்தான் என்று சொல்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: நன்றி. எனவே இந்த நிலைமையிலே தேர்தலை இப்போதாவது நம்முடைய நாவலர் அவர்கள் அங்கே அறிவித்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். எனவே ஆகஸ்டிலே நிச்சயமாகத் தேர்தல் நடைபெறும். "நாங்கள் எழுதி வேண்டுமானாலும் தருகிறோம்" என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்குக்கூட எங்களுடைய கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் நேற்று பேசுகின்றபோது, ஒன்றைச் சொன்னார்கள். அதாவது "அச்சடித்துத் தந்ததே நடைபெறவில்லை, எழுதித் தருகிறேன் என்று சொல்வது மட்டும் எப்படி நடைபெறும்?" என்று கேட்டார்கள்.



நாவலர் அவர்கள் சொன்னது நீர் மேல் எழுத்துக்கு நேராக இல்லாமல் அது கல்லில் செதுக்கிய எழுத்துக்கு நேராக வருகிற வகையிலே நம்முடைய அமைச்சர் அவர்கள் உடனடியாகத் தேர்தலை நடத்துவதற்கு இங்கே நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கையினை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதை நிறைவேற்ற வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். எதற்கு இதையெல்லாம் நான் சொல்கிறேன் என்றால், இதிலேகூட பின்னாலே தேர்தலை நடத்த இருக்கிறோம்; அரிசனங்களுக்கு இடங்களைத் தருவது அல்லது மகளிருக்கு ரிசர்வ் செய்வது, இதையெல்லாம் எதிர்த்து சிலர் கோர்ட்டுக்குச் சென்றுவிடுகிறார்கள் என்று எல்லாம் சொல்லப்படுகிறது. அதனால் இது நிறுத்தப்பட்டது என்று சொன்னார்கள். முதல்வர் அவர்கள் இடையிலே ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். பழைய முறையிலேயே நாங்கள் தேர்தலை நடத்துவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே யார் மீதும் சாக்குச் சொல்லாமல் ஒருவேளை அவர்கள் கோர்ட்டுக்குச் செல்கிறார்கள் என்றால், ஏற்கெனவே ரிசர்வ் செய்தார்கள் பாருங்கள், அதிலே அரிசனங்களே இல்லாத பகுதியை அரிசனங்களுக்கு ஒதுக்கினார்கள்; அப்படி சில அசம்பாவிதங்கள். கோஷாக்களாக இருக்கக்கூடியவர்கள், வெளியிலே வரமுடியாத பெண்கள் நிறைந்த பகுதியிலே பெண்களுக்கு இடம் ஒதுக்கினார்கள். அப்படி சில அசம்பாவிதங்கள். இப்படி தவறுதலாக சில விஷயங்கள் அங்கே நடைபெற்றுவிட்ட காரணத்தாலே, சிலர் வழக்குமன்றம் செல்லக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே எந்தச் சூழ்நிலை வந்தாலும், பழைய முறையிலே தேர்தலை நடத்துங்கள். அந்தத் தேர்தலை நடத்திவிட்டு, பின்னாலே வேண்டுமானால், இந்தச் சட்டத்தை நிறைவேற்றி மாற்றத்தைச் செய்துகொள்ளலாம். ஆக எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்த அறிவிப்பிலேயாவது முதன்முதலாக பதவிக்கு இந்த முறையிலே வந்திருக்கக்கூடிய அமைச்சர் அவர்கள் பிடிவாதமாக இருந்து அதைச் செய்து தரவேண்டுமென்று நான் மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அதற்கு அடுத்து இது நடக்காததனாலே என்ன ஆயிற்று? ஊராட்சி மன்றங்கள் எல்லாம் ஊர்ந்து செல்கின்ற ஆட்சிமன்றங்களாக இருக்கின்றன. நகராட்சிகள் எல்லாம் நகராத ஆட்சிகளாக இருக்கின்றன. அங்கே எதுவுமே நடைபெறுவது இல்லை; சரியாக நடைபெறுவது இல்லை. எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் சொன்னார்கள். அங்கே ஏற்கெனவே ஏகப்பட்ட குறைபாடுகள். இந்த அவையிலேகூட நான் அதிகமாகப் பேசுகிறேன் என்று சிலர் குறைபட்டுக்கொள்கிறார்கள். நான் அதிகமாகப் பேசுவதைக் குறைக்க

வேண்டுமென்று சொன்னால், 21 பிரதிநிதிகள் வரவேண்டியவர்கள் இங்கே வந்திருந்தால் நான் அதிகமாகப் பேச முடியாது. ஊராட்சிமன்றங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படக்கூடிய அந்தப் பிரதிநிதிகள் வந்தால், இங்கே இருப்பவர்களே அதிகமாகப் பேசிக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இருக்காது. எனவேதான் பல்வேறு விதமான கருத்துக்களையும் நாங்களே

(முற்பகல் 11-30)

எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எத்தனை ஆண்டுகளாக இந்த 21 இடங்கள் இங்கே நிரப்பப்படாமலேயே இருந்து வருகின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பல ஆண்டுகளாக இந்த இடங்கள் காலியாக இருக்கிற காரணத்தால்தான், மற்ற பிரச்சினைகளைப்பற்றியும் நாங்கள்தான் பேச வேண்டும் என்ற நிலை ஏற்படுகிறது. எனவே இந்தக் காரணத்திற்காகவாவது உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை உடனடியாக நடத்துங்கள் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஊராட்சி ஒன்றியம் என்று அந்த அமைப்புக்குப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. பல ஊராட்சி மன்றங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களைக் கொண்டதற்குப் பெயர் ஊராட்சி ஒன்றியம். ஆனால் இன்றைக்கு அந்தப் பெயருக்கேகூட பொருத்தமில்லாமல் அது இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஊராட்சிமன்றத் தேர்தல்கள் நடைபெறாததன் காரணமாக, அங்கெல்லாம் விளக்குகள் எறிவதில்லை, குடிநீர் வசதிகள் இல்லை, கொசுத் தொல்லை தாங்க முடியாமல் இருக்கிறது, சுகாதாரக் கேடுகள் அதிகமாக இருக்கின்றன. இதையெல்லாம் சொல்லிக்கொண்டே போனால் முடிவே இருக்காது. குப்பை வண்டிகளே இல்லை. குப்பைகள் ரோட்டிலே நிறைந்து கிடக்கின்றன. அதை அள்ளுவதே இல்லை. எங்கள் ஊரான தலைஞாயிறில் பாடுகள் இருக்கின்றன. குப்பை வண்டிகள் இல்லை. தெருவெல்லாம் குப்பைகள் நிறைந்து கிடக்கின்றன.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்கூட இங்கே பேசும்போது, ஒரு கருத்தைச் சொன்னார்கள். "நாங்கள் ஊர்களுக்கு எதற்காக வருகிறோம் தெரியுமா? நாங்கள் வந்தாலாவது விளக்குகள் எரியும் என்றார்கள்" அமைச்சர்கள் வந்தால்தான் விளக்குகள் எரிகின்றன. அப்போதுதான் சாலைகள் பழுதுபார்க்கப்படுகின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலைதான் எங்கேயும் இருக்கிறது.



தஞ்சையில் திருவள்ளுவர் தியேட்டர் என்று இருக்கிறது. அதற்குள் போய் உட்கார முடியாது. நகராட்சி நடத்துகிற தியேட்டர் அது. எல்லா சீட்டுகளும் உடைந்து, கிழிந்து போயிருக்கின்றன. சொல்ல முடியாத அளவுக்கு மூட்டைப் பூச்சிகள் மலிந்து கிடக்கின்றன. அதனால் நட்டம் ஏற்படுகிறது.

திருச்சியிலே நகராட்சிக்குச் சொந்தமான லாட்ஜுகள் இருக்கின்றன. அங்கே மற்ற லாட்ஜுகளில் உள்ள வசதிகள் இல்லை. சுகாதார முறையில் எதுவும் அங்கே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதற்கெல்லாம் காரணம் அங்கே கவனிப்பதற்கு யாரும் இல்லை.

உள்ளாட்சிமன்ற ஆசிரியர்களுக்கும் நகராட்சிமன்ற ஆசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் அளிக்கப்படுவதில்லை. நகரவைப் பள்ளி ஆசிரியர்களுக்கு அவர்கள் ஓய்வு பெறும்போது 5,000 ரூபாய் வழங்கப்படுவதில்லை. எல்.டி.சி. கன்செஷன்கள் அளிக்கப்படுவதில்லை. மாத இறுதியில் அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படுவதில்லை. முன்னாள் அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள் ஒருமுறை நாகையில் ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். அப்போது நானும் அங்கு பேசினேன். "ஆசிரியர்களுக்கு உரிய நாளில் ஊதியம் கிடைக்கவில்லை, பல்வேறு நகராட்சிகளில் இப்படி நடக்கிறது" என்று நான் அப்போது குறிப்பிட்டேன். உடனே இனி நகராட்சி ஆசிரியர்களுக்கு நேரடியாக ஊதியத்தை வழங்க வேண்டும் என்ற அடிப்படையில், அவர்களையெல்லாம் வங்கிக் கணக்கு ஏற்படுத்தச் செய்து, இனி அதிலேயே அவர்களுக்குச் சம்பளம் போடப்பட்டுவிடும் என்றார்கள். அதற்காக நான் அப்போதே நன்றி கூட தெரிவித்துக்கொண்டேன். அது மட்டுமல்ல. நன்றி தெரிவித்து அந்தக் கூட்டத்திலே மாலைகூட பலர் போட்டார்கள். ஆனாலும் இன்றுவரை நகராட்சி ஆசிரியர்களுக்கு அதே பழைய நிலைதான் இருக்கிறது. இன்னும் ஒன்றே ஒன்றைப்பற்றி மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை கவனமாகக் கேட்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல்லவபுரம் நகராட்சி எல்லைக்குள் உள்ள குரோம்பேட்டைப் பகுதியில் கண்ணன் நகர் என்ற ஒரு பகுதியும், புதுவை நகர் என்ற ஒரு பகுதியும் இருக்கின்றன. ஒரே தெருவில் இரண்டு பக்கங்கள் அவைகள். மக்கள் வசிக்கும் அதன் நடுவில் ஒரு சுடுகாடு இருக்கிறது. அந்த இரண்டு தெருக்களுக்கும் இடையே 20, 30 அடி வித்தியாசம்கூட இல்லை. அந்த இடத்தில்

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1985 மார்ச் 20

ஒரு சுடுகாடு இருக்கிறது. அங்கே பிணம் எரிவதை பெரியவர்களும், சிறியவர்
களும் நன்றாகப் பார்க்க முடியும். இந்தச் சுடுகாட்டை அகற்ற வேண்டும்
என்று எத்தனையோ முறை அதிகாரிகளிடம் படையெடுத்தும்கூட, அந்தப்
பகுதி மக்களின் இந்தக் குறை இதுவரை தீர்க்கப்படாமலேயே இருக்கிறது.
நானே என்னுடைய நண்பர் ஒருவர் வீட்டிற்கு அந்தப் பகுதியில் சென்றிருந்த
போது, அங்கே எரிந்து கொண்டிருக்கும் பிணத்தின் வாடை தாங்க முடியாமல்
உடனே திரும்பிவிட்டேன். தெருவுக்குள்ளேயே அந்தச் சுடுகாடு இருக்
கிறது. எனவே உடனடியாக அதை அகற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கெல்லாம்
கவுன்சிலர்கள் இருந்தால் இந்த நிலை இருக்குமா? கவுன்சிலர்கள்தான்
இதைச் சும்மா விட்டு வைத்திருப்பார்களா? அல்லது மக்கள்தான் கவுன்சிலர்
களை சும்மா விட்டு வைத்திருப்பார்களா? அதைப்போலவே பல்லவபுரம்
ஏரியும் எப்போதும் பொழிந்துகொண்டே இருக்கிறது. இதனாலே அப்
பகுதியிலுள்ள குடிசைகள் மிதந்துக்கொண்டே இருக்கின்றன. இப்படிப்
பட்ட நிலைமைகளை மாற்றுவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டு
மென்றால், உள்ளாட்சிமன்றத் தேர்தல்கள் விரைவில் நடைபெற்றாக
வேண்டும்.

அடுத்து, கிராமப்புறங்களில் பெண்களுக்காக கழிப்பிட வசதிகள் செய்து
கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். இன்றைக்கு கிராமங்
களில் அத்தகைய வசதிகள் அவர்களுக்குத் தேவையில்லை. காரணம்
பெண்கள் தங்கள் வீட்டின் பின்பக்கத்திலேயே அதற்குரிய வசதியைத் தேடிக்
கொள்கிறார்கள். யாரும் கழிப்பிடங்களைத் தேடிப் போவதில்லை. நகர்ப்
புறங்களில் வேண்டுமானால் இத்தகைய வசதிகள் பெண்களுக்குத் தேவைப்
படலாம். ஆனால் அவ்வாறு கிராமங்களில் பெண்களுக்குக் கழிப்பிடத்தை
உருவாக்குகிறீர்களே, அங்கே தண்ணீர் இருக்கிறதா என்று பார்க்க
வேண்டாமா? அக் கழிப்பிடங்கள் பயன்படுத்தப் படாமலேயே கிடக்கின்
றனவே! அரசு பணம் பாழாவது தான் மிச்சமா? ஆகவே, அதிகாரிகள்

(முற்பகல் 11-35)

அதைக் கவனிக்கவில்லை, கவனம் செலுத்த எண்ணமில்லை. வாய்ப்பு இல்லை.
இப்படி தான் சொல்லிக்கொண்டே போகலாம். ஆகவே இந்தச் சட்ட முன்
வடிவை இங்கே கொண்டு வந்தாலும், இதில் குறிப்பிட்டுள்ள காலம் வரை
பொறுத்திருக்காமல் தேர்தலை நடத்த வேண்டும். இந்த சிசர்வேஷன் கூட
புதிதாக இந்த ஆட்சியால் கொண்டுவரப்பட்டதல்ல. கலைஞர் அவர்கள்
ஆட்சியில் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. எத்தனை சதவீதம்
யார்யாருக்கு என்று இப்போது ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆகவே மேலும்



1985 மார்ச் 20] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

காலத்தைக் கடத்தக் கூடாது என்று கோடிட்டுக் காட்டி "தேர்தலை முடியுங்கள், உள்ளாட்சி மன்றத் தேர்தலை நடத்தி ஜனநாயக முறைப்படி வாய்ப்புகளைத் தாருங்கள், ஜனநாயகத்தை நிலைநாட்டுங்கள், அது தான் காந்தியார் கண்ட கனவு, அண்ணா கண்ட கனவு" என்பதை வற்புறுத்திச் சொல்லி அமைகிறேன்.

**திரு. மு. மாசிலாமணி** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே இன்றையதினம் உள்ளாட்சித் துறை சட்ட முன்வடிவின் மீது பேசுவதற்கான வாய்ப்பை நல்கியமைக்கு இதயம் கலந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் உள்ளாட்சித் துறை சட்ட முன்வடிவின் மீது பேசுகின்ற போது, எங்களுக்கெல்லாம் ஒரு மகிழ்ச்சிகரமான எண்ணத்தை தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்று வள்ளுவப் பெருந்தகையார் சொன்னதைப் போல, உள்ளாட்சித் துறையில் நல்ல திறமையாகப் பணியாற்றி பண்பட்டிருந்த ஒருவரை, எங்களுடைய கழகத்தின் பொதுச் செயலாளராக இருந்த திரு. ப. உ. சண்முகம் அவர்களை நியமித்திருப்பது கண்டு பெருமகிழ்வு எய்துகிறோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் 1949 ஆம் ஆண்டு கட்சியைத் துவங்கிய நேரத்தில் நாடெங்கும் கட்சிக் கொள்கைகளைப் பரப்பி வந்தபோது அண்ணா அவர்கள் ஒன்றைச் சொல்லி பெருமைப்படுவார்கள். எங்களுக்கு இரண்டு மாமணிகள் கிடைத்திருக்கிறார்கள். ஒருவர் ஈ. வெ. கி. வள்ளிமுத்து அவர்கள், மற்றொன்று 1943 ஆம் ஆண்டிலிருந்து 1960 ஆம் ஆண்டு வரையில் பஞ்சாயத்து போர்டு தலைவராக இருந்த திரு. ப. உ. சண்முகம் அவர்கள். வட ஆற்காடு மாவட்டம் என்றாலே திரு. ப. உ. சண்முகம் அவர்கள்தான் என்று சொல்லுவார்கள், மதுரை மாவட்டம் என்றால் திரு. முத்து என்றுதான் சொல்லுவார்கள். திரு. ப. உ. சண்முகம் அவர்கள் வட ஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலையில் நகராட்சித் தலைவராக பொறுப்பேற்று பணியாற்றியிருக்கிறார்கள். அப்படிப்பட்டவரை இன்றைய தினம் உள்ளாட்சித் துறை அமைச்சராக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நியமித்திருக்கிறார்கள். எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள், திரு. ப. உ. சண்முகம் அவர்கள் ஏதோ பிடிவாதமாக

[திரு. மு. மாசிலாமணி] [1985 மார்ச் 20

இருந்து வந்திருப்பதாகச் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில், அவருக்குப் பதில் சொல்ல கடமைப்படவில்லை என்றாலும், அவரவர் கோணங்களில் இருந்து அவரவர் பார்க்கின்றபோது, அவரவருடைய எண்ணங்கள்தான் பிரதிபலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவான கோணத்தில் பார்க்கிறபோது, ஒரு அமைச்சரை ஓர் உறுப்பினர் இப்படி தன் கருத்து மூலமாகச் சொல்லுவது சபைக்கு மரபாகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்று திறம்படச் செய்வார்கள் என்ற நம்பிக்கை பலருக்கு இருக்கிறது.

உள்ளாட்சித் துறையில் நாடு பூராவும், பட்டிதொட்டிகள் பூராவும் என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பதை கடந்த எட்டாண்டுக் காலமாக நன்கு உணர்ந்திருக்கிறோம். புரட்சித் தலைவர் அவர்கள் அரசு வந்த பிறகுதான் தாழ்ந்து கிடக்கின்ற மாநகராட்சி, நகராட்சித் தோழர்களுக்குப் பல வசதிகளையும் செய்து தந்திருக்கிறார்கள். பொருளாதாரத்தில் மேம்பாடு அடையாமல் இருக்கின்ற சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துபவர்கள், போயர்கள், சாலைகளில் வேலை செய்கிறவர்கள் மற்றும் நகர சுத்தித் தொழிலாளர்கள் ஆகியவர்கள் எல்லாம் மேம்பாட்டிற்குரியவர்களாக இன்றைய தினம் கருதப்படுகிறார்கள் என்றால் அது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய பணியாகும் என்பதை மனப்பூர்வமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

இன்றைய தினம் சென்னை மாநகரத்தைப் பொறுத்த வரையில், ஜனத்தொகை 40 இலட்சத்தை எட்டிக் கொண்டிருக்கிறது என்று புள்ளிவிவரம் தருகிறார்கள். சென்னையிலே வாடகைக்கு வீடு கிடைப்பது அரிதாக இருக்கிறது. ஆனால் வீட்டினுடைய உரிமையாளர்கள் ஒவ்வொரு ஆண்டும் மாநகராட்சியினுடைய நிதிநிலை அறிக்கை வருவதற்கு முன்பு வாடகையை அதிகமாக்கிக் கேட்டுக்கொண்டு வருகிறார்கள். குறிப்பாக சென்னை மாநகரத்தில் வாடகையில் குடியிருக்கின்ற, கீழ்மட்டத்திலே இருக்கின்ற ஒட்டர்கள், முடிதிருத்துவோர்கள், சலவையாளர்கள் இன்னும் கீழ்நிலையில் இருக்கின்ற மக்கள் எல்லாம் இன்றைய தினம் வாடகை வீடுகளில் இருந்துகொண்டு வருகின்றார்கள். அவர்கள் எல்லாம் மாதாமாதம் ரூ. 50-க்குமேல் கொடுக்க முடியாமல் அவதிப்படுகின்றார்கள். அந்த நிலைமையைப் போக்குவதற்காகத்தான் இன்றைய தினம் குடிசை மாற்று வாரியம் மூலமாக குடிசைகளை வீடுகளாகக் கட்டிக்கொண்டு அதை [illegible]டையதாகவும் ஆக்கி



1985 மார்ச் 20] [திரு. மு. மாசிலாமணி]

கொண்டு வருகிறது. இந்த நேரத்திலே சாலை ஓரங்களிலே, பிளாட்பாரங்களிலே, பஸ் ஸ்டாண்டுகளிலே எல்லாம் மக்கள் குடியிருந்து கொண்டு வருவதை நாம் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. அப்படி குடியிருப்பவர்களை வெளியேறச் சொல்லி அரசு ஆணையிடும்போது, அவர்களுக்கு ஜனநாயக உரிமைப்படி பாதுகாப்பு அளிக்கவில்லை என்று பல கட்சிக்காரர்கள் சொல்கின்றார்கள். "பார்த்தீர்களா, பார்த்தீர்களா, இந்த அக்கிரமத்தை. இந்த ஆட்சியிலேதான், இந்த எம்.ஜி.ஆர். ஆட்சியிலேதான் இப்படி இருக்கிறது" என்று மற்றவர்களும் சொல்லி அதைப் பயன்படுத்திக் கொள்கின்றார்கள். இந்த நேரத்திலே இன்னொன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாநகராட்சியில் உள்ள குறைகளைப்பற்றிச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மோட்டார் வாகனங்களைப் பழுது பார்ப்பவர்கள் சென்னையிலே, குறிப்பாக திருவல்லிக்கேணி, மைலப்பூர், எல்டாம்ஸ் ரோடு, மந்தைவெளி ஹார்ப்பர் போன்ற பல பகுதிகளிலே ஒரு இடத்தைப் பெற்றுக்கொண்டு அங்கே வண்டிகளைப் பழுது பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். அப்படிப் பழுது பார்க்கின்றபோது அங்கேயுள்ள சாலைகளைப் பாழ்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள். சட்டத்திற்கு முன்னோடியாக இருப்பவர்களுடைய வண்டிகள் அங்கே நின்றுகொண்டு, அவைகளுக்குப் பழுது பார்த்துக்கொண்டிருக்கும்போது, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியவில்லை. ஆக இதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். அவர்கள் அவருக்கே உரித்தான முறையில், பாணியில், நல்ல முறையில், அணுகுமுறையில் செயல்படுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

குறிப்பாக சென்னை நகரத்தில் 1971 ஆம் ஆண்டு முடிதிருத்துவோர்கள் கடைகள் 11,741 இருந்தன. இன்றையதினம் கணக்கு எடுக்கின்றபோது, தென்னிந்திய அண்ணா முடிதிருத்துவோர் சங்கத்தினுடைய தலைவர் பொறுப்பை ஏற்ற பிறகு, ஒவ்வொரு வட்டமாகச் சென்று கணக்கு எடுத்த போது, 15,651 சலூன்கள் சென்னையிலே இருக்கின்றன. ஆனால் அந்த சலூன்களிலே வரி என்ற பெயராலே, தொழில் வரி என்ற பெயராலே வசூலித்துக்கொண்டிருக்கின்றார்கள். மாநகராட்சியிலே இருக்கின்ற முடிதிருத்துவோர் கடைகளிலே இன்றையதினம் [illegible] கட்டவில்லை என்று அவர்களுக்கு நோட்டீஸ் [illegible] அதன் மூலமாக கோர்ட்டுக்கு அழைத்துச்

சென்று ரூ. 200, ரூ. 300, ரூ. 500 என்று அபராதம் கடைகளுக்கு விதிக்கிறார்கள். அந்த நிலையை கடந்த 1980 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, அதனை அன்றையதினம் நான் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்களிடம் சொல்லி விண்ணப்பித்தேன். அவர்கள் அதன்மீது உத்தரவு போட்டு இன்று வரையிலே அது நிறுத்தப்பட்டிருக்கிறது. சலூனை வைத்திருக்கின்றவர்கள், சலூனிலுள்ள கழிவு நீரை அகற்ற டிரெய்னேஜைக் கட்ட வேண்டும் என்று சொல்லும்போது, வீட்டின் உரிமையாளர்கள் வீட்டை அல்லது கடையைக் காலி செய்யச் சொல்கின்றார்கள். ஆனால் நகராட்சி சட்டம் காரணமாக, சேனிட்டரி இன்ஸ்பெக்டர் மூலமாக வழக்குப் போடுகிறது. ஆகவே அந்த டிரெயினேஜ் சிஸ்டம் அமைக்கவேண்டுமென்ற உத்தரவை மேலும் தொடராமல், அந்த ஏழைகளுக்கு அப்படி ரூ. 200, ரூ. 300, ரூ. 500 என்று அபராதம் விதிப்பதைத் தடுக்க வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று மாநகராட்சியிலே முடிதிருத்துவோர் கடைகளுக்கு லைசென்ஸ் வரி ஒரு ரூபாய் என்று வசூலிக்கின்றார்கள். ஸ்டாம்ப் வரி என்று ஒரு ரூபாய். எழுத்துக் கூலி என்று ஒரு ரூபாய். பிறகு கட்டணம் கொடுப்பதற்கு ஒரு ரூபாய் என்று சொல்லி ரூ. 5 அளவுக்கு வருகிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் 1951 ஆம் ஆண்டு சென்னையிலே உள்ள சவரத் தொழிலாளர்கள் மாநாடு சூளைப் பகுதியிலே நடைபெற்றது. அப்போது அவர்கள் சொன்னார்கள். "இந்த நாட்டிலே முடிதிருத்துவோரும் சலவையாளரும் முதுகெலும்பாக இருக்கின்றார்கள். அவர்கள் மீதுதானே நாம் நடந்துகொண்டிருக்கிறோம்" என்று அவர்கள் கூறியதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் குறையைப் போக்க வேண்டும் என்று அவர்கள் அன்றே சொன்னார்கள். ஆனால் இன்றையவரையில் சேலத்தில் ஒரு மாதிரியாகவும், கோயம்புத்தூரில் ஒரு மாதிரியாகவும், திருச்சியில் ஒரு மாதிரியாகவும் லைசன்ஸ் கட்டணங்கள் இருக்கின்றன. மற்ற மாநகராட்சிகளிலே வசூல் செய்வதில்லை. விட்டு விட்டார்கள். எனவே தமிழகத்தைப் பொறுத்த வரையில், ஒரே சீராக 1 ரூபாய் வசூல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-45)

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் திரு. மாசிலாமணி அவர்கள் முடி திருத்தும் தொழிலாளர்கள் பற்றிச் சொல்கிறார்கள். இன்றைய பத்திரிகையில் ஏப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து முடி திருத்தம்



[க]ட்டணத்தை உயர்த்துவதாகச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்கும் சலுகைகளை அளித்தால், அந்தக் கட்டணங்களை [உய]ர்த்தாமல் இருப்பார்களா ?

திரு. மு. மாசிலாமணி : இன்றையதினம் பல்வேறு அமைப்புகள் இருக்கின்றன. முடி திருத்துவோர் சங்கம், மருத்துவர் சங்கம், முடி திருத்துவோர் மருத்துவர் சங்கம் என்று பல அமைப்புகள் இருக்கின்றன. இன்றையதினம் அறிவிப்பு செய்துள்ள சங்கம் எங்களுடைய சங்கமல்ல. எங்களுக்கு எதிர்ப்பான சங்கம். அதற்கும், எங்களுக்கும் சம்பந்தமில்லை. பண்ருட்டியில் எங்கள் சங்க செயற்குழு கூடி, மாநகரம், நகரம், பஞ்சாயத்து ஆகியவற்றுக்குக் கட்டணங்களை படிப்படியாகக் குறைத்து நிர்ணயித்திருக்கிறோம். இளம் சிறார்களுக்கு ரூ. 2.50 என்று நிர்ணயித்திருக்கிறோம். ஆனால் எங்களுக்கு எதிரான சங்கத்தில் 3 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். ஆளுங் கட்சிக்கு எங்கள் சங்கம் ஆதரவு தெரிவித்தாலும், பொதுவாக எல்லா[ரு]க்களுக்கும் பயன்படும் அளவுக்குக் கட்டணங்களை நிர்ணயித்திருக்கிறோம். அது பின்னால் பத்திரிகையில் வரும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்கள் பற்றிய சட்டமுன்வடிவின்மீது பேசி, விரைவாக முடிக்க வேண்டும்.

திரு. மு. மாசிலாமணி : மேலவைத் துணைத் தலைவரவர்களே, நாங்கள் பேசுவதே குறைவு. சமுதாயத்திலே தாழ்ந்திருக்கும் எங்களுக்கு இங்கேயும் தாழ்ந்திருக்கும் நிலைமை ஏற்படக் கூடாதென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உறுப்பினரவர்களுக்கு 10 நிமிடங்கள் பேசுவதற்கு அனுமதித்திருக்கிறோம். இன்னும் நீண்ட நேரம் பேச வேண்டுமென்று கேட்டால், ஆட்சேபணையில்லை. என்ன பிரச்சினையோ, அதைப்பற்றிப் பேச வேண்டும்.

திரு. மு. மாசிலாமணி : உள்ளாட்சிப் பிரச்சினைதான். சலூன்களுக்கான லைசன்ஸ் கட்டணங்களை ஒரே சீராக, ஒரு ரூபாய் என்ற அளவிலே வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த முறையில் தீர்மானங்களை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களிடம் கொடுத்திருக்கிறோம். அவர், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களை அணுகி, பரிசீலித்து, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், முடி திருத்துபவர்கள் இன்றைக்கு நம்பிக்கை குறைவான

வர்களாக இருக்கிறார்கள். முடி திருத்தும் கடைகளிலே, சலவைக் கடைகளிலேதான் சுய மரியாதை இயக்கமே வளர்ந்திருக்கிறது என்று இந்த அவையிலே தெரிவித்து, அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு, இந்த அளவுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு தந்த மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

* Thirumathi TARA CHERIAN : Hon. Deputy Chairman, Sir, I thank you for giving me this opportunity to participate in the discussion on this Bill. I would like to take this opportunity to congratulate the Hon. the Minister for Local Administration who has recently been inducted into the Cabinet. The portfolio that has been given to him is a very important one from my point of view because my husband and I were associated with the Madras City Corporation in the past. I have always felt that a lot of things could be done at the grass-root level through the local bodies.

Sir, the Bill that is before us seeks to further amend the Madras City Municipal Corporation Act so as to extend the term of office of the Special Officer. Similar Bills in respect of Coimbatore and Madurai are also coming up for consideration today. The elections to these Corporations and other local bodies are being postponed for certain reasons that have been given in the Bills. Some of the reasons that have been given are that there would be delay in the issue of identity cards to the voters and that the enumerating of voters would take some time. Yet, I have a feeling that we should have done all these things much earlier. The Hon. the Chief Minister was able, through a remote control, to hold the Elections to the State Assembly in time along with the Elections to the Lok Sabha. Therefore, I feel that we need not postpone the elections to the local bodies for too long. I hope that the Hon. the Chief Minister and the Hon. the Minister for Local Administration will be able to have the elections to local bodies as early as possible.

(முற்பகல் 11.50)

Sir, I have a particular sentimental attachment for the Madras Corporation. My husband and I were duly elected, for different terms, as first citizens of the City of Madras. The Madras City Municipal Corporation is one of the oldest Municipal Corporations in the whole of India. I think only the Calcutta Municipal Corporation and the Bombay Municipal Corporation came into existence along with Madras Corporation. Therefore, it has set an example, by its work, for other Corporation both in this State and elsewhere. The Council of the Madras Corporation has





been an august body and it was occupied by stalwarts like Thiru Sathyamurthi who later became great Parliamentarian. They always maintained dignity and decorum in the Council meetings and saw to it that the Madras Corporation did useful work. In those days, we were second to none in the field of municipal administration.

We must strain every nerve to see that democracy exists in local government. It is at the level of the local bodies that we can get into direct touch with the people and with those who require help. Everybody cannot go to the Ripon Buildings and an ordinary person may not even be allowed inside those buildings. Here, I must say, with due respect, that the Special Officer of the Madras Corporation has been a kind and understanding person and he has been working almost all the 24 hours a day to see that conditions become better in Madras City. But all of us must admit that the amenities in Madras City have become out-dated and out-moded. The population of Madras City has increased and there is shortage of water-supply and drainage facilities. Of course, this is not the time for me to mention all these things. After the State Budget is presented, we will know of the allocation of funds and then we will be in a better position to mention all these things in greater detail.

Sir, it is a matter of pride that we are doing very well in implementing the Nutritious Noon Meal Programme. The Hon. the Chief Minister has done a wonderful thing in implementing this programme. As early as 1957, when I was the Mayor of Madras, we were able to feed 50,000 children in the Corporation Schools. We had to put in very hard work to do that and the fact is there in the records. Therefore I think I am in a better position to appreciate the work of the Hon. the Chief Minister in implementing the Nutritious Noon Meal Programme. We have hundreds of schools in the Madras City under the Municipal Corporation area. Thousands of children are studying in those schools and most of them come from poor families. Though it may not be possible to provide them with everything that they require, we have to see, as far as possible, that their early childhood is made a memorable one. At present, those schools do not have amenities like playgrounds and we should do something about it.

Coimbatore is a big industrial town and I am glad that it has recently been elevated to the position of a Corporation. I think my husband was connected with that town when they established the Corporation. So also, Madurai, an ancient town, has become a

Corporation. I am sure that the Government will think of elevating some more big Municipalities into Corporations so that better work may be turned out in those places.

It is a well known felt that the Circle Offices are ding good work in Madras ciey. I would like to say that there were Circle Offices even during my Mayoralty. They have got to be re-vitalised Everybody cannot go to Ripon Buildings for getting things done. The Ciey Municipal Corporation was doing wonderful job through the Circle Offices were the elected Member of the Circle or Division would be available to bear the complaints of the people. There will also be de-centralisation of powers to a great extent and the Corporation authorities would be able to cater to the needs of the people in a better manner with the circle offices under efficient officers. Without going all the way to Ripon Buildings, the people can go to the Circle Office and these Circle Offices should be strengthened and good officers should be poster there. It has been made clear that red-tapism should be cut and the bottle-necks removed if the corporation is to run efficiently. There should be a regular re-organisation of Administration. The late Thiru John Mathai has written a book on the necessity for re-organisation in Government administration and the functioning of the I.A.S. There should be two tiers in the Service, one set of people can be trained for administrative purpose and the other set can be trained to take up commercial undertakings in the Government section. If we have such two tier system, better efficiency could be there. I am sure that this will be looked into.

Sir, coming to the necessity of having local Government if democracy should succeed in a country like ours, decentralisation is very important. Democracy does not begin and end with elections to Parliament and State Legislatures. The participation of the people in the management of their own local offices at the District level is very essential. Unfortunately, the local Self Government institutions like District Boards, Municipalities, Taluk Boards, Panchayats and Panchayat Unions have been either abolished or made dormant for long because elections have not been held at the proper time. I am sure the local bodies are the training ground for political leaders and legislators. They are the nurseries of democratic institutions. Self-Government must start at this level so that the people in towns and villages may also be looked after. Gandhiji's great dream was Grama Swaraj and such a dream does not merely mean the replacing of white rulers with some of our own pepole. National Extension Service, Community Development and Panchayat Raj try to give more





involvement to the people. Today there is a tendency to centralise power in the hands of a few people and there is a great need to reverse the process and revitalise our Municipalities and other local bodies.

(முற்பகல் 11.55)

Mr. DEPUTY CHAIRMAN: I think the subject which the hon. the Lady Member deals with seems to be very weighty and, therefore, the hon. Members are very serious. I suggest that she could be a little light in discussing the subect. Because of the weighty speech the Hon. Minister and the other hon. Members are very serious.

Thirumathi TARA CHERIAN: It should be naturally so, Democracy can never survive if there is no participation of the people at the grass-root level. It is not sufficient to confine our democratic activities to elections to Legislature in the State. We have taken away a lot of power from the local bodies. Even during the last year the payment of salaries to teachers which was in the hands of the local bodies has been taken away by the Government. The local bodies cannot have any hold over the teachers. If the teachers come late, they could not be questioned. The local authority had no control over them. A letter that goes from the Headmaster or Principal may receive attention from the Government only after a long time. By the time some action is taken in the Government Department, the Ministers may not be there and an election may be round the corner. Therefore, I feel that more powers should be given to the local bodies rather than having all the powers at the top. We have many schemes like the Rural Development Scheme and the Rural Employment Scheme and the Government want the people to be benefitted by those schemes. But at present those schemes are implemented only through the agency of officialdom. This is not giving more powers to the people. Only the mother knows how and when to give food to her child. Therefore, the local bodies should be given more authority. Women should be encouraged to occupy positions in those local bodies. We should have more and more Madhar Sangams and we should see that more and more women become literate. Then, we can find more women occupying positions in Panchayats and other local bodies. Some years ago, it was said that in the elections to local bodies, some reservations would be made for women Scheduled Castes and Scheduled Tribes. Now, the Hon. the Chief Minister and the ruling Party have won the mandate of the people in a wonderful way. Then, why should not the Government

see that women and persons belonging to the Scheduled Castes get elected to the local bodies, in their own right and not through reservations? Why should not the ruling Party announce some women and some persons belonging to the scheduled Castes as its candidates for the elections to the local bodies and see that they get elected? I am sorry that the Hon. the Finance Minister is not present here now. He said that one advantage of the Ministers undertaking tours was that the places which they vested would get better civic amenities on the eve of their visits. Why should the Ministers go all the way to those places just to ensure that the people there get the facilities? An ordinary man of that locality, if elected to preside over the Panchayat, will see that the amenities come into existence. I think the time has come for us to think more and more of the common man and to see that democracy is restored in the local bodies. More and more women should be made to take part in the administration of the local bodies. Today, the home is happy only because of the women. She is the arbitrator in all family disputes. She takes care of the children and gives them good education. In the same way, she can run the Panchayat administration, smoothly. Therefore, I hope that it will be possible for the new Minister to see that more women occupy positions in the Panchayats and other local bodies.

(நண்பகல் 12.00)

I hope the Hon. Minister will also see that the local bodies get more financial autonomy. They should not be depending on the grants received from above. The local bodies should have more taxation powers or better share in areas like Vehicle Tax, Entertainments Tax and Advertisement fees so that their financial position may be sound. If somebody commits a wrong in the administration of a local body, the arm of the law is long enough to get hold of him and punish him. There may be some indiscipline and some dishonesty here and there at all levels. It is not so in the field of local administration alone; it is so in other fields also. As a matter of fact, it is the ordinary man who is more honest. So, I request the Government to give more powers to the local bodies. They should not be at the mercy of the State Government. They should exist on their own. If the people in charge of local bodies do not deliver the goods, the people will change them the next time. So, let us have faith in our people. Let them not be driven about like dumb cattle. Those who get elected to the local bodies will look after the affairs of those institutions. If they are given powers to raise funds through taxation, they will draw up the Budget for the local body properly and carry out the various development works.

With these words, I thank you once again for giving me this



* திரு. சி. இராமலிங்கம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றினுடைய (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவுகள் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே என்னுடைய அன்புக்கும், மரியாதைக்கும் உரிய மாண்புமிகு அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் இங்கே முதன் முதலாக, முதல் நாள் இந்த காலநீட்டிப்பு சட்ட முன்வடிவை வைத்திருக்கிறார்கள். அதைப் போலவே இவர்கள் அரசியலுக்கு வந்த உடனே முதன் முதலாக திருவண்ணாமலை நகராட்சியினுடைய சேர்மனாக அடியெடுத்து வைத்தார்கள். அதன் பிறகுதான் அவர்கள் வாழ்க்கையிலே தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் பாராட்டும் அளவிலே, செயல்பட்டு, இன்று டாக்டர் புரட்சித் தலைவருடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மனம்நிறைந்த பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்று செயல்பட்டு வருகிறார்கள். கழகத்திலே தேர்தல் வராது, வராது என்று மாற்றுக் கட்சிப் பங்காளிகள் எல்லாம் தூற்றிய நேரத்திலே, குறை கூறிய நேரத்திலே, பொதுச் செயலாளராக வந்தவுடனே கழகத்திலே தேர்தலை நடத்தி வெற்றி கண்டார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசுகிறபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிடிவாதமாக இருந்து வாங்கிவிட்டார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். இதெல்லாம் பேச்சுக்காகப் பேசலாமேயொழிய, அவருடைய பிடிவாதம் எதில் இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களுக்குத் தெரியும்.

தமிழ் நாட்டிலே கிராமப் பஞ்சாயத்துகள், நகரப் பஞ்சாயத்துகள், நகராட்சிகள், மாநகராட்சிகளுக்கு எல்லாம் தேர்தலை நடத்த புதிய முறை விதிகளை ஒரு சட்டத்தை எடுக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்

(பிற்பகல் 12.05)

கொள்கிறேன். அதன்படிலே தேர்தல் வருவதற்கு முன்னாலே ஒரு கமிட்டியைப் போட்டு — என்னுடைய தாழ்மையான எண்ணம் உதாரணத்திற்கு பஞ்சாயத்து யூனியன் 7-வது விதியிலே தலைவர் இன்னின்ன காரியங்களைச் செய்யலாம் என்று இருக்கும்: உடனே பிறகு 9-வது விதியிலே தலைவர் செய்வதைத் தவிர செய்யலாம் என்று க.ஒ.-க்களுக்கு அதிகாரங்கள் இருக்கும். 1958-லே இருந்து இந்த மாற்றங்கள் வந்திருக்கின்றன. இந்த மாற்றத்தை எல்லாம் போக்கி—உறுப்பினர் திருமதி தாரா செரியன் அந்த அம்மையார்

அவர்கள் கூட இராம ராஜ்யம் என்று சொன்னார்கள்—பஞ்சாயத்துச் சட்டங்களை நாம் ஓரளவுக்கு மாற்றியமைக்க வேண்டும். உதாரணமாக கடந்த தேர்தலின்போது மக்கள் கூறிய கருத்து மாநகராட்சியிலே உள்ள இலாகாக்களையும் அதிகாரங்களையும் பிரித்து வைத்ததினாலே மக்களுக்கு நன்மைகள் செய்ய முடியவில்லை என்று சொல்கிறார்கள். இன்றைக்கு சாக்கடை கெட்டுவிட்டது, வெளியிலே தண்ணீர் வருகிறது என்று அதிகாரிகளிடத்திலே போய்ச் சொல்லும்போது, “எங்களுக்கு சம்பந்தம் இல்லை என்றும் இது சுவரேஜ்-க்கு சம்பந்தமானது” என்றும் சொல்கிறார்கள். சுவரேஜ் யாருடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது என்று சொன்னால், அது ஒரு தனி இலாகாவாக இருக்கிறது. அதுபோல, தண்ணீர் வரவில்லை என்று சொன்னால், அது ‘மெட்ரோ வாட்டர் போர்ட்டைச் சார்ந்தது’ என்று சொல்கிறார்கள். குடிசை மாற்று வாரியம், வீட்டு வசதி வாரியம் இவைகளிலே இருக்கக் கூடிய சுகாதாரக் கேடுகளைச் சொல்லும்போது, அது மாநகராட்சிக்கு சம்பந்தம் இல்லை, அது குடிசை மாற்று வாரியத்தைச் சார்ந்தது என்று சொல்கிறார்கள். இதே நிலைதான் கிராம பஞ்சாயத்துகளிலேகூட இப்போது நடைபெறுகிறது. இப்போது என்னுடைய பஞ்சாயத்துக்குப் பேரூர் பஞ்சாயத்து என்று பெயர். அங்கே தண்ணீர் வரவில்லை என்று கம்ப்ளெய்ன்ட் செய்யப் போனால், அங்கே இருக்கக்கூடிய ஈ.ஓ., “என்னுடைய கன்ட்ரோலில் இல்லை, வாட்டர் போர்டு கன்ட்ரோல்” என்று சொல்கிறார்கள். அதுபோல, ஏரி, குளங்களிலே தூர் எடுக்க வேண்டுமென்றால், ஊராட்சி ஒன்றியத்திடம் இல்லை, பி.டபிள்யு.டி.-க்குப் போக வேண்டுமென்று சொல்கிறார்கள். சிறு ரோடு போட வேண்டுமென்று சொன்னால், அதற்கு ஹைவேஸ் என்று சொல்கிறார்கள். இதற்கு முன்னால் பள்ளி நிர்வாகம் ஊராட்சி ஒன்றியத்திலே இருந்தது. மேலே D.E.O.-வசம் போன பிறகு அந்த ஊராட்சி நிர்வாகங்களிலே இருந்த பள்ளிகளைக் கவனிப்பதற்கு ஆள் இல்லாமல் கல்வித் தரம் கெட்டுவிட்டது என்று கிராம மக்கள் சொல்கிறார்கள். அதுபோல சுகாதார மருத்துவர்கள் இருந்தார்கள். ஏற்கனவே ஊராட்சி ஒன்றியங்களிலே ஒரு கட்டுப்பாடு இருந்தது. பிரித்து வைத்ததனால் அங்கேயும் சரியான முறையில் மருத்துவர்—மருந்தும் இல்லை என்று கிராம மக்கள் சொல்கிறார்கள். வெட்டினரி டிபார்ட்மென்ட் ஊராட்சி ஒன்றியக் கட்டுப்பாட்டிலே இருந்தது. இப்போது அவர்களைப் பிரித்து விட்டார்கள். அதுபோல விவசாயத் துறையிலே இருந்தவர்களையும் ஊராட்சி ஒன்றியக் கட்டுப்பாட்டிலே இருந்து பிரித்துவிட்டார்கள்.



ஒரு சாதாரண குடிமகன் சொல்கிறான்—“நாங்கள் எல்லாம் இதற்கு முன்னால் B.D.O. ஆபீசிற்குச் சென்றால், எல்லா வேலையும் முடிந்து விடும். ஒரே ஆபிசில் செய்வார்கள். இப்போது அங்கே போ, இங்கே போ என்று சொல்கிறார்கள். இதை தயவுசெய்து மாற்றியமைக்க வேண்டும். நான் பணிவோடு மாண்புமிகு அமைச்சர் அவர்களை உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். ஊராட்சித் தேர்தல்களுக்கு முன்பாக ஒரு முறையை வரையறுத்து, சுவரேஜ் எங்கே இருக்க வேண்டும், டிரெய்னேஜை யார் கண்காணிப்பது, மெட்ரோ வாட்டரை யார் கண்காணிப்பது, மாநகராட்சிக்கு என்னதான் பொறுப்பு என்றெல்லாம் ஒரு திட்டம் வகுத்துக்கொண்டு தேர்தலை நடத்துவது நலமாக இருக்கும் என்பது என்னுடைய பணிவான வேண்டுகோள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தான் எல்லாப் பேரூராட்சிகளையும் கலைத்தார்கள், ஊராட்சிகளைக் கலைத்தார்கள். கலைத்துவிட்ட உடனே ஊராட்சி ஒன்றியங்களிலே சாதாரண கிராமமாக இருந்ததை பேரூராட்சியாக ஆக்கினார்கள். ஆனால் கிராமப் பஞ்சாயத்திலே 4 சிப்பந்திகள் தான் இருப்பார்கள். அவர்கள் சுகாதார சிப்பந்திகள். அது பேரூராட்சியான பிறகும், நகரம் வளர்ந்ததேயொழிய, சிப்பந்திகள் வளரவில்லை. திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கூட சொன்னார்கள்—கிராமங்களிலே மாடு இருக்கிறது, ஆனால் வண்டி இல்லை; வண்டி இருக்கிறது, ஆனால் மாடு இல்லை என்று. அடிப்படைக் காரணம் தேவையான சிப்பந்திகள் இல்லை. பேரூராட்சியாக இருந்ததை நகராட்சியாக மாற்றினார்கள். பேரூராட்சிக்கு இருந்த சிப்பந்திகள்தான் நகராட்சிக்கும் இன்றைக்கு இருக்கிறார்கள். இப்படி சில குறைபாடுகள் பொதுமக்கள் சார்பிலே இருந்து வருகின்றன. எனவே ஒரு கமிட்டியைப் போட்டு பிறகு நகராட்சித் தேர்தலை நடத்த வேண்டுமென்று நான் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். பொதுமக்கள் கருத்தைச் சொல்கிறேன். இந்தக் கால நீட்டிப்பைப்பற்றி நான் எந்தக் குறையும் சொல்லவில்லை. ஒரு காரியம் அவசர அவசரமாக அள்ளித் தெளிப்பதைவிட அதை நிதானமாக இருந்து காரியமாற்றுவது வரவேற்கத்தக்கது. இன்றைக்கு நகராட்சியிலே உள்ள ஐ.ஆர்.டி.பி. திட்டத்திலே காரியங்களைப் பார்க்கிறபோது, எல்லாமே பேரூராட்சி, கிராம பஞ்சாயத்து போன்றவைகள் நன்மை அடைந்துள்ளன. இந்த சிப்பந்திகள் எல்லாம் சரியான முறையிலே பணியாற்றவில்லை என்பது பொதுவாக தேர்தல் நேரத்திலே வந்த குறைபாடு. ஆனால் 10 ஆண்டுகளாக அந்தச் சிப்பந்திகள் வைத்ததுதான் சட்டம். அந்தச் சிப்பந்திகள் இந்தத் தேர்தலில் கணிசமான தொகையை மாற்றுக் கட்சிகளுக்கு நன்கொடையாகக் கொடுத்து, அண்ணா

[திரு. சி. ஆர். கோலப்பா] [1985 மார்ச் 20

தேர்தலில் ஒதுக்கீடு தர சட்டம் இயற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, முக்கியமாக சலவைத் துறையைப்பற்றி நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். [illegible] உள்ளாட்சித் துறையில் சலவைத் துறை முக்கியமான இடம் வகிக்கிறது. [illegible] பூர்வத்தில் ஆண்ட காலத்திலெல்லாம், பல்லவர்கள் ஆண்ட காலத்திலும் மற்றும் சலவைத் தொழிலாளர்களுக்கு என்று தனி இடம் ஒதுக்க [illegible] என்று ஒதுக்கியிருந்தார்கள். அந்த இடத்திலேதான் துணிகளைத் துவைப்பார்கள், சலவை செய்து துணிகளைக் கொண்டு வந்து கொடுப்பார்கள். இது பரம்பரையாக இருந்து வருகிறது. ஆனால் இப்போது உள்ளாட்சித் துறையில் சலவைத் தொழிலாளர்களுக்கு நன்மை கிடைப்பதில்லை. சலவைத் துறையைக் கட்டவில்லை. அவர்கள் சாக்கடை தண்ணீரில்தான் துணிகளைத் துவைத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றும் அப்படிப்பட்ட சூழ்நிலை இருந்து வருகிறது. அது மட்டுமல்லாமல், கடந்த ஆண்டு 54 இடங்களில் சலவைத் துறையைக் கட்ட வேண்டும் என்று அரசாங்கத்தில் முடிவு செய்திருந்தும், அதற்காக எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று நான் அறிகிறேன். அதற்காக ஒதுக்கிய பணம் திரும்பி வந்துவிட்டதாக நான் கேள்விப்படுகிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் உள்ளாட்சித் துறையில் எல்லா தனி அதிகாரிகள் நடந்து கொள்கிறார்கள் என்பதை மிக வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்திலே 13;232 பஞ்சாயத்துக்கள், 376 ஒன்றியங்கள், 106 நகர சபைகள், 7 நகராட்சிகள், 8 நகரியங்கள் மற்றும் பேரூராட்சிகள் எல்லாம் இருக்கின்றன. குறைந்தபட்சம் ஒவ்வொரு ஒன்றியத்தில் அல்லது நகரசபையில், பேரூராட்சியில் கண்டிப்பாக சலவைத் துறை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று அரசாங்கத்திலிருந்து உத்தரவு போட வேண்டும். இப்போது இந்த சலவைத் துறைகளைக் கட்டுவதற்கு பிற்பட்டோர் நலத் துறை மூலமாக நிதியை ஒதுக்குகிறார்கள். அப்படி இருக்கக் கூடாது. பி.டபிள்யூ.டி. மூலமாக இதைக் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில் இருக்கின்ற சலவைத் துறைகளைப்பற்றியும் மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். இங்குள்ள சலவைத் துறைகளுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. பாதுகாப்பு மட்டுமல்ல, தண்ணீரும் கிடைக்கவில்லை. சலவை செய்ய முக்கியமாகத் தேவைப்படுவது தண்ணீர். அந்தத் தண்ணீர் கிடைப்பதில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலை



1985 மார்ச் 20] [திரு. சி. ஆர். கோலப்பா]

சென்னையிலே இருக்கிறது. சலவைத் தொழிலாளர்கள் சைதாப்பேட்டையில் உள்ள அடையாறு ஆற்றிலும், கூவம் ஆற்றிலும் துணிகளைத் துவைத்துக் கொண்டிருக்கிறார்கள். அடையாறும், கூவம் ஆறும் சுகாதாரமற்ற நிலையில் இருக்கின்றன. கூவம் ஆற்றில் உள்ள தண்ணீர் துர்நாற்றம் வீசுகிறது. அதிலே இப்போதும் துவைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் பல கிருமிகள் பரவி சரும வியாதிகள் வர வாய்ப்பு ஏற்படுகிறது. இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு நவீன முறையில் சலவைத் துறைகளை அமைத்துக்கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே உள்ள பல சலவைத் துறைகளில் முற்றிலும் சுவர்கள் இல்லாமல் பாதுகாப்பற்ற நிலை இருக்கிறது. அங்கெல்லாம் பொது மக்களுடைய துணிகள் திருடுபோகின்றன. இதை பல மனுக்கள் மூலமாக என்னிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே சலவைத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பாக நல்ல முறையிலே சலவைத்துறைகளில் நான்கு புறமும் சுவர்களை எழுப்பிக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை.)

*திரு. [illegible] சித்ராபதி: மாற்றுத் தலைவர் அவர்களே, சென்னை [illegible] சார்பிலே [illegible] முனிசிபாலிட்டிகள் [illegible] அதிகாரிகளுடைய [illegible] காலத்தை நீடிக்கிற மசோதா [illegible] இந்திய அண்ணா திமுக முன்னேற்றக் [illegible] ஒன்றிய மனித [illegible] நான் [illegible].

(பிற்பகல் 12-20)

[illegible]

[திரு. ஆர். டி. சீத்தாபதி] [1985 மார்ச் 20

நேரத்தில் "நிர்வாகத்தில் தேர்ந்தவர் என்று அடையாளம் காட்டிக்கொள்வதற்காக திருவண்ணாமலையில் எனக்குக் கிடைத்திருக்கின்ற, [illegible] அவர்கள்" என்று அன்றைய திருவண்ணாமலை சேர்மேனாக இருந்த அவர்களைப் புகழ்ந்தது பற்றி நான் இப்போது எண்ணிப் பார்க்கிறேன். உள்ளாட்சித் துறைப் பொறுப்பை இன்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், அவரிடம் தந்ததற்கு நான் புரட்சித் தலைவர் அவர்களுக்கு பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் தேர்தலை நிச்சயமாக நடத்துவார் என்ற நம்பிக்கை இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் மிக அழுத்தந்திருத்தமாக வலியுறுத்தினார். நான் இதிலே ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அரசியல் கட்சிகள், இந்த அரசாங்கம் தேர்தலை நடத்த வேண்டும் என்று முனைகின்ற நேரத்தில், வேறுவிதமாக கோர்ட்டுக்குச் சென்று தடை வாங்காமல் இருக்க வேண்டும் என்று நான் மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். "அழுத்தந்திருத்தமாக தேர்தல் நடத்தப் போவதாகச் சொல்லி அமைச்சராக வந்தார். அவர்கள் நிச்சயமாக நடத்துவார்" என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொன்னதற்கு அர்த்தம் இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆக தேர்தலை நடத்துவதற்கு இந்த சர்க்கார் தயாராக இருக்கிறது. அதே நேரத்தில் நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். [illegible] அவர்கள் ஊராட்சித் தேர்தல், நகராட்சித் தேர்தல், மாநகராட்சித் தேர்தல் ஆகியவற்றில் எல்லாம் அரசியல் கட்சிகள் போட்டிபோடக்கூடாது என்ற கருத்தை எடுத்து வைத்திருக்கின்றார்கள். அதை அவர்கள் எல்லாம் ஏற்றுக்கொள்கின்றார்களா? அதை அமைச்சர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அந்த அவையிலே அவர்கள் நிலை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். [illegible] தேர்தல் நடக்கின்ற நேரத்தில் [illegible] தேர்தல் நிச்சயமாக நடைபெறும். [illegible] கருத்தை எதிர் வரிசையிலே இருப்பவர்கள் [illegible] மதிக்கின்றார்கள், அந்தக் கருத்துக்கு எவ்வளவு மதிப்பளிக்கப்படுகிறது என்பதையும் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு சர்வ கட்சி கூட்டம் கூட்டி தெரிந்துகொள்ள வேண்டும். அந்தக் கருத்துக்கு அவர்கள் எந்த அளவுக்கு மதிப்பு தருகின்றார்கள் என்று அறிந்துகொண்டு, [illegible] பின்னாலே அந்தத் தேர்தலைப் பற்றி அறிவிக்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். அப்படி இல்லாமல் மக்கள் மன்றத்தின் முன்னால் தேர்தல் நடத்த வேண்டும் என்று சொன்னாலும், நாங்களும் சந்திப்போம். அதிலே வெற்றியும் பெறுவோம் என்று கூறி விடை பெறுகிறேன்.



1985 மார்ச் 20]

(பிற்பகல் 12-25)

திரு. ப. மாணிக்கம்: மாற்றுத் தலைவரவர்களே, பல முறை இந்த அவையிலே தேர்தல் நடத்தப்படுமென்று வாக்குறுதி அளித்திருந்தும், இப்போது தனி அதிகாரிகளுடைய காலம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. இப்போது நகராட்சிகள், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் இவைகளிலே நிர்வாகம், சாதாரண மக்களுடைய மொழியிலே சொல்வதென்றால், கொஞ்ச நஞ்சம் ஓட்டிக் கொண்டிருக்கிறது. அதுவும் போவதற்கு முன்னால், தேர்தல்களை நடத்தினால் நல்லது. இல்லாவிட்டால் நிர்வாகம் சீர்கெட்டு, அந்தச் சுமையும் மாநில அரசிடம் வரும். அதனால் துரிதமாகத் தேர்தல்களை நடத்த வேண்டும். அடுத்து, இந்த அவைக்கு வர வேண்டிய உறுப்பினர்கள் வர முடியாத நிலை பல ஆண்டுகளாக இருக்கிறது. இந்த அவையிலே முழு பலத்தையும் பெற முடியாமல் இருக்கிறது. இதை இதற்கு முன்னாலேயே இந்த அவையிலே சுட்டிக் காட்டியிருக்கிறேன். உள்ளாட்சித் துறைத் தொகுதிகள் என்பதாலே, இவற்றுக்குத் தேர்தல்களை நடத்த முடியாத நிலை இருக்கிறது. உள்ளாட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு இது இரண்டாவது அவசர முக்கியத்துவமாகும். இன்றைக்கு பல்வேறு பிரச்சினைகளில் நகராட்சி, பஞ்சாயத்துக்களில் நடக்கக்கூடிய பல தவறுகளுக்கு ஆளும் கட்சியின்மீதும், மாநில நிர்வாகத்தின் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ பழி சுமத்தப்படுகிறது. காரணம், பல தப்புகள் நடக்கின்றன. ஒரு குறிப்பிட்ட கம்பெனியின் கொசு மருந்தை வாங்க வேண்டாமென்று இருக்கிறது. அதே மருந்தை வாங்கி, உபயோகிக்கிறார்கள். அது பலன் இல்லாத மருந்து. இப்படி தப்புகள் நடக்கின்றன. இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் கண்காணிக்க வேண்டுமென்றால், பஞ்சாயத்து போர்டு அல்லது முனிசிபல் கவுன்சில் இருந்தால்தான் முடியும். எல்லாத் தவறுகளையும் மாநில அரசோ, தலைவர்களோ கண்காணிக்க முடியாது. அந்தந்த இடத்திலே உள்ளவர்கள் கண்காணிக்க வேண்டும். அப்படிப்பட்ட கண்காணிப்பு வேண்டுமென்றால் இந்த உள்ளாட்சித் தேர்தல்கள் மிக மிக அவசியம்.

நம்முடைய அமைச்சரவர்கள் பொறுப்புக்குப் புதிதாக வந்தவர்கள் என்று சொல்லுகிறார்கள். ஏற்கெனவே பல பொறுப்புகளை வகித்தவர்கள் அவர்கள். இளைய வயதிலேயே திருவண்ணாமலை நகராட்சியில் பொறுப்பு வகித்தவர். எடுக்க வேண்டிய முடிவை, அமைச்சரவை கூடி எடுக்க வேண்டும். எனவே அமைச்சரவை, தமிழக அரசு நிச்சயமாக தேர்தல் நடத்த முடிவெடுக்குமென்று நம்புகிறேன். பத்திரிகையில் ஒரு செய்தி,

[திரு. ப. மாணிக்கம்] [1985 மார்ச் 20

மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் எழுத்து பூர்வமாக உறுதி தருகிறேன் என்று சொல்கிறார்கள். எழுத்து வேண்டாம், பேச்சு வேண்டாம், தேர்தல நடத்தும் தேதியை அறிவித்தால் போதும். மாநில அரசு எப்படியாவது ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் தேர்தல்களை நடத்தினால் நல்லது. அப்போதுதான் பஞ்சாயத்துகளில், நகராட்சிகளில் ஓரளவுக்கு வேலை நடக்கும். இல்லையென்றால் அந்தச் சுமை பூராவும் மாநில அரசுக்கு வந்து சேரும். இந்த நிலைமையை மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டுவரக் காரணம், தேர்தல் நடத்தாமல் போனால் மாநில அரசுக்குப் பல சங்கடங்கள் வரும். இரண்டு சட்டமன்றத் தேர்தல்கள், நாடாளுமன்றத் தேர்தல்கள் நடந் திருக்கின்றன. எனவே இதுவும் மத்திய தேர்தல் கமிஷனிடம் இருந்தால், தேர்தல்கள் நடந்திருக்கும். எனவே இப்போது நடக்கும் தவறுகளை எல்லாம் தவிர்க்க, எப்படியாவது செப்டம்பருக்குள் தேர்தல்களை நடத்த வேண்டும். அக்டோபர் மாதத்தில் மழை வந்துவிடும். செப்டம்பருக்குள் நடத்துவது நல்லது. இப்போது ஒரு யோசனை வந்திருக்கிறது. சாவ கட்சிக் கூட்டம் நடத்தி, கட்சி சார்பில் போட்டியிட வேண்டாமென்று முடிவு எடுக்கலாமென்று. அது வேண்டாம். பெண்களுக்கு இடம் ஒதுக்க வேண்டுமென்று தானே சொல்லி, அதுபற்றிய பிரச்சினையால் இப்போது தேர்தலே இல்லாமல் இரு கிறது. பெண்களுக்கு 15 விழுக்காடு ஒதுக்குவது நியாயம்தான். அதிலே எந்தவித மறுப்பும் கிடையாது. ஆனால் ஒரு நியாயத்திற்காக ஒன்றுமே செய்யாமல் இருந்தால் எப்படி? அதை நிறைவேற்ற வேண்டும். ஆகலால் எப்படியாவது தேர்தல்களை நடத்தலாம். பழைய முறையிலேயே நடத்த லாம் என்றுகூட இருக்கிறது. ஊர் ஜனங்கள், லைட் எரிந்தால் தேவலை, ரோட் போட்டால் தேவலை, சாக்கடை சுத்தமானால் தேவலை என்று எதிர்பார்க்கிறார்கள். இன்றைக்கு நிறைய பேசி, நாளைக்கு ஒன்றும் செய்யவில்லை என்றால், பேசியவர்களே மாட்டிக்கொள்வார்கள். எனவே எவ்வளவு சீக்கிரம் தேர்தலை நடத்த முடியுமோ அவ்வளவு நல்லது. இது மாநில அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு என்று உணர்ந்து சொல்கிறேன்.

(பிற்பகல் 12-30)

நான் புதிதாக வந்துள்ள மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர் களிடம் எந்தப் பொறுப்பையும் சுமத்தவில்லை. இங்கே முன்பு அளித்த வாக்குறுதிகள் மாதிரி இல்லாமல் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இன்ன தேதியில் கட்டாயம் தேர்தல் நடைபெறும் என்று அறிவித்து அதன்படி அவசியம் இந்தத் தடவை தேர்தலை நடத்த வேண்டுமென்று விரும்பி கேட்டு அமைகிறேன்.



1985 மார்ச் 20]

திரு. ஏ. ஜே. தாஸ்: மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே வைக்கப் பட்டுள்ள 7 சட்டமுன்வடிவுகளின் மீதும் என்னுடைய ஒருசில கருத்துக் களைச் சொல்வதற்கு முன்னாலே, உள்ளாட்சித் துறை அமைச்சராக பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள் கிறேன். புதிய பொறுப்பினை அவர் மீது நம்பி சுமத்தியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். இந்த அவை உறுப்பினர்களுக்கு இவ்வளவு நாட்களாக ஏற்பட்டுள்ள குறைகளை எல்லாம் அவர்கள் போக்குவார்கள் என்று நம்புகிறேன். அந்தவகையில் அவர் மீது சுமத்தப்பட்டுள்ள சுமை களை எல்லாம் பொருட்படுத்தாமல், சீக்கிரமாக அனைத்து தரப்பினருடைய குறைகளையும் தீர்ப்பார் என்ற நம்பிக்கையில் என்னுடைய கருத்துக்களைச் சொல்கிறேன். உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நீண்ட காலமாகவே தள்ளிப் போட்டுக்கொண்டு வந்திருக்கிறார்கள். இப்படி தேர்தல்களை நடத்தாமல் தள்ளிப் போட்டுக்கொண்டே வந்ததினால், தமிழகம் பரவலாகச் சீரழிந்தது என்பதோடு மட்டுமல்லாமல், சென்னை மாநகரம் மிகவும் அதிக அளவில் சீரழிந்துள்ளது. எங்கு பார்த்தாலும் சாக்கடை நீர், கொசுத் தொல்லை, குப்பை கூளங்கள் குவிந்து கிடப்பது—இப்படியாக சுகாதாரக் கேடுகள் சென்னை நகரத்தில் காணப்படுகின்றன. சென்னை நகரம், மிகச் சிறந்த நகரம் என்று சொல்கிறோம். ஆனால் உள்ளபடியே சென்னை நகரைப் பார்க்கும்போது, இன்றைக்கு சீரழிந்துள்ள நிலையில் நல்ல நிலைமைக்கு மறுபடியும் சென்னை நகரைக் கொண்டு வர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டும். நேற்றையதினம் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் "நிச்சயமாக தேர்தல்களை ஆகஸ்ட் மாதத்தில் நடத்தி விடுவோம்" என்று வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். இப்படி வாக்குறுதி அளித்திருப் பதை வரவேற்கிறேன். ஆனால் [illegible] ஏற்கெனவே பொறுப்பு வகித்து வந்த மூன்று அமைச்சர்கள் "நிச்சயமாகத் தேர்தலை நடத்து வேன்" என்று சொன்னார்கள். அவர்கள் இப்போது அவையில் இல்லை. அவர்கள் சொன்னபடி தேர்தலை நடத்தவில்லை. இங்கே இப்போது பொறுப்பேற்றிருக்கின்ற அமைச்சராவது நிச்சயமாக தேர்தலை நடத்த வேண்டும் நடத்துவார்கள் என்று நம்புகிறேன். அவசியம் நடத்த வேண்டும்

இச்சந்தர்ப்பத்தில் தேர்தல் நடைபெறாத காரணத்தால், நகராட்சிகளில் உள்ள குறைகளை நான் சொல்லியாக வேண்டும். சென்னை நகரைப் பொறுத்தவரையில், இருக்கின்ற குறைகள் பற்றி மாண்புமிகு அமைச்சருக்கும் தெரியும், பொதுமக்களுக்கும் தெரியும். சென்னை மாநகராட்சியை

எடுத்துக்கொண்டால், அதை டிவிஷன்களாகப் பிரித்திருக்கிறார்கள். டிவிஷன் களில் முன்பெல்லாம் வாட்டர், டிரெயினேஜ் போன்ற மூன்று முக்கியமான வேலைகளை இணைத்துச் செய்துவந்தார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் இங்கே பேசும்போது குறிப்பிட்டார். பொதுமக்களுக்கு எவ்வளவு குறைபாடுகள், கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை உணர்ந்து அவைகளைப் போக்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஒரு குழாய் அடைத்துவிட்டால் இன்றைக்கு வாட்டர் போர்டுக்கு போகச் சொல் கிறார்கள். சாக்கடை அடைத்து விட்டால் டிரெயினேஜ் போர்டுக்குப் போகச் சொல்கிறார்கள். அதுபோல் குழாய் தோண்டி பள்ளம் ஏற்பட்டு விட்டால் . . .

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை.)

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களிடமிருந்து "தேர்தல் நடைபெறும் போது கோர்ட்டுக்கு போகமாட்டோம்" என்கிற வாக்குறுதியை நான் எதி பார்க்கலாமா ? அப்படி ஒரு வாக்குறுதியை இங்கே அவர்கள் தந்தால் நலமாக இருக்கும்.

**திரு. ஏ. ஜே. தாஸ் :** கோர்ட்டுக்குப் போவதா இல்லையா என்பதெல்லாம் என் கையிலா இருக்கிறது ? நானா கோர்ட்டுக்குப் போகிறேன் ?

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** நான் மாண்புமிகு உறுப்பினரைப்பற்றிச் சொல்லவில்லை. உறுப்பினருடைய கட்சியைத்தான் சொல்கிறேன். அப்படிப் பட்ட வாக்குறுதியைத் தருவார்களா ?

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** சட்டத்தில் ஓட்டை இருந்தால் கோர்ட் டுக்குப் போவார்கள். ஓட்டையுடன் கூடிய சட்டத்தைப் போட்டால், அது கோர்ட்டுக்குப் போய் "ஸ்டே" ஆகி விடுகிறது.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** எற்கெனவே இருந்த பழைய சட்டப்படி நடத்தப் போகும்போது, கோர்ட்டுக்குப் போக வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் தகுந்த விடை அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

(பிற்பகல் 12-35)

**திரு. ஏ. ஜே. தாஸ் :** ஆகவே, நகராட்சியில் இருக்கும் பல்வேறு துறை கள் ஒன்றாக இணைந்து ஒன்றுக்கொன்று தொடர்புள்ள நிர்வாகங்களாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போது தான், சென்னை நகர



மக்களுக்கு ஏற்படும் சாக்கடைப் பிரச்சினையையும், குடிநீர்ப் பிரச்சினையை யும் உடனுக்குடன் தீர்க்க முடியும். இப்போதுள்ள நிர்வாகத்தில் குழாய் அடைப்புக்கென்றால் குடிநீர் வாரியத்தையும், சாக்கடை அடைப்பு என்றால் கழிவு நீர் அகற்று வாரியத்தையும் நாம் தொடர்பு கொள்ள வேண்டியிருக் கிறது.

அடுத்ததாக, சென்னை நகரின் கொசுத் தொல்லை. ஏற்கெனவே கூம்ப கோணம் கொசுவைப்பற்றித்தான் அதிகமாகச் சொல்வார்கள். இப்போது சென்னையில், சைதாப்பேட்டையில் கொசு ஏராளமாக உற்பத்தியாகி சென்னை நகரம் மட்டுமல்லாமல், தமிழ்நாடு முழுவதும் தீவிரமாகப் பரவிக் கொண்டிருக்கும் நிலைமை ஏற்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். சென்னை யைச் சுற்றிப் பார்க்க வருகிற சுற்றுலாவாசிகள், மற்றவர்கள், இந்தக் கொசுத் தொல்லையால் மிகவும் அவதிப்படுகிறார்கள். சென்னை நகர குடிமக்கள் எந்த அளவுக்கு தொல்லைப்படுகிறார்கள் என்பதையும் நாம் நன்றாக அறிந் திருக்கிறோம். இந்தக் கொசுத் தொல்லையை ஒழிக்க முடியாமல் போன காரணம், மாநகராட்சி அதிகாரிகளின் தவறுகளால்தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஆண்டு, கொசு மருந்து வாங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த பணத்தையே சில அதிகாரிகள் அப்படியே சாப்பிட்டு விட்டார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தார்களா ? அவர்கள் பணி யில்தான் இருக்கிறார்களா என்று தெரியவில்லை. இப்படி கொசுவை ஒழிக்க மருந்து வாங்க பணம் ஒதுக்கினால், அந்தப் பணத்தையே சாப்பிட்டுவிட்டால், பின்பு எப்படி கொசு ஒழியும், நகரமக்கள் எப்படி சுகாதாரமாக இருப்பார்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

ஆகவே, இப்போதுள்ள அதிகாரிகளாவது சென்னை நகர கொசு ஒழிப்பில் உண்மையாகவே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அமைச்சரும் இது குறித்து உடனடியாக நட வடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக கடிக்கக்கூடிய கொசுக்கள் பெண் கொசுக்களாக இருப்பதாகவும், அவைகள் ஆண்களையே கடிப்பதாகவும் சொல்லப்படுகிறது. அது உண்மையா, அதுகுறித்து தங்கள் கருத்து என்ன என்று கேட்க விரும்புகிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது. அதற்குப் பதில் கூறுவார்கள் என்று நான் எதிர் பார்க்கிறேன் (பலத்த சிரிப்பு).

[1985 மார்ச் 20

திரு. ஏ. ஜே. தாஸ்: பொதுவாக இன்றையதினம், சென்னையில் மக்கள் வசிக்கக்கூடிய எல்லாத் தெருக்களிலும் அநேகமாக ஒவ்வொரு சிறிய தொழிற்சாலை இயங்குகிறது. இதனால் சென்னை நகர மக்களுக்கு இடையூறு அதிகம் ஏற்படுகிறது. காரணம் அந்தத் தொழிற்சாலைகளில் இரவு ஒரு மணி வரையில் வேலை செய்து, 'டம் டம்' என்று அடித்து, தொல்லையை ஏற்படுத்துகிறார்கள். ஏற்கெனவே கொசுத் தொலையால் தூக்கம் கெட்டுக் கிடக்கும் மக்களுக்கு இந்த சப்தம் வேறு அதிகத் தொல்லையைக் கொடுத்து அவர்களைத் தூங்கவிடாமல் செய்துவிடுகிறது. அதுமாதிரி மக்கள் வசிக்கும் தெருக்களில் தொழிற்சாலை வைக்க எப்படி லைசென்ஸ் கொடுக்கிறார்கள் என்பது தெரியவில்லை. இப்படி மக்கள் வசிக்கும் தெருக்களில் தொழிற்சாலை வைக்க லைசென்ஸ் கொடுத்தால், மக்கள் எப்படி சுகாதாரமாக இருக்க முடியும்? ஒரு பக்கம் கொசுத் தொல்லை, இன்னொரு பக்கம் டமாரம் போல் சத்தம் தொல்லை. நாம் நகரத்தில்தான் இருக்கிறோமா என்றே பல சமயம் தெரியவில்லை. மக்களை நகரத்தில் வாழ அனுமதிக்க வேண்டும், நரகத்தில் வாழ அனுமதிக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, சென்னையில் எங்கே பார்த்தாலும் மாட்டுக் கொட்டகைகள் இருக்கின்றன. மழைக்காலத்தில், அந்த மாட்டுக் கொட்டகைகளிலிருந்து வெளியேறும் சாணம் போன்றவை, சாக்கடைக் குழாய்களையும், கழிவு நீர்க் குழாய்களையும் அடைத்துக்கொண்டு, தெருவெங்கும் கழிவு நீர் தேங்கிவிடுகிறது. இதன்மூலம் தெருக்களை நாசம் செய்கிறார்கள். சுகாதார இன்ஸ்பெக்டர்கள் இதற்கென்று இருக்கிறார்களே, அவர்கள் வேலை தான் செய்கிறார்களா, அதற்கு என்னதான் நடவடிக்கை எடுக்கிறார்கள் என்றெல்லாம் நமக்கு இன்று சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. இதைப்பற்றி அதிகாரிகள் உண்மையிலேயே கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேநேரத்தில், இன்றையதினம் ஓட்டல்களில் சுகாதாரம் கெட்டுக் கிடக்கிறது என்பதையும் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஓட்டல்களைக் கண்காணிக்க உணவு ஆய்வாளர்கள் வைத்திருக்கிறோம். அவர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்? வேலை பார்க்கிறார்களா, உண்மையிலேயே நகராட்சி செயல்படுகிறதா? அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்று புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே இதற்கெல்லாம் ஒரு முடிவு செய்ய வேண்டும். அவர்களை தீவிரமாகக் கண்காணிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



1985 மார்ச் 20] [திரு. ஏ. ஜே. தாஸ்]

தெருக்களில் மனிதனும் பன்றியும் சேர்ந்து வாழவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது சென்னை மாநகரத்தில் என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். கிராமங்களில் இந்த நிலைமை இருப்பதாகத் தெரியவில்லை. சென்னையில் இந்த நிலைமை இருக்கிறது. அப்படி பன்றிகளைக் கட்டுப்படுத்தாமல் உலா வரச் செய்கிறவர்கள் யார்? பன்றிகளை ஏன் பிடிக்க நடவடிக்கை எடுக்கவில்லை? சமீபத்தில்கூட சென்னை உயர்நீதி மன்றம், தெருக்களில் பன்றிகளை அலைய விடக்கூடாது என்று ஒரு வழக்கில் தீர்ப்பளித்திருக்கிறது. அந்த நகராட்சி செய்தது நியாயமானதுதான் என்று

(பிற்பகல் 12-40)

தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. அப்படி தீர்ப்பு கொடுத்தும்கூட இன்றைக்கு ஏன் நம்முடைய மாநகராட்சி நடவடிக்கை எடுக்கவில்லை? எங்கு பார்த்தாலும் பன்றிகள், பன்றிகள். நகரத்திலே வாழ முடியவில்லை. நகரத்தைச் சுத்தப்படுத்த வேண்டும் என்றும், நகரத்தில் பன்றிகளின் தொல்லைகளில்லாமல் கவனிக்கவேண்டும் என்றும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவற்றை எல்லாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாடுகள். நகரத்தின் சாலைகளில் நந்தி படுத்திருப்பதுபோல மாடுகள் படுத்திருக்கின்றன. மிக வேதனை அடையக்கூடிய நிலை இருக்கிறது. மிகவும் வேதனையுடன் சொல்கின்றேன். மற்ற நகரங்களைப்போல நம் நகரமும் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் சொல்கின்றேன்.

அடுத்து, மாநகராட்சி மருந்தகங்கள். மாநகராட்சி டிஸ்பன்சரிகளைப் பார்க்கும்போது, அங்கே ஏழை எளிய மக்கள்தான் செல்கிறார்கள். அவர்களுக்குச் சரியான மருந்துகள் கிடைப்பதில்லை என்பதை நான் அறிகிறேன். அவர்களுக்கெல்லாம் நல்ல மருந்துகள் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது போல் சென்னையிலுள்ள மகப்பேறு மருத்துவமனைகளுக்கும் ஏழை எளிய மக்கள்தான் செல்கிறார்கள். அவர்களுக்கும் வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாநகராட்சி பார்க்குகளைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். மாநகராட்சி பார்க்குகள் இன்றையதினம் பார்க்குகளாகத் தெரிவதில்லை. அங்கே குடிசைகள் வந்துவிடுகின்றன. குடிசைகள் வரவில்லை என்றால், பூராவும் மலஜலம் கழிக்கக்கூடிய இடமாக மாறி இருக்கின்றன. மக்கள் போய்

உட்கார்ந்து அனுபவிக்கக்கூடியவைகளாக அவை இல்லை, இவைகளையெல்லாம் சரிசெய்ய வேண்டுமென்றால், தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீடிக்கக் கூடாது என்பது என்னுடைய கருத்து. ஆனால் இன்றைக்குத் தேர்தல் நடத்தப்படும் என்று உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, மாநகராட்சிப் பள்ளிகள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். மற்ற பள்ளிகளில் தேர்வு முடிவு என்பது 100 சதவீதம், 90 சதவீதம், 80 சதவீதம் என்று வருகின்றது. ஆனால் மகநகராட்சிப் பள்ளிகளிலே அந்த பர்செண்ட்டேஜ் வருவதில்லை. ஏன் மற்ற பள்ளிகளில் முடிகிறது? ஏன் மாநகராட்சிப் பள்ளிகளில் முடிவதில்லை? ஆசிரியர்கள் இங்கே சரியாகச் சொல்லிக் கொடுக்கவில்லையா? இல்லை, பிள்ளைகள்தான் சரியாகப் படிக்கவில்லையா? என்ன காரணம் என்பதைக் கண்டறிந்து அடுத்த ஆண்டிலாவது நல்ல பர்செண்ட்டேஜ் வாங்குவதற்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாநகராட்சிக் கிணறுகளைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். மாநகராட்சிக் கிணறுகள் சுகாதாரமான நிலைமையில் இல்லை. இன்னும் 2, 3 மாதங்களில் மாநிலத்தில் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டுவிடும். எனவே தண்ணீர்ப் பஞ்சத்தை சமாளிப்பதற்கு ஏற்றவாறு இப்போதே கிணறுகளை எல்லாம் சுத்தப்படுத்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதுபோல் இன்னும் பல குறைகள் நிறைய இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் குறைகளையெல்லாம் போக்குவதற்கு வேண்டிய உதவிகளை உடனடியாகச் செய்யவேண்டும், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு என் வாழ்த்தினைத் தெரிவித்து, பதிலை அளிக்குமாறு வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்**: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தாங்களும், மரியாதைக்குரிய உறுப்பினர்களும் எனக்கு அளித்த வாழ்த்துக்கு முதற்கண், நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பலதரப்பட்ட, பல கட்சிகளைச் சேர்ந்தவர்களும் வாழ்த்துத் தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக சகோதரர் மீனாட்சிசுந்தரம் அவர்கள், திராவிட





முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர், எனக்கு வாழ்த்துச் சொன்னார்கள். மிகவும் இனிப்பாகவும் இருந்தது ; சுவையாகவும் இருந்தது. பிடிவாதத்தைப் பற்றிச் சொன்னார்கள். என்னை வாழ்த்த வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடுதான் சொல்லியிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். பிடிவாதமாக அழுத்தமாக நான் இருந்தேன் என்று சொன்னார்கள். இருந்தேனா இல்லையா என்பதுபற்றி பின்னாலே சொல்கிறேன். பிடிவாதமாக, அழுத்தமாக நான் இருந்தேன், வெற்றி பெற்றேன் என்று என்னைப்பற்றி வாழ்த்திச் சொன்னார்கள். இந்த வாழ்த்தில் அழுத்தமான குணம் வேண்டும், பிடிவாதமான குணம் வேண்டும் என்று திரும்பத் திரும்பச் சொன்னார்கள். நான் மீண்டும் சொல்கிறேன், நல்ல எண்ணத்தோடு வாழ்த்தி இருப்பார் என்றுதான் கருதுகிறேன். ஆனால் எனக்கு ஒரு சின்ன சந்தேகம். என்னை வாழ்த்தினாரா அல்லது அவர் கட்சித் தலைவரை அசிங்கப்படுத்தினாரா என்று தெரியவில்லை. நானாகக் கருதக்கூடாது. அவரே சொன்னார்.

(பிற்பகல் 12-45)

ஸ்ரீலங்கா பிரச்சினைக்கு அந்தக் கட்சித் தலைவர் பதவியைத் தூக்கி எறிந்தார் என்று சொன்னார்கள். ஆனால் மூன்றாவது மாதம் மேலவையிலே வந்து உட்கார்ந்து கொண்டாரே. அந்தப் பிடிவாதம் இல்லாத குணத்தை அவர் கேலி செய்தது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. இப்படி அவர் கட்சித் தலைவரைக் கேலியாகப் பேசி இருக்கக்கூடாது, முறையல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு வாய்ப்புக் கொடுத்ததைப் போல், கட்சித் தலைவரை அவமானப்படுத்துவதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதனால்தான் சொன்னேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்**: துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களை மிக நன்றாக உணர்வார்கள். உணர்வுகளை வெளிப்படுத்துவது அந்த நேரத்தோடு சரி; அவ்வளவுதான். அதிலே பிடிவாதம் என்று அர்த்தம் அல்ல. பதவிக்கே இனிமேல் வரமாட்டேன் என்று தூக்கி எறிந்துவிட்டார் எங்கள் கட்சித் தலைவர் என்று நான் சொல்லவில்லை. உணர்வுகளை வெளிப்படுத்தினார். அதற்கும் இதற்கும் ஒப்பிட்டுப் பேசுவது அவ்வளவு பொருந்தாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்**: (திரு. ஆர். டி. சீத்தாபதி [illegible]) அமைச்சர் அவர்கள் பேச விரும்புகிறார்கள் ; அவர்கள் இடம் கொடுத்தால் சரி.

**திரு. ஆர். டி. சித்தாபதி :** துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் கலைஞர் அவர்கள் ஆளுநர் உரையின்மீது உரையாற்றினார்கள். அதற்குப் பின்னர் அவை முன்னவர் அவர்கள் உரையாற்றினார்கள். அவர்கள் பேசுகின்ற நேரத்தில் ஒரு மாலைக் கடைப்பிடித்தார்கள் என்பதை நினைவு கூருவதற்காகத்தான் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் அந்தக் கட்சியினுடைய தலைவர் அல்லது துணைத் தலைவர் அவர்கள் பேசினால் நன்றாக இருக்கும். உறுப்பினர்கள் பேசினால் அந்தந்த கட்சிகளின் உறுப்பினர்கள் பதில் சொல்கின்ற வாய்ப்புக் களைப் பெறுவார்கள் என்று சென்ற முறை நடந்த ஆளுநர் உரையிலே நம்முடைய தலைவர் அவர்கள் இந்த மாமன்றத்திலே அறிவித்தார்கள். அதைப் பின்பற்றாமல் இருப்பது நியாயம்தானா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அதைத் தான் நான் திரும்பச் சொல்கிறேன். அவர்கள் பேசினார்கள். அப்புறம் அமைச்சர் அவர்கள் பேசுகிறார்கள். மற்றவர்கள் பேசாமல் இருப்பது நல்லது என்று சொல்கிறேன். (திரு. க. மீனாட்சிசுந்தரம் பேச எழுந்தபோது) உறுப்பினர் அவர்கள் பேசியாகிவிட்டது. அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக் கிறார்கள். மற்றவர்கள் பேசாமல் இருப்பது நல்லது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்வதைப் பார்க்கிறபோது . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பதில் சொல்வார்கள். அவர் திறமை யாக பதில் சொல்லக்கூடியவர்கள். நீண்ட நாட்களாக எனக்குத் தெரியும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** உணர்வுகளைப் பற்றிப் பேசினார்கள். நான் உணர்வுகளை மதிக்கிறவன்தான். அதுகூட அப்போது வெளியிடப் பட்ட உணர்வுகளை சரிவர நினைவில் வைத்துக்கொள்ளாமல் திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் பேசினார்கள் என்று நினைக்கிறேன். ஸ்ரீலங்கா தமிழர்கள் கஷ்டப்படும்போது எனக்கு எதற்குப் பதவி என்ற உணர்வுடன் தூக்கிப் போட்டார். ஸ்ரீலங்கா பிரச்சினை இன்னும் தீரவில்லை. உணர்வுகள் மட்டும் மங்கிப்போய்விட்டன. அதைத்தான் சொல்ல வந்திருக் கிறார்கள். வேறு அல்ல. தவறாக நினைக்கவேண்டாம். இப்படி



உணர்ச்சியோடு வாழ்த்திச் சொன்னார்கள். வாழ்த்துக்கு நன்றி சொல் கிறேன். நான் பிடிவாதமாக இங்கே வந்துசேர்ந்தவன் என்று நினைக் கிறார்கள். அது அல்ல. நான் இந்தக் கட்சிக்கு வந்தது ஒரு பிடிவாதமாக வந்தவன் என்றோ, பதவிக்காக வந்தவன் என்றோ வெளியிலே சொல்வது உண்டு. எடுத்துக் கொண்டிருக்கிற மசோதாவுக்கும், அதற்கும் சம்பந்தம் இல்லை. நானே அதைப்பற்றிப் பேசக்கூடாது என்றாலும், என்னைப்பற்றிப் பேசிவிட்ட காரணத்தினால், தன்னிலை விளக்கமாக ஒரே ஒரு நிமிடம் மட்டும் எடுத்துக்கொண்டு பேசலாம் என்று கருதுகிறேன். என்னைப்பற்றி ஒருவர் சொன்னார். பெயரைச் சொல்ல விரும்பவில்லை. நாகரிகத்தின் காரணமாக பெயரைச் சொல்ல விரும்பவில்லை. "எனது மணி முடியிலே இருந்தவர்கள் எல்லாம், இன்றைக்கு யார் காலுக்கோ செருப்பாகப் போயிருக்கிறார்கள்" என்று எல்லாம் என்னைப்பற்றிச் சொன்னார்கள். நான் அப்போதுகூட பதில் சொன்னேன். வேறு இடத் திலேயும் சொன்னேன். இருக்கலாம். மாதவியின் கழுத்துக்கு மாலை யாக இருப்பதைவிட, கண்ணகியின் காலுக்கு மெட்டியாக இருப்பது மேல் என்று நான் சொன்னது உண்டு. இதுவெல்லாம் அப்போது சொன்ன பதில்கள். இந்த உணர்வுகளை இப்போது கிளறி இருக்கவேண்டிய அவசியமே இல்லை. மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி மன்றங்களின் தனி அதிகாரிகள் பதவிக் கால வரம்பை நீட்டிப்பதா இல்லையா, 6 மாதம் நீட்டிக்கலாமா, 3 மாதம் நீட்டிக்கலாமா, 1 ஆண்டு நீட்டிக்கலாமா, எவ்வளவு காலத்திற்கு இதை நீட்டிக்கலாமென்று வாதம் இருந்தால், விவாதத்துக்குப் பொருத்தமாக இருந்திருக்கும். பரவாயில்லை. பேசியவர்கள் அத்தனை பேருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நிச்சய மாகத் தேர்தல் நடக்கும் என்று உறுதி அளிக்கிறேன். நாங்கள் என்ப தோடு மீண்டும் உறுதியளிக்கிறேன். மீண்டும் இந்தக் கால வரம்பு நீட்டிக்கிற மசோதாவோடு இந்த அவைக்கு வரமாட்டோம் என்று உறுதியளிக்கிறேன். (கைதட்டல்). காலவரம்பு நீட்டிப்பு இதோடு முடிந்துவிட்டது என்று உறுதியளிக்கிறேன். நிச்சயமாகத் தேர்தல் உண்டு. செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதிக்குள் எல்லோரும் பதவி ஏற்பார்கள். உள்ளாட்சித் துறை யிலும், நகராட்சித் துறையிலும், மாநகராட்சித் துறையிலும்—நான் அதையும் சொல்கிறேன். அதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் இப்போது செய்யக்கூடிய உறுதியை அளிக்கிறேன். மற்றக் குறைகளைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். இந்தக் குறைகளைப்பற்றிச் சொல்வதற்கு நேரம் இல்லை. அதிகாரிகள் வந்திருக்கிறார்கள். எடுத்த குறிப்பில் தீர்க்கிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அதனை எடுப்

பார்கள். அவர்களோடு நான் கலந்து பேசுவேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். கால நீட்டிப்பைப்பற்றி மட்டும் இந்த மாமன்றத்திலே நான் தெரிவித்துக்கொள்வது, "இந்த ஒருமுறை நீட்டிப்புக் கொடுங்கள். நிச்சயமாக தேர்தலை நடத்திவிடுவோம் என்று உறுதியை நான் அளிக்கிறேன்." இந்த உறுதியோடு இந்த மசோதாவில் நான் சொல்கிற பதில் போதும் என்று கருதி என் பதில் உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

(பிற்பகல் 12-50)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/1985) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/1985) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



**(3) 1985 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1985).**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1985)) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன். . . .

@ 260-ஆம் பக்கத்தில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பிரச்சினை—

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1985 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/1985) நிறைவேற்றப் படவேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(4) தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/1985).**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1985 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."
என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவைமுன் உள்ள பிரச்சினை :—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1985 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு, ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

---

@ 261 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1985 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1985) நிறைவேற்றப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1985 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/1985) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(5) 1985 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1985).**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"
என முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

---

*262 ஆம் பக்கங்களில் இணைப்புVII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**1985-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1985)**



தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1985) நிறைவேற்றப்பட வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1985) நிறைவேற்றப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(6) தமிழ் நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1985.)**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1985 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

---

@ 262-ஆம் பக்கத்தில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1985ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 9/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 3, 2 ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1985ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1985) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு, ராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1985) நிறைவேற்றப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 12.55)

**(7) தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1985).**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவைமுன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1985) நிறைவேற்றப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

@263-264 ஆம் பக்கங்களில் இணைப்பு IX ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவைமுன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1985) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(8) தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1985).**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவைமுன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1985 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

@264 ஆம் பக்கத்தில் இணைப்பு X ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1985 மார்ச் 20

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே,**

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1985) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவைமுன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1985) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மேலவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. மீண்டும் அவை 21—3—1985 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-57)

## 6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

131. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கழகத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான இருபத்தி ஆறாம் ஆண்டறிக்கை (1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு கழகங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31 (11) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பெற்றது.

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

*38. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1985 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1985).



1985 மார்ச் 20]

*39. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1985.).

*40. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1985 ஆம் ஆண்டு தமிழ் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1985.).

* 19—3—1985 அன்று உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டது.

## இணைப்பு I

(172 பக்கத்தில் இனம் 2 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு வருங்கால வைப்பு நிதி மற்றும் பணிக் கொடைத் திட்டம் 1—4—1984 முதற்கொண்டு செயல்படுத்தப்படு கின்றது. இதற்காக பணியாளர் செலுத்த வேண்டிய தொகை 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கொடுக்கப்படும் ஏப்ரல் மாத சம்பளப் பட்டியிலிருந்து பிடித்தம் செய்யப்படும்.

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசின் முறையான பணியாளர்கள் அனைவரும் வருவர். மேலும் தமிழ்நாடு அரசுப் பணியைச் சார்ந்த அயலிடப் பணியில் உள்ளவர்களும், முகமையில் வேறிடங்களில் பணியாற்றுபவர்களும், தமிழ்நாடு அரசுப் பணியில் பணிபுரியும் அனைத்திந்திய பணி அதிகாரிகளும் அடங்குவர். தற்காலிகமாக நியமிக்கப்படும் அரசுப் பணியாளர்கள் இத் திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள். தற்போதுள்ள முறையான பணியாளர்கள், தாங்கள் இத் திட்டத்தின் கீழ் வர தங்களுக்குள்ள விருப்பத்தை 16—4—1984-க்கு முன்னர் தெரிவித்திருக்க வேண்டும். ஒரு முறை விருப்பம் தெரிவித்த பிறகு அதனை மாற்ற முடியாது. இனி பணியில் நியமனம் செய்யப்படுபவர்களுக்கு அவர்களுடைய பணி முறைப்படுத்தப் பட்ட பின்னர் இத் திட்டம் அவர்களுக்குப் பொருந்தும்.

அரசு அளிக்கும் ரூ. 5,000 இயல்பாக ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். இதைத் தவிர அவர்கள் செலுத்தும் தொகையும் அதற்கான வட்டித் தொகையும் அவர்களுக்குக் கிடைக்கும். பணியி லிருக்கையில் பணியாளர் இறந்துவிட்டாலும், மற்ற நேர்வுகளிலும் அவர் செலுத்திய தொகையும் அதற்குரிய வட்டியையும் மட்டுமே பெறுவர்.

எனவே இத்திட்டம் இயல்பாக ஓய்வு பெறுபவர்களுக்கு மட்டும் பொருந்துமேயன்றி மறு நியமன அடிப்படையில் பணியாற்றுபவர்களுக்குப் பொருந்தாது. ஆகவினால் 1—4—1984-க்கு முன் ஓய்வுபெற்ற அரசு ஊழி யர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இத்திட்டம் பொருந்தாது. எனவே 83-84-ம் கல்வியாண்டில் பள்ளியில் பணியாற்றி 1—4—1984 க்கு முன்னர் ஓய்வு பெற்று பின்னர் ஓய்வு பெற்ற ஆசிரியாக கல்வியாண்டு இறுதி வரை மறு நியமன முறையில் பணியாற்றி பின்னர் பணிவிடுப்பு பெற்ற ஆசிரியர்களுக்கு இத் திட்டத்தை நீட்டிக்க வழி வகையில்லை என்ற காரணத்தினால் இந்த கவன ஈர்ப்பு அறிவிப்பு எதிர்க்கப்படுகிறது.



## இணைப்பு II

(175 பக்கத்தில் இனம் 2 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

அண்ணா நகர், அரும்பாக்கம், கோடம்பாக்கம், தியாகராயநகர் பகுதிகளி லிருந்து வரும் கழிவுநீர் கோயம்பேடு அருகிலுள்ள ஒரு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு இறைக்கப்படுகிறது. இந்த சுத்திகரிப்பு நிலையத்தை ஒட்டி சுமார் 95 ஏக்கர் அளவுக்கு புல் பண்ணையும் உள்ளது. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்தம் செய்யப்பட்ட பிறகு உயிரியல் தொடர்புள்ள முறையில் கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு புல் பண்ணைக்கு உபயோகப்படுகிறது. புல் பண்ணையில் மாட்டுத் தீவனத்திற்காக புல் வளர்க்கப்படுகிறது. மீதி உள்ள தண்ணீரை அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின்படி அரும்பாக்கம் பேருந்து நிலை யத்திற்கு அருகே கூவம் ஆற்றில் விடப்படுகிறது. கோயம்பேடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் நாள் ஒன்றுக்கு சுமார் 75 லட்சம் காலன் கழிவு நீரை சுத்தப்படுத்த இயலும். தற்சமயம் இங்கு அனுப்பப்படும் கழிவு நீர் சுமார் 40 லட்சம் காலன் அளவு ஆகும்.

முதலில் இந்த இடத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கிடையாது. 1974-ம் ஆண்டிலிருந்து கழிவு நீர் நேரடியாக புல் பண்ணைக்குப் பாய்ச்சப் பட்டு அங்கிருந்து இயற்கையான பள்ளமாக உள்ள பகுதிகள் வழியாக கூவம் ஆற்றில் கலந்தது. பின்னர் இங்கு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டப் பட்டு 1980-ம் ஆண்டில் செயல்படத் துவங்கியது. சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் புல் பண்ணைக்கு செலுத்தப்பட்டு முன்போலவே சுற்றியுள்ள பள்ளங் களின் வழியாக பாய்ந்து கடைசியில் கூவம் ஆற்றுடன் பல இடங்களில் கலந்தது. காலப்போக்கில் சுத்திகரிப்பு நிலையத்தைச் சுற்றி பல குடி யிருப்புகள் கட்டப்பட்டன. இந்த குடியிருப்புகளில் சுத்திகரிப்பு செய்யப் பட்ட கழிவு நீர் பாய்ந்து பொதுமக்களுக்கு இடைஞ்சல் நேரிட்டது. கடைசியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து புல் பண்ணைக்கு பாய்ச் சியது போக மிகுந்த நீரினை கூவம் ஆற்றில் சேர்க்கும் மூடு கால்வாய் சென்ற ஆண்டு செயல்படுத்தப்பட்டது.

கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட நீரினை, நீர் நிலையங்களில் விடுவதற்கு தரக்கட்டுப்பாடுகள் உள்ளன. பொதுவாக கோயம்பேடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து வெளிவரும் நீர் குறிப் பிட்ட தரக்கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு இருக்கும். ஆனால் இந்த கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஒரு பகுதியாகிய இடைநிலை சுத்தம் செய்யும்

தொட்டி காலப்போக்கில் பழுது அடைந்துள்ளது. இதனைச் செப்பனிட வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தற்சமயம் இதனை ஈடு கட்ட 8 காற்றழுத்த இயந்திரங்களைக் கொண்டு கழிவு நீரில் பிராணவாயு கலக்கப்படுகிறது. சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து வெளிவரும் சுத்திகரிக்கப்பட்ட நீரின் தரத்தினையும், அரும்பாக்கம் பேருந்து நிலையத்திலிருந்து அமைந்தகரை பாலம் வரை கூவம் ஆற்றிலுள்ள தண்ணீர் தரத்தினையும் சென்னைக் குடிநீர் வாரியத்தின் அலுவலர்கள் தினந்தோறும் ஆய்ந்து வருகின்றனர்.

சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் தவிர கூவம் ஆற்றின் இரு கரைகளிலும் உள்ள குடிசைப் பகுதிகளிலிருந்து கழிவுநீர் ஆற்றில் கலக்கின்றது.

பொதுவாக, கொசுக்கள் தேங்கி நிற்கும் தண்ணீரில் முட்டை இடும். கொசுக்களில் பல வகைகள் உண்டு. யானைக்கால் வியாதியை உண்டு பண்ணும் "கூலெக்ஸ்" கொசுக்கள் பொதுவாக அசுத்த நீரில் முட்டை இட்டு இனப்பெருக்கம் செய்யும். மலேரியாவைப் பரப்பும் "அனோபிலஸ்" கொசுக்கள் பொதுவாக நல்ல தண்ணீரில் இனப்பெருக்கம் செய்யும். 'டைபாய்டு' நோய் கொசுக்களால் பரவுவது இல்லை.

கூவம் ஆற்றின் படுகையில் பல இடங்களில் தண்ணீர் கட்டி நிற்க வசதி இருப்பதால் கொசுக்கள் இனப்பெருக்கம் செய்வதற்கு வசதியாக உள்ளது. மேலும் ஆற்றங்கரையிலுள்ள தண்ணீரிலும் அதிக அளவு தாவரங்கள் வளர்ந்து இருப்பதால் கொசுக்களின் இனப்பெருக்கம் விரைவில் நிகழ ஏதுவாகிறது.

இந்த ஆற்றில் கொசுக்களின் இனப் பெருக்கத்தைக் குறைக்க சென்னை மாநகராட்சி, சென்னைக் குடிநீர் வாரியம் போன்ற நிறுவனங்கள் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளன :—

(1) ஆற்றின் இரு கரைகளிலும் உள்ள புதர்கள் வெட்டி நீக்கப்பட்டு வருகின்றன.

(2) ஆற்றில் வளரும் ஒருவகை பூங்கோரை (Hyacinth) செடி நீக்கப்படுகிறது.

(3) ஆற்றின் இரு கரைகளிலும் இயந்திரங்களில் உள்ள இரசாயன புகை மூலம் கொசுக்கள் ஒழிப்பு நடவடிக்கைகள் தினந்தோறும் செயல்படுத்தப்படுகின்றன.



(4) தண்ணீர் ஓரத்தில் தினந்தோறும் பூச்சிக்கொல்லி மருந்து, இயந்திரங்களின் மூலம் தெளிக்கப்பட்டு கொசுக்கள் கொல்லப்படுகின்றன.

கொசுக்களின் இனப்பெருக்கம் மேலும் பெருகாதபடி இருக்க சென்னைக் குடிநீர் வாரியத்தின் பூச்சியியலரால் (Entomolcgist) தினந்தோறும் சோதனை செய்யப்பட்டு வருகிறது. கடந்த ஒரு வாரமாக இந்த நடவடிக்கைகள் தீவிரமாக செய்யப்படுவதன் பயனாக கொசுப் புழுக்களின் எண்ணிக்கை சுமார் 75 விழுக்காடு குறைந்துள்ளது.

தமிழ்நாடு அரசின், மக்கள் நல்வாழ்வுத் துறை ஆணையர் மற்றும் செயலாளர் தலைவராகவும், சென்னை மாநகராட்சி, சென்னைக் குடிநீர் வாரியம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம், பொதுப்பணித் துறை முதலியவற்றின் அதிகாரிகளை உறுப்பினர்களாகவும் கொண்ட குழு கொசு ஒழிப்புப் பணிகளின் பயனை அடிக்கடி ஆய்வு செய்து வருகிறது. இக்குழுவின் கூட்டம் 11—3—1985 அன்று நடந்தது. இக்கூட்டத்தில் கூறப்பட்ட ஆலோசனைகளில் ஒன்று கூவம் ஆற்று படுகையை ஒழுங்காக வெட்டி சீர் செய்து அதன் பயனாக தண்ணீர் தேங்காது ஓடும்படி செய்யலாமா என்று பொதுப்பணித் துறை ஆய்வு நடத்த வேண்டும் என்பதாகும்.

## இணைப்பு III

(182 ஆம் பக்கத்தில் இனம் 5 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

### L.A. BILL No. 3 OF 1985.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Payment of Salaries Act, 1951.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-sixth Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Payment of Salaries (Amendment) Act, 1985.

(2) (i) The provisions of this Act, except clause (*b*) of section 6 and section 8, shall be deemed to have come into force on the 1st April 1984.

(ii) Clause (*b*) of section 6 and section 8 shall be deemed to have come into force on the 16th February 1984.

[1985 மார்ச் 20

2. *Amendment of section 3, Tamil Nadu Act XX of 1951.*—In section 3 of the Tamil Nadu Payment of Salaries Act, 1951 (Tamil Nadu Act XX of 1951 (hereinafter referred to as the principal Act), for the expression "one thousand and five hundred rupees per mensem "the expression "one thousand and seven hundred rupees per mensem" shall be substituted.

3. *Amendment of section 4, Tamil Nadu Act XX of 1951.*—In section 4 of the principal Act,—

(*a*) in sub-section (1), for the expression "one thousand and five hundred rupees per mensem", the expression "one thousand and seven hundred rupees per mensem", shall be substituted;

(*b*) in sub-section (2), for the expression "one thousand and two hundred rupees per mensem", the expression "one thousand and four hundred rupees per mensem" shall be substituted.

4. *Amendment of section 5, Tamil Nadu Act XX of 1951.*—In section 5 of the principal Act,—

(*a*) in sub-section (1), for the expression "one thousand and five hundred rupees per mensem", the expression "one thousand and seven hundred rupees per mensem" shall be substituted;

(*b*) in sub-section (2) for the expression "one thousand and two hundred rupees per mensem", the expression "one thousand and four hundred rupees per mensem" shall be substituted.

5. *Amendment of section 6-A, Tamil Nadu Act XX of 1951.*—In section 6-A of the principal Act, in sub-section (1), for the expression "one thousand and two hundred rupees per mensem" the expression "one thousand and four hundred rupees per mensem" shall be substituted.

6. *Amendment of section 12, Tamil Nadu Act XX of 1951.*—In section 12 of the principal Act,—

(*a*) in sub-section (1), in clause (*a*), for the expression "three hundred rupees per mensem", the expression "five hundred rupees per mensem" shall be substituted;

(*b*) in sub-section (4-A), in clause (*b*), for the expression "Secretary, Legislative Assemby Department or Secretary, Legislative Council Department", the expression "Secretary, Legislative Assembly Secretariat or Secretary, Legislative Council Secretariat" shall be substituted.



1985 மார்ச் 20]

7. *Amendment of section 12-A, Tamil Nadu Act XX of 1951.*—In section 12-A of the principal Act, in sub-section (1), for the expression "Every Member of the Legislative Assembly or of the Legislative Council, who does not hold any of the offices referred to in sections 3 to 6 shall, for every financial year, be provided with railway coupons for a value of three thousand rupees", the expression "Every Member of the Legislative Assembly or of the Legislative Council including any such Member who holds any of the offices referred to in sections 3 to 6 shall, for every financial year, be provided with railway coupons for a value of four thousand rupees" shall be substituted.

8. *Construction of references.*—In the application of any rule, notification, form or order made or issued under the Principal Act, any reference to the Legislative Assembly Department or the Legislative Council Department shall, unless the context otherwise requires, be deemed to be a reference to the Legislative Assembly Secretariat or the Legislative Council Secretariat, as the case may be.

## இணைப்பு IV

[203 ஆம் பக்கத்தில் இனம் 5 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க].

## L.A. BILL No. 5 OF 1985.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Madras City Municipal Corporation Act, 1919.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-sixth Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Madras City Municipal Corporation (Amendment) Act, 1985.

(2) It shall be deemed to have come into force on the 30th May 1984.

2. *Amendment of section 55-B, Tamil Nadu Act IV of 1919.*—In section 55-B of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919) (hereinafter referred to as the principal Act), in sub-section (1), for the words "within a period of nine years and six months", the words "within a period of eleven years" shall be substituted.

3. *Repeal and saving.*—(1) The Madras City Municipal Corporation (Second Amendment) Ordinance, 1984 (Tamil Nadu Ordinance 19 of 1984) is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the Principal Act, as amended by the said Ordinance shall be deemed to have been done or taken under the Principal Act, as amended by this Act.

## இணைப்பு V

[245-ஆம் பக்கத்தில் இனம் 5(3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### L.A. BILL No. 6 OF 1985.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Coimbatore City Municipal Corporation Act, 1981.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-sixth Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Coimbatore City Municipal Corporation (Amendment) Act, 1985.

(2) It shall be deemed to have come into force on the 30th May 1984.

2. *Amendment of Schedule VII to Tamil Nadu Act 25 of 1981.*—In Schedule VII to the Coimbatore City Municipal Corporation Act, 1981 (Tamil Nadu Act 25 of 1981) (hereinafter referred to as the principal Act), in sub-rule (*a*) of rule 4, for the expression "period of three years", the expression "period of four years and six months" shall be substituted.

*Repeal and saving.*—(1) The Coimbatore City Municipal Corporation (Second Amendment) Ordinance, 1984 (Tamil Nadu Ordinance 20 of 1984) is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance shall be deemed to have been done or taken under the principal Act, as amended by this Act.



## இணைப்பு VI

[246-ஆம் பக்கத்தில் இனம் 5(4)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### L.A. BILL No. 7 OF 1985.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Act, 1976.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-sixth Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Amendment Act, 1985.

(2) It shall be deemed to have come into force on the 30th May 1984.

2. *Amendment of section 4, President's Act 28 of 1976.*—In clause (*a*) of sub-section (3) of section 4 of the Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Act, 1976 (President's Act 28 of 1976) (hereinafter referred to as the principal Act).—

(i) for the words "for a period of eight years", the words "for a period of nine years and six months" shall be substituted;

(ii) in the first proviso, for the words "the said period of eight years", the words "the said period of nine years and six months" shall be substituted;

(iii) in the second proviso, for the words "two months", the words "three months" shall be substituted.

3. *Repeal and saving.*—(1) The Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Third Amendment Ordinance, 1984 (Tamil Nadu Ordinance 21 of 1984) is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the principal Act, as amended by this Act.

[1985 மார்ச் 20

இணைப்பு VII

[247ஆம் பக்கத்தில் இனம் 5(5)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 8 OF 1985.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Madurai City Municipal Corporation Act,* 1971.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-sixth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Madurai City Municipal Corporation (Amendment) Act, 1985.

(2) It shall be deemed to have come into force on the 29th July 1984.

2. *Amendment of section 62-A, Tamil Nadu Act 15 of 1971.*—For sub-section (1) of section 62-A of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971), the following sub-section shall be substituted, namely :—

"(1) Notwithstanding anything contained in clause *(a)* of sub-section (1) of section 62, the Special Officer appointed under sub-section (1) of section 48-A shall cause arrangements for elections to be conducted so that the newly elected councillors may come into office on a day within a period of one year from the date of appointment of the Special Officer.".

இணைப்பு VIII

[248ஆம் பக்கத்தில் இனம் 5(6)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 9 OF 1985.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Act, 1977.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-sixth Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Amendment Act, 1985.

(2) It shall be deemed to have come into force on the 30th May 1984.



1985 மார்ச் 20]

2. *Amendment of section 4, President's Act 5 of 1977.*—In clause *(a)* of sub-section (3) of section 4 of the Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Act, 1977 (President's Act 5 of 1977) (hereinafter referred to as the principal Act,—

(i) for the expression "seven years and five months", the expression "eight years and five months" shall be substituted;

(ii) in the second proviso, for the expression "two months", the expression "three months" shall be substituted.

3. *Repeal and saving.*—(1) The Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Third Amendment Ordinance, 1984 (Tamil Nadu Ordinance 23 of 1984) is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the principal Act, as amended by this Act.

இணைப்பு IX

(250-ஆம் பக்கத்தில் இனம் 5 (7)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

L.A. BILL No. 10 OF 1985.

(As Passed by the Assembly)

*A Bill further to amend the Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Act,* 1979.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-sixth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) amendment Act, 1985.

(2) It shall be deemed to have come into force on the 30th May 1984.

2. *Amendment of section 4, Tamil Nadu Act 60 of 1979.*—In clause (a) of sub-section (3) of section 1 of the Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Act, 1979. (Tamil Nadu Act 60 of 1979 (here in after referred to as the principal Act).—

(i) for the expression. "four years and nine months", the expression "five years and nine months" shall be substituted.

(ii) in the second proviso, for the expression "two months" the expression "three months" shall be substituted.

3. *Repeal and saving.*—(1) The Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Third Amendment Ordinance, 1984 (Tamil Nadu Ordinance 24 of 1984) is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the principal Act, as amended by this Act.

இணைப்பு X

[251ஆம் பக்கத்தில் இனம் 5(8)-க்கான அடிக்குறிப்பைக் காண்க].

L.A. BILL No. 11 OF 1985.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Panchayats Act, 1958.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-sixth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Panchayats (Amendment) Act, 1985.

(2) It shall be deemed to have come into force on the 30th May 1984.

2. *Amendment of section* 155, *Tamil Nadu Act XXXV of* 1958.—In section 155 of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958) (hereinafter referred to as the principal Act), in sub-section (1), in clause *(b)*, in the proviso, for the expression "six years and eleven months", the expression "seven years and eleven months" shall be substituted.

3. *Repeal and saving.*—(1) The Tamil Nadu Panchayats (Third Amendment) Ordinance, 1984 (Tamil Nadu Ordinance 25 of 1984) is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the principal Act, as amended by this Act.

143941
600 008